உ

சிவமயம்.

# சிவபூசை விளக்கம்.

இஃது

அச்சுவேலி

ப்ரஹ்மஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால்

பலநூல்களை ஆதாரமாகக்கொண்டு

இயற்றி,

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரபவ௵ தை௴

1928.

[விலை ரூபா ½.]   [Copyright Rigistered.



கணபதிதுணை.

# முகவுரை.

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருவிருத்தம்.

"சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மான்
அவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தால்
இவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே."

சிவ என்னும்பதம் சி-வ-எனப்பிரிந்து, சிகாரம் பதியக்ஷரமாகவும், வகாரம் பரையக்ஷரமாகவும் பெயர்பெற்று, சூரியனும் ஒளியும்போலவிளங்கும்.

பிறவியையும் மலத்தையும்நீக்கி மோட்சத்தைத்தரும்படிநினைத்துச் சிவசத்திகளிடத்தில் உடல் பொருளாவியை ஒப்பித்தலே சிவபூசை என்பதன்கருத்தாகும்.

அதற்கு மந்திரமும் கிரியையும் பாவனையும் வேண்டப்படும். மந்திரமும் முத்திரையும் கிரியையின்கருத்து இது என்பதைவிளக்கும். ஒவ்வொருகிரியையினும் எய்தற்பாலனவாகியபலன் இவைஎன்பதை மனதால்நினைப்பது பாவனையாகும்.

ஆகையால் மனம் வாக்கு காயமென்னு மூன்றுமொருமித்து மெய்யன்போடுகிரியைசெய்தல்வேண்டும். அவைவெவ்வேறுவழிப்பட அன்பின்றிச்செய்யுங்கிரியையாற்பயனில்லை:—

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

பாவநாசத்திருக்குறுந்தொகை.

"கோடிதீர்த்தங்கலந்துகுளித்தவை
ஆடினாலுமரனுக்கன்பில்லையேல்
ஓடுநீரினையோட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்டமூர்க்கனோடொக்குமே."

தனித்திருக்குறுந்தொகை.

"நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவும்நீருங்கண்டு
நக்குநிற்பனவர்தம்மைநாணியே."

கிரியையை அகோரசிவாசாரியர் விளக்கிக்கூறியிருக்கின்றனர். அது பதினெண்பத்ததிகளுள்ளும் விசேடித்தது. அப்பத்ததியின்படியே சிவபூசைமுதலிய எல்லாக்கிரியைகளும் நடைபெற்றுவருகின்றன ஆசாரியர் பாவனையைக்குறிப்பாகச்சொல்லியருளினார். உண்மைகள் வாதுளம்முதலியஆகமங்களின்ஞானபாதங்களும், சித்தாந்தசாஸ்திரங்களும் விளக்கிக்கூறுகின்றன. ஒவ்வொருசாஸ்திரங்களிலும் ஆங்காங்குக்கூறப்படும்விஷயங்களை ஒருங்கேஅறிந்துகொள்வது அரிதானசெயலாகும். சிவபூசாதுரந்தரர்களுக்கும், சிவனடியார்களுக்கும் உபயோகமாதற்பொருட்டு அவைகளையொருங்குதிரட்டி எளிதானதமிழ்நடையில் ஒருநூல் எழுதப்படாமைகண்டு, எழுதுவது அத்தியாவசியமெனநினைத்து பேராவல்கொண்டு கவலைப்பட்டிருந்தேம். அங்ஙனமாக, மகாவித்துவான்களும், சித்தாந்தச்செல்வர்களும் எழுதற்பாலதாகிய இந்நூலை எழுதுமாறு கல்வியறிவும், ஆகமஆராய்ச்சியும் சிவஞானப்பேறுமில்லாத அடியேனைச்செலுத்திஎழுதுவித்த எல்லாம்வல்ல சிவபெருமானது திருவடித்தாமரைகளைச் சிரமேற்சூடி, மனம் வாக்கு காயங்களாற்சிந்தித்து வணங்குகின்றேம். இதற்கு ஆதாரமாகக்கொண்ட நூல்கள் அகோரசிவாசாரியர்பத்ததி, வாதுளாகமம், காரணாகமம், பௌஷ்கராகமம், மிருகேந்திரம், சித்தாந்தசாராவளி, சைவபூஷணம், சகலாகமசாரசங்கிரகம் முதலியசம்ஸ்கிருதநூல்களும், மெய்கண்டசாஸ்திரம் பன்னிருதிருமுறைகள், சதாசிவரூபம், சைவசமயநெறி, சிவதருமோத்தரம், வாயுசங்கிதை முதலியதமிழ்நூல்களுமாம்.

இதனைச் சுளிபுரம் விக்ரோறியாகல்லூரிப்பிரதமாசிரியர் புலோலி ஸ்ரீமத். சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்களிடங்கொடுக்க அவர்பரிசோதித்து உபகரித்தபின் எம்முடையஉபாத்தியாயர்கள்மூவரில் ஒருவராகி ஆகமஞானத்தைஎன

க்குண்டாக்கியவரும், சம்ஸ்கிருதம், தமிழ்என்னும் இருபாஷைகளிலும் பாண்டித்தியமுள்ளவரும் பருத்தித்துறையைச்சார்ந்த புலோலிநகர்வாசரும்ஆகிய ஸ்ரீஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்களிடத்திற் கொடுத்தேம். அவரும்பரிசோதித்துப் பின்அச்சிடுவிக்கும்பொழுதும் பார்வைசெய்து மதிப்புரையுமீந்தனர்.

எமக்கரியநண்பர்களாகிய சங்கானைமேற்கு ஸம்ஸ்கிருதபண்டிதர் பிரமஸ்ரீ. அ. அருணாசலசாஸ்திரிகளவர்களும், கந்தவனக்கோயிலர்ச்சகர் நவிண்டில் பிரமஸ்ரீ சு.கனகசபாபதிக்குருக்களவர்களும், கரணவாய்தெற்கு பிரமஸ்ரீ. சு. பஞ்சாட்சரக்குருக்களவர்களும் பார்வையிட்டுச் சிறப்புப்பாயிரமீந்தனர்.

கைமாறுகருதாது சைவசமயவளர்ச்சிக்காக இவர்கள் செய்த இந்நன்றி எம்மால்மறக்கற்பாற்றன்று.

கந்தவனக்கோயில்ஆதீனகர்த்தரும், சிவபத்திமானுமாகிய திக்கம் ஸ்ரீமான். சி. செல்லையாபிள்ளைஅவர்களும், கந்தரோடை ஆங்கிலவித்தியாசாலைமனேஜர் ஸ்ரீமான். S. கந்தையாபிள்ளைஅவர்களும் இந்நூலில் மிகுந்தஅன்புடையவர்களாய் இடையிடையேகாணுந்தோறும் "எப்பாகமச்சிறைவேறியது எப்பாகம்ச்சிறைவேறியது" என்றுபலமுறைவினாவி எமக்கு அதிகஊக்கத்தைத்தந்து பற்பலஉதவிகளைச்செய்தனர். சிவனடியார்கள்பலர் அச்சிடுவதற்குத் திரவியசகாயஞ் செய்தார்கள். இவர்களுக்குச் சர்வாபீஷ்டசித்திகளைக்கொடுத்தருளுமாறு கருணாநிதியாகிய சிவபெருமானைப்பிரார்த்திக்கின்றேம்.

இயன்றவரைபிற்சுருக்கிவிளக்கியிருக்கின்றேம். இன்னும் விரித்துவிளக்கவேண்டுமென்று அறிஞர்களபிப்பிராயமிருந்தால் மறுபதிப்பில்விரித்துவிளக்குவோம்.

சுபமஸ்து.

ச. குமாரசாமிக்குருக்கள்.

# அச்சியந்திரத்திற்குப் பொருளுபகரித்த புண்ணியசீலர்களின் பெயருமுருந் தொகையும்.

| பெயர். | இடம். | ரூ. ச. |
|---|---|---|
| ஸ்ரீலஸ்ரீ. வே. விசுவநாத பண்டாரசந்நிதி, வேதாரண்ய ஆதீனகர்த்தர் ... ... ... ... | வரணி | 50—00. |
| ஸ்ரீமான். S. கந்தையாபிள்ளை வித்தியாசாலை மனேஜர் ... ... ... ... ... | கந்தரோடை | 50—00. |
| ஸ்ரீமான். S. சோமசுந்தரம், Chairman Village Committee ... ... ... ... | மானிப்பாய் | 50—00. |
| ,, கௌரவ. சு. இராசரத்தினம் | அச்சுவேலி | 10—00. |
| ,, M. S. இளையதம்பி Advocate | வண்ணார்பண்ணை | 10—00. |
| ,, வே. கணபதிப்பிள்ளை Proctor | அச்சுவேலி | 10—00. |
| ,, வீ.மு. சிற்றம்பலமுதலியார் தென்மராட்சிமணியம் | கரவெட்டி | 10—00. |
| ,, பொ. இராசகோபால் பூநகரிமணியம் | | 10—00. |
| ,, V.M. நாகலிங்கம் Planter & Merchant | வண்ணார்பண்ணை | 25—00. |
| ,, ஸ்ரீ. முத்துக்குமாரு Doctor | வண்ணார்பண்ணை | 15—00. |
| ,, வை. தில்லையம்பலம் | நல்லூர் | 20—00. |
| வட்டுக்கோட்டை கிழக்கு சைவ ஆங்கில வித்தியாசாலை உபாத்தியாயர்கள் ... ... ... ... ... | | 18—00. |
| ,, ச. கனகரத்தினம் | வண்ணார்பண்ணை | 10—00. |
| ,, வீ. வீரசிங்கம் தலைமைஆசிரியர் இந்துக்கல்லூரி | மானிப்பாய் | 10—00. |
| சைவ ஆங்கில வித்தியாசாலை | அளவெட்டி | 7—50. |
| ,, இ. தாமோதரம்பிள்ளை உபாத்தியாயர் | அச்சுவேலி | 10—00. |
| ,, செ. ஐயாத்துரை ... ... ... | ,, | 10—00. |
| ,, அ. சின்னப்பு ... ... ... | ,, | 10—00. |
| ,, தா. இராசையா ... ... | பத்தைமேனி | 10—00. |
| ,, நா. செல்லமுத்துப்பத்தர் ... ... | அச்சுவேலி | 10—00. |
| பிரமஸ்ரீ. சு. சோமசுந்தரக்குருக்கள் வைத்தியம் | காரணவாய் | 5—00. |
| ஸ்ரீமான். வே. அருணசலம் வித்தியாசாலை மனேஜர் | புலோலி | 5—00. |
| ,, கா. நாகலிங்கம் Post Master ... | அச்சுவேலி | 5—00. |
| ,, வே. செல்லப்பா உபாத்தியாயர் ... | புத்தூர் | 5—00. |
| ,, சோம. சரவணபவன் காட்டுக்கந்தோர் | கண்டி | 5—00. |
| ,, ஆ. மூ. கதிர்வேல் ... ... ... | அச்சுவேலி | 5—00. |
| ,, சி. இ. குமாரசுவாமி வை. சி. ... ... | கந்தர்மடம் | 5—00. |
| ,, ஐயாத்துரை ... ... ... ... | கலட்டி | 5—00. |
| ,, ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் | இடைக்காடு | 5—00. |
| ,, ஆ. கந்தையா உபாத்தியாயர் ... ... | ,, | 5—00. |
| ,, க. சங்கரப்பிள்ளை ... | செட்டியகுறிச்சி, பூநகரி | 5—00. |
| ,, கை. செல்லமுத்து உபாத்தியாயர் | இடைக்காடு | 2—50. |
| ,, சு. முருகுப்பிள்ளை உபாத்தியாயர் ... | ,, | 2—50. |
| ,, சு. இராமசுவாமி உபாத்தியாயர் ... | ,, | 2—00. |

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

புலோலிவாசரும்
ஆரியதிராவிடபண்டிதருமாகிய
## ப்ரஹ்மஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களவர்கள்
சொல்லியவை.

ஸ்ரக்தராவ்ருத்தம்।

[illegible] ॥க॥

எண்சீர் ஆசிரியவிருத்தம்.

உத்தமமா மியாழ்ப்பாண தேச மீதே
உறுமச்சு வேலியெனு நகரில் வாழ்வோன்
சுத்தமறை யோர்குலமே லுதித்த செம்மல்
சொன்மறையா கமமுதல பலநூ லாய்ந்தோன்
வித்தகனங் குமாரசுவா மிப்பே ருள்ள
வியன்குரவன் சிவபூசை விளக்கஞ் செய்தான்
இத்தலமேற் சிவநேச ராய்ந்து தேற
வெங்காளு மிதுநிலவி யினிது வாழி. (உ)

சங்கானைமேற்கு
ஆரியபண்டிதர்
## ப்ரஹ்மஸ்ரீ. அ. அருணசலசாஸ்திரிகள்
சொல்லிய ஸ்லோகம்.

[illegible]

கந்தவனஅர்ச்சகர், நவிண்டில்

## ப்ரஹ்மஸ்ரீ. சு. கனகசபாபதிக்குருக்களவர்கள்

சொல்லியவை.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகினிற் சாந்த குணமதோ ருருவா
வுதித்தன னுயிரினு மோம்பும்
இலகுறு மொழுக்க மியைதரு நீரா
னிதயமீ தாஞ்சுசி யியல்போன்
அலகிலா வகைப்பி னாரிய மொழியோ
டருந்தமி ழரிறப வாய்ந்தோன்
விலகலா வருள்சேர் விமலனைச் சபரி
வினைழந்தகம் புறம்புரி விரதன். (க)

அணிபெறு மச்சு வேலியாம் புரத்தி
னமர்சபா பதிக்குரு வன்றே
பணிதவ மாணபின் பயனதாப் பவித்தோன்
பலர்புகழ் குமாரசா மியென
நணியசீர் நாம நவில்பெறு குரவ
னற்சிவ பூசையின் விளக்கங்
கணியதி கார மரபின ருணர்வான்
கவின்பெறத் தந்தனன் கண்டே. (உ)

கரணவாய் தெற்கு

## ப்ரஹ்மஸ்ரீ. சு. பஞ்சாட்சரக்குருக்களவர்கள்

சொல்லியவை.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாராரு மீழவள நாட்டி லுயர் பலதேசப் பதியின் மிக்க
தாராருங் கொன்றைமலர் வேணியன்று டமைமறவாத் தன்மை யுற்றோ
நேராருஞ் சிவபத்தர் கவிவாணர் நெருங்கியுறை நேர்மை தக்க
சீராரு மச்சுவேலி யெனுமூரிற் சிறந்திருக்குஞ் சீர்மை மிக்கோன். (க)

[illegible]மிகுந்த வந்தணர்தங் குலதிலகன் கவுதமமென் கோத்தி ரத்தோன்
நலமிகுந்த சூத்திரமா பத்தம்பன் நாடுகலை நன்கு கற்றோன்
பலமிகுந்த சபாபதியாங் குரவனுயர் தவத்துதித்த பண்பு வாய்ந்தோன்
புலமிகுந்த பண்டிதனுஞ் சிவப்பிரகா சத்தனிடம் புகழ்ந்து கற்றோன். (உ)

அரியகலை படிப்பதற்குக் கழகமதை யுறவிங்ங னன்பிற் செய்தோன்
உரியவிலக் கணமுடனல் லிலக்கியாதி யுண்மையுற வுணர்ந்து யர்ந்தோன்
பெரியவர்கள் போற்றுமருட் சிவபூசை விளக்கமெனும் பெருநூல் செய்தான்
தெரியவருங் குமாரசாமிக் குரவனுயர் தருமமெனும் செல்வ னன்றே. (ங)

[ வித்தியாதரிசி
ஸ்ரீமத். தி. சதாசிவஐயரவர்கள்
எழுதியது.]

சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடுஞ்சமயம் சைவசமயம் என்பது:

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாஞ் சமயஞ்சாரும்
ஊழ்பெறலரிது.................. ."

எனச் சைவத்தின் நுண்ணியல் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தாழ்வுள்ளவிடத்தில் அதாவது, முனைப்பு அற்றவிடத்தில் சைவம்பொலியுமெனச் சமயசாஸ்திரங்கூறுகிறது. முனைப்பற்றஇத்தாழ்வுநிலைபெற்றோர் உயர்ந்தோராக இழிந்தோராக ஆணாக பெண்ணாக எவராயினுமாக; அவருள்ளத்தில்தான் சிவம்விளங்கும்என்க. இச்சிவசம்பந்தமாகிய சமயவழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம்என நான்குபடிகளையுடைத்து. "......சைவத்—திறத்தடைவர் இதிற் சரியைகிரியாயோகஞ்செலுத்தியபின் ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்." எனவும், "படிவழி சென்று சென்று ஏறி" எனவும் ஓதியதனால்; ஆன்மாக்களினறிவு தூலவறிவாதலின் இறைவனியலை (நிலையை)விளங்கமாட்டாது தத்தமக்கேற்றபடி முறையே சிறிதுசிறிதாக விளங்கிவிளங்கி மேம்பட்டு நன்னெறியடையும் என்பதும், அதற்கேற்ப இறைவனருளும் படிப்படியாய்க் கூடிக்கூடிவர அறியாமையாகியமலமும் தேய்ந்துதேய்ந்து முடிவில் பற்றறக்கழியுமென்பதும் சைவசமயசாஸ்திரம் போதிக்கும் வழிபாட்டுமுறையாதல் காண்க.

வழிபாடுஎன்பது அவரவர்அன்புநிலை அறிவாற்றல் முதலியவற்றைப்பொறுத்து அமைவது. அவரவர்நிலைக்கேற்றவாறு அவரவர் ஒவ்வொருவிதவழிபாட்டைக்கொண்டு படிப்படியாய் மேலும்மேலுமுயர்ந்து சன்மார்க்கநிலையையடைய இறைவனருளைவேண்டி இடைவிடாதுமுயன்றுவருதல் எவர்க்கும்இன்றியமையாததென்பது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியநான்குபடிகளும்முறையே அரும்பும், மலரும், காயும், கனியும்போன்று ஒன்றற்கொன்று தொடர்புடையனவாய் ஒன்றற்கொன்று மேம்பாடுடையனவாய்க்கிடப்பன. உயிர்கள் படிமுறையால்உணர்ந்து உய்தற்பொருட்டுச் சிவபெருமான் தூலமாகவும் சூக்குமமாகவும் அதிசூக்குமமாகவும் மூலவடிவங்கொண்டருளி அவ்வவ்வடிவங்களில் வழிபடும்முறைகளையும் வேதாகமங்களில்வகுத்தருளியிருக்கின்றார். சரியையாவது தூலமாகியஉருவவழிபாடு; சரீரத்தின் தொழின்மாத்திரையால்வழிபடுவது. கிரியையாவது சூக்குமமாகிய அருவுருவவழிபாடு; இது பக்குவவிசேடத்தால் நுண்ணுணர்வுபெற்று மனமாகியஅகத்தாலும் சரீரமாகியபுறத்தாலும் வழிபடுவது. யோகமாவது அதிசூக்குமமாகிய அருவவழிபாடு; இது அகத்தொழில்மாத்திரையால்வழிபடுவது. ஞானமாவது இவைகடந்த ஒருபெருநிலை; அகத்தொழில் புறத்தொழில் இரண்டனையுங்கைவிட்டு அறிவுத்தொழில்மாத்திரையால் வழிபடுவது.

இனி சரியைவழிபாடுசெய்தவர் கிரியைஎன்னும் அடுத்தபடியாகிய சிவபூசைவழிபாடுசெய்யற்பாலர். இதன்முறையை:

"கந்தவர்க்கமுங் கிளர்மணப்புகையுங் கவின்கொடீபமும் புனிதமஞ் சனமுங், சொந்தவிழ்ந்தநன் மலருமற்றுளவுங் கொண்டுமாயையின் குணத் திலொன்றிலராய், ஐந்துசுத்திசெய்து அகம்புறம்இறைஞ்சி அங்கியின்கட ன்கழித்து அருள்வழிநின்று, இந்தநற்பெருங் கிரியையன்புடனே இயற்ற வல்லவர்..........."

என்னும் திருவாதவூரடிகள்புராணச் செய்யுளானறிக.

ஆன்மார்த்தமாகிய சிவபூசைபண்ணுங்கிரமம் அகோரசிவர்முதலிய சைவாசாரியர்களால் பத்ததியாக வடமொழியிற்செய்யப்பட்டுள்ளது. வட மொழிப்பயிற்சியில்லார்க்கு அதனையறிந்து அவ்வழியொழுகுதல்எளிதன்று அற்றாக, சிவபூசையின்கிரமத்தையும் சிறப்பையும் சைவநன்மக்கள்பலரும் அறிந்து சிவபூசையாகிய கிரியைவழிபாடியற்றி உயர்ச்சிபெறச்செய்தற் கேற்றது "சிவபூசைவிளக்கம்" என்னும்இந்நூல்என்க. சிவபூசைக்கிரம த்தையும் அதனோடுசார்ந்த பலவிஷயங்களின் விரிவானவிளக்கத்தையும் விளக்கத்திற்குமேற்கோளாகச் சமயசாஸ்திரங்களினின்றும் தமிழ்வேதமா கிய திருமுறைகளினின்றும் சமயோசிதமாகத்தெரிந்தெடுத்த பலபாட்டுக் களையும் தன்னகத்துக்கொண்டுமிளிர்வது இந்நூலென்றறிக.

இந்நூலைத்தொகுத்து இயற்றினோர்யாவரெனிற் கூறுதும்: யாழ்ப் பாணத்து அச்சுவேலிப்பதிவாசரும், பரம்பரையாய்க்குருத்துவம்நடாத்திய பிராமணகுலத்துதித்தவரும், தம் தந்தையாரிடத்தும் நீர்வேலி ஸ்ரீமத். சங்க ரபண்டிதரவர்கள்குமாரர் சிவப்பிரகாசபண்டிதர் என்பவரிடத்தும் வட மொழித்தென்மொழிப்பயிற்சிபெற்றவரும், கல்வி அறிவொழுக்கம் அடக் கம் முதலிய சுகுணங்கள்வாய்க்கப்பெற்றவரும், சைவக்கிரியானுஷ்டான சீலருமாகிய ப்ரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் இந்நூலை இயற்றினோர் என்க.

சைவசமயசாஸ்திரங்கள்பலவற்றிலும் பரந்துகிடக்கும்விஷயங்களை ஒருங்குதொகுத்து ஒருநூலாகச் சைவஉலகுக்குதவிய குருக்களவர்கள்நன் றி சைவநன்மக்களால் என்றும்பாராட்டற்பாலது.

இங்ஙனம்.

தி. சதாசிவஐயர்.

மட்டக்களப்பு.
பிரபவஹூ தைமீ
உச நவ.
6-2-28.

---

[சுளிபுரம் விக்ரோறியாகல்லூரிப் பிரதமாசிரியராகிய

ஸ்ரீமத். சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்

எழுதியது.]

சிவபிரானது திருவருளினாலே ஆன்மாக்கள் முத்தியின்பத்தையடைத ற்குரியவழி, புறப்புறச்சமயம் புறச்சமயம் அகப்புறச்சமயம் அகச்சமயம் சைவசித்தாந்தசமயம் என ஐந்துகூறுகளையுடையது. இவற்றுள் முன்னைய நான்கும் பாடசாலைகளிலுள்ள சிறுவர்பிரிவு கீழ்ப்பிரிவு மேற்பிரிவு சர்வக லாசாலைப்பிரிவு என்னும் பகுதிகளைநிகர்க்கும். பாடசாலைப்பிரிவுகள் கற் போரது அறிவிற்கேற்ப வகுக்கப்பட்டு ஒன்றன்பின்னொன்றாக அடையப்ப

தேல்போலச்சமயவகைகள் ஆன்மாக்களதுகாட்சியெல்லைப்படி சோபான முறையாகச் சேரற்குரியனவாக வகுக்கப்படும். இக்கருத்தை:

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலு மாச்சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்திற்காண்க.

புறப்புறச்சமயங்களாவன: உலகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம்.

புறச்சமயங்களாவன: தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம்.

அகப்புறச்சமயங்களாவன: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவம்.

அகச்சமயங்களாவன: பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவரவிகாரவாதம், சிவாத்துவிதம்.

உலகாயதத்துக்கு வாயுதத்துவமும், பௌத்தத்திற்குப் புத்திதத்துவமும், ஆருகதத்திற்குக் குணதத்துவமும் காட்சியெல்லைகளாம். பிறவற்றிற்கும் இவ்வாறே. ஆருகதத்தின் காட்சியெல்லைக்குட் பௌத்தக்காட்சியடங்குதலாலும், பௌத்தத்தில் உலகாயதம் அடங்குதலாலும், ஆருகதம் பௌத்தத்தைத் தன்னுளடக்குவதும், பௌத்தம் உலகாயதத்தையடக்குவதும் அறியப்படும். இவ்வாறே மேற்சமயமொவ்வொன்றுங் கீழ்ச்சமயங்கள்யாவையுமடக்கும். சமயங்களுக்குள் இவ்வுயர்வுதாழ்வுள்ளனவேயன்றிப்பொய்ச்சமயம் மெய்ச்சமயம் என்றபேதமில்லையாம். யாவுந்தத்தமளவுக்கு வாய்மையானவைகளே. இதனாற்றான் அவைகள் திருவருட்சத்தியாகிய உமாதேவியாராதாக்கமென்பர். இவ்விருபத்துநான்குசமயங்களும் முடியச் சித்தாந்தசைவந்தொடங்கிப் பாமுத்தியையடைவிக்கும். ஒருநாட்டிலுள்ள மழைநீரெல்லாங் கிளையாறுகள் வழியாகப் பெருநதியையடைந்து கடலைச்சேருதல், ஆன்மாக்கள் புறச்சமயங்களிலிருந்து சைவசமயவழியாக முத்தியடைதற்கு உபமானமாகக்கூறுப. சித்தாந்தசைவம் மேற்சமயமாதலால் இது ஏனைய சமயங்கள்யாவையுந் தன்னகத்துடையதாம். இம்மாட்சியை.

"ஓதுசம யங்கள்பொரு ளுணருநூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூல்
ஆதலினாலிவையெல்லாமருமறையாகமத்தே
யடங்கியிடுமவையிரண்டுமானடிக்கீழடங்கும்"

என்னுந்திருவிருத்தங்கூறும்.

ஏனையசமயங்கள் யாவற்றையுமடக்கி அவற்றுக்கப்பாலும்நிற்பதாகிய இச்சைவசமயம் சத்திநிபாதர்க்கேயுரியதாம்.* சத்திநிபாதராவார் பசுபுண்ணியங்கள்செய்து அறிவுமுதிர்ந்து ஆணவமலம் வலிகெட்டவழிப் பராசத்தியாற் சிவபுண்ணியத்திற்பற்றுண்டாக்கி, அதைச் செய்தற்குத் துணையாகிய தீட்சையைப்பெறுதற்காகக் குருபாற்செலுத்தப்படுவோர்.

சிவபுண்ணியப்பற்று எவ்வாறுண்டாகுமெனின், பசுபுண்ணியஞ் செய்வோர் மாயைப்பொருள்களாகிய உலகத்தையும், சீவர்களதுடல்களையும் நிலையென நினைந்து, தமக்கும்பிறர்க்குமுள்ள இன்பநுகர்ச்சியைப் பொருளெனக்கருதுவர். அவற்றின் நிலைகேட்டையும் சிவமுயிராகிய இவற்றின் மெய்ம்மையையும் உணருங்கால், பசுபுண்ணியத்தில்வெறுப்பும், சிவபுண்ணியத்தில் விருப்பும் உண்டாகும். பசுபுண்ணியததிலுண்டாகும் வெறுப்பு பசுவினையொப்பெனப்படும்; ஏனெனில் இதுகாறும் பசுத்தீவினையிலிருந்த வெறுப்பும் இப்போதுண்டாய பசுநல்வினையில் வெறுப்பும் ஒத்தலின். தீட்சையிலே பலவகைச்சுத்தியும் ஞானசத்தியின் விளக்கமும் சிவச்சார்புமுண்டாகின்றன, இத்தீட்சையே உயிர்களைச்சைவசமயத்திலுறுத்துதலால்,இது சமயதீட்சையெனப்படும். இதனைப் பெற்றபின்னரே சத்திநிபாதர் சைவரெனப்படுவர்.

சிவபுண்ணியம் சரியை கிரியை யோகமெனமூவகைத்து. புண்ணியஞ்செய்தற்குவேண்டிய புறக்கருவியுட்கருவிகளுள், புறக்கருவியைத் திருத்துவதினாலுட்கருவியுந்திருந்தும். எங்ஙனமெனில், இரக்கமில்லாதொருவன் அதைப்பெறவேண்டுமாயின், வருந்துவோர்க்குச் சரீரவுதவி செய்துவருவானாயின் அவ்வுடற்செயலே இரக்கத்தையாக்கத்தக்கதாகும். இஃதிவ்வாறாதலாற் சிவபுண்ணியம்அரும்புதற்கு உடற்றொழில் பெரிதும்வேண்டப்படும். ஆதலால், தொடக்கத்திற் சிவதொண்டும் சிவனடியார்தொண்டும் உருவத்திருமேனிப்பூசையும் விதிக்கப்பட்டன. இச்சிவபுண்ணியம் சரியையெனப்படும். இதனாலே சிவப்பற்றுமேற்பட்டு அறிவுமுதிர்ந்தோர் கிரியாமார்க்கத்துக்கருகராவர். இதிலே புறக்கருவிகளும் உட்கருவிகளும் ஒப்பாடுபட்டுநிற்கும். இதில்முதிர்ந்தோர் புறக்கருவித்துணையின்றிச் சிவபெருமானதருவத்திருமேனிகளைத் தியானிக்கத்தக்கவராய், யோகமார்க்கத்தடைந்து என்றுஞ் சிவசிந்தையுடையராய்ச் சிவபுண்ணியராய்வாழ்வர். இதனாலே இவர் தம்மையுஞ் சிவத்தையுமறிதற்குத் தகுதியுடையராய்ச் சிவவினையொப்புற்று நிர்வாணதீட்சைபெற்று ஞானநிலையடைந்து, பரமுத்தியைப்பெறுவர்.

இவற்றுள் நடுவணுள்ளதாகிய கிரியாமார்க்கமேபெரும்பயனைவிளைப்பதாம். இது அறிவைப்பூரணப்படுத்திக் கரணங்களையாண்டு ஐசுவரியத்தைக் கொடுக்கும். கல்விகற்பிப்போன் அதற்குரியநூல்கள்யாவற்றையும் ஆராய்ந்தறிந்தானாயினும் அக்கிரியைசெய்யும்போதே அவ்வறிவுதெளியப்பெறுகின்றான். தொழிற்குவேண்டிய மனம்முதலிய உட்கரணங்களும் நாமுதலிய புறக்கரணங்களும் தத்தந்தொழிலிற் பயின்றுதுலையாகின்றன. அவன்தன் வினையிற் சித்தியுடையோனாய் ஈசுவரனாகின்றான். கணிதத்தில் ஒருகிரியை

---

*"சைவமருஞ்சிறப்புநூலம் .....சத்தி நிபாதர்க்கு நிகழ்த்தியது."

(சித்தியார்—267.)

யைக்கற்றான் அதைப்பன்முறை பயின்றதன்பின்னரே அதன்ஆட்சியைப் பெறுகின்றான். இவைகளைப்போலச் சைவசமய உண்மைகளையறிந்தோன் அவ்வுண்மைகள்மலிந்த கிரியைகளைச்செய்யின் அவற்றைஅனுபவத்தாலறிவதுமன்றிப் பொய்யாகிய ஆணவத்தின்தொண்டில்நின்றகருவிகளை ஆணவ ஆட்சியினின்றும்மீட்டு உண்மைவழியிற்செலுத்திச் சிவபிரானதாட்சியிலீடாக்குகின்றான். ஆதலால் எச்சமயத்துக்கும் அறிவைவளர்க்கும் எவ்வழிக்கும்கிரியையே உயிர்போல்வதாம். பிறர்பொருளையிச்சிக்கலாகாதென்றஉண்மையை அறிதலேனும் அறிவித்தலேனும் பயனற்றனவாம். பஞ்சதந்திரத்தில்வரும் ஆஷாடபூதி கூறியபோதனை பெருஞ்சிறப்புடைத்தாயினும் அவ்வறிவு பிறர்பொருளை அபகரித்தற்கேதுணையாயது. பிறர்பொருளை யிச்சியாதிருத்தற்கு வேண்டியவழியும் கருவியுமேமுக்கியமானவை. இவ்விருசிறப்பும் சித்தாந்தசைவத்தேயுள்ளனவாம். இவைகள் சைவக்கிரியையில்மலிந்துநிலவும். இவைகள் பயன்தரற்குஞ் சிரத்தைஇன்றியமையாததாம்: சிரத்தையுண்டாயின் ''ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளஅளப்பருங்கரணங்களுநான்குஞ், சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிதமே'' யாகும்.

இம் மூவகை நிலையுஞ்சாராவிடிற் கிரியைகளால் வரத்தக்கபலன் சூனியமாகும். ஓர்ஆசான் ஓர்எழுத்தை எழுதவேண்டியமுறைகளை மாணாக்கனுக்குக்காட்டி எழுதற்குரிய கருவிகளையும்கொடுத்து எழுதுவிக்கமுயலும்போது மாணாக்கனுக்கதிற் சிரத்தையில்லையாயின் அவன்அவ்வெழுத்தை இலக்கணப்படி எழுதல்சாலாது. இதுபோலச்சைவக்கிரியை முறையிலேகிரியைசெய்தற்குவேண்டிய புறக்கருவியுட்கருவிகளினாட்சிக்குரியனவாகிய வழிகளுஞ்சாதனங்களுமுளவேனும் சிரத்தையின்மையால் அக்கிரியைகள் தமக்குரியபலனைத்தராது வெளிமுயற்சியாகிப் பழிப்புக்குமிடனாகின்றன. கிரியையைச் சிரத்தைசாருமாயின் சித்தாந்தசைவத்தின்பெருமை அதையனுசரிப்போரதுபெருமையாற் காட்டத்தக்கதாகி உலகத்தவரெவராலும் தலைச்சமயமெனக் காட்சியளவையானங்கீகரிக்கத்தக்கதாகும்.*

கிரியாமார்க்கத்தின்முக்கிய அநுட்டானம் இவ்வரியநூலில் விளக்கப்படுவதாகிய சிவபூசையாம். இது ''விடிவாமளவும்விளக்''காகக் கடவுளாலருளப்பட்ட தனுகரணங்களைப் பேரொளியாகிய திருவருளிற்கொழுத்திச் சிவத்தையொருபான்மையாகக்காட்டி, ஆன்மாவைஅக்காட்சியிலழுத்தி, பார்சுவ சிவானுபவத்தைக்கொடுத்து, அதிலே தாகத்தைஎழுப்புவது. ஒருவன் தன்னைச் சிவபிரானது வரதஹஸ்தத்திற் தத்தஞ்செய்தலே சிவபூசையின்நோக்கம். ஆதலால் சிவபூசையின்பலன் இவனால் வேண்டப்படாதபொருளென்பது கூறாதேஅமையும். சிவபூசைசெய்வோருள் அதன்முறைதெரிந்தோர்சிலரே. அவருள்ளும் அதைவிளங்கினோர்சிலர். அவருளளும் அவற்றின் இரகசியங்களை அறிந்தோர்மிகச்சிலர். ஆதலால், இத்தகையநூல் சிவபூசைசெய்பவர்கட்கின்றியமையாததாய்ச் செய்யாதோரைக்கொண்டுஞ் செய்வித்தற்கோர் தூண்டுகோலாய்ச் சைவசமயப்பெருமை

*சிரத்தையின்றியநுசரிக்குமிக்காலத்தும் சித்தாந்தசைவராகியதமிழர் மற்றெச்சாதியாரினும் நடுநிலைமையிலும், பெருந்தன்மையிலும், அருளன்புகளிலும் மேலோராகவிளங்குதல் அச்சமயத்தின் உயர்வை ஒருவாறு காட்டும்.

யைவிளக்குதற்கு முக்கிய சாதனமாய்நிலவும். இந்நூலாசிரியர் கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்தவராய்ச் சிவபூசானுபவத்தையுடைய சிவாசாரியராதல் இந்நூலின்மாசின்மைக்குச்சாட்சியாம். இந்நூலுக்கியல்பான பிரமாணநூல் சிவாகமமாகவும் தமிழை நாயகமொழியாக்குந் தேவாரதிருவாசகங்கள்மேற்கோளாகக்காட்டப்பட்டமை ஆசிரியருக்கவற்றிலுள்ள ஆட்சியையும் ஆர்வத்தையும் அடியார்பத்தியையும் விளக்கும். இந்நூல் சிவபூசையின்அங்கக்கிரியைகளொவ்வொன்றன்பொருளையும் பயனையும் விளக்கியறிவையேற்றுவதோடு அப்பூசைக்கின்றியமையாததாகிய சிரத்தையையாக்குதற்கும் பெருந்துணையாகின்றது. இதிலகலமாக விரிக்கப்பட்டவற்றுட் புத்திதத்துவத்தினட்டகுணங்களினவிளக்கமும் மகேசுரவடிவங்களின்முறையும் பாராட்டத்தக்கவை. இவை முறையே பதினான்குபக்கங்களினும் நாற்பதுபக்கங்களினும் பாவிநிற்கின்றன. இந்நூலியற்றற்குத் திருவருளாற் கூர்ந்தமதியும் ஆழ்ந்தஅறிவுமன்றித் தளராதஊக்கமும் பெருமுயற்சியும் வேண்டப்படும். இவற்றுக்காக நூலாசிரியர்க்கு நாம் நன்றிகூறுதல் சிவபூசாவான்களது முறைக்குப்பொருந்தாதாதலின் அவர்களையேற்ற சிவபெருமானது திருக்கரத்தையும் திருவடிகளையுமென்றுந் தியானித்திந்நூலென்றும்நிலவி உலகத்துக்குப் பெரும்பயனளித்தலை விரும்புகின்றோம்.

சு. சிவபாதசுந்தரம்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧ | ௨௧ | பூதித்தவர் | பூசித்தவர். |
| ௧௮ | ௨௬ | கொடுக்கும் | கெடுக்கும். |
| ௨௩ | ௧௪ | பிங்கலநாடி | பிங்கலைநாடி. |
| ௩௨ | ௨ | நனைந்துப் | நனைந்து. |
| ௪௧ | ௭ | சல | மல. |
| ௪௭ | ௧௦ | புனம் | புவனம் |
| ௫௧ | ௪ | புனம் | புவனம். |
| ௭௮ | ௯ | சூரிமூர்த்தி | சூரியமூர்த்தி. |
| ௧௦௦ | ௭ | திருநாவுக்கரசு | திருஞானசம்பந்தர். |
| ௧௧௫ | ௨௪ | அம்மைபார் | அம்மையார். |
| ௧௨௧ | ௨௬ | எத்தினர் | எத்தின. |
| ௧௨௫ | ௯ | செல்லவே | செல்லலே. |
| ௧௩௭ | ௨௧ | விசாசர்மர் | விசாரசர்மர். |
| ௧௪௬ | ௧௪ | முத்தியை | முத்திரையை. |
| ௧௫௨ | ௨௨ | வதி | புதி. |

௨௧ம பக்கம, ௧௨ம் வரியில் நேத்திரந்தவிர்ந்த என்றிருப்பதை இருதயாதி என்பதற்குமுன்னர்ச் சேர்த்துவாசிக்க.

௨௯ம் பக்கம், ௫ம் வரியில் தீர்க்கக்கிரமமாக என்னுமிடத்தில் தீர்க்கபுலுதக்கிரமமாக என்று சேர்த்துவாசிக்க.

உ

கணபதிதுணை.

# அனுக்கிரமணிகை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| விநாயகவணக்கம் ... ... ... | ௧. |
| சிவபூசையின்பொதுவிதி ... ... | ௨. |
| சூரியபூசை ... ... ... ... | ௧௦. |
| சகளீகரணம் ... ... ... | ௧௦. |
| தர்சனார்க்கியம் ... ... ... | ௧௧. |
| அருக்கியம் ... ... ... | ௧௧. |
| போகாங்கம் ... ... ... | ௧௩. |
| சிவபூசை ... ... ... ... | ௧௫. |
| ஆசனபலன் ... ... ... ... | ௧௫. |
| ஆசமனம் ... ... ... ... | ௧௬. |
| தொடுமிடம் ... ... ... ... | ௧௬. |
| விபூதிமகிமை ... ... ... ... | ௧௭. |
| சகளீகரணம் ... ... ... ... | ௨௦. |
| பிராணாயாமம் ... ... ... ... | ௨௨. |
| துவாரபூசை ... ... ... ... | ௨௩. |
| பூதசுத்தி சூட்சுமதேகசுத்தி ... ... | ௨௫. |
| தூலதேகசுத்தி ... ... ... | ௨௮. |
| நிவிர்த்திகலாசுத்தி ... ... ... | ௨௮. |
| பிரதிட்டாகலாசுத்தி ... ... | ௨௮. |
| வித்தியாகலாசுத்தி ... ... ... | ௨௯. |
| சாந்திகலாசுத்தி ... ... ... | ௨௯. |
| சாந்தியதீதகலாசுத்தி ... ... | ௨௯. |
| மானதஸ்நானம் ... ... ... ... | ௩௦. |
| வடதருரூபம் ... ... ... ... | ௩௧. |
| ஆன்மசுத்தி ... ... ... ... | ௩௨. |
| தானசுத்தி ... ... ... ... | ௩௬. |
| பாத்தியத்திரவியம் ... ... ... | ௩௬. |
| ஆசமனத்திரவியம் ... ... ... | ௩௬. |
| அர்க்கியத்திரவியம் ... ... ... | ௩௬. |
| விசேஷார்க்கியம் ... ... ... ... | ௩௭. |
| திரவியசுத்தி ... ... ... ... | ௩௮. |
| மந்திரசுத்தி ... ... ... ... | ௩௯. |
| இலிங்கசுத்தி ... ... ... ... | ௩௯. |
| அபிஷேகம் ... ... ... ... | ௪௧. |
| எண்ணெய்க்காப்புவிதி ... ... | ௪௩. |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பஞ்சாமிர்தவிதி, பஞ்சகவ்வியவிதி ... | சங. |
| பால், தயிர், நெய், கோசலம், கோமயம் | சச. |
| அரிசிமா, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு | சரு. |
| குசோதகம் ... ... ... | சரு. |
| சிந்தியவிஸ்வத்திற்கூறிய பஞ்சாமிர்தவிதி | சசு. |
| பஞ்சபலோதகவிதி ... ... ... | சசு. |
| திருவொற்றுடை ... ... ... ... | சசு. |
| கணபதி இலக்குமி குருவந்தனம் ... ... | சசு. |
| சிவாசன உறுப்பு ... ... ... ... | சஎ. |
| சிவாசனம் ... ... ... ... | ரு0. |
| கூர்மாசனம் ... ... ... ... | ரு0. |
| அநந்தாசனம் ... ... ... ... | ருங. |
| சிம்ஹாசனம் ... ... ... ... | ருரு. |
| யோகாசனம் ... ... ... ... | எ0. |
| பதுமாசனம் ... ... ... ... | எச. |
| சப்தகோடிமகாமந்திரம ... ... ... | எரு. |
| விமலாசனம் ... ... ... ... | எசு. |
| சத்திமண்டலம் ... ... ... ... | அஎ. |
| சிவமூர்த்தி ... ... ... ... | அஅ. |
| நிஷ்களசிவம் ... ... ... ... | அகூ. |
| நிஷ்களசத்தி ... ... ... ... | கூ0. |
| அருவுருவத்திருமேனி ... ... ... | கூ0. |
| க. சிவசாதாக்கியம் ... ... | கூ0. |
| உ. அமூர்த்திசாதாக்கியம் ... ... | கூக. |
| ங. மூர்த்திசாதாக்கியம் ... ... | கூக. |
| ச. கர்த்திருசாதாக்கியம் ... ... | கூஉ. |
| ரு. கர்மசாதாக்கியம் ... ... | கூங. |
| ஐந்துமுகம் ... ... ... ... | கூரு. |
| பளிங்குநிறங்கொண்டது ... ... ... | கூசு. |
| தந்திராவதாரம் ... ... ... ... | கூசு. |
| தந்திரமூர்த்தி, வேதங்களின்தோற்றம் ... | கூஎ. |
| அங்கபேதம் ... ... ... ... | கூஅ. |
| அங்கம், பிரதியங்கம், சாங்கம், உபாங்கம், திருமுடி, திருமுகம், இருதயம் | கூகூ. |
| திருவடி, வித்தியாதேகம், திரிநேத்திரம் | க00. |
| திரிசூலம் ... ... ... ... | க0க. |
| மழு, வாள், குலிசம், அபயம், அக்கினி, அங்குசம் ... ... ... | க0உ. |
| மணி, சர்ப்பம், பாசம், மான், வரதம், புன்முறுவல் | க0ங. |

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| உபவீதம், சிகை, சிலம்பும் வீரக்கழலும் | க0ச. |
| கங்கை ... ... ... ... | க0ரு. |
| மந்திரமூர்த்தி ... ... ... ... | க0சு. |
| கலாமூர்த்தி ... ... ... ... | க0எ. |
| அத்துவாமூர்த்தி ... ... ... | க0அ. |
| மாத்ருகாமூர்த்தி ... ... ... | க0கூ. |
| மகோன்மனி ... ... ... ... | கக௧. |
| மகேசுவரமூர்த்தி ... ... ... ... | ககஉ. |
| இருபத்தைந்துமூர்த்தங்கள் ... ... | ககஉ. |
| க. சந்திரசேகரர் ... ... ... | ககங. |
| உ. உமாமகேசுவரர் ... ... ... | ககச. |
| ங. இடபாரூடர் ... ... ... | ககச. |
| ச. நடேசர் ... ... ... ... | ககரு. |
| ரு. கல்யாணசுந்தரர் ... ... ... | ககஎ. |
| சு. பிக்ஷாடனர் ... ... ... | ககஅ. |
| எ. காமாரி ... ... ... ... | கஉஉ. |
| அ. காலாரி ... ... ... ... | கஉங. |
| கூ. திரிபுராரி ... ... ... | கஉரு. |
| க0. சலந்தராரி ... ... ... | கஉஎ. |
| கக. மாதங்காரி ... ... ... | கஉகூ. |
| கஉ. வீரபத்திரர் ... ... ... | கங0. |
| கங. அரியர்த்தர் ... ... ... | கஙக. |
| கச. அர்த்தநாரீசுவரர் ... ... | கஙஉ. |
| கரு. கிராதர் ... ... ... ... | கஙங. |
| கசு. கங்காளர் ... ... ... | கஙச. |
| கஎ. சண்டேசுவரானுக்கிரகர் ... | கஙசு. |
| கஅ. நீலகண்டர் ... ... ... | கஙஅ. |
| ககூ. சக்கரதானர் ... ... ... | கச0. |
| உ0. விக்கினேசுவரானுக்கிரகர் ... | கசக. |
| உக. சோமாஸ்கந்தர் ... ... ... | கசஉ. |
| உஉ. ஏகபாதர் ... ... ... | கசச. |
| உங. சுகாசனர் ... ... ... | கசரு. |
| உச. தக்ஷிணாமூர்த்தி ... ... ... | கசரு. |
| உரு. இலிங்கோற்பவர் ... ... | கசஎ. |
| கணேசர் ... ... ... ... | கருக. |
| வல்லபை ... ... ... ... | கருச. |
| சுப்பிரமணியக்கடவுள் ... ... ... | கருச. |
| சிவபெருமான் பூசிக்கப்படும்போது இருக்கும் முறைமை ... ... ... ... | கருசு. |

விஷயம். பக்கம்.


சிவமூலம், பஞ்சோபசாரம் ... ... ௧௫௯.
சோடசோபசாரம், ஆவாகனம் ... ... ௧௬௦.
அங்குலவளவைப்பகுப்பு ... ... ... ௧௬௦.
கலைகளின் சொரூபம், கலைகளின் தோற்றம் ௧௬௧.
ஒடுக்கமுறை ... ... ... ... ௧௬௨.
கோஷகலை, மேதாகலை, இரசகலை ... ... ௧௬௩.
விஷகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை ... ௧௬௪.
நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினீகலை, வியோமரூபாகலை, அநந்தாகலை ... ... ... ... ௧௬௫.
அநாதாகலை, அநாசிருதாகலை, சமனாகலை, உன்மனாகலை ... ... ... ... ௧௬௬.
தாபனம், சன்னிதானம் ... ... ... ௧௬௯.
சன்னிரோதனம் ... ... ... ... ௧௭௦.
சந்தனம் ... ... ... ... ... ௧௭௨.
புஷ்பதானம், புஷ்பவிசேஷம், அதிதேவர்கள் ௧௭௩.
பலன் ... ... ... ... ... ௧௭௪.
கௌபீனம், உபவீதம், வஸ்திரம் .... .... ௧௭௫.
தத்துவத்திரயம், மாலை .... .... .... ௧௭௬.
கண்டாநாதம், தூபபேதமும் பலனும் .... ௧௭௭.
தீபபேதமும் பலனும் ... .... ....௧௭௮.
இலயாங்கம், போகாங்கம் ... .... ௧௭௯.
இரண்டாமாவரணம் .... .... ....௧௮௨.
மூன்றுமாவரணம், நான்காமாவரணம், ஐந்தாமாவரணம், நைவேத்தியம் .... ...௧௮௩.
பானீயம், முகவாசம், பவித்திரம் .... .... ௧௮௪.
தீபாராதனை, ஆராத்திரிகம் ... .... ௧௮௫.
செபநிவேதனம் ... ... ... ... ௧௮௬.
கர்மசமர்ப்பணமும், ஆன்மநிவேதனமும் .. ௧௮௯.
காமியமந்திரபூசை, குருவருச்சனை ... ... ௧௯௦.
யோகபீடவித்தியாபீடவணக்கம் பிரதக்ஷிணம் ௧௯௧.
நமஸ்காரம் ... ... ... ... ௧௯௨.
துவிகாலபூசை, அக்கினிகாரியம் ... ... ௧௯௪.
பூசாஹோமசமர்ப்பணம் ... ... ... ௧௯௫.
அஷ்டபுஷ்பம் ... ... ... ... ௧௯௬.
பிரார்த்தனை ... ... ... ... ௧௯௭.
சண்டேசுரபூசை .... ... ... ... ௧௯௯.

## இந்நூலுக்குப் பிரமாணமாக எடுத்துக்கொண்ட திருமுறைச் செய்யுட்களின்

# முதற்குறிப்பு அட்டவணை.

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

#### முதலாந்திருமுறை.


| | | |
|---|---|---|
| பிடியதனுரு | பக்கம் | ௧. |
| தடங்கொண்ட | ,, | ௪௧. |
| பாலினுனறு | ,, | ௪௩. |
| தடுக்கமருஞ் | ,, | ௬௦. |
| கண்ணிற்கனலாலே | ,, | ௧௨௩. |
| கல்லானிழற்கீழா | ,, | ௧௨௬. |
| வஞ்சமனத் | ,, | ௧௩௪. |
| அவ்வினைக்கிவ்வினை | ,, | ௧௭௬. |
| தொங்கலு | ,, | ௧௭௮. |


#### இரண்டாந்திருமுறை.


| | | |
|---|---|---|
| வேயுறு | பக்கம் | ௧௫. |
| கோங்குசண் | ,, | ௩௫. |
| பாதம்விண் | ,, | ௯௮. |
| குறைவதாய | ,, | ௧௧௩. |
| சூடல்வெண் | ,, | ௧௨௧. |
| வேளைமலிதண் | ,, | ௧௨௪. |
| நாகந்தான்கயி | ,, | ௧௩௯. |
| பண்டுநால்வருக் | ,, | ௧௪௬. |
| வாசநலஞ் | ,, | ௧௭௪. |
| முத்தேர்நகை | ,, | ௧௭௫. |


#### மூன்றாந்திருமுறை.


| | | |
|---|---|---|
| ஊனிலுயிர்ப்பை | பக்கம் | ௩௫. |
| தொகுத்தவனருமறை | ,, | ௯௭. |
| வேதமுதல்வன் | ,, | ௯௮. |
| வஞ்சகமனத்தவுண | ,, | ௧௨௭. |
| ஆருமெதிராத | ,, | ௧௨௮. |
| கடிசேர்ந்தபோது | ,, | ௧௩௮. |
| தோடொரு | ,, | ௧௭௨. |
| மந்திரநான்மறை | ,, | ௧௯௫. |
| கோலமாய | ,, | ௧௯௬. |
| ஆட்பாலவர்க் | ,, | ௨௦௦. |


### திருநாவுக்கரசுசுவாமிகள்.

#### நான்காந்திருமுறை.


| | | |
|---|---|---|
| சந்திரற் | பக்கம் | ௧௯. |
| கருவாய்க் | ,, | ௧௯. |
| காயமேகோ | ,, | ௩௪. |
| உடம்பெனுமனை | ,, | ௩௫. |
| தொண்டனேன் | பக்கம் | ௪௨. |
| பையஞ்சுடர்விடு | ,, | ௭௨. |
| நாலுகொலா | ,, | ௯௨. |
| போர்ப்பனையானை | ,, | ௧௦௩. |
| போற்றுந்தலைகயன | ,, | ௧௧௬. |
| குனித்தபுருவமும் | ,, | ௧௧௬. |
| கழைபடுகாடு | ,, | ௧௨௨. |
| தோடுலாமலர்கடுவிக் | ,, | ௧௨௪. |
| விரித்தபல்கதிர் | ,, | ௧௨௯. |
| எரியலாலுருவமில்லை | ,, | ௧௩௨. |
| புதுவிரி | ,, | ௧௩௩. |
| அரும்பெருஞ் | ,, | ௧௩௪. |
| வெங்கடுங் | ,, | ௧௩௪. |
| நிறைமறைக் | ,, | ௧௩௫. |
| பெருங்கடன் | ,, | ௧௩௬. |
| தழைத்ததோராத் | ,, | ௧௩௮. |
| வடங்கெழுமலைமத் | ,, | ௧௪௦. |
| தடமலராயிரங்கள் | ,, | ௧௪௧. |
| செல்வியைப் | ,, | ௧௪௪. |
| காலமுநாள்க | ,, | ௧௪௪. |
| கட்டிட்ட | ,, | ௧௭௫. |
| நாயினுங் | ,, | ௧௭௬. |
| முன்னெறி | ,, | ௧௮௯. |
| படைக்கல | ,, | ௧௮௯. |
| மோத்தையைக் | ,, | ௧௯௦. |
| ஆக்கையாற் | ,, | ௧௯௨. |
| கால்களாற் | ,, | ,, |
| சைகள்கூப்பித் | ,, | ,, |
| திருந்தா | ,, | ௧௯௪. |
| கைப்போதுமலர் | ,, | ௧௯௮. |
| கோவண | ,, | ௨௦௦. |


#### ஐந்தாந்திருமுறை.


| | | |
|---|---|---|
| பூக்கைக்கொண் | பக்கம் | ௫. |
| வேட்களத் | ,, | ௮. |
| வாழ்த்த | ,, | ௯. |
| அருக்கன்பாதம் | ,, | ௧௫. |
| பாவமும்பழி | ,, | ௪௨. |
| செய்யமேனியன் | ,, | ௪௨. |
| கன்னலைக் | ,, | ௯௧. |

கரும்பினை பக்கம் ககக.
மூன்றுமூர்த்தியு ,, க0க.
ஏயிலானை ,, ககக.
இரண்டுமாமவர்க்கு ,, கக௩.
வாமதேவன் ,, கஉரு.
தாயினுநல்ல ,, கஉரு.
ஆலத்தார் ,, கசகூ.
செங்கணானும் ,, கரு0.
நங்கடம்பனை ,, கசுகூ.
அண்டமாரிரு ,, கசுகூ.
என்னிலாரு ,, கசுகூ.
விண்டமாமலர் ,, கஎச.
மதிதருவனெஞ்சமே ,, ககூஉ.
ஞானத்தாற் ,, ககூ௩.
பெருகலா ,, ககூ௩.
யாதேசெய்து ,, ககூரு.
பூமென்கோதை ,, ககூரு.
எட்டுநாண்மலர் ,, ககூஎ.

ஆறாந்திருமுறை.

திருநாம பக்கம் ரு.
மண்ணதனி ,, ௩0.
ஆவாகி ,, ௩அ.
பேராயிரம்பரவி ,, ௩கூ.
இருநிலனாய்த் ,, எகூ.
உயிராவணை ,, ககரு.
எச்சனிணத்தலை ,, க௩0.
பொருந்தாத ,, கசஉ.
ஆளானவடியவர் ,, கஎஉ.

சுந்தரமூர்த்திநாயனார்.

ஏழாந்திருமுறை.

இயக்கர்கின்னரர் பக்கம் அ.
ஊனங்கத்துயிர்ப்பாய் ,, கூச.
யாழைப்பழித்தன்ன ,, கக௩.
குரும்பைமுலை ,, ககஎ.
அந்தணாளன் ,, கஉச.
மூவெயில்செற்ற ,, கஉசு.
ஏன்றவந்தணன் ,, க௩சு.
கோலமால்வரை ,, கச0.
பேழ்வாய் ,, கருக.
ஆலந்தானுகந்தமுது ,, கஅச.
அந்தியுநண்பகலும் ,, கஅஅ.
மறிசேர்கையினனே ,, ககூரு.
குறைவிலாநிறைவே ,, ககூஅ.

மாணிக்கவாசகசுவாமிகள்.

எட்டாந்திருமுறை.

வானுலாமெரியும் பக்கம் சு.
சித்தமேபுகுந்தெம்மை பக்கம் கூ.
முத்தனேமுதல்வா ,, கூ.
பாரிடையைந்தாய்ப் ,, ௩0.
புத்தன்முதலாய ,, சு0.
நிலநீர்நெருப்புயிர் ,, எகூ.
தானந்தமில்லான் ,, க00.
கோற்றேன் ,, க0உ.
செய்யவாய்ப் ,, க0ரு.
மலைமகளை ,, க0ரு.
உடையாளுன்றன் ,, ககக.
தென்பாலுகந்தாடும் ,, ககச.
கடகரியும் ,, ககரு.
மலையரையன் ,, ககஎ.
அம்பலத்தேகூத்தாடி ,, கஉக.
எண்ணுடை ,, கஉசு.
அத்தியுரித்தது ,, க௩0.
பண்பட்ட ,, க௩க.
தோலுந்துகிலும் ,, க௩௩.
தீதில்லைமாணி ,, க௩அ.
கோலாலமாகி ,, கச0.
சலமுடைய ,, கசக.
பங்கயமாயிரம் ,, கசக.
அருந்தவருக்காலின் ,, கசசு.
பிரமனரி ,, கரு0.
ஆயமொழிக் ,, கஎரு.
என்னப்பன் ,, ,,
பேதித்து ,, கஅஅ.
நானேயோதவஞ் ,, ,,
அன்றேயென்றனாவி ,, கஅகூ.
சிந்தனைநின்றனக் ,, ககூ௩.

ஒன்பதாந்திருமுறை.

ஆவாவிவர்தம் பக்கம் கஉச.
தாதையைத்தாளற ,, க௩அ.

பத்தாந்திருமுறை.

மலர்ந்தவயன்மா பக்கம் கூச.
அகாரமுதலா ,, கூச.
நூலுஞ்சிகை ,, க0ச.
ஐம்பதெழுத்தே ,, கக0.
பரந்துலகே ,, கஉக.
அப்பணி ,, கஉசு.
எங்குங்கலந்து ,, கஉஅ.

பதினொராந்திருமுறை.

அவனேயிருசுடர் பக்கம் எகூ.

சிவமயம்.

# சிவபூசை விளக்கம்.

## விநாயக வணக்கம்.

*திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.*

பண்—வியாழக்குறிஞ்சி.

*"பிடியதனுருவுமைகொளமிகுகரியது*
*வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்*
*கடிகணபதிவரவருளினன்மிகுகொடை*
*வடிவினர்பயில்வலிவலமுறையிறையே."*

எந்தக்கருமத்தைச் செய்யத்தொடங்கும்பொழுதும், முதலில் விநாயகவணக்கம் வேண்டும். விநாயக மூலமந்திரத்தையுச்சரித்து, முட்டியாகப்பிடித்த இருகரங்களினாலுஞ் சிரசிலைந்துமுறை குட்டுதல்வேண்டும். குட்டும்பொழுது மத்தகத்திலிருக்கும் அமிர்தமானது பெருகிச் சுழுமுனைநாடிமார்க்கமாக மூலாதாரத்திலொளிரூபமாகவிருக்கின்ற விநாயகரையடைந்து, அபிஷேகமாக, அவர் அருள்செய்வரென்பதே இதன்பாவனையாம்.

ஐந்துமுறைகுட்டுவது பஞ்சபாதகநீக்கத்தின் பொருட்டாகும். மும்முறைகுட்டவேண்டுமென்று சிலநூல் கூறும்.

# சிவபூசையின் பொதுவிதி.

பிறவிகளுட்சிறந்த மானுடசன்மத்தை முற்பிறப்பிற்செய்த புண்ணியமேலீட்டினாலே எடுத்த அன்பர்கள்செய்யுஞ் சிவபூசையானது, ஆன்மார்த்தபூசை, பரார்த்தபூசையென இருவகைப்படும். ஆசாரியர் தீக்ஷைபண்ணி அருள்சுரந்து, சீடனைப் பார்த்து "நீ இறக்கும்வரையுங் கைவிடாது இவரைநாடோறும் பூசி" என்று அனுமதிசெய்து, "அடியேனிச்சரீரமுள்ளவரையுஞ் சிவார்ச்சனைசெய்தன்றி ஒன்றுமுண்ணேன்" என்றுசம்மதி செய்வித்துக்கொண்டு கொடுக்க அவன்வாங்கிப்பூசிப்பது இட்டலிங்கபூசையாம்.

எல்லாஆன்மாக்களுக்கும் அனுக்கிரகஞ்செய்யுங்காரணமாகக் கோயில்களிற்பிரதிட்டைசெய்து பூசிப்பது பரார்த்தலிங்கபூசையாம்.

க்ஷணிகலிங்கம், பொன்முதலிய லோகங்களாலாகியலிங்கம், இரத்தினங்களாலாகிய லிங்கம், சைலலிங்கம், வாணலிங்கம் முதலியன பூசிக்கத்தக்கவை.

க்ஷணிகலிங்கமானது மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா எனப்பன்னிருவகைப்படும். புற்றுமண்ணாலிலிங்கமமைத்துப் பூசித்தவர் மோட்சத்தையும், அரிசியாலமைத்துப்பூசித்தவர் செல்வத்தையும், அன்னத்தினாலமைத்துப்பூதித்தவர் அன்னாதிபதியாதலையும், நதிமண்ணாலமைத்துப் பூசித்தவர் பூமிலாபத்தையும், கோமயத்தினாலமைத்துப் பூசித்தவர் ரோகசாந்தியையும், வெண்ணெயாலமைத்துப் பூசித்தவர் மனதில்விரும்பியபலனையும், உருத்திராட்சத்திற்பூசித்தவர் ஞானவிருத்தியையும், சந்தனத்தாலமைத்துப்பூசித்தவர் போகத்தையும், கூர்ச்சத்திற்பூசித்தவர் புத்திவிருத்தியையும், புஷ்பமாலையிற்பூசித்தவர் ஆயுள்விருத்தியையும், சருக்கரையாலமைத்துப் பூசித்தவர் மனதில்விரும்பிய சித்தியையும், மாவாலமைத்துப் பூசித்தவர் சரீரபுஷ்டியையும் அடைவார்களென்று க்ஷணிகலிங்கபூசாபலன் அம்சுமான் ஆகமத்திற் கூறப்பட்டது. இவ்வி

லிங்கங்களிற் சிவபெருமான் பூசைமுடியும்வரையும்வியாபகமாய் நின்று அனுக்கிரகிப்பர். நாடோறும் பூசாந்தத்தில் க்ஷணிகலிங்க த்தைக் கங்கையில்விடுதல்வேண்டும். அல்லது குறித்தஒருதினத் தில்விடுவதுமுண்டு.

பொன், தாமிரம், வெள்ளி, வெண்கலம், பித்தளை, இரு ம்பு என்னும் லோகங்களாலாகிய லிங்கம் லோகசலிங்கமெனப் படும்.

பொன்னாலமைக்கப்பட்ட இலிங்கத்தைப்பூசித்தவர் போக மோட்சத்தையும், தாமிரத்தாலமைக்கப்பட்ட இலிங்கத்தைப் பூசித்தவர் புத்திவிருத்தியையும், வெள்ளியாலமைக்கப்பட்ட இ லிங்கத்தைப்பூசித்தவர் செல்வத்தையும், வெண்கலத்தினாலமைக் கப்பட்ட இலிங்கத்தைப்பூசித்தவர் சுகத்தையும், பித்தளையினால மைக்கப்பட்ட இலிங்கத்தைப்பூசித்தவர் ரோகநிவாரணத்தையும், இரும்பினாலமைக்கப்பட்ட இலிங்கத்தைப்பூசித்தவர் சத்துருசய த்தையுமடைவாரென்று லோகலிங்கபூசாபலன் சிந்தியவிசுவாக மத்திற் கூறப்பட்டது. மற்றையமூன்றுலோகங்களாலாகிய இலி ங்கத்தைப் பூசித்தவர் அபமிருத்துவையடைவர்.

மரகதம், பதுமராகம், வைடூரியம், படிகம், புஷ்பராகம், பவளம், வச்சிரம், மாணிக்கம், இந்திரநீலம் என்பவைகளாலாகிய இலிங்கம் இரத்தினலிங்கமெனப்படும்.

மரகதலிங்கத்தைப்பூசித்தவர் புஷ்டியையும், பதுமராக லிங்கத்தைப்பூசித்தவர் செல்வத்தையும், வைடூரியலிங்கத்தைப் பூசித்தவர் ஆயுள்விருத்தியையும், படிகலிங்கத்தைப்பூசித்தவர் புத்திரவிருத்தியையும், புஷ்பராகலிங்கத்தைப் பூசித்தவர் சத்து ருத்தம்பனத்தையும், பவளலிங்கத்தைப்பூசித்தவர் இராசவசியத் தையும், வச்சிரலிங்கத்தைப்பூசித்தவர் ஆகர்ஷணத்தையும், மா ணிக்கலிங்கத்தைப்பூசித்தவர் சகலசித்தியையும், இந்திரநீலலிங் கத்தைப்பூசித்தவர் மோட்சத்தையுமடைவார்களென்று இரத்தி னலிங்கபூசாபலன் சிந்தியவிசுவாகமத்திற் கூறப்பட்டது.

சிவபெருமான் மற்றலிங்கங்களிற்போல வாணலிங்கத் தில் ஆவாகனாதிகள்வேண்டாது அனவரதமும் நீங்காதிருப்பதா ல் ஏனையவிலிங்கபூசையினும் வாணலிங்கபூசை விசேஷமுடைய தாம்.

சைவசமயநெறி.

"நீங்காதே வாணலிங்கந் தன்னிலுறு நின்மலன்றான்
பாங்காகப் பூசையினைப் பண்."

இட்டலிங்கபூசையானது சுத்தம், மிச்சிரம், கேவலமென மூவகைப்படும். சிவலிங்கமொன்றைமாத்திரம் பூசித்தல் சுத்த பூசையெனவும், சிவலிங்கத்தையும் உமாதேவியாரையும் பூசித்தல் கேவலபூசையெனவும், விநாயகர், கந்தர், இடபதேவர் என்னும் மூவரையுஞ் சிவன் சத்தியுடன்கூட்டி ஐவராகப்பூசித்தலுங் கேவலபூசையெனவும், சூரியாதி சண்டேசுராந்தம் விரித்துப்பூசித்தல் மிச்சிரபூசையெனவுஞ் சிவாகமங்கள் செப்புகின்றன. துறவிக்குச் சுத்தபூசையும், இல்வாழ்வானுக்குக் கேவலபூசையும், மிச்சிரபூசையும், சிவபெருமானிடத்திலே விட்டுநீங்காதபத்தியையுடைய ஆசாரியனுக்கிம்மூன்றுபூசைகளுமுரியன.

சைவசமயநெறி.

"சுத்தமுங் கேவலமு மிச்சிரமுந் தொண்டரவர்
பத்தியினு லர்ச்சிக்கும் பாங்கு."

ஆன்மார்த்தபூசைசெய்யாது பரார்த்தபூசைசெய்தவர்கள் பூசையின்பயனையிழப்பதுமன்றி நரகத்துன்பத்தையுமடைவார்கள், பிரமவிட்டுணுக்களும் ஆன்மார்த்தபூசைசெய்தே தங்கள் தங்கள் அதிகாரகிருத்தியங்களைச்செய்வர்.

சைவசமயநெறி.

"சிவபூசை செய்யுமுன் மற்றொன்றுஞ் செய்யேல்
சிவபூசை செய்தபின் செய்."

குருவுக்குச் சம்மதிகொடுத்து, அவரிடத்திலேற்றுப்பூசித்த இலிங்கத்தை நன்குபூசியாது இடையில் விடுத்த பாவிகள் நற்கதியையிழந்து குட்டமுதலிய ரோகங்களாற் பீடிக்கப்பட்டு, இறந்தபின் நரகத்துன்பத்தையனுபவித்துப் பிறவியாகிய சமுத்திரத்துட் புகுவார்கள்.

சைவசமயநெறி.

"தமக்கருக மோருருவிற் பூசை சமையார்
தமக்குத் துணையாதோ தான்."

திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம்.

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
றீவண்ணர் திறமொருகாற் பேசாராகி
லொருகாலுந் திருக்கோயில் சூழாராகி
லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகி
லருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி
லளியற்றார் பிறந்தவா றேதோவென்னில்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

தனித்திருக்குறுந்தொகை.

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டா னாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே."

சிவபூசை செய்யாதுண்டவனுடைய உணவானது புழுவுமாம், பிணமுமாம், புலையனுடைய மலமுமாம், பெரும் பாவமுமாம். பானஞ்செய்யுநீரானது மூத்திரமுஞ் சுக்கிலமுமாம். அவன் சிவார்ச்சனையினின்று நீங்கிய முப்புராதிகளைப்போலவுந் தக்கனைப்போலவுந் தண்டிக்கப்படுவன். அவன்மேற்குலத்திற் பிறந்தானேனுஞ் சிவபூசை செய்யுமன்பர்கள் அவனைத் தீண்டினும், மனதால் நினைக்கினும், கண்களாற் காண்கினும், அவனுடைய குணங்களை வாயினாற் சொல்லினும் பாவமாம்.

சைவசமயநெறி.

"அலரினைச்சூட்டாதமலன்றாளினருந்தன்ன
மலமாம்பிணமுமாமாசு."

ஆசௌசதீபிகை.

"புண்ணியநற் சிவபூசை புரியாமற் புசித்தோன்
புழுப்புசித்தோ னேமந்தான் செய்யாது புசித்தோன்
மண்ணினிடை மலம்புசித்தோ னைந்தெழுத்து முதலா
மந்திரங்கள் செபியாமன் மறந்தேனுங் குடித்தோன்
றண்ணியவா மூத்திரமுஞ் சுக்கிலமுங் குடித்தோன்
றானவ னவன்றனக்குத் தந்திடுவோன் பின்னர்
நண்ணியதீ விடம்புசிப்போ னதலினா னியம,
நழுவாமற் செய்திடுவா னுபத்து வரினும்."

## திருவாசகம்.

வாளுலா மெரியு மஞ்சேன் வரைபுரண் டிடினு மஞ்சேன்
தோளுலா நீற்ற னேற்றன் சொற்பதங் கடந்த அப்பன்.
தாளதா மரைக ளேந்தித் தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே.

சிவபூசைசெய்யாது அன்னபானாதிகளை மறந்தேனு முட்கொள்ளவொண்ணாது. உட்கொள்ளுகில் அவைகளை உவாந்தித்து நீரில்ஸ்நானஞ்செய்து, இருமுறை சிவபூசைசெய்து, அத்தினம் முழுதுமுபவசியாயிருந்து, ஸ்ரீ பஞ்சாட்சரத்தைப் பதினாயிரமுருச்செபித்து, மற்றைநாளிற் சிவனுக்கு விசேஷபூசைசெய்து, சிவாலயங்களுக்குஞ் சிவனடியாருக்கும் பொருள்களைத் தானஞ்செய்து, சிவபூசைசெய்யாது புசித்த கொடுவினைகெட விளங்கல் வேண்டும்.

## வாயுசங்கிதை.

"ஆக்கையினு ளான்மாவிங் குறைவளவும்
பூசையினை யாற்றியல்லா
லேக்கறவா லருந்தவொண்ணா தருந்திலவை
யெதிரெடுத்தங் கெறிநீர்மூழ்கிப்
பூக்கமழுங் குழலுமையோ டிறைமுதலை
யிருமுறைதான் பூசைசெய்து
நாக்குநசை யர்லற்றை நாண்முழுது
மொன்றுமருந் தாதுநண்ணி."

"ஐஞ்செழுத்தை யோர்பதினா யிரமுருத்தா
ஞ்செபிப்பின் னடுத்தநாளின்
மஞ்சுறழுங் கருங்கூந்தல் பாகனுக்கு
மாபூசை வகுத்துவாரி
நஞ்சுபொதி மிடற்றிறைக்கு மவனடியார்
தமக்குமுறு பொருள்கணல்கி
விஞ்சியவெம் பசியினா லருந்தியவெவ்
வினைகள்கெட விளங்கவேண்டும்."

ஆசாரியனிடத்திற் றான்ஏற்றுக்கொண்ட இலிங்கத்தை அழகற்றதெனவிடுத்து, வேறொருலிங்கத்தைப்பூசிப்பவன் ஊர்த்துவகதியையடையமாட்டான். அழகிய வேறு இலிங்கத்தை விரும்பியவன் முதலிற்றான் ஏற்றுக்கொண்ட இலிங்கத்தைவிடாது,

அதனோடு தான்விரும்பிய இலிங்கத்தையும் இன்னுமோரிலிங்க த்தையுங்கூட்டி, மூன்றிலிங்கமாகப் பூசிப்பானாயின் போகத்தை யும் மோக்ஷத்தையுமடைவான்.

சிவபூசையின் பெருமையை உலகத்தாருக்கறிவிக்க நினை ந்தபேரருளாலே, உலகமாதாவாகிய உமாதேவியாரும், விநாயக க்கடவுளும், சுப்பிரமணியக்கடவுளும், பூவுலகத்தையடைந்து, காஞ்சீபுரம், திருச்செங்காடு, செருத்தணிமுதலிய சிவஸ்தலங்க ளிற் கர்மசாதாக்கியத்திருவுருவைப் பூசித்து விளங்கினார்கள்.

### காஞ்சிப்புராணம்.

"அகிற்புகை தீபமெல்லா மினிதளித் தாக்கு நன்னீர்
மகிழ்ச்சியிற் சுழற்றிப் பல்கால் வலஞ்செய்து வணங்கிப் போற்றி
யிகப்பிலஞ் செழுத்து மெண்ணி யின்னன பிறவு மாற்றி
முகிழ்த்தபே ரன்பி னன்ற பூசனை முற்றச் செய்தாள்."

### கந்தபுராணம்.

"மீண்டுசெங் காட்டி லோர்சார் மேவிமெய்ஞ் ஞானத் தும்பர்
தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித் தேத்திப்
பூண்டபே ரன்பிற் பூசை புரிந்தனன் புவியு ளோர்க்குக்
காண்டகு மனைய தானங் கணபதீச் சரம தென்பார்."

"இவ்வரை யொருசார் தன்னி லிராறுதோ ளுடைய வெந்தை
மைவிழி யணங்குந் தானும் மாலய னுணரா வள்ள
லவகை யுருவி லொன்றை யாகம விதியா லுய்த்து
மெய்வழி பாடு செய்து வேண்டியாங் கருளும் பெற்றான்."

கோடிருத்திரர் நந்திதேவர், விட்டுணு, பிரமா, காளி, இலக்குமி, சரசுவதி, மார்க்கண்டேயர், அகத்தியர், வசிட்டர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், திக்குப்பாலகர்கள், நவக்கிரகங்கள், துருவன், தக்கன், வாணாசுரன், வசுக்கள், சைவசமயாசாரியர் களாகிய நாயன்மார்களுள் அநேகர், பட்டினத்தடிகள், சேந்தனா ர்முதலிய பலருஞ் சிவார்ச்சனைப்பெருமையினாலன்றோ தாந்தா ம் விரும்பியவைகளைப் பெற்றின்புற்றனர்.

உயர்ந்தபிறப்பினரன்றிக் கீழ்ப்பிறவிகளாகிய நாகம், சில ந்தி, யானை, நாரை, கரிக்குருவி முதலியனவுஞ் சிவார்ச்சனைசெய் து முத்தியடைந்தன.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—தக்கேசி.

"இயக்கர்கின்னரர்யமனொடுவருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கள்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே."

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

"வேட்களத்துறைவேதியனெம்மிறை
ஆக்களேறுவரானஞ்சுமாடுவர்
பூக்கள்கொண்டவன்பொன்னடிபோற்றினாற்
காப்பர்நம்மைக்கறைமிடற்றண்ணலே."

மோட்சத்தைஅடைய இச்சிக்கின்ற அடியவர்கள் சிவாகமவிதிப்படி சிவபூசைசெய்தல் வேண்டும். சிவாகமங்களோடு முரணுதலடையாத வேதவிதிப்படிசெய்தல் நன்மையாம். முரணுதலுறும் வேதவிதிப்படிபூசித்தவர்கள் சுவர்க்கமுதலிய பதவிகளையடைவார்கள்.

சைவசமயநெறி.

"கொள்கசிவாகமத்திற்கூறுநெறிபூசாதி
கொள்ளல்புறநூல்விதியெல்லாம்"

"அன்னியநூலின்விதியவிரோதமே
லுன்னேல்பழுதென்றுளத்து".

சிவபூசையை மூன்றுகாலமுஞ்செய்க. அல்லது, இரண்டு காலமாவது, சத்தியற்றவர்கள் ஒருகாலமாவது தவறாதுசெய்க.

மனவுறுதியுடன் ஆன்மார்த்தபூசைசெய்தவர்கள், பிரமகத்திமுதலிய பாவங்களையும், பகைகளையும் நீங்குபவர்களாயும், மூவுலகஐசுவரியங்களையும், பலவிதமானதானங்களாலும் யாகங்களாலுமெய்தற்பாலனவாகிய பலன்களையும் வெற்றியையும், செல்வத்தையுமடைபவர்களாயும், ஆணவமலத்தைவென்று மோட்சத்தையடைபவர்களாயும விளங்குவார்கள்.

அதற்கு அன்பினாலே தொண்டுசெய்தவர்களும், பூசையைத்தரிசித்தவர்களும், பிறவியாகியதுன்பத்தைநீக்கும் மெய்யறிவைப் பெற்றுச்சிவலோகத்தை அடைவார்கள். சிவார்ச்சனையின்பெருமையைக்கேட்டவர்களும்,கேட்போருள்ளமகிழ வதனைச் சொன்னவர்களும், நமக்குமிவ்விதம் சிவபூசனைசெய்யும்பேறு கிடைக்குமோவென்று விரும்பினவர்களும், சிவபூசைக்குபகரணங்களைக் கொடுத்தவர்களுமாகிய இவர்கள் சிவலோகத்தை அடைந்து, அங்கேயுள்ள போகங்களையனுபவித்து, மீட்டும் பூமியிலே தோன்றி, இவ்வுலகத்தையாளும் நீதிவேந்தராவார்கள். தோற்றியும் முற்செனனத்திற்கேட்டல், சொல்லுதல், உபாசித்தலாகிய நல்லவாதனை விளங்கப்பெற்றுச் சிவதருமத்தையே விரும்பிச் செய்வார்கள். சிவலோகத்திலுள்ள போகத்தை விரும்பாதவர்கள் அங்கேயிருந்து பரிபக்குவராய்ப் பரகதியடைவார்கள்.

### சிவதருமோத்தரம்.

"கேட்டுளார் மகிழச் சொல்வார் கிடைக்குமோ வெமக்கு மென்று
வேட்டுளா ருபகா ரங்கள் விளைத்துளா ரிவரு மெய்ய
ஞட்டுளார் பிறக்கி லிம்மண் ணுயக ராவ ராகித்
தேட்டுளார் சிவதன் மங்கள் வாதனை திகழ்த லாலே."

### திருநாவுக்கரசுநாயனார்.

தனித்திருக்குறுந்தொகை.

"வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே."

### மாணிக்கவாசகசுவாமிகள்.

சித்தமேபுகுந்தெம்மையாட்கொண்டுதீவினைகெடுத்துய்யலாம்
பத்திதந்துதன்பொற்கழற்கணேபன்மலர்கொய்துசேர்த்தலு
முத்திதந்திந்தமூவுலகுக்குமப்புறத்தெமைவைத்திடு
மத்தன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.

"முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
மொட்டறாமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
பரகதிகொடுத்தருள்செய்யுஞ்

சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீர்
அத்தனேயடியேனுதரித்தழைத்தால்
அதெந்துவேயென்றருளாயே.”

பகிர்யாகமாகியகிரியாபூசையைப் பிரதானமாய் அந்தரியாகத்திற் சிறிதுதரிசனங்கூடடிப்பூசிப்பது கிரியாபூசையாம்.

பகிர்முகமாகியகிரியாபூசையினும் தரிசனம் விட்டுநீங்காதிருத்தலால் இந்த இருவகைப்பட்டபூசைகளும் ஒரேதன்மையினவாய் அறிந்துசெய்தல் ஞானபூசையாம்.

சதாசிவரூபம்.

“இந்தநிலையிற்றரிசனமென்று
மந்தாதிருப்பதுஞானபூசை
யந்தரியாகமுமாம்புறயாகமு
மிந்தநெறிபிறிவில்லாதாதலிற்
புந்தியில்ஞானபூசையென்றதுவே.

---

௨

# சூரியபூசை.

அஸ்திரமந்திரமயமான இடத்தின்மத்தியிற் பிருதிவியாதிமாயாந்தமான முப்பத்தொருதத்துவங்களையு மனசாற்கடந்து சுத்தவித்தியாமயமான பூசாத்தானத்தையடைந்ததாகப்பாவித்துப் பூசோபகரணங்களைச்சேகரித்துக் கொண்டு, சூரியபூசையைச்செய்க.

சூரியசகளீகரணம்.

ஓம்ஹ: அஸ்திராயபட் என்று கரதலகரபிருட்டங்களை வலமிடமாகச்சோதித்து ஓம்ஹாம்ஹ்ரீம் ஸ:சிவசூரியாயவௌஷட் என்று ஆப்பிலாவனம்பண்ணி, அங்குட்டங்களில் தர்ச்சனிகளால் ஓம் ஹம் இருதயாயநம: கனிட்டை அநாமிகைமத்திமைகளில் அங்குட்டங்களால் ஓம் ஹம் அர்க்காய்சிரசேநம: ஓம் பூர்ப்புவசுவ

ரோம் சுவர்லினீசிகாயைநமஃ ஓம் ஹூம் கவசாயநமஃ என்று நியசித்து உள்ளங்கைகளில் மத்திமை தர்ச்சனிகளால் ஓம் ஹம் பாநுநேத்திராப்பியாம் நமஃ தர்ச்சனிகளில் ஓம்ரஃ அஸ்திராயபட் என்று அங்குட்டங்களால்நியசித்துக் கவசத்தாலவகுண்டனஞ்செய்து, வௌஷடந்தசூரியமூலத்தாலிருகையையுங்கூட்டிச்சூரியமூலத்தாற்றேகசுத்திபண்ணி, வலக்கையநாமிகாங்குட்டங்களினாலிருதயத்திலிருதயமந்திரத்தையும், சிரசிற்சிரோமந்திரத்தையும், சிகையிற்சிகாமந்திரத்தையும், தர்ச்சனிகளாற் கண்டத்தைச்சுற்றித் தனமத்தியாந்தமாகக் கவசத்தையும்நியசித்து, மத்திமை தர்ச்சனிகளினாலே நேத்திரங்களில் நேத்திரத்தைநியசித்து, அத்ததலங்களில் அநாமிகைகளினால் அஸ்திரத்தைநியசித்து, அஸ்திரத்தால் தாளத்திரயமும், சோடிகாமுத்திரையினால் பத்துத் திக்குகளிலும் அஸ்திரமந்திரமுச்சரித்துத் திக்குபந்தனமும், கவசத்தாலவகுண்டனமும்பண்ணிச் சர்வாங்கமுஞ் சூரியமூலத்தினால் மகாமுத்திரைதரிசிப்பித்துத் தன்னைச் சூரியசொரூபமாகப்பாவிக்க.

### தர்சனார்க்கியம்.

தாமிரபாத்திரத்திலிரத்தபுஷ்பமுதலியவற்றோடு சலத்தைப்பூரித்து, எழுந்து பூமியில்முழந்தாள்களையூன்றிக்கொண்டு, இரண்டுகையாலுமெடுத்துச் சிரசுவரையுங்கொண்டுபோய், ஓம் ஹாம்ஹ்ரீம் சஃசிவசூரியாயநமஃ என்றுதரிசனார்க்கியங்கொடுத்து, இயன்றவரை சூரியமூலமந்திரத்தைச்செபிக்க.

### அருக்கியம்.

அருக்கியபாத்திரத்தை அஸ்திரத்தாற்சோதித்து ஓம் கம் கஷோல்காய சூரியமூர்த்தயேநமஃ என்றுஉச்சரித்துப் புருவமத்தியத்தில்விளங்குகின்ற அருணபிந்துதாரையாகப்பாவித்துக் கந்தோதகத்தைப்பூரித்து, ஆசனமூர்த்திமூலத்தாலும் சூரியஷடங்கங்களினாலும்பூசித்து, அஸ்திரத்தால் இரட்சையும், கவசத்தாலவகுண்டனமும், வௌஷட்என்பதை இறுதியாகவுடைய மூலத்தாற்றேனுமுத்திரையுங்கொடுத்து, அந்தச்சலத்தினாற்றன்னையும், பூசாத்திரவியங்களையும், பூசாத்தானத்தையும் அஸ்திரத்தாற்புரோட்சித்து, விக்கினங்களைப்போக்கி வேதிகையிலெழுதப்ப

ட்ட அட்டதளபத்மத்திலாதல், தாமிரமுதலாகிய லோகங்களினு ற்செய்யப்பட்ட பத்மத்திலாதல் சிவசூரியனைப்பூசிக்க.

மேற்குத்துவாரத்தின் தென்புறத்தில் பொந்நிறமுந்தூல தேகமும், வலக்கரத்தில் லேகினியும், இடக்கரத்தில் மசிபாத்திரமுமுடையவரும், ஆன்மாக்கள்செய்கின்றகன்மங்களை எழுதிக்கொண்டிருப்பவருமான தண்டியென்பவரைத்தியானிக்க.

துவாரத்துக்கு வடபாகத்தில் செந்நிறமும், வலக்கைச்சுட்டுவிரலைநீட்டி யச்சுறுத்துதலும் இடக்கையிற்றண்டமுமுடையவராகிய பிங்கலரைத்தியானிக்க.

ஈசானதிக்கில் செந்தாமரையாசனத்திலிருப்பவரும் தந்தப், பாசம், அங்குசம், மாம்பழமாகிய இவைகளைத்தரித்தவரும், யானைமுகத்தையுடையவருமாகிய கணபதியைத்தியானிக்க.

அக்கினிமூலையில் விபூதியை உத்தூளனமாகப்பூசியதால் வெண்ணிறச்சரீரத்தையும், சடாமகுடத்தையும், யோகபட்டத்தையும், நாபிவரையும்பொருந்திய பூணூலையும், யோகமுத்திரையையும், சாந்தகுணத்தையுமுடையவராகியகுருவைத்தியானிக்க. நடுவில் பிரபூதாசனாய நம என்று சுவேதபீடத்தையருச்சிக்க.

அக்கினிமுதலிய நான்குகோணங்களிலும் வெண்மைநிறமுள்ளவிமலன, செம்மைநிறமுள்ளசாரன், பொன்மைநிறமுள்ள ஆராத்தியன், பச்சைநிறமுள்ள பரமசுகனென்னும் நான்கு சிங்கங்களைப் பூசிக்க.

அதற்குமேல் பதுமாசனத்தைக் கர்ணிகையோடுகூடியதாக அருச்சித்துக் கிழக்குமுதலிய வெட்டுத்தளங்களிலும் தீபச்சுவாலைபோன்றவர்களும், ஒருகரத்தில்சாமரையையும், ஒருகரத்தில் தாமரைப்புஷ்பத்தையுந்தரித்தவர்களுமாகிய தீப்தை, சூட்சுமை, ருசை, பத்திரை, விபூதி, விமலை, அமோகை, வித்யுதை, கர்ணிகையில் சர்வதோமுகி என்னும் நவசத்திகளைப் பூசித்து, விற்புரமுத்திரை*கொடுத்து, சூரியனுக்கு ஆசனத்தைக்கற்பித்து, மூர்த்தியைப்பூசிக்க.

---

* கருதிணைப் பெருவிரல் கனிட்டை யேமுதல்
விரனுதி தொடுவது விற்புர முத்திரை.

வெண்டாமரைப் பூவின்மேல் விளங்குகிற பேரொளியொருந்திய சிவந்தவிருத்தமண்டலத்தின் நடுவிலிருப்பவரும், மாதுளம்பூப்போன்ற நிறத்தையுடையவரும், இருதோள்களினுஞ்சார நாளத்தோடுகூடிய இரண்டு வெண்டாமரைப் புஷ்பங்களையேந்திய இரண்டுகைகளையுடையவரும், ஒருமுகமும் இரண்டுகண்களுமுடையவரும், சிவப்புவஸ்திரத்தைத் தரித்தவருமாகிய சூரியமூர்த்தியைத்தியானித்து மூலமந்திரத்தாலாசனத்தில் மூர்த்தியைநியாசஞ்செய்து நேத்திரமுத்திரைகொடுத்து, புஷ்பாஞ்சலியையுடையவனுப் லலாடத்தில்விளங்குகின்ற அருணவிந்து அஞ்சலிக்குள் வந்ததாகத்தியானித்து, மூலமந்திரத்தையுச்சரித்து ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சன்னிரோதனம் செய்து †பிம்பமுத்திரையையுந்தரிசிப்பிக்க.

இருதயாதி அங்கங்களில் இருதயாதிமந்திரங்களை நியசித்து மூலமந்திரத்தால் ஒன்முக்கி இரட்சை, அவகுண்டனம், அமிர்தீகரணஞ்செய்து, மகாமுத்திரை, பாத்தியாதிகொடுத்து, வௌஷட்என்பதை இறுதியாகவுடைய மூலத்தினுல் புட்பம், அறுகு, அட்சதைகளைச்சாத்திப் பாவனுபிஷேகஞ்செய்து, சிவப்புவஸ்திரம், கந்தம்முதலியவற்றல் அலங்கரித்துப் புஷ்பாஞ்சலித்திரயம் சமர்ப்பித்து அருக்கியங்கொடுத்து, *பத்மமுத்திரையும், பிம்பமுத்திரையுங்கொடுத்துச் சிவசூரியனைப் பூசிக்க. அவ்வவ்வங்கங்களில் லயாங்கபூசையைச்செய்க.

## போகாங்கம்.

அக்கினிமுதலிய தளங்களில் இருதயாதிமந்திரங்களைப் பூசிக்க. இருதயாதிகளுக்குத் தேனுமுத்திரை‡யையும், நேத்தி

† பத்மமுத்திரை தருபாணியினடுவிரல்
விற்பொரத்தொடுவதுவிம்பமுத்திரையே.

* பிணித்தகை விரித்துப் பெருவிர லினைநடுப்
பணித்திடப் பிடிப்பது பதுமமுத் திரையே.

‡ இருகைகள் கூட்டி யிடையிடை கோத்திடு
விரல்களிற் றர்ச்சனி விரல்கனிட் டைகளை
யார்த்திடு மத்திமை யநாமிகை களினுற்
சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே.

ரங்களுக்குக் கோவிஷாணமுத்திரை§யையும், அத்திரத்துக்குத் திராசனிமுத்திரை†யையுந் தர்சிப்பிக்க.

கிழக்குமுதலிய தளாக்கிரங்களிற் சந்திரன், புதன், பிரகஸ்பதி, பார்க்கவனென்னு மிவர்களையும், அக்கினிமுதலிய தளாக்கிரங்களில் அங்காரகன், சனி, இராகு, கேதுஎன்னுமிவர்களையும் பூசித்து நமஸ்காரமுத்திரைகொடுக்க. சூரியனுக்கு வலப்பாகத்திலுமிடப்பாகத்திலும் உஷாதேவியையும் பிரத்தியுஷாதேவியையும்பூசிக்க.

தூபதீபநைவேத்தியங்கொடுத்து அர்ச்சித்து மூலமந்திரத்தையுமங்கமந்திரத்தையும் யதாசத்திசெபித்துப் பூசாசமர்ப்பணஞ்செய்து, தோத்திரஞ்செய்து, நமஸ்கரித்துப் பராமுகார்க்கியங்கொடுத்து, ஹூம்பட் என்பதை இறுதியாகவுடைய அஸ்திரமந்திரத்தையுச்சரித்து, நாராசமுத்திரையினல் அங்காதிமந்திரங்களைஎழுப்பித் திவ்வியமுத்திரையினற் சூரியனிடத்தில்யோசித்து, மூலத்தாலிருதயகமலமத்தியனுன சிவசூரியனிடத்தில் யோசிக்க.

ஈசானதிக்கில் தேசச்சண்டேசுரனைப்பூசித்துச் சூரியநிர்மாலியங்களையொப்பித்து, விசர்ச்சனஞ்செய்க. சிவபூசைசெய்ததன்மேல் இச்சண்டேசுரபூசைசெய்து விசர்ச்சனஞ்செய்தலுமாம்.

சிவபெருமான் தாமெப்பொருள்களினும் வியாபித்துள்ளவரென்பதை ஆன்மாக்களுக்குணர்த்துங்காரணமாக, அட்டமூர்த்தங்கொண்டமையால் சிவபூசைக்கங்கமாகச்செய்யப்படுஞ் சூரியபூசையிலும் பலப்பிரமதனியென்னுஞ் சத்தியையதிட்டித்து, உருத்திரமூர்த்தியாகிக் கன்மவினையால்வந்த குட்டம்முதலிய ரோகங்களைநீக்கிச் சிவபதவியடையச்செய்வரென்பதே இக்கிரியையின் பாவனையாகும்.

---

§ பிடித்தகைத் தர்ச்சனி பிறங்குமத் திமைதனை
விடுத்திடு வதுகோ விடானமுத் திரையே.

† பிடித்திடு வலக்கை பிறங்குதர்ச் சனிநிமிர்ந்
திடக்கையி லடித்திடு மெனிற்றிரா சனியே.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்
கோளறுதிருப்பதிகம்.
பண்—பியந்தைக்காந்தாரம்.

"வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே."

திருநாவுக்கரசுசுவாமிகள்
திருக்குறுந்தொகை.

"அருக்கன்பாதம்வணங்குவாரந்தியில்
அருக்கனுவானரனுருவல்லனோ
இருக்குநான்மறையீசனையேதொழும்
கருத்தினைநினையார்கன்மனவரே."

---

உ

# சிவபூசை.

---

வடக்குமுகமாக ஆசனத்தின்மீதிருந்து, ஆசமனஞ்செய்து, விபூதிதாரணம்பண்ணுக.

## ஆசனபலன்.

பூசைசெபமுதலியவற்றைச் செய்யும்பொழுது, விதிக்கப்பட்ட ஆசனங்களின்மீதிருந்தே செய்தல்வேண்டும். தருப்பைப்புல்லினுலுண்டாக்கப்பட்ட ஆசனத்திருப்பின் கீர்த்தியையும், மரப்பலகைகளிலிருந்தால் பெருஞ்சம்பத்தையும், வஸ்திராசனத்திருந்தால் வியாதிநீக்கத்தையும், கம்பளத்திருந்தாற் சௌக்கியத்தையும், புலித்தோலிலிருந்தாற் சம்பத்தையும் மோட்சத்தையும், கிருஷ்ணாசினத்திலிருந்தால் ஞானத்தையும், கூர்மாசனத்திருந்தாற் போகமோட்சத்தையுமடைவர்.

நிலத்திலிருந்துசெய்தவர்கள் துக்கத்தையும், கல்லிலிருந்துசெய்தவர்கள் ரோகங்களையும், இலையின்மீதிருந்து செய்தவர்கள் மனச்சஞ்சலத்தையும், மூங்கிற்பாயிலிருந்துசெய்தவர்கள் கஷ்டதரித்திரத்தையுமடைவர்.

## ஆசமனம்.

ஓம் ஹாம் ஆத்மதத்வாயஸ்வதா என்றுசமித்தலால், அதற்கதிபாராகியபிரமா பிரசன்னராகி ஆன்மதத்துவமிருபத்துநான்கையுஞ்சுத்திசெய்வர். பின்பு திருவருட்சத்தி ஆன்மதத்துவமிருபத்துநான்கினுங்கட்டப்பட்ட வினைகளைநீக்க, அவ்வினைகாரணமாகவுள்ள ஆன்மதத்துவத்தொடர்புநீங்கும். பின்பு அத்தத்துவங்களிலுள்ள தநுகரணபுவனபோகங்களைச் சென்றடையமாட்டாதெனவறிக. இதனல் இருக்குவேதம் பிரீதியடையும்.

ஓம் ஹீம் வித்யாதத்வாயஸ்வதா என்றுசமிப்பதால் அதற்கதிபாராகிய விட்டுணு பிரசன்னராகி வித்யாதத்வமேழையுஞ் சுத்திசெய்வர். பின்புதிருவருட்சத்தி வித்தியாதத்துவமேழினுங் கட்டப்பட்டிருக்கும் வினைகளைநீக்க, அவ்வினைகாரணமாகவுள்ள வித்தியாதத்துவத்தொடர்புநீங்கும். பின்புஆன்மா அத்தத்துவத்திலுள்ள தனுகரணபுவனபோகங்களைச் சென்றடையமாட்டாதெனவறிக. இதனல்யசுர்வேதம்பிரீதி அடையும்.

ஓம் ஹூம் சிவதத்வாயஸ்வதா என்றுசமிப்பதால், அதற்கதிபாராகியஉருத்திரர் பிரசன்னராகிச் சிவதத்வமைந்தனுள் சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியமென்னும் மூன்றுதத்துவங்களைச் சுத்திசெய்வர் பின்புதிருவருட்சத்தி இத்தத்துவங்களிற் கட்டப்பட்ட வினையைநீக்கிச் சிவகதி அடையச்செய்யும். இதனற்சாமவேதம்பிரீதியடையும்.

உதடுகளிரண்டையுந் துடைத்தலால் அதர்வணவேதமும் அதோமுகமாகத்துடைத்தலால் விநாயகரும்பிரீதியடைவர்.

## தொடுமிடம்.

பெருவிரலில் அமிர்தகலையும், அணிவிரலில் ஈசுவரனும், அதிபர்களாகஇருத்தலின், பெருவிரலோடுகூடிய அணிவிரலால் மூக்குமுதலிய தானங்களிற்றொடுதல்வேண்டும்.

முகத்திற்கங்கையும், மூக்கிற்பிராணனும், கண்களிற்சூரியசந்திரர்களும், செவிகளில் லோகபாலகர்களும், உந்தியிற்பிரமனும், மார்பில் உருத்திரனும், புயங்களில் அசுவினிதேவர்களும், சிரசிற்சிவமும் அதிபர்களாவர்.

மேற்கூறப்பட்டதானங்களிற்றொடுதல் அத்தானங்கள் சுத்தியாதற்பொருட்டும் அதிபர்கள் பிரீதிப்படுதற்பொருட்டுமாம்.

---

## விபூதி மகிமை.

சிவனடியார்கள் தரிக்குஞ் சிவசின்னங்கள் விபூதி உருத்திராக்ஷமென்னும் இரண்டுமாம்.

திருவெண்ணீறு, ஆன்மாக்களை இரட்சித்தலால் இரட்சையெனவும், ஆன்மாக்களின் தீவினைகளனைத்தையும் நீறுபடுத்தலால், திருநீறு எனவும், அழியாதசெல்வத்தைக் கொடுத்தலால் விபூதி எனவும், ஆன்மாக்களோடுங்கலந்துள்ள மலமாசைக்கழுவுதலால் சாரமெனவும், அறியாமையழியும்படி ஞானமாகியசோதியைத்தருதலால் பசிதமெனவும் பெயர்பெறும்.

### பேரூர்ப்புராணம்.

“நீடலுறுந்தீவினையனைத்துநீற்றிடலானீறென்றும்
வீடில்வெறுக்கைதருதலினால்விபூதியென்றுமுயிர்தோறுங்
கூடுமலமாசினைக்கழுவுங்குணத்தாற்சாரமென்றுமட
மோடவளர்சோதியைத்தரலாற்பசிதமென்றுமுரைப்பாரால்”

### சித்தாந்தசிகாமணி.

“பூதியெனப்படுஞ்செல்வவேதுவினாற்சிவமாகும்பொருடிகழ்த்து
மேதுவினிற்பசிதமிகுபாவங்கடமையச்சத்திசைத்தலாலே
யோதலுறும்பற்பமெனவிடரிடைநின்றகற்றுதலாலொன்றுஞ்சாரந்
தீதகலவனைவரையுமளித்ததனாலிரக்கையெனச்செப்புநூலே”

விபூதியானது கற்பமெனவும், அநுகற்பமெனவும், உபகற்பமெனவும் மூவிதப்படும்.

கன்றீன்றுபத்துநாட்களுக்குட்பட்டு ஆசௌசம் நீங்காததும், இரண்டு கன்றுகளீன்றதும், முதிர்ந்தகன்றுடையதும், நோய்பொருந்தியதும், மலட்டுத்தன்மையுள்ளதும், கிழத்தன்

மையுள்ளதும், கருப்பமுள்ளதும், கன்றிறந்ததும், வால் காது கொம்பறுந்ததும், மலந்தின்பதுமாகிய இவ்வகைப்பசுக்களாகா வாம். மற்றையபசுக்களிலே செம்மை, வெண்மைமுதலியநிறங்களும், அழகும் குணமும் அமைந்தனவாய்ச் சரீரமெலிவின்றிப் பங்குனிமாதத்துநெற்றாள்களைமேய்ந்தன நல்லன.

அவைகளிடுஞ் சாணத்தை அட்டமி, சதுர்த்தசி, பூரணை அமாவாசைஎன்னும் இத்திதிகளிலொன்றிலே தாமரையிலையில் சத்தியோசாதமந்திரத்தைச்சொல்லி நிலத்தில்விழமுன்னேந்தி மேலிருக்கும்வழும்பைநீக்கி, வாமதேவமந்திரஞ்சொல்லிப் பஞ்சகவ்வியம்வார்த்து, அகோரமந்திரஞ்சொல்லிப் பிசைந்து, தற்புருடமந்திரஞ்சொல்லிக் கையாலுருட்டி, உலர்த்தி ஓமத்தியில் நெற்பதருடன்வைத்து, நல்லபாகங்கண்டு ஈசானமந்திரஞ்சொல்லியெடுப்பது கற்பமாம். அவ்விதமெடுத்தவிபூதியை ஒரு கோடி வஸ்திரத்தில் வடிகட்டிப் புதுப்பாண்டத்தில்நிரப்பிக் காயத்திரி மந்திரஞ்சொல்லி, ஓர்ஆசனத்தில்வைத்து மலர்சாத்திப், பாத்திரத்தின்வாயை வெள்ளைவஸ்திரத்தாற் கட்டுதல்வேண்டும்.

சித்திரைமாதத்திற் காட்டிற்சென்று, அங்குஉலர்ந்திருக்குஞ் சாணத்தை எடுத்திடித்துக், கோசலம்வார்த்துருட்டி, முன்சொல்லியமந்திரப்படி விளைவித்துவைப்பது அநுகற்பமாம்.

பெரியகாட்டில் இயற்கையாகத் தீப்பற்றிக்கொள்ளுதலால் உண்டாகும்பொடியிற் பஞ்சகவ்வியம்வார்த்துருட்டி முன்போல மந்திரஞ்சொல்லி ஓமாக்கினியில் விளைவித்துவைப்பது உபகற்பமாம் மந்திரபூர்வமின்றிச் செய்யப்படுவது அகற்பமெனப்படும்.

கருநிறவிபூதி வியாதியை உண்டாக்கும். செந்நிறவிபூதி கீர்த்தியையும், புகைநிறவிபூதி ஆயுளையும், பொன்னிறவிபூதி செல்வத்தையும் கொடுக்கும். வெண்ணிறவிபூதி போகமோட்சத்தைக்கொடுக்கும்.

ஸ்ரீ பஞ்சாட்சரப்பொருளைத் தன்னுளடக்கியிருத்தலால் "மந்திரமாவதுநீறு" எனவும், வேதத்திற்கூறிய உண்மைப்பொருளாதலின் "வேதத்திலுள்ளதுநீறு" எனவும், ஞானத்தைக் கொடுப்பதால் "போதந்தருவதுநீறு" எனவும், எவர்களாலுந் துதிக்கப்படும் பெருமையையுடையதாதலால், "பாவவினியதுநீறு"

எனவும், மெய்யன்போடுநினைப்பவர்களுக்குப் பத்தியைவளரச் செய்தலால் "கருதவினியதுநீறு" எனவும், "பத்திதருவதுநீறு எனவும், இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் கொடுப்பதால் "இருமைக்குமுள்ளதுநீறு" எனவும், ஆணவமலத்தாலுண்டாகும்ஆசையைக்கெடுப்பதால், "பெருந்தவத்தோர்களுக்கெல்லாம் ஆசைகெடுப்பதுநீறு" எனவும், ஆன்மாவுக்கு உட்பகையாகவிருக்கிற மயக்கத்தைநீக்குவதால் "துயிலைத்தடுப்பதுநீறு" எனவும், பாவத்தையறுப்பதால் "பாவமறுப்பதுநீறு" எனவும், தருமத்தைத்தன்மாட்டடக்கியிருத்தலால் "புண்ணியமாவதுநீறு" எனவும், புண்ணியவான்களுக்கு அருளென்னுங்குழவியையெய்தச் செய்தலால் "பாக்கியமாவதுநீறு" எனவும், அழியாப்பொருளைக் கொடுக்கவல்லதாதலால் "அருத்தமதாவதுநீறு" எனவும், இன்பத்தைக்கொடுப்பதால் "ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவது நீறு" எனவும், மோட்சத்தைக்கொடுப்பதால் "முத்திதருவது நீறு" எனவும், திருஞானசம்பந்தசுவாமிகள் திருநீற்றுப்பதிகத்தில் திருநீற்றைச்சிவபெருமானெனப்பாவித்துத் துதித்திருக்கின்றனர்.

### திருநாவுக்கரசுநாயனார்.

#### தனித்திருநேரிசை.

"சந்திரற்சடையில்வைத்தசங்கரன்சாமவேதி
யந்தரத்தமரர்பெம்மானனல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமச்சிவாயவாகநீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையுநோயும்வெவ்வழல்விறகிட்டன்றே."

#### திருவிருத்தம்.

"கருவாய்க்கிடந்துன்கழலேநினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாயநமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரரனே."

### மயூரகிரிப்புராணம்.

"சாவுறுமுடலின்மீதுசாரினுமதனில்வாழ்ந்த
வாவியோர்புரியட்டத்திலமர்ந்துதன்புரிநுஞ்செய்த
பாவமதொழிந்துநல்லகதியுறுமினையபண்புார்
நீவியபூதிசாத்திச்சிறந்தகண்டிகையும்பூண்டு."

இத்துணைப்பெருமைவாய்ந்த விபூதிதாரணமானது உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகைப்படும். ஈண்டுச் சூரியபூசைமுடிவிற்றரிக்கப்படுவது உத்தூளனமாம். சந்தியாகாலங்களிற்றரிக்கப்படுவது திரிபுண்டரமாம்.

சிவபூசைமுதலிய கிரியைகளைச்செய்யும்போது விபூதியுருத்திராட்சந்தரித்துக்கொண்டே செய்தல்வேண்டும். தரியாமற்செய்தவர் சாம்பரிலவியை ஓமஞ்செய்தவர் பலனைநீங்குவதுபோலக் கிரியையின்பலனையிழப்பர்.

உருத்திர-அக்ஷம்=உருத்திராக்ஷம். உருத்திரனுடைய கண்ணிலிருந்துதோற்றியதெனப் பொருள்படும்.

---

## சகளீகரணம்.

### கரநியாசம்.

சகளம்-உருவம், கரணம்-செய்தல், எனவே சிவபெருமானைப் பூசித்தற்காகக்கரங்களையுந் தேகத்தையுஞ்சுத்திசெய்து சிவரூபமாக்குதலென்பதுகருத்து.

வலக்கையிலக்கினியு மிடக்கையிற்கங்கையு மிருப்பதாகச் சிந்தித்து, அஸ்திரமந்திரத்தையுச்சரித்து, வலக்கையாலிடக்கையையும், இடக்கையால் வலக்கையையும் உள்ளும் புறம்புஞ்சோதித்து, அக்கரங்களிலுள்ள அசுத்தங்களைச் சிவாக்கினியினூற்றகித்ததாகப்பாவிக்க. சத்தயேவௌஷட் என்று இருகரங்களையுஞ் சேர்த்துத் திருவருளாகிய அமிர்தத்தினால் அக்கினியின் உஷ்ணந்தணியும்படி நனைத்ததாகப்பாவிக்க.

இருகரங்களையுங்கூட்டிப் பெருவிரலிரண்டையும் நடுவிற்பொருந்தக் கர்ணிகைபோலமடக்கி, எட்டுவிரல்களையும் எட்டிதழாகப்பாவித்துத், தாமரைமலர்போன்ற அந்தக்கரங்களில் சிவனுக்குரிய மந்திரசிங்காசனமிட்டதாகப்பாவித்து, சிவாசனத்தைப்பூசித்து, சிவமூர்த்தியை அவ்வாசனத்தின்மேலெழுந்தருளியிருப்பதாகப்பாவித்துச் சிவமூர்த்திமந்திரத்தையும் நியசிக்க.

சிவனுடைய சிரசுமுதலிய அவயவங்கள் அமைவதற்காகத் தர்ச்சனிவிரல்களால் அங்குட்டங்களில் ஈசானமந்திரத்தையும்,

தர்ச்சனிமுதற் கனிட்டிகையீருகிய நான்குவிரல்களில் அங்குட்டங்களினுல் தற்புருஷமுதலிய நான்குமந்திரங்களையும் முறைப்படி நியசிக்க.

சிவனுக்குரிய வித்தியாதேகமமைதற்பொருட்டு, வித்தியாதேகமந்திரமுச்சரித்துப் பெருவிரல்களினுற் கைகளின்நடுவில் நியசிக்க.

சிவனுடையநேத்திரங்களை யமைத்தலென்னும்பாவனையாக நேத்திரமந்திரத்தையுச்சரித்து, நடுவிரல் மூன்றினுலுமுள்ளங்கைகளில் நியசிக்க.

பெருவிரல்களினுல் மூலத்தைச்சொல்லி நியசித்தல் அம்மூர்த்தியிலே சிவனை ஆவாகித்தலென்னும் பாவனையாம்.

இருதயாதி மந்திரங்களைக் கனிட்டிகைமுதல் நேத்திரந் தவிர்ந்த அங்குட்டாந்தமானவிரல்களிலே நியசிப்பது இருதயம் முதலிய அங்கங்களை அமைத்தலென்னும்பாவனையாம்.

கவசமந்திரத்தினுலவகுண்டனஞ்செய்தல் அதைச்சூழ மதிலுண்டாக்குவதென்னும் பாவனையாம்.

இரண்டுகைகளையுங்கூட்டி மூலமந்திரத்தைச்சொல்லிப் பரமீகரணஞ்செய்தல் முன்னேநியசித்த மந்திரங்களெல்லாவற்றையும் ஏகீபாவஞ்செய்தலென்னும் பாவனையாம்.

## அங்கநியாசம்.

பெருவிரலணிவிரலிரண்டையுஞ்சேர்த்துச் சிவாசனமந்திரமுச்சரித்து, இருதயத்தில் நியசிப்பது இருதயகமலமாகிய ஆசனத்தை அதிலுண்டாக்குதலென்னும் பாவனையாம். மூர்த்திமந்திரத்தைநியசிப்பது, அவ்வாசனத்திற் சிவமூர்த்திஎழுந்தருளியிருப்பதென்னும் பாவனையாம். ஈசானமந்திரத்தைப் பொத்திய வலக்கைப்பெருவிரலானுச்சியிலே நியசித்து, தற்புருடமுதலிய நான்குமந்திரங்களையுச்சரித்து, பெருவிரலோடுகூடிய சுட்டுவிரல்முதலிய நான்குவிரல்களாலும் முறையே முகம், இருதயம், குய்யம், பாதமாகிய இடங்களில் நியசித்தல் சிவபெருமானுக்குரிய அவயவங்களுண்டாயினவென்னும் பாவனையாம். பெருவிரலணிவிரல்களினுல் வித்தியாதேகமந்திரத்தைச்சொல்லி இருதயத்

தில் நியசித்தல் இருதயத்திலிருக்கிற சிவபெருமானுக்கு வித்தியாதேகம்வந்துபொருந்துதலென்னும் பாவனையாம்.

வலக்கை நடுவிரல்மூன்றினாலும் நேத்திரமந்திரத்தையுச்சரித்து, நேத்திரங்களில் நியசித்தல் சிவனுக்குரியநேத்திரங்களை அங்கே அமைத்தலென்னும்பாவனையாம். மூலமந்திரத்தையுச்சரித்து இருதயத்தில்நியசிப்பது இருதயத்திற் சிவலிங்கப்பெருமானை ஆவாகித்தலென்னும் பாவனையாம். பெருவிரலோடுகூடிய கனிட்டிகை, அநாமிகை, மத்திமை என்னும் விரல்களினால் இருதயம் சிரசு சிகை என்னும் மந்திரங்களைச்சொல்லி இருதயத்திலும், சிரசிலும், சிகையிலும் நியாசஞ்செய்வது சிவனுக்குரிய இருதயம், சிரசு, சிகை, என்னுமவயவங்களவ்வவ்விடங்களிலுண்டானதென்னும் பாவனையாம். கவசமந்திரமுச்சரித்துச் சுட்டுவிரல்களினாற் கழுத்தைநெஞ்சளவாகச்சுற்றுதல் அம்மந்திரவடிவாகிய கவசமுண்டானதென்னும் பாவனையாம்.

அஸ்திரமந்திரமுச்சரித்து, இடக்கையணிவிரலால் வலவுள்ளங்கையிலும், வலக்கையணிவிரலா லிடவுள்ளங்கையிலும் நியாசஞ்செய்வது சிவனுடைய அஸ்திரத்தை அதிலமைத்தலென்னும்பாவனையாம். பின்பு அசுரரைத் துரத்தும்பொருட்டு அஸ்திரமந்திரத்தால் தாளத்திரயத்தையும், திக்குகளிலக்கினிப்பிரகாசமுண்டாக்கிக் காவல்செய்தற்பொருட்டுத் திக்குபந்தனத்தையும், மதிலுண்டாக்குதற்பொருட்டுக் கவசமந்திரத்தாலவகுண்டனத்தையுஞ்செய்க.

வௌஷட் என்பதை இறுதியாகவுடைய மூலமந்திரத்தினால் மகாமுத்திரைகாட்டுதலங்கேநியசிக்கபபட்ட மந்திரங்களை ‡ஏகீபாவஞ்செய்தலென்னும் பாவனையாம்.

## பிராணாயாமம்.*

சுழுமுனைமுதலிய நாடிகளினுற்பத்திக்கிடமாகிய கிழங்கு நாபிக்குக்கீழுண்டாயிருக்கும். அதினின்றுமெழுபத்தீராயிர நாடிகள்தோற்றித் தேகத்திலே கந்தத்தானத்துக்குக் கீழும்மே

‡ ஏகீபாவம்-ஒற்றுமைப்படுதல்.

* பிராணாயாமம்-பிராணவாயுவையடக்கிச் சுத்திசெய்தல்.

னுமாய்ச்சஞ்சரிக்கும். கந்தத்தின் வலப்புறத்திற்பிங்கலையென்னு நாடியும் இடப்புறத்திலிடையென்னு நாடியுந்தோற்றிப் பிராண வாயுவுடன்கலந்து பிரமரந்திரபரியந்தம்வியாபித்து, வெளியில்நாசித்துவாரமிரண்டையுமாச்சிரயித்து உச்சுவாசநிச்சுவாச ரூபமாகப் போக்குவரவு செய்துகொண்டிருக்கும்.

சுழுமுனைநாடியானது கீழிருந்து கந்தத்தானம்வரையிலிருகிளையாகவும், அதன்மேற் பிரமரந்திரம்வரையுமொருரூபமாகவும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம, விசுத்தி, ஆஞ்ஞையென்னுமாறுதாரசக்கரங்களையு மதற்குமேற்றுவாதசாந்தம்வரையும் நான்குசக்கரங்களையும் வியாபித்துப் பிரமரந்திரம் வரையிலுஞ் சகளரூபமாகவும், அதற்குமேல்நிட்களரூபமாகவுமிருக்கும்.

சூரியமார்க்கமானதும், பிரமாவை அதிபாகவுடையதுமாகிய பிங்கலநாடியினுள்ளேயுள்ள அசுத்தவாயுவை வெளியில் விடுத்துச், சந்திரசகிதமானதும், விண்டுவை அதிபாகவுடையதுமாகிய இடைநாடியினுல் வெளியேயுள்ளசுத்தவாயுவையுள்ளேபூரித்துநிரப்பி, அக்கினிசகிதமானதும், உருத்திரனையதிபாகவுடையதுமாகிய சுழுமுனைநாடியினுல் மேலெழுப்பிச்சிவத்தியானஞ்செய்து, தன்சத்திக்குத்தக்கபடி நாற்பத்தெட்டுமாத்திரை, அல்லது இருபத்துநான்கு மாத்திரை, அல்லது பன்னிரண்டுமாத்திரையளவினதாகக்கும்பித்துப் பிங்கலையினுற் கும்பித்த வாயுவை இரேசகஞ்செய்க.

மூக்குநுதியிலக்கினியும், வலக்காதிற் கங்கையுமிருப்பதால் எல்லாப்பாவங்களும் நீங்கும்பொருட்டு மூக்குநுதியிலுங் காதிலுந்தொடுக. இவ்வாறுபிராணயாமத்திரயஞ்செய்க.

---

## துவாரபூசை.

சாமாந்நியார்க்கிய பாத்திரத்தை அத்திரத்தாற்சோதனை பண்ணி, வௌஷட்என்பதை இறுதியாகவுடைய இருதயத்தால் தீர்த்தத்தை அமிர்தமீ விந்துவினின்றும் வந்ததாகப்பாவித்துப்பூரித்து, பிரணவத்தாலேழுதரமருச்சித்து, எழுமுறையபிமந்திரித்து, இரட்சை, அவகுண்டனம், தேனுமுத்திரைகொடுத்து, மேற்குத்துவாரத்தை அஸ்திரமந்திரத்தாற் புரோட்சிக்க.

மேற்படியின்தென்புறத்தில் பருத்தவயிறும், பச்சைநிறமும், இடம்வலமாகிய மேற்கரங்களில் மழுவும், செபமாலையுமவ்வாறே கீழ்க்கரங்களில்மோதகமும், தந்தமு முடையவராகக் கணபதியைத்தியானித்துப்பூசிக்க.

அவருக்குவடக்கே வெண்மைநிறமுள்ளவரும், வெள்ளைவஸ்திரந்தரித்தவரும், வலக்கரத்திலுருத்திராக்கமாலையும், இடக்கரத்திற் புத்தகமுந்தரித்தவரும, பிரசன்னமுடையவருமாகிய சரசுவதியைத்தியானித்துப் பூசிக்க.

இவர்களுக்குநடுவில் இடக்கரத்தில் வில்வப்பழமும் வலக்கரத்திற்றாமரைப்பூவும், பொன்னிறமும் உடையவராகவும், இருபக்கங்களிலுமிரண்டியானைகள் பொற்குடத்தாற் கங்காசலங்கொண்டபிஷேகிக்கப்படுபவராகவும் மகாலட்சுமியைத்தியானித்துப்பூசிக்க.

இவர்களுகருத் தெட்சிணசாகையில் செந்நிறமும், மூன்றுகண்ணும், சடையும், வலக்கரத்திற்செபமாலையும், இடக்கரத்திற்றிரிசூலமுமுடையவராகியநந்தியைத் தியானித்துப்பூசிக்க.

நந்திக்குவடக்கே மகராசனியும், வலக்கரத்தில் நீலோற்பலமும், இடக்கரத்திற் பூரணகும்பமுந்தரித்தவரும், வெண்மைநிறமுடையவருமாகிய கங்காதேவியைத்தியானித்துப் பூசிக்க.

கங்கைக்குவடக்கே கறுப்புநிறமும், மூன்றுகண்ணும், வலக்கரத்திற் கபாலமும், இடக்கரத்திற் சூலமுமுக்கிரமுகமுமுடையவராகிய மகாகாளரைத்தியானித்துப்பூசிக்க.

மகாகாளருக்குத்தெற்கே பச்சைநிறமும், கூர்மாசனமும், இடக்கரத்திற் பூர்ணகும்பமும், வலக்கரத்தில் நீலோற்பலமுமுடைய யமுனையைத்தியானித்துப் பூசிக்க.

'பூசைக்கு விக்கினம்வாராமல் இரட்சித்துக்கொள்ளுக' என்று இவர்களைவிஞ்ஞாபிக்க, மூலமந்திரம்நியசிக்கப்பட்டகண்ணால் ஊர்த்துவதிருட்டியாக நிரீக்ஷணம்பண்ணிச் சுவர்க்கத்திலுள்ள விக்கினங்களைநீக்கி, ஓம்ஹாம் அஸ்திராயபட்என்று *நாராசமுத்திரையினாற் புட்பத்தைமேலேயெறிந்து, ஆகாயத்திலுள்ள

---

* இருகைமுட்டியினிமிர்த்திட்டதர்ச்சனிகளிற் செருகியபெருவிரலெறிக்கினாராசம்.

விக்கினங்களைப்போக்கிப் பாசுபதாஸ்திரமந்திரத்தையுச்சரித்து. வலப்புறவடியினுற் பூமியில்மூன்றுமுறை தாடனஞ்செய்து, பூமியிலுண்டான விக்கினங்களைப்போக்கி, இவ்விதம், சுவர்க்க ஆகாச பூமிகளிலுள்ள மூவிதவிக்கினங்களையும்நீக்கித் திருக்கோயிலினுள்ளே வாமபாகத்தால் வலக்கால்முன்னாகப்புகுந்து, கீழ்ப்படியில் அஸ்திரத்துவாரபாலகரைத்தியானித்துப்பூசித்து பிரதட்சிணமாகப்புகுந்து நிருதிதிக்கில் அன்னவாகனமும், பெருத்தவயிறும் பொன்னிறமும், நான்குமுகங்களும், செபமாலை, தண்டு, சிருக்கு, கமண்டலமென்னுமிவைகளைத்தாங்கிய கைகளும்பொருந்திய வாஸ்து அதிபராகிய பிரமாவைத்தியானித்துப்பூசிக்க.

திருமஞ்சனபாத்திரத்தை நிரீக்ஷணதிசுத்திபண்ணி, வடிகட்டும்வஸ்திரத்தை அஸ்திரத்தாற்சுத்திசெய்து, பாத்திரத்தைமூடி, இருதயத்தால்வடித்தெடுத்தநீரையும், புட்பம்முதலிய பூசோபகரணங்களையும், பக்கத்தேவைத்துக்கொண்டு, சுவாமிக்குத்தென்பாகத்திற் றருப்பாசனம்முதலியவற்றில் வடதிசையை நோக்கிச் சுகாசனமாகவிருந்து பூசாத்தானத்தை இரட்சாவகுண்டனம்பண்ணிப் பூதசுத்திசெய்க.

---

## பூதசுத்தி.

### சூட்சுமதேகசுத்தி.

முன்போலக்கரநியாசஞ்செய்து, காலின்பெருவிரல்தொடங்கிக்கீழ்வயிறுவரை இரண்டுரூபமாகவும், அதற்குமேற் பிரமரந்திரம்வரையு மொருரூபமாகவும், இருதயம், கண்டம், நாவடி, புருவநடு, பிரமரந்திரமென்னு மிடங்களில் இடைபிங்கலையுடன் கூடியதாகவும், இத்தானங்களிலே அதோமுகமாயிருக்கின்ற பத்மமுகுளங்களோடுகூடியதாகவும், உட்டுளைகளோடுகூடியதாகவும், உள்ளும்புறமும் அமிர்ததாரையுடன்கூடியதாகவும், பரமவியோமரூபியான சத்தியைச் சுழுமுனாநாடியாகத்தியானித்து, இருதயகமலத்தின்நடுவே ஹூங்காரஞ்சொலிக்கிறதாகத்தியானித்து, வாயுவைப் பூரககும்பகஞ்செய்து, ஹூம்காரத்திலேமனதை

வைத்து, வாயுவைமேலேயெழுப்பி, ஹூம்பட்என்றுஉச்சரித்து அதோமுகமான பத்மமுகுளங்களைச் *சோடிகாமுத்திரையினுலே மேனேக்கியமுகங்களையுடையனவாகவும், முறுக்கவிழ்ந்தனவாகவுந்தியானஞ்செய்து, வாயுவைத்திருப்பி வலதுநாசியால் விடுக.

பின்பும்வாயுவைப்பூரித்து, அதனுலிருதயகமலத்தையடைந்திருப்பதும், நக்ஷத்திராகாரமாக எண்ணப்படுவதும், சாந்தபீசமயமானதும், இருதயசம்புடிதமானதுமாகிய ஆன்மாவை ஹூங்காரத்தினுச்சியில்வைத்து, பீசவிக்கிரகனும், ஹூம்காரசிகாந்தத்தனும், புரியட்டகரூபனுமாகப்பாவித்து, சூட்சுமனும், பிந்துபூதனும், புரியட்டகத்தினின்றுவிடப்பட்டவனும், ஏகாங்கிதனும் நிராமயனுமாகத்தியானித்து, வாயுவைக்கும்பித்து, மேலெழுப்பிச் ‡சங்காரமுத்திரையினுலே பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவனென்னுங் காரணேசுவரருடையதியாகக்கிரமத்தாலொரேதன்மையாக ஓம் ஹூம் ஹாம் ஹம் ஹாம் ஹூம் ஆத்மனேநமஃ என்றுச்சரித்து, கருமங்களுடைய புசிப்பின்பொருட்டுத் துவாதசாந்தத்திலிருக்குஞ் சிவனிடத்தில் யோசித்துப் பீசாட்சரவிருத்தியா லவரிடத்தில் லயித்ததாகப்பாவிக்க.

தத்துவங்களைப்பிந்துபரியந்தஞ் சங்காரக்கிரமமாக அதனதன் காரணங்களிலொடுக்குதல் வேருெருவிதமான சூட்சுமதேகசுத்தியாம்.

அஃதாவது, கந்ததத்துவத்திற் பிருதிவிதத்துவமும், இரசதத்துவத்திலப்புதத்துவமும், ரூபதத்துவத்திலக்கினிதத்துவமும், பரிசதத்துவத்தில் வாயுதத்துவமும், சப்ததத்துவத்திலாகாசதத்துவமும், தாமசாகங்காரத்திற் கந்தாதிதன்மாத்திரைகளைந்தும், இராசதாகங்காரத்தில் வாக்கு பாதம் பாணி பாயு உபத்

* பிடித்தகைத்தர்ச்சனிபெருவிரலின்னடுத்
துடித்திடத்தெறிப்பதுசோடிகாமுத்திரை.

‡ அங்குலீநான்குமங்குட்டத்தடி
தங்குறவளைப்பதுசங்காரமுத்திரை.

தமென்னுந் தத்துவங்களும், சாத்விகாகங்காரத்திற் சுரோத்திரம் துவக்கு சட்சு சிகுவை ஆக்கிராணம் மனமென்னுந்தத்துவங்களும், புத்திதத்துவத்திலகங்காரதத்துவமும், குணதத்துவத்தில் புத்திதத்துவமும், பிரகிருதிதத்துவத்திற் குணதத்துவமும், கலாதத்துவத்தில் பிரகிருதி இராகம் வித்தை என்னுந்தத்துவங்களும், மாயாதத்துவத்தில் புருடன், காலம், நியதி, கலையென்னுந்தத்துவங்களும் இலயித்ததாகப்பாவிக்க.

சுத்தவித்தியாதத்துவத்தில் மாயாதத்துவமும், ஈசுரதத்துவத்திற் சுத்தவித்தியாதத்துவமும், சதாசிவதத்துவத்திலீசுவரதத்துவமும், சத்திதத்துவத்திற் சதாசிவதத்துவமும், சிவதத்துவத்திற் சத்திதத்துவமும், சுத்தரூபையான விந்துசத்தியிற்சிவதத்துவமும் ஒடுங்கினதாகப்பாவிக்க.

அல்லது, மூலமந்திரத்தையுச்சரித்து, இருதயம், கண்டம், நாவடி, புருவநடு, பிரமரந்திரமென்னு மிடங்களிலிருக்கும் பதுமங்களிலே சப்ததன்மாத்திரையையும், பரிசதன்மாத்திரையையும், பிரமனிடத்திலும், இரசத்தைக்கேசவனிடத்திலும், ரூபகந்தங்களை உருத்திரனிடத்திலும், புத்தியகங்காரங்களை ஈசுவனிடத்திலும், மனதையும், சத்தாதிகளுக்குக் காரணமாகியவைந்தவிசத்தியையும், சதாசிவனிடத்திலும் சமர்பிக்க.

பிரமாமுதலிய பஞ்சகாரணேசுவரர்களிடத்திற் சப்தாதிகளைச் சமர்ப்பிப்பதற்குக்காரணம்.

சுரோத்திரம், துவக்கு, நேத்திரம், இரசம், ஆக்கிராணம், புத்தி, அகங்காரம், மனசு ஆகிய இவைகளாற்செய்யப்பட்ட வழுவுதல்நேரிடுமாகிற சுரோத்திராதிகளின் விஷயமாகிய சப்தாதிகளுக்கதிபர்களாகிய பிரமாதிகளினம்சங்களோடுகூடிய இராக்கதர்களுடைய சன்மமுண்டாம். அந்த இராக்கதசன்மம் நீங்கும்பொருட்டுப் பிரமாதிகாரணேசுவரர்களிடத்திற் சப்தம்முதலியவற்றைச்சமர்ப்பிக்க.

அஃதெங்ஙனமெனில், சுரோத்திரம், துவக்கு இவற்றால்நேரிடும் வழுவுதலால் பிரமாம்சமான பிரமராக்ஷதசன்மமுண்டாம்.

இரசேந்திரியம்வழுவுதலால் விட்டுணு அம்சமானராக்ஷசசன்மமுண்டாம். கிராணநேத்திரேந்திரியம்வழுவுதலால் உருத்திராம்சமான இராக்கதசென்மமுண்டாம். புத்தியகங்காரம்வழுவுதலால் ஈசுவராம்சமான இராக்கதசன்மமுண்டாகுமென்றறிக.

சத்த பரிசமுதலானவெட்டின்வடிவே புரியட்டகமென்னுஞ் சூடசுமதேகவடிவமாகையாற் புரியட்டகதேகத்தைச் சோதிக்குநிமித்தஞ் சுரோத்திராதியிந்திரியங்களின் வழுவுதலாலுண்டான சப்தாதிகளைப் பிரமாமுதலியோரிடத்தி லொப்பித்தலெனக்கொள்க.

# தூலதேகசுத்தி.

## நிவிர்த்திகலாசுத்தி.

கடினமும், பொன்னிறமும், வச்சிரரேகைபோன்ற அடையாளமும், ஹ்லாம்என்னும்பீசமும், சத்தியோசாதமந்திரமும், பிரமாகாரணேசுவரனும், சதுரச்சிரமுமாகவிருக்கும் பிருதிவி மண்டலத்தையுடைய நிவிர்த்திகலைபாதாதிசிரசுவரையும் வியாபித்ததாகப்பாவித்து, ஓம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் ஹ்லாம் நிவிர்த்திகலாயை ஹ: ஹூம்பட்என்றுபூரித்துச் சுழுமுனைநாடிமார்க்கமாகத் துவாதசாந்தம்வரையும் பிராணவாயுவைக்கொண்டுபோய்த் திருப்பிவலநாடியால்விடுக. இப்படியைந்துமுறையுச்சரித்துக் கந்தஇரசரூபபரிசசத்த குணங்களைப்போக்கி, அதற்குவிருத்தமான வாயுவினாலாக்கிரமிக்கப்பட்டதாய் வாயுவினுகாரமாகப்பாவிக்க.

## பிரதிட்டாகலாசுத்தி.

பாதிச்சந்திரன்போன்ற ஆகிருதியும், வெண்மைநிறமும், நெகிழ்வும், பத்மரேகையும் ஹ்வீம் என்னும்பீசமும், வாமதேவமந்திரமும், விட்டுணுகாரணேசுரனுகவுமிருக்கும் அப்புமண்டலத்தையுடைய பிரதிட்டாகலை தனதுசர்வாங்கமும் வியாபித்ததாகப்பாவித்து ஹ்வீம் ஹ்வீம் ஹ்வீம் ஹ்வீம் பிரதிட்டாகலாயை ஹ:ஹூம்பட் என்றுபூரித்துச் சுழுமுனைநாடிமார்க்கமாகத் துவாதசாந்தம்வரையும் பிராணவாயுவைக்கொண்டுபோய்த் திருப்பிப் பிங்கலைநாடியா

ல் இரேசகஞ்செய்க. இப்படி நான்குமுறை உச்சரித்து, ரசரூபபரி சசத்தமாகிய நான்குகுணங்களைப்போக்கி, அதற்குவிருத்தமான அக்கினியினால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும், அக்கினியினுடைய ஆகாரமாகவும்பாவிக்க.

## வித்தியாகலாசுத்தி.

முக்கோணவடிவமும், சிவப்புநிறமுமுஷ்ணமும், சுவஸ்திகஅடையாளமும், ஹ்ரூம் என்னும்பீசமும், அகோரமந்திரமும், உருத்திரன்காரணேசுவரனாகவுமிருக்கும் அக்கினிமண்டலத்தையுடையவித்தியாகலை பாதாதிசிரசுவரையும் வியாபித்ததாகப்பாவித்து, ஹ்ரூம் ஹ்ரூம் ஹ்ரூம் வித்தியாகலாயை ஹூ: ஹூம்பட் என்று இடையினாற்பூரகஞ்செய்து, பிராணவாயுவைச்சுழுமுனாநாடிமார்க்கமாகத் துவாதசாந்தம்வரையுங் கொண்டுபோய்த்திருப்பிப் பிங்கலைநாடியால் இரேசிக்க. இப்படி மூன்றுமுறையுச்சரித்து, ரூபபரிசசத்தகுணங்களைப்போக்கி, அதற்குவிருத்தமான சலத்தினாலாக்கிரமிக்கப்பட்டதாகவும், சலத்தினுடைய ஆகாரமாகவும் பாவிக்க.

## சாந்திகலாசுத்தி.

அறுகோணமும், அறுபுள்ளிவடிவும், கறுப்புநிறமும், சலனமும் ஹெ்ரௌம் என்னும் பீசமும், தற்புருடமந்திரமும், ஈசுவரன் காரணேசுவரனாகவுமிருக்கும் வாயுமண்டலத்தையுடையசாந்திகலை தனதுசர்வாங்கமும் வியாபித்ததாகப்பாவித்து, ஹெ்ரௌம் ஹெ்ரௌம் சாந்திகலாயை ஹூ:ஹூம்பட் என்று வாயுவைப்பூரித்து, சுழுமுனாநாடிமார்க்கமாய்த் துவாதசாந்தம்வரையுங்கொண்டுபோய்த்திருப்பி இரேசிக்க.

இப்படியிருமுறையுச்சரித்துப் பரிசசப்த குணங்களைப்போக்கி அதற்குவிருத்தமான பிருதிவியினாலாக்கிரமிக்கப்பட்டு அதன்வடிவமாகச்சிந்திக்க.

## சாந்தியதீதகலாசுத்தி.

வட்டவடிவும், சுத்தமான படிகநிறமும், சூனியமும், பிந்துசத்தியோடு சிறந்ததும், ஹௌம் என்னும் பீசமும், ஈசானமந்தி

ரமும், காரணேசுவரன் சதாசிவனுமாகவுள்ள ஆகாசமண்டலத்தையுடைய சாந்தியதீதகலை பாதமுதற்சிரசுவரையும் வியாபித்திருப்பதாகப்பாவித்து, ஹௌம் சாந்தியதீதகலாயை ஹூம்ஹூம்பட் என்று வாயுவைப்பூரித்துச் சுழுமுனைநாடிமார்க்கமாய்த் துவாதசாந்தம்வரையுங்கொண்டுபோய் வாயுவைத்திருப்பிப் பிங்கலைநாடியால் இரேசகஞ்செய்க.

இப்படியொருமுறையுச்சரித்துச் சப்தகுணத்தைப்போக்கி அனித்தியமாய் அவ்வியாபகமாய் அசுத்ததத்துவாதிசொரூபமாயிருக்கிற பூதாகாசத்தைக்கெடுத்து, நித்தியமாய், வியாபகமாய், சுத்ததத்துவாதியுக்தமாயிருக்கிற பரமாகாசத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வடிவுடையதாய்ப்பாவிக்க.

### திருநாவுக்கரசுநாயனார்.

#### திருத்தாண்டகம்.

"மண்ணதனிலைந்தைமாநீரினான்கை
வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை
விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்
தண்மதியைத்தாரகைகடம்மின்மிக்க
எண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம
னெழிலழியவெரியுமிழ்ந்தஇமையாநெற்றிக்
கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனே".

### மாணிக்கவாசகசுவாமிகள்

#### போற்றித்திருவகவல்.

"பாரிடையைந்தாய்ப்பரந்தாய்போற்றி
நீரிடைநான்காய்நிகழ்ந்தாய்போற்றி
தீயிடைமூன்றாய்த்திகழ்ந்தாய்போற்றி
வளியிடையிரண்டாய்மகிழ்ந்தாய்போற்றி
வெளியிடையொன்றாய்விளைந்தாய்போற்றி".

### மானதஸ்நானம்.

அஸ்திரமந்திரத்தையுச்சரித்து வலங்காற்பெருவிரலினின்றுந்தோன்றுகின்ற காலாக்கினியைச் சொலிப்பித்துத் தேகத்தையடைந்திருக்கின்ற பஞ்சபூததோஷங்களைத் தகனம்பண்ணி, மூலமந்திரத்தை நாதாந்தமாகவுச்சரித்து, குடிலாசத்தியையெ

மூப்பி அங்கிருந்து பெருகாநின்ற அமிர்தப்பிரவாகத்தினாலே தன்தேகத்தை யுள்ளும்புறம்புமபிஷேகஞ்செய்வதாகப் பாவிப்பது மானதஸ்நானமெனப்படும். அல்லது

## வடதருரூபம்.

பிருதிவியாதிபஞ்சபூதங்கள் விதையாகவும், தேகமொரு முளையாகவும், பிரமாவினாற் படைக்கப்பட்டு விட்டுணுவினால் இரட்சிக்கப்பட்டதாகவும், இராகம் துவேஷம் தர்மம் அதர்மம் மோகங்கள் மூலவேராகவும், சப்தாதிவிஷயங்கள் இலையாகவும், ஞானகர்மேந்திரியங்கள் கொம்பர்களாகவும், உலகப்பிரபஞ்சங்களே புஷ்பங்களாகவும், கலைமுதலிய தத்துவங்கள் சாரமாகவும், புத்திசங்கற்பம் பழங்களாகவும், பிரகிருதி தூலசரீரமாகவும், புருடனாகியபட்சிபுசிக்கிறதாகவும், புண்ணியபாவகன்மங்கள் பக்கவேராகவும் வேர்மேலுஞ் சாகைகீழுமாக ஆலமரரூபமாய்ப்பாவிக்க.

உலகத்திலேயுள்ளமரங்கள் கீழேவேரும் மேலேகிளையுமாகவிருக்கச் சரீரமாகிய வடவிருட்சம் மேலேவேருங், கீழேகிளையுமாயிருத்தலெங்ஙனமெனில், மேலே இருக்குமாயை வேராகவும், கீழேயிருக்குந் தத்துவங்கள் கிளையாகவும் பாவிக்கப்படுதலாமெனன்க,

மரமானது வித்திலுதித்து வளர்ந்து அழிவதுபோற் சரீரமான்து மாயையிலுதித்து வளர்ந்தழிகின்றமையால் மரத்தை யுவமித்தனரென்க.

பிருதுவியாதிகளினைந்துகுணங்களும் அழியும்பொருட்டுப் பீசாட்சரத்தையுச்சரித்துச் சரீரவிருட்சத்தின் பத்திர புஷ்பாதிகள் நீங்கினதாகச் சிந்திக்குமுறையாவது:

பூரகத்தின்முற்பாதியாற் பிருதிவியின் பஞ்சகுணங்களழியும்பொருட்டு நிவிர்த்திகலாபீசத்தை ஐந்துமுறையுச்சரித்துப் பத்திராதிகள் நீங்கினதாகச்சிந்தித்து, பூரகத்தின்பிற்பாதி

---

இராகம்-ஆசை.
துவேஷம்-வெறுப்பு.

யாற் சலத்தின் நான்குகுணமழியும்பொருட்டுப் பிரதிட்டாகலா பீசத்தை நான்கு முறையுச்சரித்தலால் நனைந்துப்பத்திராதிகளோடு கூடினதாகச்சிந்திக்க.

கும்பகத்தின்முற்பாதியால் அக்கினியின்மூன்றுகுணமழியும்பொருட்டு வித்தியாகலாபீசத்தை மூன்றுமுறையுச்சரித்துச் *சோஷித்ததாக நினைத்து, பிற்பாதியால் வலக்காற் பெருவிரலிலிருந்துண்டாகிய காலாக்கினியாலே தகிக்கப்பட்டதாகச்சிந்திக்க.

இரேசகத்தின் முற்பாதியால் வாயுவின்குணமிரண்டுமழியும்பொருட்டுச் சாந்திகலாபீசத்தை இரண்டுமுறையுச்சரித்துப் பஸ்மமாய்ப் பத்துத்திக்கிலும் பரந்துபோனதாகப் பாவித்துப் பிற்பாதியால் ஆகாசத்தின் குணமொன்றழியும்பொருட்டுச் சாந்தியதீதகலாபீசத்தை யொருமுறையுச்சரித்து நின்மலமான ஆகாசரூபமாகப்பாவிக்க.

துவாதசாந்தத்திற் சத்திமண்டலத்தைப் பூரணசந்திரனுக்கொப்பாய் அமிர்தமயமாயிருப்பதாகச்சிந்தித்துப் பிராசாதமந்திரத்தையும், வௌஷட் என்பதையிறுதியாகவுடைய சத்திமந்திரத்தையுஞ்சொல்லி அதனால் இரேசகத்தோடு சிருட்டிமார்க்கமாகப்பெருகிச் சகலநாடிகளிலும்பிரவேசித்த மிகுந்த அமிர்ததாரையினலே சரீரத்தை உள்ளும்புறம்பும் அபிஷேகஞ்செய்யப்பட்டதாகத்தியானித்து, முன்போல அங்கந்நியாசஞ்செய்க. பிருதிவிமுதலிய தத்துவங்கள் தாமாகக்காரியப்படமாட்டா வெனக்கண்டு அவைகளினின்றும் நீங்கும்பாவனையே பூதசுத்தியாம்.

### ஞானபூசைத்திருவிருத்தம்.

"அஞ்சலிசெய்திருந்துடலநானல்லேன்
புஞ்சமலிதனுகரணம்புவனபோகம்பொய்".
"எடுத்தவீடுதானழியுமளவுமதிற்றங்குவோர்போல்"

### தத்துவப்பிரகாசம்.

"பாங்குபடத்தத்துவங்கணீங்கல்பூதசுத்தி"

### ஆன்மசுத்தி.

இருதயத்திலிருக்குஞ்சோதிலிங்கமே வெளியிற்பூசிக்கப்படுவதால் அந்தரியாகமின்றிப்பூசைசெய்தவன் பாற்சாதமான

* சோஷித்தல்-ஈரத்தையுலர்த்தல்

து உள்ளங்கையிலிருக்கக்கண்டுமுண்ணுது புறங்கையை நக்குப வன்போலப் பூசாபலத்தை விட்டவனுவான்.

சைவசமயநெறி.

"அர்ச்சித்தானந்தரியாகம்புரியாதேபலத்தை
வர்ச்சித்தானென்றேமதி." எ-ம்

சிவதருமோத்தரம்.

"சிறந்தகத்துளான்மாவிலுறைசிவனைப்பூசையினைச்செய்யானுகி
மறந்துபுறத்தினிற்பூசைவருந்தியேயியற்றுபவன்வயங்குமாவின்
கறந்தபாலடிசிலங்கையுளேயிருப்பதுந்தான்கண்டுணுது
புறங்கையினைநக்குமவன்போலுமால்யாமறியப்புகலுங்காலே" எ-ம் அறிக.

தத்துவங்களைச்சடமெனக்கண்டு, திருவருளாலன்றி ஆன்மபோதத்தாலறியப்படாதெனக் காணும்பாவனையே ஆன்மசுத்தியாம்.

ஞானபூசைத்திருவிருத்தம்.

"நீங்கிலுயிர்சிவலிங்கஞ்சிவன்சீவன்யாதுஞ்
செயவேண்டாபசுஞானம்" எ-ம்

"மெய்ப்பணிமடங்கத்தூங்கிட" எ-ம் கண்டுகொள்க.

நாபிக்குக்கீழ் பிருதிவிதத்துவங் கிழங்காகவும், அப்புமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களும், எட்டங்குலப்பிரமாணமுள்ளதும், ஒன்பது துவாரங்களோடு கூடியதும், நான்குபக்கமும் முட்களையுடையதுமாகிய நாளவடிவாகவும், அசுத்தமாயையின் காரியமாகிய வித்தியாதத்துவமேழும், சுத்தவித்தையுமாகிய எட்டுத்தத்துவங்களும் எட்டிதழ்வடிவமாகவும், பிரணவாதி எட்டக்கரங்களை முறையே உடையதாகவும், ஈசுவரதத்துவமும், சதாசிவதத்துவமும் அறுபத்துநான்கு கேசரவடிவாகவும், சத்திதத்துவமும், சிவதத்துவமும் அக்கேசரங்களுக்குள்ளாகப் பொருந்திய பொகுட்டுவடிவாகவும், அப்பொகுட்டினுள்ளாகப் பொருந்திய ஐம்பத்தொரு பீசவடிவாகவும், நாலங்குலப்பிரமாணமான புட்பத்தையுடையதுமாகிய இருதயகமலஞ் சிவாசனமாம்.

சிவஞானசித்தியார்.

"நாட்டுமிதயந்தானுநாபியினிலடியாய்
ஞாலமுதறத்துவத்தாலெண்விரனுளத்தாய்
மூட்டுமோகினிசுத்தவித்தைமலரெட்டாய்
முழுவிதமெட்டக்கரங்கண்முறைமையினினுடைத்தாய்க்
காட்டுகமலாசனமேலீசர்சதாசிவமுங்
கலாமூர்த்தமாமிவற்றின்கண்ணருஞ்சத்தி
வீட்டையருள்சிவன்மூர்த்திமானாகிச்சத்தி
மேலாகிநிற்பனிந்தவிளைவறிந்துபோற்றே."

சிவஞானபோதம்.

"மண்முதனாளமலர்வித்தைகலாரூப
மெண்ணியவீசர்சதாசிவமு—நண்ணிற்
கலையுருவாநாதமாஞ்சத்தியதன்கண்ணா
நிலையதிலாமச்சிவன்றானேர்."

இவ்விதம் ஆதாரசத்தியாதி பராசத்தி பரியந்தந்தாபிக்கப்பட்ட சிவாசனத்தின்மீதாக மின்னல்போன்ற ஒளியுள்ளவரும், நாதசொரூபியுமாகிய சிவபெருமான் இருப்பதாகத்தியானித்து, ஆவாகனாதிகள்செய்து மானதமாகப்புட்பாதிகளைக்கொண்டுபூசிக்க.

மானதமாகச் சாத்துமட்டபுட்பங்கள், கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன.

சிவஞானசித்தியார்.

"கந்தமலர்புகையொளிமஞ்சனமமுதமுதலாக்
கண்டனவெல்லாமனத்தாற்கருதிக்கொண்டு
சிந்தையினிலருச்சிக்க." எ-ம்

திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருநேரிசை.

"காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே".

"உடம்பெனுமனையகத்துவுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கில்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே."

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

### பண்—காந்தாரபஞ்சமம்.

"ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிடர்
ஆனகெடுப்பனவஞ்செழுத்துமே."

இயற்கையாகவிருக்கின்ற நாபிகுண்டத்திலே ஞானாக்கினியைமூட்டி, அதிற்சிவனை ஆவாகித்துச் சொலிக்கச்செய்து, விந்துத்தானத்திலிருந்துபெருகுகின்ற அமுததாரையை ஆஜ்யதாரையாகப்பாவித்து, இடையாகிய சிருவத்தினால் நூற்றெட்டாகுதிசெய்து, முடிவிற்சுழுமுனையாகிய சிருக்கினாலே பூரணாகுதி செய்ததாகப்பாவித்துப் பூசாசமர்ப்பணஞ்செய்து, நிட்களசிவத்திலொடுக்குக.

துவாதசாந்தபரியந்தம் ஏகாகாரமாயிருக்குஞ்சிவனை விந்துத்தானத்தில், தீபச்சுவாலைபோன்றிருப்பவராகத் தியானித்துச் சமாதிகூட்டுக.

### வாயுசங்கிதை.

"நாபியழறனிலோமஞ்செய்ததற்பின்புருவநடுவதனினன்காத்
தீபசிசைபோலுறையுஞ்சிவன்றன்னைநினைந்தகத்துட்பூசைதன்னை
மாபவந்தீர்ந்திடமுடித்தபினிலிங்கந்தனிற்றழலில்வயங்குமண்ணிற்
றூபமுதலியவேந்திச்சிவபூசைதனையியற்றத்தொடக்கவேண்டும்."

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

### பண்—நட்டராகம்.

"கோங்குசண்பகங்குருந்தொடுபாதிரிகுரவிடைமலருந்தி
ஓங்கிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைப்
பாங்கினாலிடுந்தூபமுந்தீபமும்பாட்டவிமலர்சேர்த்தித்
தாங்குவாரவர்நாமங்களுவினிற்றலைப்படுந்தவத்தோரே."

---

# தானசுத்தி.

பகிர்பூசைபண்ணப்போகின்றேனென்று தியானித்து அனுமதிபெற்றுக்கொண்டு அஸ்திரமந்திரத்தையுச்சரித்துத் தாளத்திரயஞ்செய்து, அந்தத்தானத்திலுள்ள விக்கினங்கள் போவதற்காகத் திக்குப்பந்தனமும், அசுரர்முதலியோருட்பிரவேசியாமைக்காக அஸ்திரத்தினால்நாற்புறமும் அக்கினிவடிவாகிய மதிலும், கவசத்தையுச்சரித்து அவகுண்டனஞ்செய்வதால் மூன்றகழும், சத்திமந்திரத்தைச்சொல்லித் தேனுமுத்திரைகொடுப்பதால் திருவருட்சத்தியாகியவலை மேலுங்கீழுமுண்டானதாகவும் பாவிக்க.

## தத்துவப்பிரகாசம்.

"பகர்சிவதத்துவமாக்கறலசுத்தி."

## பாத்தியத்திரவியம்.

சந்தனம், இலாமிச்சை, அறுகு, வெண்கடுகு என்னும் இந்நான்கையும் சுத்தசலத்துடன்கூட்டுவது பாத்தியமெனப்படும்.

## சைவசமயநெறி.

"ஆரமிலாமிச்சையறுகோடுவெண்கடுகுஞ்
சீருநவேபாத்தியத்திற்சேர்."

## ஆசமனத்திரவியம்.

இலவங்கப்பட்டை, கர்ப்பூரம், சாதிக்காய், சிற்றேலம், வசுவாசி, பேரேலம் ஆகிய ஆறுதிரவியங்களின் பொடிகளைச் சுத்தசலத்துடன்கூட்டுவது ஆசமனமெனப்படும்.

## சைவசமயநெறி.

"இலவங்கங்கர்ப்பூரஞ்சாதிசிற்றேல
நலவசுவாசேலமுநன்று."

## அருக்கியத்திரவியம்.

பால், சலம், எள்ளு, அரிசி, தருப்பைநுனி, பூ, வெண்கடுகு, நெல்லு என்னுமிவ்வெட்டும் அருக்கியத்திரவியமாகும்.

## சைவசமயநெறி.

"அருக்கியம்பானீரெள்ளரிசிகுசையந்த
நிரைத்தமலர்வெண்கடுகுநெல்."

## பாத்தியாதிகளுக்கு முத்திரை.

பாத்திரத்தையிடக்கையில்வைத்துக்கொண்டு வலக்கையின்பெருவிரலும், நடுவிரலும் ஆழிவிரலுமாகிய மூன்றையுங்கூட்டிப்பிடிக்கும் மிருகீமுத்திரையினலே பாத்தியாதிகளைக்கொடுத்தல்வேண்டும் பெருவிரலாலுஞ்சுட்டுவிரலாலும்கொடுக்கின் அந்தநீர் இரத்தத்திற்குச்சமானமாகும்.

## விசேஷார்க்கியம். *

பொன்முதலியவற்ருலமைக்கப்பட்ட அருக்கியபாத்திரத்தை அஸ்திரத்தாலலம்பி, விந்துத்தானத்திலிருந்துபெருகுகின்ற அமிர்ததாரையாகச் சலத்தைப்பாவித்து, வௌஷடந்த இருதயத்தையுச்சரித்துப்பூரித்து, அதில் சிவாசனமந்திரத்தைச்சொல்லிப் பூசித்துச் சிவனுக்குரிய ஆசனமும், மூர்த்திமந்திரத்தைச்சொல்லிப்பூசித்து, மூர்த்தியும்அமைந்ததாகப்பாவிக்க.

சிவனுக்குரிய ஐந்துமுகங்களும் அமைவதற்காக ஈசானதிமந்திரங்களாற்பூசித்து, அவருக்குரிய வித்தியாதேகமும் நேத்திரமும் அமைவதற்காக வித்தியாதேகநேத்திர மந்திரங்களையுஞ் சொல்லிப் பூசித்துப்பாவிக்க.

மூலமந்திரத்தாலருச்சிப்பது சிவனையதில்ஆவாகித்தலென்னும்பாவனையாகும். இருதயாதிமந்திரங்களாற்பூசிப்பது சிவனுக்குரிய சுத்தகுணங்களாறும் அமைந்ததென்னும்பாவனையாம். மூலமந்திரத்தாலும், சம்ஹிதையாலும் அபிமந்திரிப்பது சிவனுக்குரிய ஐசுவரியசத்திகள் பதிதலென்னும்பாவனையாம். அஸ்திரத்தால் இரட்சையும், கவசத்தாலவகுண்டனமுஞ்செய்து வௌஷடந்தமூலத்தால் தேனுமுத்திரை காட்டல்வேண்டும்.

அருக்கியநீரிற் சிவசத்திபதிதற்காகவே இக்கிரியை செய்யப்படுவதாம்.

---

* காமிகாகமம்.

# திரவியசுத்தி.

அருக்கியசலத்தினால் தன்னுடையசிரசினும், புட்பம்முதலிய பூசைத்திரவியங்களினும் நிரீக்ஷணஞ்செய்து அஸ்திரத்தாற்புரோட்சித்து, கவசத்தால் அப்பியுக்ஷணஞ்செய்து, இருதயத்தாலபிமந்திரித்து, கவசத்தால் அவகுண்டனஞ்செய்து தேனுமுத்திரைகாட்டித் திருமஞ்சனத்தையும் சுத்திசெய்க.

திரவியசுத்தியாவது, திரவியங்களெல்லாம் மாயையினிடத்துண்டானவையாகையாற் சுத்தராயிருக்கிற சிவபெருமானுக்கு மாயேயமாகிய திரவியங்களங்கீகாரமாகமாட்டா. அஃதன்றிப் பலனையுங்கொடுக்கமாட்டா. ஆகையாற் சிவசத்தியை நிரீக்ஷணாதிகளால் அவைகளிற்பதியும்படிசெய்வது, அங்ஙனஞ்செய்யிற் சுத்தியாகிச் சித்தாகிய சிவனுக்கேற்கும். *

அஃதெவ்வாறென்னில், விறகானது அக்கினியைச்சேர்ந்தபோதே தற்சொரூபங்கெட்டு அக்கினிச்சொரூபமானாற்போலுமென்க.

திவ்வியகண்ணாகிய கருவியினாற் பார்த்தறியுஞ்செயல்களெல்லாம் திருவருட்செயலென்னும் பாவனையாகும்.

ஞானபூசைத்திருவிருத்தம்.

"நாலிரண்டுதிருவுருவநோக்கிநோக்கால்
நலங்கொடிரவியசுத்திநயந்து."

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருத்தாண்டகம்.

"ஆவாகியாவினிலைந்துமாகியறிவாகியழலாகியவியுமாகி
நாவாகிநாவுக்கோருரையுமாகிநாதனாய்வேதத்தினுள்ளோனாகிப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்புக்குளால்வாசமாய்நின்றானாகித்
தேவாகித்தேவர்முதலுமாகிச்செழுஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே"

---

* தந்திரசாரம்.

# மந்திரசுத்தி.

தன்னுடைய ஆசனத்தைச் சிவாசனமாகப்பூசித்து, இருதயத்திற் சிவமூர்த்தியைப்பூசித்து, நெற்றியிலே சந்தனத்தாற்றிலகமிட்டுச் சிரசில் மூலமந்திரத்தினலருச்சித்துத் தன்னுடைய தேகத்தைச் சிவரூபமாகப்பாவித்துப் பூசைக்குவிரோதமில்லாத மௌனநிலையாயிருந்து, மந்திரங்களை ஹ்ரஸ்வதீர்க்கக்கிரமமாக மூலாதாரந்தொடங்கித் துவாதசாந்தம்வரையும் ஓம்காரமுதல் நமோந்தமாகவுச்சரிக்க.

பஞ்சாக்கரத்தை ஐந்தெழுத்தாகக்கொள்ளாமல் சிவ்விலே சிவமும், வவ்விலே திருவருட்சத்தியும், யவ்விலே ஆன்மாவும், நவ்விலே திரோதானசத்தியும், மவ்விலே மலமும், ஆகிய ஐந்துமுதலாகக்காணுதலே இதனுண்மையாம்.

திருநாவுக்கரசுநாயனர்

திருத்தாண்டகம்.

"பேராயிரம்பரவிவானேரேத்தும்
பெம்மானைப்பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம்வருவிப்பானை
மந்திரமுந்தந்திரமுமருந்துமாகித்
தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத்
திரிபுரங்கடீயெழத்திண்சிலைகைக்கொண்ட
போரானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றதேயாற்றநாள்போக்கினேனே".

---

# இலிங்கசுத்தி.

ஸ்நாநவேதிகையிற் சடுத்தாசனம்பூசித்து, இலிங்கத்தையதிலெழுந்தருளச்செய்து, சிதறிய நிருமாலிய புஷ்பங்களைக் காயத்திரி மந்திரத்தாலெடுத்துச் சாமானியாருக்கியத்தினற் சுவாகாந்தமான இருதயத்தினலும், மூலத்தினலும் சத்தியோசாதாதிக் கிரமமாக ஐந்து சிரசுகளிலும் அருக்கியங்கொடுத்துத், தூப

தீபங்கொடுத்துச் சாந்திய புஷ்பங்களின்மேற் கைவைத்து, சத்தியோசாதாதிமந்திரங்களையுச்சரித்து, அஸ்திரமந்திரத்தினால் இலிங்கத்தின்மேலிருந்த புஷ்பங்களை எடுத்துச் சுத்தபாத்திரத்திற் சண்டேசுரபூசையின் பொருட்டு ஈசானதிக்கில் இருதயத்தினால் வைக்க.

அஸ்திரத்தினால் இலிங்கத்தையும், பாசுபதாஸ்திரத்தினாற் பிண்டிகையையும் அலம்புக. அஸ்திரமந்திரத்தையுச்சரித்துச் சாமானியார்க்கியத்தினாலபிஷேகிக்க.

சலலிங்கமானால் அட்டபுட்பத்தினாலாதல், ஆசனமூர்த்திமூலத்தினாலாதல் அருச்சித்து, அருக்கியதூபதீபங்கொடுத்து, அஸ்திரத்தினால் நிருமாலியத்தைக்கழிக்க.

இலிங்கத்தை அஸ்திரத்தினாலும், பிண்டிகையைப் பாசுபதாஸ்திரத்தினாலும் அபிஷேகம்பண்ணினால் சகலவிக்கினங்களுந்தீர்ந்து, மந்திரங்கள் பிரகாசித்துப் பலனைக்கொடுக்கும்.

சிவபெருமான் பரிபூரணராகையார், சித்துப்பிரபஞ்சங்களிலும், அசித்துப்பிரபஞ்சங்களிலும் பிரிவறச்சேட்டிப்பித்துநிற்குந்தன்மையையறிந்து, இந்தலிங்கத்திலுமுண்டென்னும்பாவனையே இலிங்கசுத்தியாகும்.

ஞானபூசைத்திருவிருத்தம்.

"நாதன், மேலுகந்தமலரொதுக்கியுருவநோக்கி
விமலனிறையுணர்ந்தெவையுமேனியான
சீலமுமங்கருவுதிருவுருவமானசிறப்புமுணர்ந்
திலிங்கசுத்திசேர்த்திடாயே"

ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, வயிந்தவமென்னுமைவகைப்பாசங்களை நீக்குதற்பொருட்டே ஆன்மசுத்தி,* தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்திகள் செய்யப்படுகின்றன.

சைவசமயநெறி.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பூரங்காகப்
பஞ்சவித பாசமறப் பார்."

---

*ஆன்மசுத்தியானது பூதசுத்தி, அந்தரியாகம், சமாதி என்பவற்றின் தொகுதியாம்.

# அபிஷேகம்.

வடித்தெடுத்தநீர் கங்காசலத்துக்குச் சமானமாகையால் நீரைவடித்தெடுத்து, அதில்வாசனைத்திரவியங்களையும், புட்பங்களையுமிட்டு "அருளெனும்புனலினையாட்டி" எனக்காசிகாண்டத்திற்கூறியபடி திருவருளாகியஞானமே நீரெனப்பாவித்து, அபிஷேகஞ்செய்யின் மலநிவாரணமாகும்.

### சதாசிவரூபம்.

"நிகழ்சலசுத்திநிமித்தமாக
மகிழ்வுடனேதிருமஞ்சனம்பண்ணி."

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

பண்—தக்கராகம்.

"தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ."

சந்தனாதித்தைலத்தால்அபிஷேகித்தவர்கள் சுகத்தையும் அரிசிமாவால் அபிஷேகித்தவர்கள் மலநாசத்தையும், ஆமலகத்தால் அபிஷேகித்தவர்கள் உரோகநாசத்தையும், மஞ்சள்மாவால் அபிஷேகித்தவர்கள் இராசவசியத்தையும், பஞ்சகவ்வியத்தாலபிஷேகித்தவர்கள் ஆன்மசுத்தியையும், ரசபஞ்சாமிர்தத்தாலபிஷேகித்தவர்கள் வெற்றியையும், பலபஞ்சாமிர்தத்தாலபிஷேகித்தவர்கள் செல்வத்தையும், பஞ்சபலோதகத்தினாலபிஷேகித்தவர்கள் மந்திரசித்தியையும், பாலினாலபிஷேகித்தவர்கள் ஆயுள்விருத்தியையும், தயிரினாலபிஷேகித்தவர்கள் பிரசாவிருத்தியையும், நெய்யினாலபிஷேகித்தவர்கள் மோட்சத்தையும், தேனாலபிஷேகித்தவர் சங்கீதவன்மையையும், கருப்பஞ்சாற்றாலபிஷேகித்தவர்கள் நித்தியசுகத்தையும், சருக்கரையாலபிஷேகித்தவர்கள் சத்துருநாசத்தையும், வாழைப்பழத்தாலபிஷேகித்தவர்கள் பயிர்விருத்தியையும், பலாப்பழத்தாலபிஷேகித்தவர்கள் லோகவசியத்தை

யும், மாம்பழத்தாலபிஷேகித்தவர்கள் சகலவெற்றியையும், தமரத்தம்பழத்தாலபிஷேகித்தவர்கள் பூமிலாபத்தையும், மாதுளம்பழத்தாலபிஷேகித்தவர்கள் பகைநீக்கத்தையும், நாரத்தம்பழத்தாலும், கிடாரநாரத்தம்பழத்தாலுமபிஷேகித்தவர்கள் சற்புத்தியையும், எலுமிச்சம்பழத்தாலபிஷேகித்தவர்கள் மிருத்யுநிவாரணத்தையும், தேங்காய்த்துருவலாலும், அன்னத்தாலுமபிஷேகித்தவர்கள் அரசுரிமையையும், இளநீராலபிஷேகித்தவர்கள் சற்புத்திரப்பேற்றையும், அபமிருத்துநாசத்தையும், கோரோசனையாலபிஷேகித்தவர்கள் தீர்க்காயுளையும், பச்சைக்கருப்பூரத்தாலபிஷேகித்தவர்கள் பயநாசத்தையும், கஸ்தூரியாலபிஷேகித்தவர்கள் வெற்றியையும், பனிநீராலபிஷேகித்தவர்கள் சாலோக்கியத்தையும், சந்தனக்குழம்பாலபிஷேகித்தவர்கள் சாயுச்சியத்தையும், சகஸ்ரதாராபிஷேகஞ்செய்தவர் ஞானத்தையும், ஸ்நபநாபிடேகஞ்செய்தவர் சன்மசாபல்யத்தையும், சாரூப்பியத்தையும் அடைவார்கள்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்

பாவநாசத்திருக்குறுந்தொகை.

"பாவமும்பழிபற்றறவேண்டுவீர்
ஆவிலைஞ்சுகந்தாடுமவன்கழல்
மேவராய்மிகவும்மகிழ்ந்துள்குமின்
காவலாளன்கலந்தருள்செய்யுமே."

நேரிசை.

"தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
இண்டைகொண்டேறநோக்கியீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே."

திருக்குறுந்தொகை.

"செய்யமேனியன்றேனெபொறயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாம்
கையில்ஆமலகக்கனியொக்குமே".

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

பண்—பழந்தக்கராகம்.

"பாலினனறுநெய்யாற்பழத்தினற்பயின்றாட்டி
நூலினன்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுள்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே."

## எண்ணெய்க்காப்புவிதி.

எள்ளைச்சுத்தமாக்கிக் கைச்செக்கினாலாட்டிச்சாத்துக. அங்ஙனமன்றி ஆட்டியஎண்ணெய் மதுவுக்கொப்பாகுமென்றறிக.

## பஞ்சாமிர்தவிதி.

பால், தயிர், நெய், தேன், சருக்கரை என்பவற்றை விதிப்படிசேர்ப்பின் இரசபஞ்சாமிர்தமெனப்படும்.

பலாப்பழம், வாழைப்பழம், தேங்காய்த்துருவல், கருப்பஞ்சாறு, தேன் என்னுமிவைகளைவிதிப்படிசேர்ப்பின் பலபஞ்சாமிர்தமெனப்படும.

## பஞ்சகவ்வியவிதி.

ப-பாபநிவாரணம், ச-ஆன்மசுத்தி, க-பிறவிநீக்கம், வியம்-மோட்சம் எனவே மலத்தைநீக்கி ஆன்மாவைச்சுத்தனாக்கிப் பிறவியையொழித்து, மோட்சத்தைக்கொடுக்கும்பெருமையையுடையதெனக்கொள்க. பஞ்சகவ்வியம் இல்லாமற்செய்யுங்கிரியைகளிற்றேவர்கள் சாந்நித்தியமாகார்கள்.

சிவலோகத்திற் சிவசந்நிதானத்திலிருக்கின்ற இடபதேவரின் பக்கத்திலிருக்கும் சிவப்புநிறமுள்ளசுமனை, வெண்மைநிறமுள்ளசுரபி, கபிலைநிறமுள்ளநந்தை, புகைநிறமுள்ளசுசீலை, கருமைநிறமுள்ளசுபத்திரை என்னும்பசுக்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுய்யுங்காரணமாய்ப் பூமியிற்பிறக்கும்படி கட்டளைசெய்தனர். அவைபாற்கடலினின்றும் சிவபூசை, யாகாதிகன்மங்களுக்குபயோகமாதற்பொருட்டும், ஆன்மாக்களது துன்பங்களைநீக்கியருளுதல்காரணமாகவுமுற்பவித்தன. இவைகளிற் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும்பொருள்கள்தோற்றும்.

### பால்.

ஒன்பதுகோட்டமமைத்து நடுக்கோட்டத்திற் சிவதத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின்மீதாகத் தாபிக்கப்பட்ட சுப்பிரதிட்டையென்னும் பாத்திரத்தினுள்ளாகப்பொருந்தியபாலை ஈசானமந்திரங்கொண்டு ஒருமுறைபூசித்து அபிமந்திரிப்பது ஈசானமென்னும் திருவருட்குணம் பதிதற்காகும். இதனாற் சத்துருநிவாரணமாம். இதற்கு அதிபன் சுக்கிரன்.

### தயிர்.

கிழக்குக்கோட்டத்திற் சதாசிவமென்னுந் தத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின்மீதாகத்தாபிக்கப்பட்ட சுசாந்தமென்னும்பாத்திரத்தினுள்ளாகப்பொருந்திய தயிரைத் தற்புருடத்தாலிருமுறைபூசித்து அபிமந்திரிப்பது, தற்புருடகுணம்பதிதற்காகும். இதனாற்புத்திரப்பேறுண்டாம். இதற்கு அதிதேவதை சந்திரன்.

### நெய்.

தெற்குக்கோட்டத்தில் வித்தியாதத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின்மீதாகததாபித்த தேசோவத்பாத்திரத்தினுள்ளாகப்பொருந்தியநெய்யை அகோரத்தினால் மும்முறைபூசித்து, அபிமந்திரிப்பது அகோரமென்னும்குணம் பதிதற்காகும். இதுயாவராலும்பூசிக்கப்படும் மோட்சத்தைக்கொடுக்கும். இதற்கு அதிதேவதை உருத்திரன்.

### கோசலம்.

வடதிசையிற் புருடதத்துவத்தினாலமைக்கப்பட்ட இடத்தின்மீதாகப்பொருந்திய இரத்தினோதக பாத்திரத்திலுள்ளாகவிருக்குங் கோசலத்தை வாமதேவத்தால் நான்குமுறை பூசித்து அபிமந்திரிப்பது வாமதேவகுணம் பதிதற்காகும். இதுசெல்வத்தைக்கொடுக்கும். இதற்கு அதிதேவதை-கங்கை.

### கோமயம்.

மேற்றிசையிற் காலதத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின்மீதாகப்பொருந்திய அமிர்தாத்மக பாத்திரத்தினுள்ளாகவிருக்கும் கோமயத்தைச் சத்தியோசாதத்தாலைந்துமுறை அர்ச்சி

த்து அபிமந்திரிப்பது, சத்தியோசாதமென்னுந் திருவருட்குணம் பதிதற்காகும். இது வியாதியைநீக்கும். இதற்கு அதிதேவதை-சூரியன்.

கோமயத்தில் இச்சாஞானக்கிரியாரூபமான தளிருடன் வில்வந்தோற்றியது. அவ்வில்வத்தைத் திருமகள் விரும்பியதன் கணிருக்கையாற் சிறீபலமென்னும் பெயரைப்பெற்றுச் சிவபெருமானுக்கெந்நாளும் அணியத்தக்கதும், அருச்சித்தவர்களுடைய பாவங்களை நீக்குவதுமாகிய பெருமையைப் பொருந்தியிருக்கிறது.

பின்பு நீலோற்பலக்கிழங்குந் தாமரைக்கிழங்குந் தோற்றியன.

## அரிசிமா.

அக்கினிதிக்கிலமைக்கப்பட்ட நியதிதத்துவத்தின் மீதாகவைத்துப் பூசிக்கப்படும் அரிசிமாவாலபிஷேகஞ்செய்தோர் பலவிதமாகிய தானியமுதலியவற்றிற்கு அதிபராதலையும், மலநிவாரணத்தையும் அடைவார்கள். அதிதேவதை-விட்டுணு.

## நெல்லிக்காப்பு.

நிருதிதிக்கிலமைக்கப்பட்ட அப்புதத்துவத்தின்மீதாகவைத்துப் பூசிக்கப்படும் நெல்லிக்காப்பாலபிஷேகஞ் செய்தோர்கள் செல்வத்தையும் ரோகநீக்கத்தையுமடைவர். அதிதேவதை-இலக்குமி.

## மஞ்சட்காப்பு.

வாயுதிக்கிலமைக்கப்பட்ட மாயாதத்துவத்தின் மீதாகவைத்துப் பூசிக்கப்படும் மஞ்சட்காப்பினாலபிடேகஞ்செய்தவர்கள் அனேகசம்பத்தையும் இராசவசியத்தையுமடைவர். இதற்கு அதிதேவதை-சந்திரன்.

## குசோதகம்.

ஈசானதிக்கிற் பிரகிருதி தத்துவத்தாலமைக்கப்பட்ட இடத்தின் மீதாகப்பொருந்திய அவ்வியத்தமென்னும் பாத்திரத்திலிருக்குங் குசோதகத்தை மூலத்தினாலருச்சித்தபிடேகித்தவர்கள் பிரமலோகத்தையடைவர்.

### சித்தியவிஸ்வத்திற்கூறிய
### பஞ்சாமிர்தவிதி.

நடுக்கோட்டத்திற்பாலையும், கிழக்குக்கோட்டத்தில் தயிரையும், தெற்குக்கோட்டத்தில் நெய்யையும், வடக்குக்கோட்டத்தில் மதுவையும், மேற்குக்கோட்டத்தில் சருக்கரையையுந் தாபிக்க. அக்கினி திக்கிலமைக்கப்பட்டகோட்டத்தில் வாழைப்பழத்தையும், நிருதிதிக்கிலமைக்கப்பட்டகோட்டத்தில் பலாப்பழத்தையும், வாயு திக்கிலமைக்கப்பட்டகோட்டத்தில் மாம்பழத்தையும், ஈசான திக்கிலமைக்கப்பட்டகோட்டத்தில் கந்தோதகத்தையுந்தாபிக்க.

பஞ்சகவ்வியத்திற்குக்கூறியபடி கோட்டபூசைமுதலியவற்றைச்செய்து சேர்த்து அபிஷேகிக்க. கந்தோதகத்தைத் தனித்தபிஷேகிக்க.

### பஞ்சபலோதகவிதி.

எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு ஆகிய இவைகளை விதிப்படிகூட்டின் பஞ்சபலோதகம் எனப்படும். இவைகளைப் பதமந்திரமுச்சரித்தபிஷேகிக்க.

## திருவொற்றுடை.

திருவொற்றுடைசாத்தியவர்கள் தங்களுடைய மரபினுள்ள கோடிசுற்றத்தினரை நரகத்தினின்றுநீக்கிச் சிவபெருமானுடைய பாதநீழலை அடைவார்கள்.

அஸ்திரத்தாற் புட்பஞ்சாத்திச் சிவமந்திரமுச்சரித்துப் பதுமாசனத்தில்உடையவரை எழுந்தருளச்செய்க.

### கணபதி மகாலக்குமி குரு
### வந்தனம்.

பீடத்தின் வாயுமூலையில் கணபதியையும், அவருக்குக் கிழக்கே சிவசத்திருபமாகிய இலக்குமியையும், ஈசானத்தில் சதாசிவகுரு, அநந்தகுரு, ஸ்ரீகண்டகுரு, அம்பிகாகுரு, கந்தகுரு, விட்டுணுகுரு, பிரமகுரு என்னுஞ் சத்தகுருக்களையும்பூசித்து,

யான் சிவனைப்பூசிப்பதற்கு அனுமதிதரல்வேண்டுமென்று கணபதி, இலக்குமி, சத்தகுரு இவர்களைப்பிரார்த்தித்து அனுமதியைப்பெற்றுக்கொண்டு சிவத்தைப்பூசிக்க. சத்தகுருவையுஞ் சிவனாகப்பாவித்துப்பூசிப்பதனால் ஞானமுண்டாம்.

---

## சிவாசன உறுப்பு.

### கூர்மாசனம்.

க. பிருதிவிதத்துவம் தாமரைக்கிழங்கு. அது ஆதாரசத்தியின் சிரசிலிருக்கும்; நிவிர்த்திகலையால் வியாபிக்கப்படும்.

காலாக்கினிருத்திரபுவனம்முதல் பத்திரகாளிபுவனம் வரையுமுள்ளபுனங்கள் கoஅ.

இவை ஆதாரசத்தியின்உறுப்புக்களாக இருக்கும்.

### அநந்தாசனம்.

உ. சலதத்துவம் கிழங்கைநெகிழ்விக்கும்.

இதில் அமரேசம்முதலிய புவனங்கள் அ.

ங. அக்கினிதத்துவம் ஒன்றுபடுத்தி நீரையிழுக்கும்.

இதில் அரிச்சந்திரம்முதலியபுவனங்கள் அ.

ச. வாயுதத்துவம் இயக்கிக்கூட்டும்.

கெயம்முதலியபுவனங்கள் அ.

ரு. ஆகாசம் இடங்கொடுக்கும்.

வஸ்திரபாதம்முதலியபுவனம் அ.

சு+கo. கந்தம், இரசம், ரூபம், பரிசம், சத்தம் என்னுந்தத்துவங்கள் தாமரையின்முளையாகும்

சகலண்டர்முதலியபுவனங்கள் ச.

கக+உo. வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிஹ்வை, ஆக்கிராணம், என்னும்பத்துத்தத்துவங்கள் ஒன்பதுதுளைகள்.

கருமேந்திரியதத்துவங்களில் காலஞ்சனபுவனமிருக்கும் ரு.
ஞானேந்திரியத்தில் சங்குகர்ணபுவனமிருக்கும் க.
உக-உஉ-உங. மனம், அகங்காரம், புத்தி, என்னுந்தத்துவங்கள்
அகத்துநின்றுதொழிற்படுத்தும்.

மனதில்துலேசுவரபுவனம் க.
அகங்காரத்தில் தலேசுவரபுவனம் க.

## சிம்ஹாசனம்.

புத்தியின் பாவாட்டகங்களாகிய தருமம் முதலியவை சிம்ஹவடிவங்களாக விருக்கும்.

புத்தியில் ஐந்திரம் முதலிய புவனம். அ.

இந்திரபுவனத்தார் தருமகுணமும், சௌமிய புவனத்தார் ஞானகுணமும், பிரசாபத்திய புவனத்தார் வைராக்கியகுணமும், பிரமபுவனத்தார் ஐசுவரியகுணமும், கந்தருவப்புவனத்தார் அதர்மகுணமும், இயக்கபுவனத்தார் அஞ்ஞானகுணமும், இராக்கதபுவனத்தார் அவைராக்கியகுணமும், பைசாசபுவனத்தார் அனைசுவரியகுணமுமுடையராயிருப்பர்.

## யோகாசனம்.

உச- பிர்கிருதிதத்துவம்.
இதில் அகிர்தம் முதலிய புவனங்கள் அ.
இவைபிரதிட்டாகலையால் வியாபிக்கப்பட்டவை.

உரு- புருடதத்துவம்.
இதில் வாமம் முதலிய புவனங்கள் ரு.

உசு- அராகதத்துவம்.
இதில் பிரசண்டம் முதலியபுவனங்கள் ரு.

உஎ- வித்தியாதத்துவம்.
இதில் குரோதம், சண்டம் உ.

உஅ- கலாதத்துவம்.
இதில் தியுதி, சம்வர்த்தம் உ.

உகூ- நியதிதத்துவம்.
இதில் சூரம், பஞ்சாந்தகம் உ.

௩௦- காலதத்துவம்.
இதில் ஏகவீரம், சிகேதம் ௨.
சலதத்துவமுதலிய இருபத்தொன்பதும் நாளவடிவாகும்.
அமரேசம்முதலியபுவனங்கள் எழுபத்தைந்தும் நாளத்தின்முட்களாகும்.

௩௧- அசுத்தமாயாதத்துவம் புறவிதழாகும்
மகாத்யுதிமுதலியபுவனங்கள் அ.
இத்தத்துவங்கள் வித்தியாகலையால்வியாபிக்கப்பட்டவை.

## பதுமாசனம்.

௩௨- சுத்தவித்தியாதத்துவத்தில் அட்டவித்தியேசுவரரூபங்களாகிய எட்டுத்தளங்களிருக்கும். தளாக்கிரங்களில் சூரியமண்டலமிருக்கும்.

## விமலாசனம்.

௩௩- ஈசுவரதத்துவம்
௩௪- சதாசிவதத்துவம் ௬௪ கேசரங்கள்
அவை கலாசத்திகளின் வடிவங்களாயமைந்துள்ளன. இவைசார்திகலையையுடையன.
கேசராக்கிரத்தில் சந்திரமண்டலம், கிழக்குமுதல் எட்டெட்டாகவுடைய ௬௪ கேசரங்களிலும், வாமைமுதலிய எட்டுச்சத்திகளிருப்பர்.
சாதாக்கியதத்துவத்தில் சாதாக்கியபுவனம் ௧.

௩௫. சத்திதத்துவம் பொகுட்டுவடிவாகும்.
பொகுட்டுநுனியில் அக்கினிமண்டலம். பொகுட்டில் மனோன்மனியிருக்கும்.
நிவிர்த்திமுதலியபுவனங்கள் ௫.

௩௬. சிவதத்துவம் ஐம்பது பீசவடிவாகும்.
அவை ஐம்பதுவர்ணங்களை அதிதேவதையாகவுள்ளன.
இதில் இந்திகைமுதலியபுவனங்கள் ௧௦.
சத்திமண்டலம் பிரணவாசனம்.

# சிவாசனம்.

ஆதாரசத்திமுதற் குடிலாசத்தியந்தமாகவுள்ளதும், முப்பத்தாறு தத்துவங்களேயும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களேயுமுறுப்புக்களாகவுடையதும், அநந்தாசனம், சிம்ஹாசனம், யோகாசனம், பதுமாசனம், விமலாசனம் என்னுமைந்துபிரிவுகளேயுடையதுமாகிய பெருமைவாய்ந்தது சிவமூர்த்திக்கு ஆசனமாம்.

சைவசமயநெறி.

"ஆதாரசத்திமுதற்குடிலாசத்தியந்த
மோதாய்திராதனமென்றோர்ந்து."

சிவதருமோத்தரம்.

"பதுமாதனந்தானுறவிருப்பர்சதாசிவர்
தத்துவத்தவிசினுகந்தே"

## கூர்மாசனம்.

காலாக்கினிருத்திரபுவனத்துக்குக் கீழுள்ளதாகிய ஆதிகூர்மத்திற் பால்போன்றநிறமுள்ளதாய், சிரசில் வித்தின்முளேபோன்ற வடிவுடையதாய், வரதம், அபயம், பாசம், அங்குசமாகிய ஆயுதங்களேத்தரித்ததாய், உலகத்துக்கு ஆதாரமாய், அநாகதருடைய மூர்த்திபேதமாயுள்ளதுமாகிய ஆதாரசத்தியிருக்கும்.

இச்சத்தி பிரமாண்டத்தைவியாபித்துப் பாற்கடலிலிருந்துவெளிப்பட்டு, மறுபடி அண்டத்தைக்காரியப்படுத்திக் கந்தத்தினுதித்தமுளேபோலிருக்கும்.

பிரமவிட்டுணுருத்திரபாகங்களோடுகூடிய ஆதாரசத்தியைப்பூசிக்கவேண்டுமென்று, ஆதாரசத்தியின்வடிவஞ்சொல்லப்பட்டதாயிற்று. அதை முதலில் லிங்கபீடத்தின்கீழ்ப்புறத்திலே கூர்மசிலேயிற் பூசிக்கவேண்டும்.

க. பிரமாண்டத்துட் காலாக்கினிருத்திரபுவனமானது பொன்மயமானதும், கோடிசூரியப்பிரகாசமுள்ளதுமாயிருக்கும்.

அதனுள் காலாக்கினிருத்திரரானவர் அம்பும், வாளும், வில்லும், பரிசையுந்தரித்தவராய்த் தமது சாரூப்பியத்தையடைந்த அநேக ருத்திரர்களாற் சூழப்பட்டிருப்பர்.

உ. அப்புனத்துக்குமேலுள்ள நரகங்களுக்கதிபராகிய கூர்மாண்டருத்திரர் பிரளயகாலசூரியனைப்போலவும், அக்கினியைப்போலவும் ஒளியுள்ளவராய் மழுவும், வில்லும், அம்பும், பரிசையுந்தரித்தவராய்த் தம்மைப்போன்ற அநேகருத்திரர்களாற் சூழப்பட்டிருப்பர்.

ங. ஏழுபாதாளங்களுக்குமேல் அவ்வப்பாதாளாதிபருக்கெல்லாந்தலைவரான ஆடகேசுவரர் பொன்மயமானஆலயத்தில் தேவர்முதலியோர் தமதுபாதங்களிற்றுதிக்க வீற்றிருப்பர். பொன்மயமான பாதாளங்களுக்கதிபராகையால் ஆடகேசுவரரெனப்படுவர்.

ச. இதற்குமேற் பிரமபுவனமும், ரு வைஷ்ணவபுவனமும், சு உருத்திரபுவனமுமிருக்கும்.

குக்குடாண்டம்போன்றிருக்கின்ற அண்டகடாகப்புறம்பே கிழக்குமுதலிய பத்துத்திக்குகளினுமிருக்கின்ற நூறுபுவனங்களினும் நூறுருத்திரர்கள் இருப்பர். அவர்கள் பலவிதமான ரூபங்களையுடையவர்களாயும், மிகுந்தசக்தியுள்ளவர்களாயும், சூரியர்களைப்போன்ற ஒளியுள்ளவர்களாயும், பலவிதமான ஆயுதங்களைத்தரித்தவர்களாயும், அனேகபரிவாரங்களாற்சூழப்பட்டவர்களாயுமிருப்பர்.

இந்திரதிக்கில் கபாலீசர், அசர், புத்தர், வச்சிரதேகர், பிரமர்த்தனர், விபூதி, அவ்வியயர், சாத்தா, பிநாகி, திரிதசாதிபர் என்னும் பத்துருத்திரரும் அவனாற்பூசிக்கப்பட்டிருப்பர்.

அக்கினிதிக்கில் அக்கினிருத்திரர், உதாசனர், பிங்களர், காதகர், ஹரர், சுவலனர், தகனர், பப்புரு, பஸ்மாந்தகர், க்ஷயாந்தகர் என்னும் பதின்மரும் அக்கினியினுடையபலத்தையடக்கி அவனாற்பூசிக்கப்பட்டிருப்பர்.

இயமதிக்கில் இயாமியர், மிருத்யு, ஹரர், தாதா, விதாதா, கர்த்தா, சம்யோக்தா, வியோக்தா, தருமர், தருமேசர் என்

னும் பத்துஉருத்திரரும், இயமனுடையபெலத்தையடக்கி அவ னைற்பூசிக்கப்பட்டிருப்பர்.

நிருதிதிக்கில் நிருதி, மாரணர், ஹந்தா, குரூராக்ஷர், பயா நகர், ஊர்த்துவசேபர், விரூபாக்ஷர், தூமிரர், லோகிதர், தம்ஷ்டிரி என்னும் பதின்மரும் நிருதியினுடைய பெலத்தையடக்கி அவனைற்பூசிக்கப்பட்டுத் தலைவராயிருப்பர்.

வருணதிக்கில் பெலர், அதிபெலர், பாசஹஸ்தர், மகாபலர், சுவேதர், ஜயபத்திரர், தீர்க்கபாகு, சலாந்தகர், மேகநாதர், சுநாதர் ஆகிய பத்துருத்திரரும் வருணனுடையபலத்தையடக்கி அவனைற்பூசிக்கப்பட்டிருப்பர்.

வாயுதிக்கில் சீக்கிரர், லகு, வாயுவேகர், சூக்குமர், தீக்ஷணர், க்ஷயாந்தகர், பஞ்சாந்தகர், பஞ்சசிகர், கபர்த்தி, மேகவாகனர் ஆகியபத்துருத்திரரும் வாயுவினுடையபெலத்தையடக்கி அவனைற்பூசிக்கப்பட்டிருப்பர்.

குபேரதிக்கில் நிதீசர், ரூபவான், தன்னியர், சௌமியர், சடாதரர், இலட்சுமீதரர், இரத்தினதரர், ஸ்ரீதரர், பிரசாதர், பிரகாமர் ஆகிய பத்துருத்திரரும் குபேரனுடையபெலத்தை யடக்கி அவனைற் பூசிக்கப்பட்டிருப்பர்.

ஈசானதிக்கில் வித்தியாதிபர், ஈசானர், சர்வஞ்ஞர், ஞானி, வேதபாரகர், சுரேசர், சர்வர், சியேஷ்டர், பூதபாலர், பலிப்பிரியர் என்னும் பத்துருததிரரும் ஈசானநாயகராயிருப்பர்.

அண்டகடாகத்தின்மேலே பிரமதிக்கில் சம்பு, விபு, கணத்தியக்ஷர், திரியக்ஷர், திரிதசேசுவரர், சம்வாஹர், விவாகர், நபஸ், லிப்ஸ், திரிலோசனர், என்னும் பத்துருத்திரரும் பிரமாவினுடைய பெலத்தையடக்கி அவராற் பூசிக்கப்பட்டிருப்பர்.

அண்டகடாகவோட்டுக்குக்கீழ் விட்டுணுதிக்கில் விருஷர், விருஷதரர், அநந்தர், குரோதனர், மாருதாசனர், கிரசனர், உதும் பரீசர், பணீந்திரர், வஜ்ரர், தம்ஷ்டிரி ஆகிய பத்துருத்திரரும் விண்டுவினுடைய பெலத்தையடக்கி அவராற்பூசிக்கப்பட்டிருப்பர்.

வாயுசங்கிதை.

"உருத்திரர்சகத்தினையுறைந்திங்கேவுவார்
தரித்திடுசடைமுடிச்சதவுருத்திரர்
பொருத்தியவண்டங்கண்முழுதும்பொற்புறத்
திருத்தியவாணையேசெலுத்திவைகுவார்."

பிரமாண்டத்துக்குமேல் வீரபத்திரபுவனமும் பத்திரகாளிபுவனமுமிருக்கும். ஆகப்பிருதிவிதத்துவபுவனங்கள் நூற்றெட்டு.

## க. அனந்தாசனம்.

பிருதிவிதத்துவம் மாணிக்கரத்தினம்போன்ற கிழங்காகவும், ஓருருவாகியநாளமுடையதும், பாவகங்களாகிய முட்களையுடையதும், சுத்தமாயாதத்துவத்தைப் பூவாகவுடையதும் அனேகதளங்களோடுகூடியதுமாகத்தியானிக்கவேண்டும்.

அதோவியாபகத்தோடுகூடியவரும், வெண்மைநிறமுடையவருமாகிய அநந்தேசரைத் தெய்வத்தன்மைபொருந்திய சிவாசனமாகிய பிரமசிலையின்நடுவிற்றியானிக்க.

நீலநிறத்தையும் ஆயிரம்பணாமகுடங்களையும், இருதயத்திலே குவிக்கப்பட்டகைகளையும், ஒருமுகத்தையும் நான்குபுயங்களையுமுடையவராகிய அநந்ததேவரைப்பூசிக்க.

முன்சொல்லப்பட்ட தாமரைக்கிழங்கைச் சலதத்துவமானது நனைத்துக்குளிர்வித்து நெகிழச்செய்யும். *அமரேசர்முதலிய எட்டுப்பேரும் இத்தத்துவத்திலுள்ள போகபூமிகளிலிருக்கும் ஆன்மாக்களனுபவிக்கும்பலன்களை நியமிக்கின்றவர்களாய்க் குஹ்யாட்டககணங்களாயிருப்பர்.

மேற்கூறிய எட்டுருத்திரர்களுள் இலகுளீசர் வலத்திருக்கரங்களில் மழுவும் சூலமும், இடத்திருக்கரங்களில் கமண்டலமும் ஞானமுத்திரையுந்தரித்தவராய் ஆன்மாக்களுடைய ஆணவாதிமலங்களைப்போக்கி நற்கதியனுக்கிரகிக்குமாறு ஆசாரியமூர்த்தியாய் வீற்றிருப்பர்.

---

*அமரேசர், பிரபாசர், நைமிசர், புஷ்கரர், ஆஷாடி, டிண்டிமுண்டி, பாரபூதி, இலகுளீசுரர் அ.

காஞ்சிப்புராணம்.

"அடுத்தங்குடனும்பரம்பொருளையன்றேவிரவவொட்டாமற்
றடுத்துமுக்கூற்றுயிருணர்வைத்தகையுமவிச்சைமுழுதிரிய
மடுத்தகருணைத்திருநோக்கின்மாணுக்கருக்குப்பொருளுரைப்ப
எடுத்தகரத்தான்வீற்றிருக்குமிலகுளீசன்றிருவுருவம்."

அக்கினிதத்துவமானது உஷ்ணத்தையுண்டாக்கி நீரை யிழுத்து ஒன்றுபடுத்தும். *அரிச்சந்திரர் முதலிய குஹ்யாட்டகணர்கள் புவனாதிபர்களாயிருந்து அங்கேயுள்ள ஆன்மாக்களுக்குப் போகநியமனஞ்செய்வார்கள்.

வாயுதத்துவமானது இயக்குவித்துக்கூட்டும். ‡கெயர் முதலிய புவனாதிபர்எண்மரும் வாயுதத்துவத்திலிருப்பர்.

ஆகாசதத்துவமானது இடங்கொடுத்து வெளியாய்நிற்கும். †வஸ்திராபதர்முதலிய பவித்திராட்டகணர்கள் அப்புவனங்களிலுள்ள ஆன்மாக்களுக்குப் போகநியமனஞ்செய்வர்.

தாமதகுணத்தை மிகுதியாகவுடைய பூதாதி அகங்காரத்தினின்றுந்தோற்றிய கந்தம், இரசம், ரூபம், பரிசம், சத்தம் ஆகிய தன்மாத்திரைகளைந்தும் தாமரையின் பவளம்போன்றமுளையாகும்.

இராசதகுணத்தைப்பொருந்திய வைகாரியகங்காரத்திலே தோற்றிய வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களைந்தும், சாத்துவிககுணத்தைப்பொருந்திய தைசதவகங்காரத்திற்றோற்றிய சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிஹ்வை, ஆக்கிராணமாகிய ஞானேந்திரியமைந்தும், ஆகப்பத்துத்தத்துவங்களும் ஒன்பதுதுளைகள். இவைகளுக்குக்கரணமென்றுபெயர்.

ஒன்பதுதுளைகள்வழியாக இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திரூபமாகிய சுழுமுனை, பிங்கலை, இடை என்னும் மூன்று

---

*அரிச்சந்திரர், சிறீசைலர், ஜல்ப்பேசுவரர், ஆம்ராதகேசுவரர், மத்தியமேசுவரர், மகாகாளர், கேதாரர், பைரவர் -அ.

‡கெயர், குருக்ஷேத்திரர், நாகலர், நகலர், விம்லேசுவரர், அட்டகாசர், மகேந்திரர் பீமேசுவரர்- அ.

† வஸ்திராபதர், உருத்ரகோடி, அவிமுக்தர், மஹாலயர், கோகர்ணர், பத்திரகர்ணர், சுவர்ணாட்சர், தாணு- அ.

நாடிகள் சஞ்சரிக்கும். ஒவ்வொன்றும் மும்மூன்ருகி ஒன்பதுபிரிவுகளாகின்றன.

மனஸ்தத்துவம், அகங்காரதத்துவம், புத்திதத்துவமென்னும்மூன்றும் அகத்துநின்றுதொழிற்படுத்துமாகையால் அந்தக்கரணமென்றுசொல்லப்படும். இவற்றுள் மனஸ்தத்துவம் சங்கற்பிக்கும். அகங்காரதத்துவம் நடுவிலிருந்து பலவிருத்திகளைக்கொடுக்கும், அது எட்டுவகைப்படும். அவை †தைசதவகங்காரம், ‡வைகாரியகங்காரம், § பூதாதியகங்காரம், போகம் புசிக்கைக்கு மாறுபாடான தமம் என்னுமகங்காரம், அதிற்பெரிதானமயக்கமாகிய மகாமோகம், இருள்பொருந்திய தமிஸ்ரமென்னுமகங்காரம், அதிற்றெரியாமையென்னும் அந்ததாமிஸ்ரம் என்பன. இவை ஆன்மாவின்நற்குணத்தைமறைப்பன. தன்மாத்திரையிலும் இந்திரியதத்துவங்களிலும் மனஸ்தத்துவம் அகங்காரதத்துவத்திலுமுள்ள எட்டுப்புவனங்களில் *சகலண்டர்முதலிய தாணுவாட்டககணர்களிருப்பர்.

## உ. சிம்ஹாசனம்.

அநந்ததேவருடைய பெலரூபங்களும், ஒன்றுக்கொன்று பின்புறஞ்சேர்ந்தவைகளும், கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமென்னு நான்குயுகங்களின்ரூபங்களாகிய கால்களையுடையவைகளும், அக்கினிதிக்குமுதல் ஈசானதிக்குவரையுமுள்ள கோணங்களில் தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியமென்னும் பெயர்களையுடையவைகளும், வெண்மை, சிவப்பு, பொன்மை, கறுப்பு என்னும் நிறங்களையுடையவைகளும், பதுமத்தைச்சுமப்பனவுமாகிய சிங்கங்களிருக்கின்றன. கிழக்குமுதலிய நாலுதிசைகளிலும் முறையே, வெண்கறுப்பு, வெண்சிவப்பு, சிவப்புக்கலந்தபொன்னிறம், பொன்மைகலந்தகறுப்பு என்னும்நிறங்களையுடைய அதர்மாதிகளிருக்கின்றன.

---

† தைசதம்-அறிவு. ‡ வைகாரி-தொழில். § பூதாதி-உருவம்.

* பஞ்சதன்மாத்திரைகளில் சகலண்டர், துவிரண்டர், மாகோடர், மண்டலேசுரர்-ச. கன்மேந்திரியத்தில் காலாஞ்சனர்-க. ஞானேந்திரியத்தில் சங்குகர்ணர்-க. மனஸ்தத்துவத்தில் தூலேசுவரர்-க. அகங்காரதத்துவத்தில் தலேசுவரர்-க. ஆக அ.

அல்லது, உடம்புகள் வெண்மைநிறமானவைகளும், மூன்றுகண்களையுடையவைகளும் அசைவற்ற கை, சிரசு, கழுத்து ஆகிய இவைகளையுடையவைகளும், மனிதரூபமுடையவைகளும் புத்தியின்குணங்களாகிய அதன்மம் முதலியவைகளையதிட்டிக்கின்றவைகளுமாகிய சிங்கங்களிருக்கும்.

இராசதமுந் தாமதமுங்குறைந்து சாத்துவிகம் மேலிட்ட தத்துவம் *புத்தியாம், அது எட்டுக்குணங்களையுடையது. அவை தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் என்பன.

## த ரு ம ம்.

தருமமானது இயமம் நியமமென இருவகைப்படும், இயமமென்பது மனதினைநியமித்தல். அது அகிம்சை, சத்தியம், திருட்டின்மை, பிரமசரியம், வைரமின்மையென ஐந்துவகைப்படும்.

ஒருவன் தனக்குத்துன்பஞ்செய்தபோதினுந் தான் அவனைவருத்தாமை அகிம்சை எனப்படும்.

ஓருயிருக்குஞ் சற்றேனும் இதமாகாதசொற்கள்சேராத வாக்கியம் சத்தியமாம்.†

பாவத்தால்வரப்பட்ட பொருளைவிரும்பாமையும், கேட்டவை, கண்டவை, ஆகிய உலகவிடயங்களை அற்பமாக எண்ணுவதும் திருட்டின்மை எனப்படும்.

மனம், வாக்கு, காயம், பார்வையென்னுமிவைகளால் தன்னைப்பிரார்த்திக்கும்பொழுதும், பெண்களை மாதாப்போல் நினைப்பது பிரமசரிய‡மெனப்படும்.

சுவதந்திரனாயிருத்தலும், சினேகிதர்களிடத்துஞ் சத்துருக்களிடத்துஞ் சமமாயிருக்கையும், அனேகதுன்பங்கள்வரினு

---

* புவனங்கள் பைசாசம் முதலியன.

† திருவள்ளுவர் "வாய்மையெனப்படுவதியாதெனின்யாதொன்றுந்
தீமையிலாதசொலல்."

‡ "பிறன்மனைநோக்காதபேராண்மைசான்றோர்க்
கறனென்றோவான்றவொழுக்கு."

ம் மனவுறுதியாயிருத்தலும், வைரமின்மையெனப்படும். இவை சுத்தமானமனதையுடைய யதிகளுக்குச்சொல்லப்பட்டன.

நியமமென்பது சாத்திரங்களிற்கூறப்பட்ட விதிவிலக்குகளை ஆராய்ந்தவற்றின்படி ஒழுகல். அது கோபமின்மை; குருவாக்கியபரிபாலனம், சுத்தம், சந்தோஷம், இங்கிதை என ஐந்து வகைப்படும்.

பிறன் தன்னைவைதபொழுதுந் தானவனைவையாதுசெல்லுதல் கோபமின்மையெனப்படும். தேவர்கள், சிவபத்தர், பிதா மாதா, குருவாகிய இவர்களுடையஆஞ்ஞைப்படிநடத்தலும், நித்தியம், நைமித்தியம், காமியமென்னுங்கருமங்களையும், தானம், உபவாசம், தீர்த்தஸ்நாநம், அத்தியயனமென்னுமிவைகளையும் அன்போடுசெய்வது குருவாக்கியபரிபாலனமெனப்படும்.

மண்ணினாலுஞ் சலத்தினாலும் மந்திரத்தினுடன் சரீரத்தைச்சுத்திசெய்தல் சௌசமெனப்படும்.

இலாபம்வந்தபொழுதும் நட்டம்வந்தபொழுதும் சமமாக நினைத்தல் சந்தோஷமெனப்படும்.

தனக்கு நூறுவகையான குற்றங்களைச் செய்தவர்களுக்கும் இமைப்பொழுதுந் துன்பமியற்றாது நன்மையைச்செய்தல் இங்கிதையெனப்படும்.

ஐந்திரபுவனத்தாருக்குத்தருமகுணஞ் சுபாவமாயிருப்பினும் ஒன்றிலொன்றுகலந்து சந்தேகமறவியாபித்திருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪ இல் | ௪௦ மடங்கு. |
| வைராக்கியகுணம் | ௫௬ ,, | ௩௫ ,, |
| ஞானகுணம் | ௪௮ ,, | ௩௦ ,, |
| தருமகுணம் | ௪௦ ,, | ௨௫ ,, |
| அதருமகுணம் | ௩௨ ,, | ௨௦ ,, |
| அஞ்ஞானகுணம் | ௨௪ ,, | ௧௫ ,, |
| அவைராக்கியகுணம் | ௧௬ ,, | ௧௦ ,, |
| அனைசுவரியகுணம் | ௮ ,, | ௫ ,, |
| ஆகூ | ௨௮௮ ,, | ௧௮௦ ,, |

## 62. முருகக்கடவுள் ஞானகுரு.

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகில முண்
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே

(இ—ள்.) ஆல் உக்கு அணிகலம் வெண் தலை மாலையே - கல்லாலின் நிழலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுக்கு ஆபரணமாவது வெண்மையான கபாலங்களாலாய மாலையே,—அகிலம் உண்ட மாலுக்கு அணிகலம் தண் அம் துழாயே - உலகத்தை உண்ட திருமாலுக்கு ஆபரணமாவது குளிர்ந்த அழகிய துளசிமாலையே,—மயில் ஏறும் ஐயன் காலுக்கு அணிகலம் வானோர் முடியும் கடம்புமே - மயில்வாகனத்தில் ஏறிவரும் முருகக்கடவுளின் திருவடிக்கு ஆபரணமாவன தேவர்களது மகுடங்களும் கடப்பமலர் மாலையுமே,—கையில் வேலுக்கு அணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே - அவர் திருக்கரத்திலுள்ள வேலாயுதத்துக்கு அணிசெய்வன அதனால் அழிந்து அதன்பெருமை விளங்கநின்ற கடலும் சூரனும் கிரௌஞ்சமலையுமே.

குறிப்பு. 1. ஆல் - கல்லாலவிருட்சம். அது திருவருளைக் குறிப்பது.

2. உ - சிவன்.

3. வெண்டலைமாலை - வெண்டலைமாலை முதலியவற்றை அணிதல், எவ்வுயிரையும் சங்காரஞ்செய்யுங் கடவுள் தாம் என்பதை யாவரும் அறிந்து தம்மை அடைந்து பாசங்களினீங்கி முத்தியைப் பெறுதற்பொருட்டுச் சிவபெருமான் அவ்வுயிர்கள்மாட்டு வைத்த திருவருட்செயலைக் குறிப்பது.

4. அகிலமுண்ட மால் - உகாந்தகாலத்திலே உலகம் முழுவதையும் உண்டு தன்வயிற்றிலே அடக்கிக்கொண்டு நித்திரைசெய்தலால் அவரை உலகமுண்டவர் என்பர்.

5. காலுக் கணிகலம் வானோர் முடி - தேவர்கள் வணங்குந் திருப்பாதமெனவே, முருகக்கடவுள் தேவகுரு என்பதும் பெறப்படும். கடம்பு - திருவருளைக் குறிப்பது.

6. வேற்படையானது மல மாயை கன்மங்களை வெற்றிகொள்ளுதலால், அவை வேலுக்கு அணிகலம் எனப்பட்டன. சூரன், மேரு வேலை என்பன முறையே மல மாயை கன்மங்களைக் குறிப்பன. மேரு - கிரௌஞ்சமலையைக் குறிப்பது.

(நா—ம்.) சிவபெருமான் சங்காரகாரணன். திருமால் பிரகிருதி காரியங்களைக் காக்குஞ் சத்தியுடையவர். முருகக்கடவுள் தேவகுருவும் ஞானசத்தி சொரூபருமாவர்.

### வைசேடிகர்.

வைசேடிகர் அகங்கார தத்துவத்தையடைதலே முத்தியென்றுசொல்லுவார்கள்.

### புத்தர்.

புத்தரிலோர்சாரார் ஞானவிருத்தியையே ஆன்மாவென்று சொல்லுகையால், அவர்கள்புத்திதத்துவத்திற் சித்தியையடைவார்கள்.

### குணதத்துவசித்தர்கள்.

சதசத்வாதிகளும், ஆருகதர்களும், அனேகமாகிய ஞானமே ஆன்மாவென்றுசொல்லுகையால், குணதத்துவத்திற் சித்தியையடைவர்கள்.

### பாஞ்சராத்திரிகள்.

பாஞ்சராத்திரமதத்தார் இருபத்துநான்காவதாகிய குணதத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந்தத்துவம் வாசுதேவன். அவனேபரம்பொருளென்றுசொல்லுவார்கள்.

### புருடதத்துவசித்தர்.

வேதாந்திகளும், பரிணாமவாதிகளும், சாங்கியர்களும் புருடனே எல்லாமென்று சொல்லுகையால் அவர்களுக்குப்புருடதத்துவத்தை யடைதலேமோட்சமாம்.

### இராகதத்துவசித்தர்.

பௌராணிகர் இராகதத்துவத்தையடைதலே மோட்சமென்றுசொல்லுவார்கள்.

### காலதத்துவசித்தர்.

காபாலிமதத்தார் காலதத்துவத்தையடைதலே மோட்சமென்றுசொல்லுவார்கள்

### மாயாதத்துவசித்தர்.

பாசுபதர்களும், சௌமியர்களும், மாயாவாதிகளும் மாயாதத்துவத்தையடைதலே மோட்சமென்றுகூறுவார்கள்.

### வித்தியாபதம்.

மகாவிரதர்கள் வித்தியாதத்துவத்தையடைதலே மோட்சமென்றுகூறுவார்கள்.

### புவனசித்தர்.

காருடசமயிகளும், வைரவசமயிகளும், வாமசமயிகளும், பூததந்திரர்களும் நிவிர்த்தியாதிகலைகளினுள்ள புவனங்களையடைதலே மோட்சமென்றுசொல்லுவார்கள்.

### சிவஞானசித்தியார்.

"இம்மையேயிரெட்டாண்டெய்தியெழிலாரு
மேந்திழையார்முத்தியென்றுமிருஞ்சுவர்க்கமுத்தி
அம்மையேயென்றுமுத்தியைந்துகந்த
மறக்கெடுகையென்றுமட்டகுணமுத்தியென்று
மெய்ம்மையேபாடாணம்போல்கைமுத்தியென்றும்
விவேகமுத்தியென்றுந்தன்மெய்வடிவாஞ்சிவத்தைச்
செம்மையேபெறுகைமுத்தியென்றுஞ்செப்புவர்கள்
சிவனடியைச்சேருமுத்திசெப்புவதிங்கியாமே."

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

**பண்—பழந்தக்கராகம்.**

"தடுக்கமருஞ்சமணரொடுதர்க்கசாத்திரத்தவர்சொல்
இடுக்கண்வருமொழிகேளாதீசனையேயேத்துமின்கள்
நடுக்கமிலாவமருலகநண்ணலுமாமண்ணல்கழல்
கொடுக்கிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே."

### திருவாசகம்.

"புத்தன்முதலாயபுல்லறிவிற்பல்சமயந்
தத்தமதங்களிற்றட்டுளுப்புபட்டுநிற்கச்
சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கு
மத்தன்கருணையினாற்றோணோக்கமாடாமோ.

இவர்கள் தாந்தாங்கொண்ட இம்முத்தியே சுத்தநிலையாகிய மோட்சசாதனமெனை நிச்சயிக்கின்றமையாற் சனனமரணப்பற்றறுமற் புண்ணியபாவமென்னுஞ் சக்கரத்திலே காற்றுடிபோலச்சுற்றித்திரிந்து, புண்ணியபாவந்தம்மிலொப்பான காலத்துத் துலையொப்பான சத்திநிபாதம் பிறந்தபின்பு தங்களைச்சார்ந்துள்ளகுணபேதமாகிய பாசங்களைவிட்டுநீங்குவர்; நீங்கவே இருவினையென்னுஞ் சமுத்திரத்தினின்றுங்கரையேறுவர்; ஏறவே மோட்சவீட்டையடைவர்.

## சிவதருமோத்தரம்.

"இருவினையுணர்ந்தபுத்தரவர்முதலிகலும்வாதத்
தெரிசனமனைத்துஞ்சேர்ந்தார்சிவசமயத்துச்சேர்வார்
பொருவிலிபுகன்றவாக்கிற்கருமநன்னெறியும்புக்கே
விரவுவர்ஞானயோகம்விடுவர்மெய்யடைவர்மெய்யே."

## தாயுமானசுவாமிகள்.

"சைவசமயமேசமயஞ்சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறிபுகுதவேண்டாம்முத்திதரும்
தெய்வசபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்செகத்தீரே."

எண்ணிறந்தபுத்தி குணங்களுக்கு அதீதமானவழி அதிமார்க்கஞானம். லௌகிகஞானத்திற்கு அப்பாலாய்ப் பெருமை பொருந்திய சிவஞானமல்லாத அதிமார்க்கஞானமுடையவர்களாகச் சொல்லப்பட்ட பாசுபதர்முதலியோர், அபேதமுத்தியிற் சிவானுக்கிரகத்தால் மோட்சத்தையடைந்து சனனமடையார்கள்.

ஞானமானது காரணவேறுபாட்டால் சாம்சித்திகம், வைநயிகம், பிராகிருதம்* என மூன்றுவிதமாயிருக்கும்.

சாம்சித்திகமாவது முற்பிறவிகளிற் சரியை, கிரியை, யோகம ஆகிய சிவபுண்ணியங்களைச்செய்து, அவற்றாலுண்டாகிய ஞானத்தோடுகூடியிருத்தல்.

வைநயிகமாவது நல்லவர்களுடையபுத்தியாலும், குருமுகத்தாலும், சாத்திரத்தாலும் பிரகாசிக்குங்குணம்.

பிராகிருதமாவது சொப்பனம் முதலானவற்றைப்போலத் தேகமிருக்கும்போதுமாத்திரந்தோன்றி அப்பாற்றோன்றும்மிருக்குங்குணம்.

ஞானம் சத்துவகுணத்தைப்பொருந்திவரும். சௌமியபுவனத்தாருக்கு ஞானஞ்சுபாவமாயிருப்பினும், மற்றைய குணங்களொன்றிலொன்றுகலந்து சந்தேகமறவியாபித்திருக்கும்.

---

*மிருகேந்திரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪ | இல் | ௪௮ | மடங்கு. |
| வைராக்கியகுணம் | ௫௬ | ,, | ௪௨ | ,, |
| ஞானகுணம் | ௪௮ | ,, | ௩௬ | ,, |
| தருமகுணம் | ௪௰ | ,, | ௩௰ | ,, |
| அதன்மகுணம் | ௩௨ | ,, | ௨௪ | ,, |
| அஞ்ஞானகுணம் | ௨௪ | ,, | ௧௮ | ,, |
| அவைராக்கியகுணம் | ௧௬ | ,, | ௧௨ | ,, |
| அனைசுவரியகுணம் | ௮ | ,, | ௬ | ,, |
| | ௨௮௮ | ,, | ௨௧௬ | ,, |

## வைராக்கியம்.

வைராக்கியம் ராசதகுணத்தைப்பொருந்திவரும். நோயினால் வருந்தியவனுக்குத் தனதுசரீரத்தில் வெறுப்புண்டாகும். இது நோயினாலுண்டாகும் வைராக்கியம்.

நல்லவன் எல்லாக்காரியங்களிலும் ஆசையற்றிருக்கையால் உலககருமங்களைநிந்தைசெய்வன். இதுசந்தோஷத்தினாலுண்டாகும்வைராக்கியம்.

ஆதிஆன்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகமென்னுமிவற்றால் வருகிறதுக்கங்களினால் வைராக்கியம்நியமமாய்வரும். இதுதுக்கத்தால்வரும்வைராக்கியம்.

பொருளைத்தேடும்பொழுதும், காக்கும்பொழுதும், கள்வர்கொண்டுபோகும்பொழுதும் வருகிறதுக்கத்தை நினைக்கிறவனுக்கு வெறுப்புவிரைவாகவரும். இது திரவியத்தாலுண்டாகும் வைராக்கியம்.

சிநேகிதனிடத்திலிருந்துபிரிந்தவன் துக்கத்தினால்வருந்தியவனுய்த் துக்கத்துக்குச் சிநேகிதம் காரணமென்றெண்ணி வைராக்கியமுற்றிருக்கிறான். இது சிநேகிதத்தாலுண்டாகும் வைராக்கியம்.

காமுகன் ஸ்திரீயினிடத்திற்பிரிந்து, வைராக்கியகாரணத்தைப்பார்த்து வெறுப்படைந்து, மோட்சத்திற்குக்காரணமாகிய வைராக்கியத்தை விரைவாக அடைகிறான். இதுகாமுகன்வைராக்கியம்.

தேகமானது அன்னம் பானீயம் உண்டானவளவிற்றரிக்கப்பட்டதாயிருக்கும். இல்லாவிடிற்றரிக்கப்பெறுது இளைப்படையும், இக்காரணத்தினல் இத்தேகத்தைஎளிதாய்வளர்த்தலரிதென்னும் வைராக்கியமுண்டாகின்றது. இது அன்னுதிகளால்வரும்வைராக்கியம்.

தானம்வாங்கல் முதலியவைகளினின்றும் வைராக்கியத்தையடைகிறுர்கள். இது தானுதிகளால்வரும்வைராக்கியம்.

ஒருவன் பொய்முதலியபாதகங்களினின்றும்நீங்கிப் புண்ணியத்தின்பெருமையால் வைராக்கியத்தையடைகிறுன். இதுபுண்ணியத்தின்பெருமையால்வரும்வைராக்கியம்.

இவ்வைராக்கியங்களையுடையவர்கள் பூதமுதல் அவ்வியத்தமிறுதியாகவுள்ள தத்துவங்களை அடைவார்கள்.

பிரசாபத்தியபுவனத்தாருக்கு வைராக்கியகுணஞ்சுபாவமாயிருப்பினும் ஒன்றிலொன்றுகலந்து சந்தேகமறவியாபித்திருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௯௪ | இல் | ௫௬ |
| வைராக்கியகுணம் | ௫௬ | ,, | ௪௬ |
| ஞானகுணம் | ௪௮ | ,, | ௪௨ |
| தருமகுணம் | ௪0 | ,, | ௩௫ |
| அதர்மகுணம் | ௩௨ | ,, | ௨௮ |
| அஞ்ஞானகுணம் | ௨௪ | ,, | ௨௧ |
| அவைராக்கியகுணம் | ௧௬ | ,, | ௧௪ |
| அனைசுவரியகுணம் | ௮ | ,, | ௭ |
| | ௨௮௮ | ,, | ௨௫௨ |

## ஐசுவரியம்.

ஐசுவரியம் இராசதகுணத்தைப்பொருந்திவரும். இதனுலுண்டாகுஞ்சித்திகள் எட்டுவகைப்படும். அவை அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்என்பன.

அணுவினும்மிகவும்நுண்ணிய அணுரூபமாகச்சென்றிருத்தல் அணிமா எனப்படும்.

பெரிதினும்பெரிதாயிருத்தல் மகிமாஎனப்படும்,

மேருபாரம்போலிருக்கும்பொருள் எடுத்தற்குமிகவும் இலகுவாயிருத்தல் இலகிமாஎனப்படும்.

பஞ்சுபோலிருக்கும்பொருளைக் கையாற்றூக்கின் மகாமேருமலையைப்போல எடுத்தற்குச்கனமாயிருத்தல் கரிமாஎனப்படும்.

பாதாளத்திலிருந்தோன் பிரமலோகத்திற்செல்லுதலும், அங்கிருந்தோன் பாதாளத்திற்செல்லுதலும் என்றிவ்வாறுவருவது பிராப்தியாம்.

பரகாயத்திற் பிரவேசித்தலும், விண்ணுலகிற்சஞ்சரித்தலும், விரும்பியபோக்கியப்பொருளை எய்தப்பெறுதலும், சூரியன்போலத் தன்சரீரவிளக்கத்தாற் கண்களுக்குளப்பொருளையுங் காணச்செய்தலுமா பிராகாமியமாம்.

உருத்திரமூர்த்திபோல முத்தொழிலையுஞ்செய்து, சூரியன்முதலியகிரகங்களும், மற்றவைகளுந் தன்பணிகேட்டுநடக்கவிளங்குதல் ஈசத்துவமாம்.

அவுணர், பறவை, மிருகம், பூதம், மனிதர், திக்குப்பாலகர் முதலாயினோரைத் தன்வசமாக்கொண்டு ஆளுகை வசித்துவமாம்.

இவை அட்டாங்கயோகத்தை யியற்றினோர்க்கேசித்திக்கும். அவர்கள் இவைகளைவிரும்பாராயினும், அவர்களது தேகச்சாயல்போல இவைகளடைந்து அவர்களதுபெருமைகளைவிளக்கும். அட்டமாசித்தியைவெறுத்த மகான்களுக்குச் சிவபெருமான்கிருபையுடையவராய் அவர்கள்விரும்பியவரங்களையும், எக்காலமுந் தன்னிடத்தினின்றுநீங்காதமுத்தியையுங்கொடுப்பர்.

சிவதருமோத்தரம்.

"திடம்படுசித்தத்தாலேயவற்றினைத்தீண்டாதார்க்கு
நடம்பயின்றுதன்வேண்டும்வரத்தினைநல்கியென்று
முடன்பிரியாதபேறுமுதவுவன்கருணையுற்றே."

## தேவிகாலோத்தரம்.

"அட்டமாசித்திமுதலனைத்துள்ளபேறுகளுங்
கட்டமாங்கதிகடரும்பாகதிகாணக்கொடா
மட்டுலோமாலெய்யாய்வியாபகமாயறிவாகிக்
கிட்டலாகாமுத்திமற்றிவற்றாற்கிடையாதே."

பிரமபுவனத்தாருக்கு ஐசுவரியகுணஞ் சுபாவமாயிருப்பினும், ஒன்றிலொன்றுகலந்து சந்தேகமறவியாபித்திருக்கும்.

| | |
|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪. |
| வைராக்கியகுணம் | ௫௬. |
| ஞானகுணம் | ௪௮. |
| தருமகுணம் | ௪௦. |
| அதர்மகுணம் | ௩௨. |
| அஞ்ஞானகுணம் | ௨௪. |
| அவைராக்கியகுணம் | ௧௬. |
| அனைசுவரியகுணம் | ௮. |
| ஆக | ௨௮௮. |

ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், என்னும்மூன்றுந் தருமத்தைஆசரிக்கும்; ஆதலால் உலகத்திலேதருமமாகியபுண்ணியமே சத்திநிபாதம்வரையிலும் நீங்காமல்அதிட்டித்துநிற்கும்.

## அதருமம்.

ஐசுவரியமடைந்தவன் மோகத்தால்விடயங்களிற் பிரியமுடையவனாய், அனைசுவரியவான்களுடைய பதவிகளிற்சஞ்சரிப்பான். பின்பு போகநித்திராமயக்கத்தாற் பரவசனாய் அதன்மத்தோடுகூடுவான். இவைகளுக்குப் பத்துவிருத்திகளுள்ளன. அவை இம்சை, திருடல், பொய்சொல்லல், குருநிந்தனை, பாவிசளுக்குதவிபுரிதல், கோபியாதல். நித்தியகருமமுதலியவைகளை விடுதல், அசுத்தனாதல், சந்தோஷமின்மைஎன்பன.

*கந்தருவபுவனத்தாருக்கு அதர்மகுணஞ் சுபாவமாயிருப்பினும், மற்றையகுணங்களோடு கலந்துவியாபிக்கும்.

* பிரமாவினது அங்கங்களினின்று மொருவகைக்கணங்கள் தோற்றினர். அவர்கள் யாழ்பாடிக்கொண்டிருந்தமையாற் கந்தருவரெனப்பெயர்பெற்றனர்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪ | இல் | ௩௨ |
| வைராக்கியகுணம் | ௫௬ | ,, | ௨௮ |
| ஞானகுணம் | ௪௮ | ,, | ௨௪ |
| தருமகுணம் | ௪0 | ,, | ௨0 |
| அதர்மகுணம் | ௩௨ | ,, | ௧௬ |
| அஞ்ஞானகுணம் | ௨௪ | ,, | ௧௨ |
| அவைராக்கியகுணம் | ௧௬ | ,, | ௮ |
| அனைசுவரியகுணம் | ௮ | ,, | ௪ |
| ஆக | ௨௮௮ | ,, | ௧௪௪. |

## அஞ்ஞானம்.

அதர்மியாகிய அந்தஆன்மாவை மகேசுவரர்மூடனென்றுநினைத்து, அனுக்கிரகஞ்செய்யாது அஞ்ஞானசந்ததியிற்கூட்டுவர்.

அஞ்ஞானபேதங்கள் தமம், மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், எனஐந்துவகைப்படும். இவை தாமதகுணத்தால்வருவன.

இயக்கபுவனத்தாருக்கு அஞ்ஞானகுணஞ்சுபாவமாயிருப்பினும் மற்றையகுணங்களுடன்கலந்திருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪ | இல் | ௨௪ |
| வைராக்கியகுணம் | ௫௬ | ,, | ௨௧ |
| ஞானகுணம் | ௪௮ | ,, | ௧௮ |
| தர்மகுணம் | ௪0 | ,, | ௧௫ |
| அதர்மகுணம் | ௩௨ | ,, | ௧௨ |
| அஞ்ஞானகுணம் | ௨௪ | ,, | ௯ |
| அவைராக்கியகுணம் | ௧௬ | ,, | ௬ |
| அனைசுவரியகுணம் | ௮ | ,, | ௩ |
| | ௨௮௮ | ,, | ௧0௮. |

## அவைராக்கியம்.

வைராக்கியத்தினுடைய விபரீதத்தன்மையாய் அவைராக்கியமிருக்கும்பொழுது மனிதருக்குஎல்லாப்பொருளினும் விருப்பமுதலானவையுண்டாகும்.

இராக்கதபுவனத்தாருக்கு அவைராக்கியகுணஞ் சொந்தமாயிருந்தாலும் மற்றையகுணங்களோடுஞ் சம்பந்தப்பட்டிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | சுச | இல் | கசு |
| வைராக்கியகுணம் | ருசு | ,, | கச |
| ஞானகுணம் | சஅ | ,, | கஉ |
| தருமகுணம் | ச௦ | ,, | க௦ |
| அதருமகுணம் | ௩உ | ,, | அ |
| அஞ்ஞானகுணம் | உச | ,, | சு |
| அவைராக்கியகுணம் | கசு | ,, | ச |
| அனைசுவரியகுணம் | அ | ,, | உ |
| | உஅஅ | ,, | எஉ. |

## அனைசுவரியம்.

ஐசுவரியத்தின்விபரீதத்தினாற் றீவினையடைந்தவர், அணிமாமுதலியசித்திகள் கைகூடப்பெறுமையால், யோகமார்க்கத்தினின்றும் விலகித்துன்பத்தையுண்டாக்குகின்ற அனைசுவரியத்தினாலுண்டாகிய எண்வகைச்சித்திகளையடைவர்.

அனைசுவரியகுணசித்திகளாவன: ஆகருடணம், அதிரிசியம், அஞ்சனம், வசியம், இரசவாதம், வயத்தம்பம், தம்பனம், மோகனம், என்னுமெட்டுமாம்.

தூரத்திலிருக்கும்பொருளைச் சமீபத்தில்வருவிப்பது ஆகருடணம்.

காணப்படும்பொருளைக் காணாமற்செய்விப்பது அதிரிசியம்.

காணப்படாமலிருக்கும் பொருள்களை நேரேகாணும்படி காட்டுவிப்பது அஞ்சனம்.

பகைவர்களையுஞ் சினேகிதராக்கிக்கொள்வது வசியம்.

செம்புபித்தளைமுதலியதாழ்ந்தலோகங்களைப் பொன்முதலியலோகங்களாகச்செய்வது இரசவாதம்.

பாலியர்களைவிருத்தர்களாகவும், விருத்தர்களைப்பாலியர்களாகவும்செய்வது வயத்தம்பனம்.

கட்டுப்படாதனவற்றையும், கட்டுக்குள்ளகப்படுத்துவது தம்பனம்.

தன்னையாவரும் மோகிக்கச்செய்வது மோகனம்.

பிசாசபுவனத்தாருக்கு அனைசுவரியகுணஞ் சுபாவமாயிருப்பினும் மற்றைக்குணங்களோடுகலந்திருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ஐசுவரியகுணம் | ௬௪ | இல் | ௮ |
| வைராக்கியகுணம் | ௫௬ | " | ௭ |
| ஞானகுணம் | ௪௮ | " | ௬ |
| தர்மகுணம் | ௪௰ | " | ௫ |
| அதர்மகுணம் | ௩௨ | ,, | ௪ |
| அஞ்ஞானகுணம் | ௨௪ | " | ௩ |
| அவைராக்கியகுணம் | ௧௬ | " | ௨ |
| அனைசுவரியகுணம் | ௮ | " | ௧ |
| ஆக | ௨௮௮ | " | ௩௬. |

புத்திதத்துவத்தின் பாவாட்டகங்களாகிய இந்தமகாசக்கரத்தில் மேற்கூறியதன்மையையுடைய ஆன்மாக்கள், முடிவையறியாமற் பிறந்திறந்துவருந்துவார்கள். அதன்மமாகியபாவமேறும்வழிஎங்ஙனமெனில்; ஐவகைஞானத்தையும் நிந்தித்தல், சிவமூர்த்திபேதங்களான தெய்வங்களை நிந்தித்தல், கொல்லாமைமுதலிய தருமங்களைநிந்தித்தல், கேட்டஅர்த்தங்களை இகழுதல், அழிவில்லாதமோட்சத்தை இல்லையென்றல் முதலிய அதன்மங்களைச்செய்தவர்கள் அஞ்ஞானத்துடன்கூடி நரகடைந்து, அளவில்லாத யாதனாசரீரத்தோடுகூடி மிகுந்ததுக்கப்பற்றே அவைராக்கியமாகவும் சுகமின்மையே அனைசுவரியமாகவும் அனுபவிப்பர்.

புத்தியட்டக புவனவாசிகளாகிய பிசாசர்முதலியோரது ஐசுவரியகுணங்கள்.

குறளாதல், உடல்தடித்தல், இளமையடைதல், காளைப்பருவமெய்தல், மூப்படைதல், பலபலகுலங்களிற்சேர்தல், வாசனையுண்டாக்கல், பிருதுவிமுதலியநான்குபூதத்தினுலுடம்புபெபொருந்தல், என்னுமெட்டும் பிசாசருடையஐசுவரியங்கள்.

---

முன்னோர்கற்பகாலத்திற் பிரமாமூவுலகங்களையுஞ்சிருட்டித்தகப்பிரமங்கொண்டு சிவனைமறந்து, சிருட்டியைச்செய்ய அதுநிறைவேறாமையின்அவரது அருளைப்பெறவிரும்பித் தவஞ்செய்தார். சிவன்அதற்குவாராததுகண்டு அழுதார். அப்பொழுதுகண்ணீரினின்று பிசாசரென்னுங்கணத்தவர் தோற்றினர்.

சமுத்திரநீரில்வசித்தல், அந்நீர் சரீரத்திற்படாதிருத்தல், சமுத்திரநீரைப்பருகல், நினைத்த இடங்களில் நீரையுண்டாக்கல், நீரைத்திரட்டிக் கையாற்றாங்கல், சுவையில்பொருள்களைச் சுவையுடையனவாக்கல், அப்புமுதலியமுப்பூதங்களாலுடம்பெடுத்தல், மன்மதனைப்போல்விளங்கல், என்னுமெட்டுக்குணத்தினோடு முற்கூறியஎட்டுக்குணமுஞ்சேர்ந்து பதினாறும் இராக்கதருடைய ஐசுவரியங்கள்.

தம்மெய்யிலக்கினியுண்டாக்கல், அதற்கஞ்சாமை, அத்தீயாலுலகைச்சுடுதல், நீரில் அக்கினியையோம்பல், அகங்கையிற்றாங்கல், அக்கினியினலெரிந்தவைகளை முன்போற்காட்டல், நினைத்தபடியாவற்றையும்பாகம்பண்ணல், அக்கினி வாயுபூதங்களாலுடம்பெடுத்தல் என்னுமெட்டுக்குணத்தினோடு முற்கூறியபதினாறு குணமுஞ்சேர்ந்து, இருபத்துநான்குகுணங்கள் இயக்கருடைய ஐசுவரியங்கள்.

மனோவேகமாகச்செல்லல், எல்லாவுடம்பினுஞ்சார்தல், இருவரையகங்கையிற்றாங்கல், மேருமலைபோலப் பாரமெய்தல், பஞ்சினும்நொய்தாதல், காற்றையகங்கையிலடக்கல், உலகங்களையொருவிரலாலலைத்தல், வாயுபூதத்தாலுடம்பெடுத்தல், என்னுமெட்டுக்குணத்தோடு முற்கூறிய இருபத்துநான்குகுணங்களுஞ்சேர்ந்து முப்பத்திரண்டுகுணங்கள் காந்தருவருடையஐசுவரியங்கள்.

இந்திரியங்களாலறியப்படாதிருத்தல், தம்முடையசாயையின்மை, அரூபியாயிருத்தல், புத்திவழிவிடயங்களுகர்தல், வெளியிடைச்சேறல், அந்தரத்தைக்கடத்தல், அதிற்சேர்தல், அதை உண்டையாயமைத்தல், என்னுமெட்டும் முற்கூறியமுப்பத்திரண்டுஞ்சேர்ந்து நாற்பதும் இந்திரபுவனத்தாரது ஐசுவரியங்கள்.

நினைத்தபடியாவற்றையும் நன்கறிதல், தன்னிச்சைப்படி சேறல், காணப்படும்பொருளைக்காணுதுமறைத்தல், மறைந்திருக்கும்பொருளையறிதல், வினைக்கீடாகவுடம்புகளையுண்டாக்கல், எல்லாவற்றையுந் தன்னிடத்திற்பொருந்தச்செய்தல், மனதில்மகிழ்ச்சியையுண்டாக்கல், சமுசாரத்தைவாய்ப்பக்காட்டல், என்னுமெட்டும் முற்கூறியநாற்பதுஞ்சேர்ந்து நாற்பத்தெட்டும் சௌமியருடையஐசுவரியங்கள்.

வாளால்வெட்டல், கயிற்றாற்கட்டல், அடித்தல், விடல், உலகங்களைவசப்படுத்தல், சமுசாரத்திற்புகுத்தல், அருள்செய்தல், நெடுநாள்வாழ்ந்திருத்தல், என்னுமெட்டும் முற்கூறியநாற்பத்தெட்டுஞ்சேர்ந்து ஐம்பத்தாறும் பத்துப்பிரமருடையஐசுவரியங்கள்.

வினைக்கேற்பப்படைத்தல், காத்தல், அழித்தல், அதிகாரத்தைப்பொருந்தல், செப்பமாய்ப்படைத்தல், மனதை நினைத்த பொருளிற்சேர்த்தல், உலகத்தையுண்டாக்கல், இன்பதுன்பத்தைச்செய்தல், என்னுமெட்டும் முற்கூறியஐம்பத்தாறுஞ்சேர்ந்து அறுபத்துநான்கும் பிரமாவினதுஐசுவரியங்கள்.

இவ்விதமாகியபதகுணத்தின் ஐசுவரியங்களைவிரும்பாது வெறுத்துச் செப்பமாகியமுத்தியையடையவிரும்பிச் சரியை கிரியைமுதலியவற்றின்வழி யொழுகல்வேண்டும்.

## ௩. யோகாசனம்

### குணதத்துவம்.

ஆலம்வித்தினின்று மங்குரந்தோன்றியதுபோல, அவ்வியத்தத்திலே சாத்துவிதம், இராசதம், தாமதமெனமூன்றாகத் தோற்றிச்சமமாய் அசைவறநின்ற அவதரம்குணதத்துவமாம்.

அவற்றுள் சாத்துவகுணம் பதினைந்துவிருத்திகளையுடையது. அவை சாதிநெறிநிற்றல், பெரியோரைப்பேணல், கற்றறிவுடைமை, இனியவைகூறல், தற்புகழாமை, உள்ளதேவருமெனமகிழ்ந்திருத்தல், நடுவுநிலைமை, சுத்தநியமம், பொறை, கடைப்பிடி, பிறர்க்கிதஞ்செய்தல், இந்திரலோகாதிகளில்வாஞ்சை, பிறர்தன்னைப்புகழுங்காற்றான்தனையிகழ்தல், அடக்கமுடைமை, தன்பாலிரந்தார்க்கிரங்குதல் என்பன.

இராசதகுணம் ஒன்பதுவிருத்திகளையுடையது. அவை சௌரியம், குரூரமுடைமை, ஊக்கமுடைமை, மானமுடைமை வைராக்கியம், பலம், வன்கண்மை, கோபியாதல், இடம்பத்தனமானகூடாவொழுக்கம் என்பன.

தாமதகுணம் ஒன்பதுவிருத்திகளையுடையது அவை அழுத்தகாதவற்றிற்கழுதல், கல்வியில்லாராதல், இகழ்ந்தாரைச்சேர்

ந்துவாழ்தல், கோளுரை, மமதை, பேருறக்கம், நன்மைசெய்தற் கிளைத்தல், குலம் குணம் ஈகை இரக்கங்களாலே தனக்குஒருவரு ம்நிகரில்லையென்கை, திருடுதல் என்பன.

ஆகவிருத்திகள் முப்பத்துமூன்றாகும். குணதத்துவம் மூலப்பிரகிருதியுள் அடங்கும்.

## மூலப்பிரகிருதி.

குணதத்துவத்தின்காரணமாகிய மூலப்பிரகிருதி முக்குணவடிவாயிருக்கும். அதில் எட்டுப்புவனங்கள்உள்ளன. அவை அகிர்தம், கிர்தம், பைரவம், பிராமம், வைணவம், கௌமாரம், ஔமம், சிறீகண்டம் என்பன. இவை யோகீசுவாருடையதானங்கள்.

## பிராம்மபுவனம்.

இவற்றுள் பிராம்மபுவனத்தின் நடுவணுகப்பொருந்திய பொன்மயமானஆலயத்தில் அசுத்ததத்துவவாசிகளாகிய ஆன்மாக்களைச்சிருட்டித்துக்கொண்டு பிரமா இருப்பர்.

## வைணவபுவ்னம்.

பிரமபுவனத்துக்குமேலிந்திரநீலம்போன்றதும் போகங்களையுமலங்காரத்தையுமுடையதுமாகிய வைஷ்ணவபுவனத்தின் நடுவணுகப்பொருந்தியஆலயத்தில் விட்டுணுவானவர் ஆன்மாக்களைப்பரிபாலனஞ்செய்துகொண்டு, தம்மைப்போன்ற சாரூப்பியத்தைப்பெற்ற அநேகஅடியார்களாலே சூழப்பட்டிருப்பர்.

பிருதிவிமுதலியவைந்தும் மனம், அகங்காரம், புத்தி, பிரகிருதியும் ஆகியஒன்பதுதத்துவங்களும் விட்டுணுவினுடைய இருதயத்துள்ளே செறிந்துநின்றறிவைவிளக்குமெனச் சிவதருமோத்தரங்கூறுகின்றது.

அதற்குமேலே, முத்தின்பிரபைபோன்ற கௌமாரபுவனத்திற் குமாரக்கடவுள் எழுந்தருளியிருப்பர். அவரைத்தியானித்தவர்கள் அப்புவனத்தையடைந்து, விரும்பியபடியுளவிறந்தபோகங்களை யனுபவித்திருப்பர்.

அதற்குமேல் ஔமபுவனத்திலிருக்கும் உமாதேவியாரை உதயகிரியிலுதிக்கும் கோடிசூரியப்பிரகாசம்போலத் தியானஞ் செய்தவர்கள் அப்புவனத்தில்வாழ்வார்கள்.

## ஸ்ரீகண்டபுவனம்.

உமாபுவனத்துக்கு மேற்கோடி ஆதித்தியப்பிரகாசம்போன்றதும், அளவற்றவளங்களையுடையதும், உவமிக்கவொண்ணாததும், உருத்திரர் விட்டுணுமுதலானோர்களாற்சேவிக்கப்படுகின்றதுமாகியபிரகிருதிச்சிவலோகத்திற் சிறீகண்டபரமேசுரரிருப்பர். அனந்தேசுவரரால் அதிட்டிக்கப்பட்ட இவ்வுருத்திரர், அவ்வியத்தத்திற்குக்கீழ்ப் பிரமாவையதிட்டித்துப்படைத்தலையும்,விட்டுணுவையதிட்டித்துக் காத்தலையும், காலாக்கினிருத்திரரையதிட்டித்துந் தாமாக்வும் சங்காரகிருத்தியத்தையும் செய்வர்.

## திருநாவுக்கரசுநாயனார்.

பண்—காந்தாரம்.

"பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானும்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யும்
ஐயஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே."

கிழக்குமுதலிய நான்குதிக்குகளிலும, அவ்வியத்தம், நியதி, காலம், கலை என்னுந்தத்துவங்களிருக்கும். மேன் மேகலையின் கீழ்ப்பாகத்திற் செந்நிறம்பொருந்திய கீழிதழ்அசுத்தமாயாதத்துவம்வரையுமிருக்கும். அதற்குமேல் வெள்ளைநிறம்பொருந்தியமேலிதழ் சுத்தவித்தியாதத்துவத்தின் கீழ்ப்பாகம்வரையுமிருக்கும். வித்தியாகலை யோகாசனத்தையதிட்டித்து நிற்கும். யோகாசனம் ஆன்மாக்களுக்கு அறிவைக்கொடுக்குமிடமாம்.

நாதரூபமாகியசிவதத்துவம் அசுத்தமாயையிலே நின்று ஆன்மதத்துவம் இருபத்துநாலுக்கும் உபாதானமாகியபிரகிருதிமாயையையுண்டாக்கியும், சத்திதத்துவத்தையதிட்டித்துக் காலம், நியதி, கலை என்னுந்தத்துவங்களைத்தோற்றுவித்தும், சுத்தவித்தை வித்தையைத்தோற்றுவித்தும், ஈசுவரம் அராகத்தைத் தோற்றுவித்தும், இங்ஙனந்தோற்றுவிக்கப்பட்ட காலம், நியதி, கலை, வித்தை, அராகமென்னுமைந்துதத்துவங்களுங்கூடிய சங்க

த்தினுண்டான புருடதத்துவத்தைச் சாதாக்கியதத்துவங்காரிய ப்படுத்தியும்வரும். சிவபெருமானது திருவருளாகிய இச்சாசத்தி ஈசுவரதத்துவத்தைஎழுப்ப ஈசுவரதத்துவம் அராகதத்துவத்தை யெழுப்ப அராகதத்துவம் பெத்தான்மாக்களுக்கு இச்சையையெ ழுப்பும். முத்தான்மாக்களுக்குண்டாக்காது.

கிரியாசத்தி சத்திதத்துவத்தையெழுப்ப, சத்திதத்துவம் கலாதத்துவத்தையெழுப்ப, கலை ஆணவத்தைச்சிறிதேநீக்கி, அந் தக்கலைவடிவாக ஆன்மாவுக்குச் சிறிதே அறிவையுண்டாக்கும். க லாஎன்பதற்கு நீக்கலும் நியமித்தலும் அர்த்தமாகையால் அந்தக் கலையானது கன்மவிருளைநீக்கி, நியதிரூபமான போகநியமனத்தை ச்செய்யும்; எங்கும்மூடிக்கொண்டிருக்குமந்தகாரத்திற் றீபமான து அந்த இருளை யொருபக்கத்திலொதுக்கி விஷயத்தைக்காட்டுவ துபோல எங்கும்மறைத்துக்கொண்டிருக்கும் மலத்தையொருப க்கத்திற்றள்ளி ஞானத்தைப்பிரகாசிப்பிக்கும்.

ஞானசத்தி சுத்தவித்தையையெழுப்பச்சுத்தவித்தைவித் தியாதத்துவத்தையெழுப்ப, வித்தை ஆன்மாக்களுக்கறிவையுண் டாக்கும்.

கிரியாசத்திசத்திதத்துவத்தைக்கொண்டு நியதியையெழு ப்ப, நியதி பொருளைநிச்சயிக்கும். கிரியாசத்திசத்திதத்துவத்தை க்கொண்டு காலத்தையெழுப்ப, காலம் ஆன்மாவுக்குமுக்காலங்க ளிலுமுள்ளபுசிப்பைக்கூட்டும்.

புருடதத்துவத்திலுள்ள புவனங்களில், வாமர், பீமர், உக்கிரர், பவர், ஈசானர், ஏக்வீரர், என்னுமறுவரும் அதிபரா யிருப்பர்.

அராகதத்துவத்திலுள்ள புவனங்களில் பிரசண்டர், உமா பதி, அஜர், அனந்தர், ஏகசிவர் என்னுமைவருமதிபராயிருப்பர்.

வித்தியாதத்துவத்தில் உள்ளபுவனங்களில், குரோதர், சண்டர், என்னுமிருவரும் அதிபராயிருப்பர்.

கலாதத்துவத்திலுள்ளபுவனங்களில் தியுதி, சம்வர்த்தர் என்னுமிருவரும் அதிபராயிருப்பர்.

நியதிதத்துவத்திலுள்ள புவனங்களில் சூரர், பஞ்சாந்த கர், என்னுமிருவரும் அதிபராயிருப்பர்.

காலதத்துவத்திலுள்ளபுவனங்களில் ஏகவீரர், சிகேதர், என்னுமிருவரும் அதிபராயிருப்பர்.

ஆ புவனங்கள்- ௧௧.

சலதத்துவமுதல் இருபத்தொன்பதுதத்துவங்கள் இந்திர நீலம்போன்ற நாளவடிவாகும். இத்தத்துவங்களிலுள்ள எழுபத்தைந்து புவனங்கள் நாளத்தினுடையமுட்களாகும். புத்திதத்துவத்தினுடையகாரியங்களும், குணதத்துவத்தினுடையவிருத்திகளும் நாளத்தினுள்ளாகப்பொருந்தியநூலாகும. அசுத்தமாயாதத்துவம் புறவிதழாகும். மாயையிலுள்ள எட்டுப்புவனங்களுக்கும் மகாத்யுதி, வாமதேவர், பவர், உத்பவர் ஏகபிங்கலர், ஏகேக்ஷணர், ஈசானர், அங்குட்டமாத்திரர், என்பவர் அதிபராயிருப்பர்.

இதுவரையும் பதுமத்தின் கீழ்ப்பாகஞ்சொல்லப்பட்டது. இதற்குமேலுள்ள சுத்தவித்தியாதத்துவமுதற்சிவதத்துவம்வரையிலுள்ள, ஐந்துதத்துவங்களும் பதுமத்தின்மேற்பாகமாகும்.

## ௪. பதுமாசனம்.

### சுத்தவித்தியாதத்துவம்.

கிரியாசத்திகுறைந்து ஞானசத்தி அதிகமாக அதிட்டித்தபோது சுத்தவித்தியாதத்துவந்தோன்றும். இதில் உருத்திரமூர்த்தி அதிட்டித்திருப்பார். கல்வபத்திரத்தில் அட்டவித்தியேசுவரருடைய வடிவங்களாகிய தளங்களையுடைய சுத்தவித்தை இருக்கும்.

மலபரிபாகத்தின் மிகுதியாலே சிவனுடைய அனுக்கிரகத்தையடைந்தவர்களும், சுத்தமாயாகிருத்தியங்களுக்கதிகாரிகளும், ஈசுவரதத்துவபுவனாதிபர்களும், சத்தகோடி மகாமந்திரேசரைப் பிரேரிப்பவர்களும், மிகவும் பரிபக்குவமலமுடையவர்களுமாகிய அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டிஎன்னும் அட்டவித்தியேசுவரர்கள் எட்டிதழ் வடிவங்களாகஇருப்பார்கள்.

இவர்களுள் அநந்ததேவர் மற்றைவித்தியேசுவரர்களுக்கும், சுத்தவித்தியாதத்துவ வாசிகளுக்கும், ஏனையோருக்குந்தலைவராய் மாயையைக்கலக்கி, மாயாதத்துவபுவனங்களையுண்டாக்குவர். இவர்பரமசிவனுக்குவேறாய் அதிகாரமலமொன்றுடைய

ராய் இருப்பர். பாகம்வந்த காலத்திற் சிவனருளால் முத்தியைய டைவர்.

மலபரிபாகத்தின் மந்தத்தாலே, சிவனுடைய அனுக்கிரக த்தைப்பெறும் அபக்குவமலராயுள்ளவர்களும், அட்டவித்தி யேஸ்வரர்களாற் பிரேரிக்கப்பட்டவர்களுமாகிய சத்தகோடி மகாமந்திரேசுவரர் இருவகைப்படுவர். அவர்களுள்மூன்றரைக் கோடிபேர் பதவியைவெறுத்துக்குருமூர்த்திகளாயிருந்து, சிவா னுக்கிரகத்தினாற் சகலரைஇரட்சிக்குங் காரணர்களாயிருப்பர். மகாபிரளயகாலத்தில் சிவன்தாமாகவந்து அனுக்கிரகஞ்செய்து, மோட்சத்தைக்கொடுப்பர். மற்றைமூன்றரைக்கோடிபேர்களை மா யாதத்துவத்துக்குமேற் சுத்தவித்தியாதத்துவத்துக்குக்கீழ் அதி காரமுள்ளவர்களாகச்செய்து, சங்காரகாலத்திற் குருமூர்த்தியை யதிட்டித்தனுக்கிரகஞ்செய்வர்.

தளாக்கிரங்களில் கோடிசூரியப்பிரகாசமுள்ள சிவசூரி யமண்டலத்திற்கதிபராகிய பிரமா, பொன்னிறமான சரீரத்தை யும், நான்குமுகங்களையும், நான்குகரங்களில் புட்பமாலை, தண்டம், உருத்திராக்கவடம் தருப்பையாகிய இவைகளையுமுடையவராய் இருப்பர்.

சுத்தவித்தியாதத்துவத்தில் நந்தி, மகாகாளர், பிருங்கி, விநாயகர், இடபதேவர், கந்தர், தேவி, சண்டர், என்னுங்கணநா தரெண்மருஞ் சிவபெருமானைச்சித்தாந்த சாத்திரத்தினாலே பூசி த்துக்கொண்டிருப்பர்.

## சத்தகோடிமகாமந்திரம்.

*பிருகுணி, பிரமவேதாளி, தாணுமதி, அம்பிகை, உரு பிணி, நந்தினி, சுவாலை, என்னுமேழுவித்தியேசுவரிகளும் மண் டலேசுவரர்களாலே துதிக்கப்பட்டிருப்பர். இவர்கள்சத்தகோடி மகாமந்திரங்களுக்குஈசுவரிகள்.

†ஏழுகோடிமந்திரங்கள் நம, ஸ்வாகா, ஸ்வதா, வௌ ஷட், வஷட், பட், ஹூம் என்பன. நமஎன்பது இருடிகளுக்கும், ஸ்வாகா என்பது தேவர்களுக்கும், ஸ்வதா என்பது பிதிரர்களுக் கும், வௌஷட் என்பது பூதமுதலியவற்றிற்கும், வஷட்என்பது மனுடருக்கும், பட் என்பது உக்கிரவிக்கிரகங்களுக்கும், ஹூம் என்பது ஆஞ்ஞைத்தலைவருக்குமாம்.

---

*மிருகேந்திரம். †தத்துவப்பிரகாசம்.

நமஎன்பதையந்தமாகவுடைய மந்திரம் புருடரூபமாம். ஸ்வதா. ஸ்வாகாஎன்பவற்றை அந்தமாகவுடையமந்திரம் பெண்ரூபமாம். பட், வஷட், வௌஷட், ஹூம்என்பனவற்றை இறுதியாகவுடையமந்திரம் நபுஞ்சகரூபமாகும்.

இருதயாயநம, சிரசேசுவாகா, சிகாயைவஷட், கவசாயஹூம், நேத்திரேப்பியோவௌஷட், அஸ்திராயபட், உபாங்கேப்யஃசுவதா எனஒவ்வொருகோடியாய், ஏழுகோடியும்வந்தவாறு காண்க.

கோடி-அந்தம்.

## ரு. விமலாசனம்.

### ஈசுவரதத்துவம்.

ஞானசத்திகுறைந்து கிரியாசத்தியதிட்டித்தபோது ஈசுவரதத்துவநதோன்றும். இதற்குமகேசுவரர் அதிபர்.

### சதாசிவதத்துவம்.

ஞானசத்தியும்கிரியாசத்தியும் சமமாக அதிட்டித்தபோது சதாசிவதத்துவந்தோன்றும் இதில்சகளமாயிருக்கிற அபரநாதமும், அபரவிந்துவும், மலபரிபாகததின் மிகுதியையுடையவர்களாகிய பிரணவர், திரிகலர், ஹமர், சுதர், பத்மர், காரணர், சருவருத்திரர், பிரசாபதி, சுசிவர், சிவர்என்னும்நாமங்களையுடைய அணுசதாசிவருமிருப்பர் இதிற்சாதாக்கியபுவனமிருக்கும்.

ஈசுவரம் சாதாக்கியம் என்னுமிவ்விருதத்துவங்களும் பீடமேற்பாகத்தின்நடுவில் அறுபத்துநான்கு கேசரவடிவாக இருக்கும்.

கிழக்குமுதலிய எட்டுத்திக்குக்களிலுமுள்ள அறுபத்துநான்குகேசரங்களில் அட்டவித்தியேசுவரர்களை அதிட்டிப்பவரும், சிவனுக்குச் சத்திகளாயுள்ளவர்களும், சுத்தவித்தியாபுவனவாசிகளுமாகிய வாமை, சியேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி; சர்வபூததமனிஎன்னும்எட்டுச்சத்திகளிருப்பார்.

உதயகாலச்சூரியன்போன்ற ஒளியுள்ளவரும், மூன்றுகண்களும், நான்குதோள்களும், பாலசந்திரன் விளங்குகின்றசடாமகுடமும், சாமரை, அபயவரதம், சிவனைஅணைத்தகைமலர் எ

ன் னுமிவைகளையுடையவர்களுமாக இச்சத்திகளைத் தியானிக்க. சுர்ணிகையில்மனோன்மனியைத் தியானிக்க.

வாமை.

பிருதிவிதத்துவரூபியும், சிருட்டித்தொழிலைவிருத்திசெய்கின்றவருமாகிய வாமை, பிருதிவிதத்துவரூபராகிய சருவருக்குச்சத்தியாயிருப்பர். இவர் அராகதத்துவம்வரையும் வியாபகமுள்ளவர்.

வாமை-அழகுள்ளவர், சருவர்-எல்லாமுடையவர்.

வாயுசங்கிதை.

"மருவுமனஞ்சேர்ந்தகன்றுவிரிமண்ணி
னுருவாஞ்சருவனாய்."

சியேட்டை.

காத்தற்றொழிலுக்கு ஆதாரமாயிருக்குஞ் சியேட்டை. சலரூபராகிய பவருக்குச்சத்தியாயிருப்பர். இவர்காலதத்துவாந்தம் வியாபகமுள்ளவர்.

பவர்-எல்லாவற்றையுந்தோற்றுவிப்பவர்.

"இரதமன்னித்தெண்ணீரினுருவாகியுறையுமெழிற்பவனாய்."

இரௌத்திரி.

சங்காரகிருத்தியத்திற்கு ஆதாரமாயிருக்கும் இரௌத்திரி அக்கினிரூபராகிய பசுபதிக்குச் சத்தியாயிருப்பர். இவர்சுத்தவித்தியாதத்துவம் வரையில் வியாபகமுள்ளவர்.

பசுபதி-ஆன்மாக்களுக்குத்தலைவர்.

"உருவம்பொருந்திக்கனல்வடிவாயுற்றேயுறையும்பசுபதியாய்."

காளி.

வாயுரூபராகியஈசானருக்குக் காளிசத்தியாயிருப்பர். இவர்ஈசுவரதத்துவாந்தம் வியாபகமுள்ளவர்.

ஈசானர்-ஐசுவரியமுடையவர்.

"ஊருயுலவையுருவாகியொழியாதுறையீசானனாய்."

கலவிகரணி.

ஆகாசதத்துவராகிய பீமருக்குக் கலவிகரணிசத்தியாயிருப்பர், ஆகாசம் உருவமற்றது ஆகையாற்கலவிகரணி ஆகாசமூர்த்தி.

கலா-அவயவம், விகரணி-இல்லாதவர்.
பீமர்-மூவுலகங்களும்பயப்படத்தக்கவர்.

"ஆறுவொலியாய்வெளியுருவாயமர்ந்தேயுற்றயும்வீமனாய்."

பலவிகரணி.

சந்திரமூர்த்தியாகிய மகாதேவருக்குச் சத்தியாய்ப்பலவி காணியிருப்பர். சந்திரன் பயிரைவளர்ப்பதுபோல, பலவிகரணி ஆன்மாக்களாகிய பயிரைவளர்ப்பர்.

பலவிகரணி-பலத்தைவிசேடமாகக்கொடுப்பவர்.

"மாறாய்த்திரைநீரமுதாகிமதியாயுறைமாதேவனாய்"

பலப்பிரமதனி.

சூரிமூர்த்தியாகிய உருத்திருக்குச்சத்தியாய்ப்பலப்பிர மதனியிருப்பர் சூரியன் உஷ்ணகிரணங்களினாற் பலத்தையழிப் பதுபோல இவர் ஆன்மாக்களது பாசத்தைநீக்குவர்.

பலப்பிரமதனி-பலத்தையழிப்பவர்.

"வீறுமொளிசேர்ந்திரவியுருமேவியுறையுமுருத்திரனாய்".

சர்வபூததமனி.

ஆன்மமூர்த்தியாகிய உக்கிருக்குச் சத்தியாய்ச்சர்வபூத தமனியிருப்பர்.

சர்வபூததமனி-ஆன்மாக்களுடைய புண்ணியபாவங்களை அடக்குபவர்.

ஆகாசமூர்த்தி, சந்திரமூர்த்தி, சூரியமூர்த்தி, இயமான மூர்த்தி ஆகிய இந்நான்குமூர்த்திகளுஞ் சிவதத்துவாந்தம் வியா பித்திருப்பர்.

"உரைத்தற்கரியவியமானனுருவாயோங்குமுக்கிரனாய்."

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்தி ரன் ஆன்மா ஆகிய இவைகளை அதிட்டிக்குஞ் சத்திகள் சிவபி ரானது வடிவங்களாதலால், இவைகள் அட்டமூர்த்தமெனப்பட் டன. இதுபற்றியே யாங்கள் இவ்வெட்டுமூர்த்தியையும் வணங் குகின்றோம். பிருதிவிரூபமாகிய விக்கிரகவணக்கமும், கங்கை முதலிய தீர்த்தவணக்கமும், யாகம்முதலியவற்றிற்செய்யும் அக் கினிவணக்கமும், சிவபூசைமுதலியவற்றிற்செய்யும் சூரியசந்தி ரவணக்கமும், குருவையும், பிராமணர்களையும், சிவனடியார்களை யும், சிவனைப்பாவித்துவணங்கும வணக்கமும், பஞ்சபூதத்தலங் களிற் செய்யப்படும் பஞ்சபூதலிங்கவணக்கமுஞ் சிவபெருமானி ன் அட்டமூர்த்தவணக்கமேயாம்.

சிவபெருமான் அட்டமூர்த்தியாய் நிற்பது, உலகத்தினு ண்மைப்பொருளாய் நிற்பவர் தாமென்பதைச் சிற்றறிவுடையவர் களாகிய ஆன்மாக்கள் அறிந்துய்யும்படி காட்டிய பெருங்கருணை யேயாம்.

திருவாசகம்.

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ.

எனவும்,

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருத்தாண்டகம்.

"இருநிலனாய்த்தீயாகிநீருமாகி இயமானனாயெறியுங்காற்றுமாகி
அருநிலையதிங்களாய்ஞாயிறாகி ஆகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகிநிமிர்புன்சடையடிகணின்றவாறே."

எனவும்,

காரைக்காலம்மையார்.

"அவனேயிருசுடர்தீயாகாசமாவா
னவனேபுவிபுனல்காற்றாவா—னவனே
யியமானனாயட்டமூர்த்தியுமாய்ஞான
மயனாகிநின்றானும்வந்து." எனவும்,

பட்டணத்தடிகள்.

"எண்வகைமூர்த்தியென்பதிவ்வுலகினி
லுண்மையானெனவுணர்த்தியவாறே"

எனவும், கண்டுகொள்க.

சதாசிவமூர்த்தி திருவருளால் மனோன்மனியைப்பிரே ரிக்க, அந்தச்சத்தி சர்வபூததமனியைப்பிரேரிக்க, அந்தச்சத்தி பலப்பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி பலவிகர்ணியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி கலவிகரணியைப்பிரேரிக்க, அந்தச்சத் திகாளியைப்பிரேரிக்க, அந்தச்சத்தி இரௌத்திரியைப்பிரேரி க்க, அந்தச்சத்தி சியேட்டையைப்பிரேரிக்க, சியேட்டை வாமை யைப்பிரேரிக்கும்.

இங்ஙனம் நவசத்திகளது பிரேரகத்தினாலே, மாயையை யதிட்டிக்கின்ற அநந்ததேவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப் பிருதிவிமுதலான பிரபஞ்சங்கள் நடைபெறுகின்றன. மனோன் மணிமுதலியசத்திகள் ஒருவரையொருவர் அதிட்டிக்குமுறைமையை, மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவெம்பாவைச்செய்யுட்கள் இனிதுவிளக்குகின்றன.

தேவரீருடைய அடியார்களாகிய அணுசதாசிவர்தாள் பணிவோம், அட்டவித்தியேசுவரருக்குப் பாங்காவோம், சத்தகோடிமகாமந்திரேசுவரர்கள் எங்களுக்குத்தலைவராவார்கள், அவர்கள்ஏவலால் சுத்தமாயையைப்பிரேரிப்போம். உரிமையாகிய இந்தமுறைமை நீங்காவண்ணம் தந்தருளுகில் ஒருகுறைவுபாடுமில்லோமென்று நவசத்திகளுங் கூறினார்களென்னுங்கருத்தமைய,

"உன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய்."

என்று மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

கேசரங்களிற் கோடிசந்திரப்பிரபையுள்ளதும் குளிர்ச்சி பொருந்தியதுமான சந்திரமண்டலமிருக்கும். இச்சந்திரமண்டலத்தில், துளசிமாலையைத்தரித்தவரும், சங்கம், சக்கரம், கதை, தாமரைமலரென்னுமிவைகளை ஏந்திய நான்குகரங்களையுடையவரும், கருமேகம்போலுமொளியுடையவருமாகிய விட்டுணுமூர்த்தி வீற்றிருப்பர்.

## சத்திதத்துவம்.

சத்திதத்துவம் கேசரங்களுக்குள்ளாகப்பொருந்திய பொகுட்டுவடிவாம். எல்லாஆன்மாக்களுக்குமுண்டாகியதொழிலை எழுப்புகிறதாகிய கிரியாசத்தியதிட்டித்தலாம் சத்திதத்துவந்தோன்றும். அச்சத்தி விந்துவாகியநிட்களையாயிருக்கும். இந்தத்தத்துவத்தில் நிவிர்த்திமுதலியபுவனங்களிருக்கும்.

T. 1262



மண், பெண், பொன் முதலிய பிரபஞ்சப்பற்றுக்களினின்றும் ஆன்மாக்களைநிவிர்த்திசெய்தலால் நிவிர்த்திகலை எனப்படும்.

அங்ஙனம் நிவிர்த்திசெய்யப்பெற்ற ஆன்மாக்களை வாசனைபற்றி மீளப் பிரபஞ்சத்தைநோக்காவண்ணம் பிரதிட்டைசெய்தலாற் பிரதிட்டாகலை எனப்படும்.

பிரதிட்டை-நிறுத்தல்.

அங்ஙனம் பிரதிட்டைசெய்யப்பெற்ற ஆன்மாக்களுக்கு அநுமானஞானம் ஆகமஞானமின்றிச் சிவானுபூதிஞானத்தைப் பயப்பித்தலால் வித்தியாகலைஎனப்படும்.

அங்ஙனம் அநுபூதிஞானம்பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்பு சங்கற்பம்முதலிய எல்லாத்துன்பங்களையும் சாந்தமாகச்செய்தலால், சாந்திகலைஎனப்படும்.

அங்ஙனஞ்சாந்தமாய்நின்றதும் ஒழியச்செய்தலால் சாந்தியதீதகலைஎனப்படும்.

இவைசத்திவடிவாகிய ஐவகைக்கலைகள். கர்ணிகையின் நுனிவட்டத்தில் சிவாக்கினிமண்டலமிருக்கும். இவ்வக்கினிமண்டலத்திற் காளகண்டரும், முக்கணணரும், ஞானமுத்திரை, அக்கினி, சூலம், வியாக்கியானமுத்திரை என்னுமிவைகளைப் பொருந்தியகைகளையுடையவருமாகிய உருத்திரமூர்த்திவீற்றிருப்பர்.

## சிவதத்துவம்.

எல்லாஆன்மாக்களுக்கும் அறிவைஎழுப்பிநிற்பதாகிய சத்தியதிட்டித்தலாற் சிவதத்துவம்தோன்றும். இது இலயத்தானமாம்.

இத்தத்துவம் ஐம்பதுபீசவடிவாயிருக்கும். இதிற் பத்துப்புவனங்கள்உள்ளன. இந்திகை, தீபிகை, மோசிகை, ரோசிகை, ஊர்த்துவகாமினி, இவ்வைந்தும் அபரநாதகலாபுவனங்கள்.

வியாபினி, வியோமரூபிணி, அநந்தை, அநாதை, அநாசிருதை, இவ்வைந்தும் பரநாதபேதமானபுவனங்கள்.

வியாபினிஎன்னுஞ்சத்தி வியாபகருக்குக்காரணமாய் ஆன்மஅநுக்கிரகமான ஆதிசத்தியுமாம்; ஆடகேசுவரர் இவரது மூர்த்திபேதமாயுள்ளவர்.

வியோமரூபையென்னுஞ்சத்தி வியோமரூபருக்குக்காரணமாய் இச்சாசத்தியென்னும்பெயரைப்பொருந்தும். கூர்மாண்டதேவர் இவரதுமூர்த்திபேதமாயுள்ளவர்.

அனந்தையென்னுஞ்சத்தி அனந்தருக்குக்காரணமாய் ஞானசத்தியென்னும்பெயரைப்பொருந்தும். காலாக்கினிஉருத்திரர் இவரதுமூர்த்திபேதமாயுள்ளவர்.

அனாதையென்னுஞ்சத்தி அனாதருக்குக்காரணமாய் கிரியாசத்தியென்னும்பெயரைப்பொருந்தும். ஆதாரசத்தி இவரது மூர்த்திபேதமாயுள்ளது.

சமனையென்னும் புரையும், உன்மனையென்னும் பரமும், தம்மிற்கூடி ஆன்மாக்களைத் திருவுள்ளத்தடைத்தசமயத்தில் அநாசிருதர்தோற்றினர். இவர் பரையையதிட்டித்தலாற் பரனென்னும்பெயரைப்பெற்று, தாமொருவுரையாசரியாதபடியால் அநாசிருதராய் பரையும் அநாசிருதையானது. இவருடையமூர்த்திபேதமான அனந்தேசுவரர் ஆதாரசத்தியுடன்கூடி, அசுத்தமாயையைப்பிரேரித்துக்கொண்டிருப்பர்.

ஐம்புதுபீசங்களிலும் ஐம்பதுவர்ணத்துவாக்கள் அதிபராய்வசிப்பார்கள். கலாட்சரமாகியகுறிலும், விகலாட்சரமாகிய நெடிலும், சம்பந்தப்புடிதலினால் எல்லாஉலகங்களிலும் வியவகாரம்உண்டாகின்றது. குறில்எழும்தத்துவபீசம். நெடிலொன்பதும்மூர்த்திபீசம். இவ்விரண்டுங்கூடியுதுபிரபாவம்.

(அ) அகரமுதலியமூன்றும் ஆகாசதத்துவாட்சரம்எனவும், (௭) ஈகாரம்முதலியமூன்றும் வாயுதத்துவாட்சரம்எனவும், (ஐ) இறுகாரம்முதலியநான்கும் அக்கினிதத்துவாட்சரம்எனவும், (ஓ) எகாரம்முதலியமூன்றும் சலதத்துவாட்சரம்எனவும், (ஔ) ஔகாரம்முதலியமூன்றும் பிருதிவிதத்துவாட்சரம் எனவுஞ் சொல்லப்படும்.

தாமரைக்காயின்நடுவிலுள்ள ஹகார க்ஷகாரவடிவங்களாகிய இரண்டுவித்துக்களும் சிவதத்துவவடிவாகவிருந்து ஆன்மாக்களுக்குமோட்சத்தைக்கொடுக்கும்.

முதலாமாவரணத்திலுள்ள சாத்துவிக அட்சரங்களாகிய மகாரம் சம்ஹாரகிருத்தியத்தையும், யகாரந் திரோதையும், ரகாரம்

இரத்தத்தையும், லகாரம் மாமிசத்தையும், வகாரம் மேதையையும், ஶகாரம் எலும்பையும், ஷகாரம் மச்சையையும், ஸகாரம் சுக்கிலத்தையும் குறிக்கும்.

இரண்டாமாவரணத்திற்பொருந்திய இராசத அக்கரங்களாகிய (அ) அகரமுதலியபதினாறுயிர்களும் பிராணனைக்குறிக்கும்.

மூன்றுமாவரணத்திற்பொருந்திய தாமத அக்கரங்களாகிய (க) ககரமுதலிய இருபத்திநான்குமெய்களும் முடம்பைக்குறிக்கும்.

அகரமுதலியவன்னங்களுக்கு அதிதேவதைகளும், நிறங்களும், உருவங்களும்வருமாறு:—

சர்வதேவமயமானதும், சிவப்புநிறமுள்ளதும், ஆண்ருபமானதுமாகிய அ காரம் வசீகரத்தைக்கொடுக்கும்.

பராசத்திவடிவானதும், வெண்மைநிறமுள்ளதும், பெண்ரூபமானதுமாகிய ஆ காரம் ஆகர்ஷணத்தைக்கொடுக்கும்.

விட்டுணுவையதிபராகவுடையதும், பச்சைநிறமுள்ளதும, ஆண்ருபமானதுமாகிய இ காரம் காத்தற்றொழிலைச்செய்யும்.

மாயாசத்தியையதிபதியாகவுடையதும், பொன்மைநிறமுள்ளதும், பெண்ரூபமானதுமாகிய ஈ காரம்வசீகரத்தைக்கொடுக்கும்.

வாஸ்துநாதரை அதிபராகவுடையதும், கருமைநிறமுள்ளதும், ஆண்ரூபமானதுமாகிய உ காரம் மந்திரவாதிகளையும் அரசர்களையும் வசமாக்கும்.

பூமிதேவியையதிபராகவுடையதும், பச்சைநிறமுள்ளதும், பெண்ரூபமானதுமாகிய ஊ காரம் சனவசீகரத்தைச்செய்யும்.

பிரமனை அதிபராகவுடையதும், பொன்மைநிறமானதும், நபுஞ்சகரூபமானதுமாகிய ஐ காரம் கிரகபீடையை நிவாரணஞ்செய்யும்.

வியாழனை அதிபதியாகவுடையதும், கறுப்புநிறமானதும், அலிரூபமானதுமாகிய ஔ காரம் சீரநிவாரணஞ்செய்யும்.

அசுவினிதேவர்களை அதிபர்களாகவுடையவைகளும்,வெண்மைநிறத்தையும், சிவப்புநிறத்தையும் பொருந்தியவைகளும், அலிரூபமானவைகளும்ஆகிய ஏ காரமும், ஐகாரமுமசுபநிவாரணத்தைச்செய்யும்.

வீரபத்திரரை அதிபராகவுடையதும், பொன்மைநிறமுள்ளதும், ஆண்ரூபமானதுமாகிய ஒ காரம் எல்லாச்சித்திகளையுங் கொடுக்கும்.

சரசுவதியை அதிபராகவுடையதும், வெண்மைநிறமானதும், பெண்ரூபமானதுமாகிய ஔ காரம் ஞானத்தைக்கொடுக்கும்.

ஈசுவரனையதிபராகவுடையதும், சோதிநிறமானதும், ஆண்ரூபமானதுமாகிய ஓகாரம் எல்லாப்பலன்களையுங்கொடுக்கும்.

ஆதிசத்தியையதிபராகவுடையதும், வெண்மைநிறமானதும், பெண்பாலானதுமாகிய ஔகாரம் எல்லாச்சித்திகளையும் கொடுக்கும்.

மகேசுவரனை அதிபராகவுடையதும், சிவப்புநிறத்தையும் ஆண்ரூபத்தையும்பொருந்தியதுமாகிய அංகாரம் சுகத்தைக்கொடுக்கும்.

காலாக்கினியுருத்திரரை யதிபராகவுடையதும், சிவப்புநிறத்தையும், பெண்ரூபத்தையும் பொருந்தியதுமாகிய அঃகாரம் பாசத்தைநீக்கும்.

பிரமாவை யதிபராகவுடையதும், பொன்னிறத்தையும், ஆண்ரூபத்தையும் உடையதுமாகிய (க) ககாரம் சிருட்டித்தொழிலைச்செய்யும்.

கங்கையைத்தலைவராகவுடையதும் வெண்மைநிறமானதும், பெண்ரூபமானதுமாகிய (௨) இரண்டாங்ககாரம் பாவத்தைநீக்கும்.

விநாயகரை யதிபராகவுடையதும், சிவப்புநிறத்தையும், ஆண்ரூபத்தையுமுடையதுமாகிய (௩) மூன்றுங்ககாரம் விக்கினங்களைநீக்கும்.

பைரவரூபமானதும், வெண்மைநிறமுள்ளதும், பெண்ரூபமானதுமாகிய (௪)நாலாங்ககாரம் சத்துருநாசத்தைச்செய்யும்.

காலவைரத்தலைவராகவுடையதும், கறுப்புநிறமானதும், அலிப்பாலானதுமாகிய (ஓ) ஙகாரம் எல்லாவெற்றியையுங்கொடுக்கும்.

சண்டருத்திரரை அதிபராகவுடையதும், கறுப்புநிறத்தையும், ஆண்ருபத்தையுமுடையதுமாகிய (ச) சகரம் இராக்கதர்களை நிவாரணஞ்செய்யும்.

பத்திரகாளியைத்தலைவியாகவுடையதும், பொன்மைகலந்த கறுப்புநிறமுள்ளதும், பெண்ருபமானதுமாகிய (ஸ) இரண்டாஞ்சகாரம் வெற்றியைக்கொடுக்கும்.

இந்திரனையதிபனாகவுடையதும், சிவப்புநிறத்தையும், ஆண்ருபத்தையுமுடையதுமாகிய (ஜ) மூன்றாஞ்சகாரம் வெற்றியைக்கொடுக்கும்.

அர்த்தநாரீசுவரமயமானதும், பச்சைநிறமுஞ் சிவப்புநிறமுமுள்ளதும், பெண்பாலானதுமாகிய (ஶ) நாலாஞ்சகாரம் வெற்றியைக்கொடுக்கும்.

கோடியுருத்திரரையதிபராகவுள்ளதும், பொன்மைநிறமுள்ளதும், அலிப்பாலானதுமாகிய (ஞ) ஞகாரம் போகத்தைநீக்கும்.

பிருங்கியை யதிபராகவுள்ளதும், சிவப்புநிறத்தையும், ஆண்ருபத்தையுமுடையதுமாகிய (ட) முதலாம் டகரம் எல்லாச்சுகத்தையுங்கொடுக்கும்

சந்திரனையதிபனாகவுள்ளதும், வெண்மைநிறமானதும், பெண்ருபமானதுமாகிய (ഠ) இரண்டாம் டகரம் அபமிருத்துவை நீக்கும்.

ஏகருத்திரரை அதிபராகவுள்ளதும், பொன்மைநிறமுள்ளதும், ஆண்ருபமானதுமாகிய (ഡ) மூன்றும்டகரம் காலதோஷத்தைநீக்கும்.

இயமனையதிபனாகவுள்ளதும், நீலநிறத்தையும், பெண்ருபத்தையுமுடையதுமாகிய (ഢ) நாலாம் டகரம் அபமிருத்துவை நாசஞ்செய்யும்.

நந்தியையதிபராகவுள்ளதும், சிவப்புநிறத்தையும், அலிருபத்தையுமுடையதுமாகிய ணகரம் அர்த்தசித்தியைக்கொடுக்கும்.

வஸ்துதேவதையை யதிபராகவுள்ளதும், வெண்மைநிறமுள்ளதும், ஆண்ரூபமானதுமாகிய தகாரம் எல்லாவெற்றியையுங்கொடுக்கும்.

தருமதேவதையை யதிபராகவுள்ளதும், குந்தவர்ணமாயுள்ளதும், பெண்ரூபமுள்ளதுமாகிய (ழ) இரண்டாந்தகரம் செயத்தைக்கொடுக்கும்.

துர்க்கையை யதிபராகவுள்ளதும், பச்சைநிறத்தையும், ஆண்ரூபத்தையுமுடையதுமாகிய (ஃ) மூன்றாந்தகரம் சர்வார்த்தசித்தியைக்கொடுக்கும்.

குபேரனையதிபனாகவுடையதும், பொன்மைநிறத்தையும், பெண்ரூபத்தையுமுடையதுமாகிய (ய) நான்காந்தகரம் அர்த்தசித்தியைக்கொடுக்கும்.

சாவித்திரியையதிபராகவுடையதும், வெண்மைநிறத்தையும் அலிரூபத்தையும் பொருந்தியதுமாகிய நகாரம் பாவநாசத்தைச்செய்யும்.

ஆகாயத்தைமுதன்மையாகவுடையதும், வெண்மைநிறத்தையும், ஆண்ரூபத்தையும் பொருந்தியதுமாகிய (வ) முதலாம் பகரம் விருஷ்டியைக்கொடுக்கும்.

பசுபதியையதிபராகவுடையதும், வெண்மைநிறத்தையும் பெண்ரூபத்தையும் பொருந்தியதுமாகிய (ம) இரண்டாம்பகரம் பாவநிவாரணத்தைச்செய்யும்.

திரிமூர்த்தியையதிபராகவுடையதும், பொன்மைநிறத்தையும், ஆண்ரூபத்தையும்பொருந்தியதுமான (வ) மூன்றாம் பகரம் சர்வசித்தியைக்கொடுக்கும்.

சுக்கிரனையதிபனாகவுடையதும், சிவப்புநிறத்தையும், பெண்ரூபத்தையுமுடையதுமாகிய (ஹ) நாலாம்பகரம் சருவசித்தியைக்கொடுக்கும்.

மன்மதனையதிபனாகவுடையதும், பச்சைநிறத்தையும், அலிரூபத்தையும் பொருந்தியதுமாகிய (ஐ) மகாரம் எல்லாவெற்றிகளையுங்கொடுக்கும்.

வாயுவையதிபனாகவுடையதும், கறுப்புநிறத்தையுடையதும், அலிரூபத்தைப்பொருந்தியதுமாகிய யகாரம் உச்சாடனத்தைச்செய்யும்.

அக்கினியையதிபனாகவுடையதும், செந்நிறத்தையும் அவிரூபத்தையும் பொருந்தியதுமாகிய (ர) ரகரம் மாரணத்தைச் செய்யும்.

பிருதிவிதத்துவபீசமும், பொன்மைநிறமும், அலிரூபமுமுடையதாகிய (ல) லகாரம் தம்பனசித்தியைச்செய்யும்.

வருணனையதிபனாகவுள்ளதும், வெண்மைநிறத்தையும், அலிரூபத்தையுமுடையதுமாகிய வகாரம் ரோகநிவாரணஞ்செய்யும்.

இலக்குமிபீசமும், பொன்மைநிறமும், பெண்ரூபமுமுள்ளதாகிய (ஶ) சகரம் சிறீகரத்தைக்கொடுக்கும்.

பன்னிருசூரியரை அதிபராகவுடையதும், சிவப்புநிறத்தையும், ஆண்ரூபத்தையுமபொருந்தியதுமாகியஷகாரம் எல்லாச்சித்திகளையுங்கொடுக்கும்.

சத்திபீசமும், சிவப்புநிறமும், பெண்ரூபமுமாகிய ஸகாரம் காத்தலைச்செய்யும்.

சிவபீசமும், களங்கமற்ற பளிங்குநிறமும், நபுஞ்சகரூபமுமாகிய ஹகாரம் அணிமாதி அட்டசித்திகளையும், போகமோக்ஷங்களையுங்கொடுக்கும்.

வித்தியாதத்துவமயமானதும், வெண்மைநிறமும், ஆண்ரூபமும்பொருந்தியதுமாகிய க்ஷகாரம் சுகத்தைக்கொடுக்கும்.

---

## சத்திமண்டலம்.

கர்ணிகையின்நடுவில் பிரணவரூபமானதும், பாற்கடல்போன்ற வெண்மையானதுமாகிய சத்தியினுடையமண்டலத்தைப்பூசித்து, அதில் சர்ப்போபவீதமுடையவரும், அர்த்தசந்திரனைத்தரித்தவரும், முக்கண்ணரும், பளிங்குபோல நிர்மலமானவரும், வாள், சூலம், அம்பு, செபமாலை, அபயம், கமண்டலம், வரதம், தாமரைப்பூ என்னுமிவற்றைத்தரித்தவரும், சிங்கத்தோல், யானைத்தோல்களைத்தரித்தவருமாகிய ஈச்வரனைத்தியானிக்க.

கந்தபுராணம்.

"ஈசன்மேவருபீடமாயேனையோர்தோற்றம்
வாசமாயெலாவெழுத்திற்குமறைகட்குமுதலாய்ச்
..............................மாசிருாசப்பிரமம்."

வாயுசங்கிதை.

"ஆலம்வித்தென்னக்கோடிபொருளெலாமடங்கவைகு
மூலமாயுறைந்துமன்னிமுக்குணங்கடந்துவெய்ய
காலனுருயிரையுண்டகனைகழற்கடவுண்மூர்த்தி
மேலதாங்குடிலைதன்னின்மேவிவீற்றிருக்குமன்றே."

இப்படிப் பரமசிவனுக்கு ஆசனமாகிய பதுமத்தை ஆதாரசத்திக்குமேல் பிருதிவிதத்துவமுதற் குடிலைபரியந்தம்வியாபித்துள்ளதாகச் சிந்திக்கவேண்டும்.

இது நாளமுதலியவற்றைப்பொருந்தித் தோன்றும் உலகத்திற் கமலம்போலாகாது, கண்முதலிய உறுப்புக்களைப்பொருந்தித்தோன்றும் திவ்வியகமலமாகும்.

ஓமம் தியானம் முதலியவைகளிலும் இவ்வாறுணர்ந்து செய்தல்வேண்டும். இம்முறையறிந்து தியானித்துக்கற்பிக்குமாசனமே சிவாசனகற்பனமாகும், இதனையறிந்துசெய்யாவழிப் பூசையாற்பயனில்லை.

---

# சிவமூர்த்தி.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யுநிமித்தமாகக்கொண்டருளிய சுத்ததத்துவங்கள்மூன்றாகும். அவை சிவதத்துவம், சாதாக்கியதத்துவம், மகேசுவரதத்துவம்என்பன.

இவற்றுள் அருவத்திருமேனியையுடைய சிவவடிவம்ஒன்று. அருவுருவத்திருமேனியையுடையதாகிய சாதாக்கியமானது சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்மசாதாக்கியமென ஐந்துதன்மையையுடையது. உருவத்திருமேனியையுடையதாகிய மகேசுவரம், சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், நடேசர், கல்யாணசுந்

தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதானர், விக்கினேசுவரானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர்என இருபத்தைந்துதிருவடிவங்களையுடையது. ஆகமூர்த்தங்கள் முப்பத்தொன்றும்.

சதாசிவரூபம்.

"உயர்மறை புகழ்சிவ னேங்கு சதாசிவ
னியலு மகேச னெனமூன் றுமவை
யருவே யருவுரு வுருவா யடைவே
யரிதுண ரொன்றைந் தையைந் தாகி
யொருதொகை முப்பத் தொன்று கும்மே."

கந்தபுராணம்.

"ஒன்று யிருதிறமா யோரைந்தா யையைந்தா
யன்றுதி யின்மீட்டு மைந்தா யளப்பிலவாய்
நின்றாய் சிவனேயிந் நீர்மையெலாந் தீங்ககற்றி
நன்றுவி கட்கு நலம்புரிதற் கேயன்றே."

## நிஷ்களசிவம்.

எல்லாவற்றிற்கும் மேலானதாய், ஒருகுணங்களுமோரடையாளமுமில்லாததாய், மலமற்றதாய், ஏகமாய், அழியாததாய், எண்ணிறந்த ஆன்மாக்களுக்குணர்வாய், அசலமாய், இன்பசொரூபமாய், அறியாதார்சென்று கூடுதற்கரிதாய், வழிபட்டவர்களுக்குச் சென்றுபொருந்துகைக்கிடமாகியமுத்திப்பொருளாய், சர்வவியாபியாய், அநுக்கிரககிருத்தியத்தைச்செய்கின்ற சதாசிவனுக்குமேலாய், பராசத்திக்குக்காரணமாயிருக்கும் உண்மைப் பொருளைச் சித்தாந்தத்தெளிவுவந்த பெரியோர்கள் நிஷ்களசிவமென்று சொல்லுவார்கள்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருத்தாண்டகம்.

"மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையானென்னினல்லால்

ஒப்புடையனல்லனொருவனல்ல
னோரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவவண்ணமு
மவனருளேகண்ணாகக்காணினல்லால்
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே."

திருவாதவூரடிகள் புராணம்.

"பந்தமாகியமலவிருளகற்றும்
பரிதியாயுளபல்லுயிர்க்குயிரா
யந்தமாதிகளளப்பருமொளியா
யமலமாகுமவ்வருவெனுமுருவம்."

# நிஷ்களசத்தி.

நிஷ்களசிவத்தினம்சமாய்ப் பராசத்திதோன்றியது. பராசத்தியினம்சமாய்ப் பெத்தமுத்திகளில் வியாபித்திருப்பது ஆதிசத்தி எனப்படும். ஆதிசத்தியினம்சமாய் வடிவைப்பிரேரித்துக் கொண்டிருப்பது இச்சாசத்தியாகும். இச்சாசத்தியினம்சமாய் அறிவையுண்டாக்குவது ஞானசத்தியாகும். ஞானசத்தியினம்சமாய்ப் பஞ்சகிருத்தியங்களை நடத்துவது கிரியாசத்தியாகும். பஞ்சகிருத்தியத்தைச் சங்கற்பித்த சிவபெருமானிலிருந்து தோன்றிய இவர்கள் நிட்களசத்திகளெனப்படுவர்.

இச்சத்திகளிலிருந்து யோகிகளும், ஞானிகளும், கிரியாவான்களுஞ்செய்யுந் தியானபூசை நிமித்தமாகச் சாதாக்கியங்கள் தோன்றியன.

# அருவுருவத்திருமேனி.

## க. சிவசாதாக்கியம்.

சதா-ஆக்கியம்=சாதாக்கியம். சதா-எப்பொழுதும், ஆக்கியம்-புகழப்படுவது, எனவே நாமரூபாதிகளில்லாதசுத்தசிவம் நாமமுடையவராய் அன்பர்களாற் புகழப்படுபவரென்பது கருத்து.

சாந்தியதீதையென்னும் பெயரையுடைய பராசத்தியினம்சமாய், அனுக்கிரகநிமித்தமாய்ச் சிவசாதாக்கியந்தோன்றியது

நிட்களமாகிய சிவசாதாக்கியமென்னுந் தத்துவமும், சதாசிவமென்னும் மூர்த்தியும பொருந்தியகுணம் ஈசானம்.

அதன்ரூபம் பரைக்குமேலானதாய், அதிசூக்குமமாய் ஆகாயத்திற்றோற்றுகின்ற மின்னல்போன்றதாய், அரூபமாய், எங்கும்வியாபித்துள்ளதாய், தியானத்தாலறியப்படுவதாய், இலயத்தானமாயிருக்கும்.

திருநாவுக்கரசுநாயனுர்
திருக்குறுந்தொகை.

"கன்னலைக்கரும்பூறியதேறலை
மின்னனைமின்னனையவுருவனைப்
பொன்னனைமணிக்குன்றுபிறங்கிய
என்னனையினியான்மறக்கிற்பனே."

## உ. அமூர்த்திசாதாக்கியம்.

சாந்தியென்னும் பெயரையுடைய ஆதிசத்தியின் அம்சமாய் அமூர்த்திசாதாக்கியந்தோன்றியது. ஆதிசத்தி அரூபியாதலால் அதினின்றுந்தோன்றிய சாதாக்கியமானது, அமூர்த்தியென்னும்பெயரைப்பொருந்தியது. அமூர்த்திசாதாக்கியமென்னுந்தத்துவமும் ஈசனென்னும் மூர்த்தியும் பொருந்தியகுணம் சத்தியோசாதம்.

அதன்ரூபம் கலைகளுக்கப்பாற்பட்டதாய், தூணுகாரமான இலிங்கமாய், கோடிசூரியப்பிரகாசமுள்ளதாய், இலிங்கத்தின் நடுவே வடிவைக்கற்பித்திருக்கும்.

இது திவ்வியலிங்கமென்றும், மூலத்தம்பமென்றுஞ் சொல்லப்படும். இவ்விலிங்கத்திலே சிருட்டிகாலத்திற்றோற்றமும், சங்காரகாலத்திலொடுக்கமுமுண்டாவது.

திருநாவுக்கரசுசுவாமிகள்
திருக்குறுந்தொகை.

"கரும்பினைக்கட்டியைக்கந்தமாமலர்ச்
சுரும்பினைச்சுடர்ச்சோதியுட்சோதியை
அரும்பினிற்பெரும்போதுகொண்டாய்மலர்
விரும்புமீசனைநான்மறக்கிற்பனே.

## ங. மூர்த்திசாதாக்கியம்.

வித்தையென்னும்பெயரையுடைய இச்சாசத்தியின் அம்சமாக மூர்த்திசாதாக்கியந்தோன்றியது. இச்சாசத்தி சுத்தமா

னகலையைப்பொருந்துதலால், அதினின்றுந்தோன்றிய சாதாக்கியமும் மூர்த்தியென்னும்பெயரைப் பொருந்தியது.

மூர்த்திசாதாக்கியமென்னுந்தத்துவமும், பிரமீசன் என்னும்மூர்த்தியும் பொருந்திபகுணம் வாமதேவம். இச்சாதாக்கியம் கலையோடுகூடிய அமுருவ்முடையதுமாயிருக்கும்.

இதுபிரளயகாலாக்கினிபோன்றதாய், திவ்வியலிங்காகிருதியாய், மேற்பாகத்திற் கிருபைபொருந்திய ஒருதிருமுகமும், முச்சுடர்களையும் நடத்துகின்ற மூன்றுதிருக்கண்களும், எல்லா அவயவங்களும், மான் மழு வரதம் அபயந்தங்கிய நான்கு திருக்கரங்களுமுடையதாய், இலிங்கமூர்த்தியென்னும்பெயரைப்பொருந்தியிருக்கும்.

## ௩. கர்த்திருசாதாக்கியம்.

பிரதிட்டாகலையென்னும் பெயரையுடைய ஞானசத்தியின் அம்சமாகக் கர்த்திருசாதாக்கியந் தோன்றியது.

கர்த்திருசாதாக்கியமென்னுந்தத்துவமும், ஈசுவரனென்னும் மூர்த்தியும் பொருந்தியகுணம் அகோரம்.

இச்சாதாக்கியம் படிகம்போன்ற ஒளியுடையதாய், திவ்வியலிங்கமாய், பெரியதயையோடுகூடியதாய், நடுவில் சர்வகாரணராகிய ஈசுரனென்னும் மூர்த்தியையுடையதாய், நான்குதிருமுகங்களையும், எட்டுத்திருக்கரங்களையும், பன்னிரண்டு திருக்கண்களையும், இரண்டுதிருவடிகளையுமுடையதாய், வலத்திருக்கரங்களில் சூலம், மழு, வாள், அபயம், இடத்திருக்கரங்களில் பாசம், மணி, பாம்பு, வரதமென்னுமாயுதங்களையுடையதாய், நிறைவான இலக்ஷணங்களோடு கூடியதாயிருக்கும். ஞானலிங்கமென்றிதனைச்சொல்லுவார்கள்.

### திருநாவுக்கரசுநாயனர்.

பண்—இந்தளம்.

"நாலுகொலாமவர்தம்முகமாவன
நாலுகொலாஞ்சனனம்முதற்றோற்றமும்
நாலுகொலாமவரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறைபாடினதாமே."

## ரு. கர்மசாதாக்கியம்.

நிவிர்த்தியென்னும்பெயரையுடைய இச்சாசத்தியினம்சமாய்க் கன்மசாதாக்கியந்தோன்றியது. கன்மசாதாக்கியமென்னுந் தத்துவமும் ஈசனென்னும்மூர்த்தியும் பொருந்தியகுணம் தற்புருடம்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியானபாவனையின் நிமித்தமாக நிட்களசகளத்திருவுருக்கொண்டநிலை ஆவுடையாளுடன்கூடிய இலிங்கமாம்.

சைவசமயநெறி.

"நிட்களன்றானன்பானினைந்தருச்சிக்கச்சகள
நிட்களனானனிமலனே."

ஞானசத்தியாகிய சிவலிங்கத்திற்காணப்படும்ஆவுடையாள் கிரியாசத்தியைக்குறிக்கும்.

பரவெளியைக்குறிக்குஞ்சிவலிங்கத்திலே எப்பொழுது மோரசைவுண்டு. அதுவேசத்தியாகும். ஆன்மாக்களின்பாசத்தைக்கெடுப்பதற்காக அசைதற்சத்தியிலிங்கத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. அவ்வசைவு இலிங்கத்திலுண்டென்பதைஉணர்த்துவதற்கு ஆவுடையாள்இலிங்கத்தைச்சுற்றிக் கீழடங்கி அமைந்திருக்கின்றது. ஆவுடையாளின்ஓர்பக்கத்தில் நீண்டிருப்பதான கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கஞ்செய்கின்றகுறிப்பாக அமைந்திருக்கின்றது. அவ்விலிங்கம் *பிரமபாகம், விட்டுணுபாகம், உருத்திரபாகமென்னும் மூன்றுபாகங்களோடுகூடியுள்ளது. அவற்றுள் பிரமபாகம் நபும்சகலிங்கமும், விட்டுணுபாகம் ஸ்திரீலிங்கமும், உருத்திரபாகம் பும்லிங்கமுமாகும். ஆண்ரூபம், பெண்ரூபம், நபும்சகரூபமாகவிருப்பது அவன், அவள், அதுவாகவிருக்குமுலகத்திலேயுள்ள உயர்திணைப்பொருளும் அஃறிணைப்பொருளுந் தம்மிடத்திலேதோன்றி ஒடுங்குகின்றனவென்பதை உணர்த்துதற்காகும். இதுவே பிரணவமுதற்பொருள். இதன்சோதித்தன்மையே அகர உகர மகரமாயிருக்கும். அகரம்சிவமும், உகரம்சத்தியும், மகரம்கலைவுடிவமுமாம்.

---

*திருவிளையாடற்புராணம் வேதத். பொ. அ. படலம். செ௩௨.

நாதவிந்துக்கள் அகாரஉகாரங்களுளடங்கும். அகாரங்கண்டமும், உகாரங்கோமுகமும், மகாரம் வட்டமும், பிரணவம் இலிங்கமுமாயிருக்கும்.

### திருமந்திரம்.

"மலர்த்தவயன்மாலுருத்திரன்மகேசன்
பலந்தருமைம்முகன்பரவிந்துநாதம்
நலந்தருசத்திசிவன்வடிவாகிப்
பலந்தருலிங்கம்பராநந்தியாமே."

"அகாரமுதலாவனைத்துமாய்நிற்கும்
உகாரமுதலாவுயிர்ப்பெய்திநிற்கும்
அகாரவுகாரமிரண்டுமறியில்
அகாரவுகாரவிலிங்கமதாமே."

### சிவஞானசித்தியார்.

"சத்தியுஞ்சிவமுமாயதன்மையிவ்வுலகமெல்லா
மொத்தொவ்வாவாணும்பெண்ணுமுயர்குணகுணியுமாகி
வைத்தனளவளால்வந்தவாக்கமிவ்வாழ்க்கையெல்லா
மித்தையுமறியார்பீடலிங்கத்தினியல்புமோரார்."

### சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—தக்கேசி.

"ஊனங்கத்துயிர்ப்பாயுயிர்க்கெல்லாமோங்காரத்துருவாகிநின்றானை
வானங்கத்தவர்க்குமளப்பரியவள்ளலையடியார்கடம்முள்ளத்
தேனங்கத்தமுதாகியுள்ளூறுந்தேசனைத்தினைத்தற்கனியானை
மானங்கைத்தலத்தேந்தவல்லானைவலிவலந்தனில்வந்துகண்டேனே."

பஞ்சமூர்த்திகளிலிருந்துந்தோற்றிய சிவசாதாக்கியமுதலியநான்கும் ஒன்றையொன்றுபற்றி, முறையில் ஐந்தாவதாகிய கன்மசாதாக்கியத்தையடைந்திருத்தலின், இது மற்றையசாதாக்கியங்களிலும் விசேடமுடையதாயிருக்கும்.

மூர்த்தியையொளிரூபமாகவும், தண்டாகாரமாயும், பிரியாமலிருக்கிற அவயவங்களையுடையதாயும், சிவதத்துவரூபமாயும், பரவிந்துவியாபகமாயும், இலிங்கத்தின் ஈசானத்திலும், மேற்கு வடக்கு தெற்குக் கிழக்குகளிலும் பாவிக்கவேண்டும். ஒளிரூபம் சிவசாதாக்கியத்தையும், தண்டாகாரம் அமூர்த்திசாதாக்கியத்தையும், பிரியாமலிருக்கிற அவயவம் மூர்த்திசாதாக்கியத்தையு

ம், சிவதத்துவரூபம் கர்த்திருசாதாக்கியத்தையும், பரவிந்துவியாபகம் கன்மசாதாக்கியத்தையுங்குறிக்கும்.

பிரமவிட்டுணுருத்திரரையதிட்டிக்கப்பட்ட பீடத்தையும், அதற்குக்காரணமாகிய மகேசுவரனையதிடிக்கப்பட்ட கல்வபத்திரத்தையுமுடையதும், பிருதிவிதத்துவமுதல் சிவதத்துவமீறுதியாகவுள்ளதுமாகிய மந்திரசிங்காசனத்தின்மீது சதாசிவமூர்த்தியானவர் ஐந்து திருமுகங்களும், பதினைந்து திருக்கண்களும், பத்துத்திருக்கரங்களும், இரண்டு திருவடிகளுமாகிய முப்பத்திரண்டிலக்ஷணங்களமைந்தவராய் எழுந்தருளியிருப்பர்.

## ஐந்துமுகம்.

பஞ்சமூர்த்திபேதங்களைத்தழுவி, அம்மூர்த்திகளினிடமாதவிருந்து, பஞ்சகிருத்தியத்தைச்செய்யும் பரமசிவனுடைய சுத்தகுணங்களாகிய ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதமென்னுமைந்துங் கர்மசாதாக்கியராகிய சதாசிவமூர்த்திக்குத் திருமுகங்களாம்.

ஈசானமுகமானது சிறுபிள்ளைமுகம்போன்று பளிங்குநிறமாய், ஈசானதிசையைப்பார்த்து மேனோக்கியதாயிருக்கும்.

தற்புருஷமுகமானது யௌவனப்பருவத்தையுடையதாய், கோங்கம்பூநிறம்போன்றதாய், கிழக்குநோக்கியதாயிருக்கும்.

அகோரமுகமானது தூங்கியதாடியையுடையதாய், வெளிப்பட்ட பற்களையுடையதாய், கண்டவர்கள் பயங்கொள்ளத்தக்கதாய், மிகக்கரியநிறமாய், விருத்தர்முகம்போன்றதாய் வலத்தோளின்மேற்றெற்குநோக்கியிருக்கும்.

வாமதேவமுகமானது மாதர்முகம்போன்று அவர்கள் ஆபரணங்களையுடையதாய், வெட்சிப்பூநிறத்ததாய், இடத்தோளின்மீது வடக்குநோக்கியதாய் விளங்காநிற்கும்.

சத்தியோசாதமுகமானது அரசர்முகம்போன்றதாய், வெண்மைநிறமுடையதாய், பிடரில் மேற்குநோக்கியதாய் விளங்காநிற்கும்.

## பளிங்குநிறங்கொண்டது.

சாத்துவிககுணம் பளிங்குநிறமும், இராசதஞ் செந்நிறமும், தாமதங்கருநிறமுமுடையன. விட்டுணுவுக்குத்தாமதமும், பிரமாவுக்கு இராசதமுங்காணப்படுகின்றன. உருத்திரனது கிருத்தியம் ஆன்மாக்கள் செய்தகன்மத்தை அவர்களைக்கொண்டு புசிப்பித்துத் தொலைத்துப் பேரின்ப வீடளிக்கவேண்டுமென்னுங் கிருபையின்செயலாகும். ஆகையால் அவரது குணஞ் சாத்துவிகமாயிருக்கும். விட்டுணு தாமதகுணமுடையரென்பதை அவரது நீலமெய்யும், பிரமா இராசதகுணமுடையவரென்பதை அவரது சிவந்தமேனியுந் தெரிவித்துநிற்கின்றன.

சதாசிவமூர்த்தியானவர் பளிங்குநிறமாகிய சுத்தசாத்துவிககுணத்தைப்பொருந்தியது. சுதந்திரரும், சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமாயுள்ளவரும், யோகிகட்கும் அவ்வடிவோடு சென்று ஞானோபதேசஞ்செய்பவருந் தாமென்பதை உணர்த்துதற்காகும்.

ஐந்துநிறங்களையுடைய ஐந்து முகங்களைக்கொண்டது, பஞ்சகிருத்தியத்துக்குக்காரணரும், பஞ்சகர்த்தாக்களை யதிட்டிப்பவருந்தாமென்பதை அறிவித்தற்காகும்.

## தந்திராவதாரம்.

ஆன்மாக்களுடைய ஆணவம், கன்மம்,மாயை ஆகியமும்மலங்களை நீக்கவும், மோட்சத்தைக்கொடுக்கவும், பரமசிவத்தினின்றுந்தோற்றிய சிவஞானமொன்றே இருபத்தெட்டாகமங்களாகப்பிரிந்தது; சதாசிவமூர்த்தியினுடைய ஈசான முகத்தினுள்ள சத்தியோசாதமுகத்தில், கௌசிகமுனிவர் பொருட்டுக்காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதமென்னு மிவ்வைந்தாகமங்களும், வாமதேவமுகத்தில் காசிபமுனிவர்பொருட்டு தீப்தம், சூட்சுமம், சகஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதமென்னு மிவ்வைந்தாகமங்களும், பாரத்துவாசமுனிவர்பொருட்டு அகோரமுகத்தில் விசயம், நிஸ்வாசம், சுவாயம்புவம், அனலம், வீரமென்னுமிவ்வைந்தாகமங்களும், கௌதமமுனிவர்பொருட்டுத் தற்புருஷமுகத்தில் இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களும், அகத்தியமுனிவர்பொரு

ருட்டு ஈசானமுகத்தில் புரோற்கீதம், இலலிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்னுமிவ்விட்டாகமங்களுந்தோற்றின.

## தந்திரமூர்த்தி.

சதாசிவமூர்த்திக்குக்காமிகந்திருவடியும், யோகசங்கணைக்காலும், சிந்தியந்திருவடிவிரல்களும், காரணங்கெண்டைக்காலும், அசிதம்முழந்தாளும், தீப்தந்தொடைகளும், சூட்சமங்குய்யமும், சகச்சிரங்கடித்தானமும், அஞ்சுமான்முதுகும், சுப்பிரபேதங்கொப்பூழும், விசயம்வயிறும், நிஸ்வாசம் இருதயமும், சுவாயம்புவம் நெஞ்சும், ஆக்கினேயக்கண்களும், வீரங்கழுத்தும், இரௌரவம் திருச்செவிகளும், மகுடந் திருமுடியும், விமலந் திருக்கரங்களும், சந்திரஞானம் மார்பும், முகவிம்பந் திருமுகமும், புரோற்கீதந் திருநாக்கும், லலிதம் திருக்கபோலமும், சித்தந்திருநெற்றியும், சந்தானந்திருக்குண்டலமும், சர்வோத்தம் உபவீதமும், பாரமேசுவரம் மாலைகளும், கிரணம் இரத்தினாபரணமும், வாதுளம் பரிவட்டமுமென்றுசொல்லப்படும். காலோத்தம் திருமேற்பூச்சும் மற்றைய உபாகமங்களெல்லாம் பரிமளத்திரவியங்களும் புஷ்பங்களும், சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாம்.

ஆகமம் என்பதற்குப் பதப்பொருள் வருமாறு: ஆ-ஆன்மா, க-மோக்ஷம், மம்-மலநாசம். எனவே ஆன்மாக்களுடைய மலத்தைநீக்கி, மோட்சத்தைக்கொடுப்பது எனப்பொருள்படும்.

## சிவபுராணம்.

"ஆகமமாகிநின்றண்ணிப்பான்றாள்வாழ்க"

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—காந்தாரபஞ்சமம்.

"தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினான்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே."

## வேதங்களின்றோற்றம்.

அதோமுகங்களுன்கினுள்ளும் தற்புருஷத்தினின்று இருக்குவேதமும், அகோரமுகத்தினின்று யசுர்வேதமும், வாம

தேவமுகத்தினின்று சாமவேதமும், சத்தியோசாதமுகத்தினின்று அதர்வணவேதமுந் தோற்றின.

வேதத்துக்கு வழிநூல் மிருதிகளும், பதினெட்டுப்புராணங்களுமாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண்—செவ்வழி.

"பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிவருவண்டினம்
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே."

பண்—கௌசிகம்.

"வேதமுதல்வன்முதலாகவிளங்கிவையம்
ஏதப்படாமையுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த
சூதனொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே."

சிவஞானசித்தியார்.

"ஆரணமாகமங்களருளினாலுருவுகொண்டு
காரணனருளானுகிற்கதிப்பவரில்லையாகு
நாரணன்முதலாயுள்ளசுரர்நரர்நாகர்க்கெல்லாஞ்
சீரணிகுருசந்தானச்செய்தியுஞ்சென்றிடாவே."

இவைகளும் சித்தாந்தசாத்திரங்களும் ஆன்மாக்களுக்கு மெய்யறிவைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாகிய சுத்தவித்தியாதத்துவத்திலிருக்கும். அதிலிருந்து பரம்பரையாக மகேந்திரத்தில் வந்திறங்கி, அதினின்றும் உலகம்எங்கும் பரம்பின.

சைவசமயநெறி.

"இருக்குமவையெல்லாஞ்சுத்தவித்தைதன்னிற்
பரக்குமுலகெங்கும்பார்."

# அங்கபேதம்.*

அங்கபேதங்கள் அங்கம், பிரத்தியங்கம், சாங்கம், உபாங்கம் என நான்குவகைப்படும்.

*வாதுளம்.

## அங்கம்.

சிரசு, முகம், இருதயம் ஆகிய இவை அங்கங்களாம்.

## பிரத்தியங்கம்.

மார்பு, கழுத்து, தனம், புயம், நாபி, குய்யம், உதரம், கண்கள், நாசி, வாய், காதுகள், கைகள், கால்கள், விரல்கள், தொடைகள், முழந்தாள், கணைக்கால்கள் ஆகிய இவை பிரத்தியங்கங்களாம்.

## சாங்கம்.

சூலம், மழு, வாள், குலிசம், அபயம், அக்கினி, அங்குசம், மணி, சர்ப்பம், பாசம் முதலியவை சாங்கங்களாம்.

## உபாங்கம்.

வஸ்திரம், உபவீதம், மாலை, கந்தம், ஆபரணம் முதலியவை உபாங்கங்களாம்.

## திருமுடி.

திருவருளையனுபவிக்கும்போது தற்செயல்தோன்றாது, பரவசப்படுவதே சிவனது திருமுடியாம்.

உண்மைநெறிவிளக்கம்.

"உரையிறந்தசுகமதுவேமுடியாகும்"

## திருமுகம்.

தன்னையுணர்த்தும்பகுதியாகத் தாக்குவதான விஷயபோகங்களை அவன் அவள் அதுவாய் நோக்குமிடமெல்லாம் அவர் அனுக்கிரகத்தையே கண்டு அனுபவிப்பது அவரது திருமுகமாம்.

உண்மைநெறிவிளக்கம்.

"பார்ப்பிடமெங்குஞ்சிவமாய்த்தோன்றலதுமுகமாம்."

## இருதயம்.

முத்தான்மாக்களுக்குமெய்ஞ்ஞானத்தையுணர்த்தும் திருவருட்சத்தி இருதயமாம்.

சதாசிவரூபம்.

"நல்லோருணர்வருஞானமதிதயம்"

## திருவடி.

ஆன்மாவானது எவ்விடத்திலுந்தோன்றாது யானெனதென்னும் அகங்கார மமகாரமாய்நின்றபொய்யறிவுநீங்கத் திருவருள்ஞானம் பிரகாசித்துநிற்றலையே சிவனுடையதிருவடியென்பர்.

### உண்மைநெறிவிளக்கம்.

"பஞ்சயுயிரில்யானெனதென்றறநின்றதடியாம்"

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருமுக்கால்—பண்—சாதாரி.

"இயலுளோர்தொழுதெழுமின்னம்பர்மேவிய
அயனுமாலறிவரியீரே
அயனுமாலறிவரியீருமதடிதொழும்
இயல்புளார்மறுபிறப்பிலரே."

### மாணிக்கவாசகசுவாமிகள்.

"தானந்தமில்லான்சரணடைந்தநாயேனை
ஆனந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
ஆனந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ."

## வித்தியாதேகம்.

சதாசிவமூர்த்தியினுடைய திருமேனி ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக அறிந்து இரட்சிக்குங்குணமாகிய மந்திரமாகையால் மந்திரரூபமாகிய ஞானசத்தி வித்தியாதேகமெனப்படும்.

### ஞானபூசைத்திருவிருத்தம்.

"இன்புருவச்சிவன்படைத்தற்கிச்சைகாலத்
திசைவுறிவித்தியாதேகியாகிமெய்மிற்கிரியை
முன்பெருகக்குடிலையினையடைந்துநாத
முந்துவிந்தக்காமனுநன்மொழிமுறையேவகுத்துத்
தன்பொருவில்மந்திரத்தாற்சதாசிவாதியுதவி"

## திரிநேத்திரம்.

சூரியன், சந்திரன், அக்கினியாகிய முச்சுடர்களையும் அதிட்டிக்கின்றவர்தாமென்பதையும், காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினியம் என்னும் முத்தீவேள்வியில் அவையாவுந்தம்

மிடத்தே பொருந்தியுள்ளனஎன்பதையும், எல்லாக்கருமங்களை யும் அறிந்துசெய்யும் இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்திகளை யுடையவர் தாம்என்பதையும், மூன்றுகண்கள்குறிக்கின்றன.

சிவதருமோத்தரம்.

"சுடர்மூன்றுங்கண்மூன்றாய்த்தொடர்ந்திலங்க"

கபிலதேவனார்.

"ஒளியார்சுடர்மூன்றுங்கண்மூன்றாக்கோடற்கொளியான்"

திருநாவுக்கரசுசுவாமிகள்.

"மூன்றுகண்ணினன்றீத்தொழின்மூன்றினன்
மூன்றுபோதுமென்சிந்தையுண்மூழ்குமே"

பட்டணத்தடிகள்.

"முக்கண்ணென்பதுமுத்தீவேள்வியிற்
றொக்கதென்னிடையென்பதோர்சுருக்கே"

சதாசிவரூபம்.

"இவர்தா—மெல்லாமறியுமியல்பதுநயனம்"

## திரிசூலம்.

ஆரணி, செனனி, இரோதயித்திரி என்னும் முச்சத்தி வடிவினதாகிய மூன்றுகவர்களையுடைய சூலப்படையானது, முத் தொழிலையுடையவரென்பதையும் மும்மலங்களை நீக்குபவரென் பதையும் குறிக்கும்.

ஆரணியானது *சங்காரகிருத்தியத்தையுடையதும், ஆ ன்மாவைத்தத்துவத்தினின்றும், தத்துவாந்தரத்தையடைவிப்ப துமாயிருக்கும்.

செனனியானது சிருட்டித்தொழிலுக்குக் காரணமாயிரு க்கும். போகங்களில் நியதிசெய்வது இரோதயித்திரியெனப்படும்.

வாகீசப்பெருந்தகையார்.

"மூன்றுமூர்த்தியுணின்றியலுந்தொழில்
மூன்றுமாயினமூவிலைச்சூலத்தன்"

பட்டணத்துப்பிள்ளையார்.

"மூவிலையொருதாட்சூலமேந்துதன்
மூவருமியானெனமொழிந்தவாறே."

* பௌஷ்கரம்.

திருவாசகம்.

"கோற்றேன்மொழிக்கிள்ளாய்கோதில்பெருந்துறைக்கோன்
மாற்றாரைவெல்லும்படைபகரா—யேற்றா
ரழுக்கடையாநெஞ்சுருகமும்மலங்கள்பாயுங்
கழுக்கடைகாண்கைக்கொள்படை."

## மழு.

*பரைக்குமேலானவரும், லயசிவமாயிருப்பவருந் தாமே ன்பதை உணர்த்துவதற்காகப் பராசத்திரூபமானதும், லயத்தானமானதுமாகிய மழுவை யேந்தினர்.

## வாள்.

சனனவேரின்கொடியைய றுப்பவரும், எல்லாரையுமடக்கியாளலால் வந்தபுகழையுடையவருந் தாமென்பதை அறிவித்தற்காக ஞானவடிவாகிய வாளை யேந்தினர்.

திருவாசகம்.

"ஞானவாளேந்துமையர்."

## குலிசம்.

ஒருவராலுங்கெடுத்தற்கியலாத சுத்தமாயையை யதிட்டிக்கும் பேதகுணத்தையுடையவர் தாமென்பதை அறிவித்தற்காகத் துட்டர்களைப்பேதிக்கின்றகுணமாகிய குலிசத்தையேந்தினர்.

## அபயம்.

உலகத்துன்பத்துக்குப் பயப்படவேண்டாமென்றனுக்கிரகஞ்செய்யுங் குணத்தை அபயங்குறிக்கும்.

## அக்கினி.

ஆன்மாக்களைப்பந்தித்த பாசங்களை நீறாக்குபவர்தாமென்பதை உணர்த்துவதற்காகச் சங்காரவடிவாகிய அக்கினியைத்தாங்கினர்.

## அங்குசம்.

விவர்ணகுணத்தையுடையரென்பதையும், திரோபவகிருத்தியத்தைச் செய்பவரென்பதையும் அறிவித்தல்காரணமாக அங்குசத்தை யேந்தினர்.

---

*வாதுளம்-தத்துவபேதப்படலம்.

## மணி.

நாதத்துவத்திற்குத்தலைவர் தாமென்பதை உணர்த்துவதற்காக, நாதமயமாகிய மணியையேந்தினர்.

## சர்ப்பம்.

சர்ப்பத்தினுடையவிரிவு சுருக்கம்போலப்பிரபஞ்சத்தோற்றமொடுக்கமிருத்தலால், உலகத்துக்கு நிமித்தகாரணர்தாமென்பதை அறிவித்தற்காகக் குண்டலினிசத்திரூபமாகிய பாம்பையேந்தினர்.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருவிருத்தம்.

"போர்ப்பனையானையுரித்தபிரான்பொறிவாயரவஞ்
சேர்ப்பதுவானத்திரைகடல்சூழுலகம்மிதனைக்
காப்பதுகாரணமாகக்கொண்டான்கண்டியூரிருந்த
கூர்ப்புடையொள்வாண்மழுவனையாமண்டர்கூறுவதே."

## பாசம்.

ஆன்மாக்களுக்கு மலத்தையூட்டுவிப்பவர் தாமென்பதை அறிவித்தல் காரணமாக மாயாரூபமாகிய பாசத்தைத்திருக்கரத்திலேந்தினர்.

## மான்.

மானினுநான்குகால்களும் நான்குவேதங்களாகையால் வேதப்பொருளாயுள்ளவர்தாமென்பதை உணர்த்துதல்காரணமாக மானையேந்தினர்.

### பட்டணத்தடிகள்.

"வேதமான்மறியேந்துதன்மற்றத
ஞதனுனெனநவிற்துமாறே."

## வரதம்.

ஆன்மாக்களின் கன்மத்துக்கீடாகப் போகமுத்திகளைக்கொடுப்பவர் தாயென்பதைஅறிவித்தற்காக வரதகரத்தைக்கொண்டனர்.

## புன்முறுவல்.

சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியமாகிய மூவகைத்துயரத்தையுங் கெடுத்தருளுங்காரணமாக இள்மையானபுன்சிரிப்பைக்கொண்டனர்.

சிவதருமோத்தரம்.

"இடர்மூன்றுமிழித்தருளுமிளமூறுவன்முகமலரிலங்க"

## உபவீதம், சிகை.

வேதாந்தத்தால்வரும் சிவஞானப்பொருளாயுள்ளவரும் அதனைக்கொடுப்பவருந் தாமென்பதை அறிவித்தற்காகஉபவீதத்தையும், ஞானரூபியாயுள்ளவர் தாமென்பதையறிவித்தற்காக ஞானக்குறியாகியசிகையையுங்கொண்டனர்.

திருமந்திரம்.

"நூலுஞ்சிகையுநுவலிற்பிரமமோ
நூலதுகார்ப்பாசநுண்சிகைகேசமாம்
நூலத்துவேதாந்தநுண்சிகைஞானமாம்
நூலுடையந்தணர்காணுநுவலிலே."

## சிலம்பும் வீரக்கழலும்.

பக்குவான்மாக்களை மோக்ஷமாகிய பேரின்பவெள்ளத்திலழுத்துதற்கூன்றிய திருவடியினும், அடியாருள்ளத்திற்கலந்தின்பபூரணமாயிருக்கின்ற ஞானகுஞ்சிதபாதத்தினும் திருவருட்பிரகாசம்பொருந்திய சிலம்பையும், வீரக்கழலையும் பிரியாமற்றரித்தமை ஆன்மாக்களைச்சோரமாகத் தன்வசப்படுத்துகின்ற முன்னைவினையைவென்று பிறவித்துன்பத்தையறுக்கும் மலவைரி தாமென்பதையுணர்த்துவதற்காகும்.

போற்றிப்பஃறொடை.

"வீட்டின்ப
வெள்ளத்தழுத்திவிடுந்தாளினுமடியா
ருள்ளத்தினும்பிரியாவொண்சிலம்பும்—கள்ளவினை
வென்றுபிறப்பறுக்கச்சாத்தியவீரக்கழலும்"

சிவதருமோத்தரம்.

"பரிபுரமுமிருவினையும்பறித்தருளென்றிருபதமும்பற்றியொற்றப்
பொருகழலுந்திருவடியிற்பொலிந்திலங்கப்புடைதொழுவார்புலங்கட்கேம்
பருகியவருள்ளத்தரியபரமபலமளித்தொழித்துப்பாசமெல்லாம்."

கந்தபுராணம்.

"நெஞ்சலஞ்சலமறும்பிறவிநீடுவினையிற்
சஞ்சலஞ்சலமகன்றதனதன்பர்குழுவை

அஞ்சலஞ்சவெலனுமஞ்சொலெனவிஞ்சுசரண்மேற்
செஞ்சிலம்பொடுபொலங்கழல்சிலம்பமிகவே."

## க ங் கை.

உமாதேவியாரது திருக்கரத்தினின்றுந்தோற்றிய கங்கையானது, உலகத்தையழிக்கும்படிவர அதனுடையவேகத்தைக்குறைத்துத் தமது திருச்சடையிற்றரித்தனர்.

கங்கையைத்தரித்தமையால் ஆன்மாக்கள் ஆனந்தக்கடலில் ஆழ்கின்றனர்.

திருவாசகம்.

"செய்யவாய்ப்பைஞ்சிறகிற்செல்வீநஞ்சிந்தைசேர்
ஐயன்பெருந்துறையானாறுரையாய்—தையலாய்
வான்வந்தசிந்தைமலங்கழுவவந்திழியும்
ஆனந்தங்காணுடையானாறு."

உபதேசகாண்டம்.

"திரைக்குநீர்க்கங்கையைச்செறிக்குந்தோற்றத்தால்
தரைப்படுமுயிர்த்தொகைதமதுசிந்தையைக்
கரைக்குமானந்தமாகடலினாழ்வதே,"

திருவாசகம்.

"மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ".

சிவபெருமான் இவைகளைக்கொண்டமை தமது பிரயோசனத்தைக்கருதியன்று; எதற்காகக்கொண்டனரெனில், ஆன்மாக்கள் அஞ்ஞானவளர்ச்சியினால் நாம்பிரமமெனநினைத்தகந்தை மமதைகொண்டு நரகத்திலாழாது பதியுண்மைகளையறிந்து, தம்மையடைந்துய்யும்படிகொண்ட கிருபையாகும்:

சிவஞானசித்தியார்.

"உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்
கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கந்
தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி
யருளுருவுயிருக்கென்றேயாக்கினனசிந்தனன்றே."

கந்தபுராணம்.

"ஆதலாற்றனைவியப்பதற்றன்றவையணித
லீதலாதொருதிறமுளதியாவருமெவர்க்கு
நாதனேயிவனென்றுதன்பாங்கரேநண்ணித்
தீதெலாமொரீஇமுத்திபெற்றுய்ந்திடுஞ்செயலே."

---

# மந்திரமூர்த்தி.

உலகத்திற்குமுதற்காரணங்கள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயையென மூன்றாகும். இவற்றுள், மேலாகியவிந்துவிற் சிவசத்திசேரப்பட்டுநிற்றலானும், சிவசத்தி பிரேரித்துப்பயன்கொடுத்தற்பொருட்டு அதிட்டித்தலானும், மெய்யன்போடு நினைப்பவர்களுக்கு அதனால் போகமோட்சங்களைக்கொடுத்தலானும், மந்திரத்திருமேனியை ஆகமங்கள்விதந்துகூறுகின்றன.

முற்படத்தோற்றியதனுலும், மந்திரங்களுக்குமூலமாதலாலும், அவைகளுள்ளும் பஞ்சப்பிரமமந்திரத்தைத் திருமேனியாகவிதந்தெடுத்துக்கூறியதென்க.

ஈசானம்.

எல்லாஉலகங்களையும்அனுக்கிரகஞ்செய்யும் ஐசுவரியகுணத்தோடுகூடியதனுலும், எல்லாமார்க்கத்திற்கும் மேலானஇடத்திலிருப்பதாலும் ஈசானமூர்த்தா எனப்படும்.

தற்புருஷம்.

ஆன்மாக்களுடையசரீரங்களையதிட்டித்துநின்று, ஞானத்தைப்பிரகாசிக்கச்செய்து மலத்தைநீக்குதலால், தத்புருஷவத்திரமெனப்படும்.

அகோரம்.

ஞானமாகியசிவரூபமானது கோரமாகியமலத்திற்கு விரோதியாயிருந்து அதைச்சாந்தப்படுத்துவதால் அகோரஇருதயமெனப்படும்

## வாமதேவம்.

ஆன்மாக்களது கன்மத்துக்கேற்பத் தனுகரணபுவனபோகங்களைக்கொடுத்துத் தருமமுதலியவற்றை யனுபவிக்கச்செய்யுங்கிருபையானது வாமதேவகுஹ்யமெனப்படும்.

## சத்தியோசாதம்.

இச்சாசத்தியினாலே சகலருக்கும், பிரளயாகலருக்கும் உடம்பையுண்டாக்குகின்றமையாலும் விஞ்ஞானகலருக்குவைந்தவசரீரத்தையுண்டாக்குகின்றபடியாலும் தொழிலின்வேகத்தாற் சத்தியோசாதமென்றுசொல்லப்படும்.

### சிவஞானசித்தியார்.

"மந்திரமதனிற்பஞ்சமந்திரம்வடிவமாகத்
தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனச்சாற்றக்கேணீ
முந்தியதோற்றத்தாலுமந்திரமூலத்தாலு
மந்தமில்சத்தியாதிக்கிசைத்தலுமாகுமன்றே."

இதுமிருகேந்திராகமத்திலும் பௌஷ்கராகமத்திலுங்காணப்பட்டது.

---

# கலாமூர்த்தி.

சிவபெருமான் முப்பத்தெட்டுக்கலாசத்திகளைத் திருமேனியாகக்கொண்டமையாற் கலாமூர்த்தியென்னுந்திருநாமத்தைப் பொருந்தினர். ஈசானத்தின்பகுதியாகும் *ஈசானியின் ஐந்துகூறுகளாகிய சசினி ஊர்த்துவசிரசாகவும், அங்கதை கிழக்குச்சிரசாகவும், இட்டை தெற்குச்சிரசாகவும், மரீசி வடக்குச்சிரசாகவும், சுவாலினி மேற்குச்சிரசாகவும், தற்புருஷத்தின் பகுதியாகும் பூரணியின் நான்குகூறுகளாகிய †சாந்தி கிழக்குமுகமாகவும், வித்தை தெற்குமுகமாகவும், பிரதிட்டை வடக்குமுகமாகவும், நிவிர்த்தி மேற்குமுகமாகவும், அகோரத்தின்பகுதியாகும் ஆர்த்தியின்எட்டுக்கூறுகளாகிய தமை இருதயமாகவும், மோகை கண்டமாகவும், சயை வலத்தோளாகவும், நிட்டை இடத்

*சிவஞானபோதச்சிற்றுரை கு-ந. அதி-ச.

†அவ்வியத்தகலையை ஊர்த்துவமுகமாக அகோரசிவாசாரியர் கூறியிருக்கின்றனர்.

தோளாகவும், மிருத்யு கொப்பூழாகவும், மாயை வயிறாகவும், பயை முதுகாகவும், சுரை மார்பாகவும், வாமதேவத்தின் பகுதியாகும் வாமையின் பதின்மூன்றுகூறுகளாகிய இரசை குய்யமாகவும், இரட்சை கோசமாகவும், இரதி வலத்தொடையாகவும், பாலி இடத்தொடையாகவும், காமை வல முழந்தாளாகவும், சம்யமினி இட முழந்தாளாகவும், பிரியை வலக்கணைக்காலாகவும், புத்தி இடக்கணைக்காலாகவும், காரி வலக்குதமாகவும், தாத்திரி இடக்குதமாகவும், பிராமணி கடியாகவும், மோகினி வலப்பக்கமாகவும், பவை இடப்பக்கமாகவும், சத்தியோசாதத்தின்பகுதியாகும் மூர்த்தியின் எட்டுக்கூறுகளாகிய சித்தி வலப்பாதமாகவும், இருத்தி இடப்பாதமாகவும், தியுதி வல உள்ளங்கையாகவும், இலட்சுமி இட உள்ளங்கையாகவும், மேதை மூக்காகவும், காந்தி திருமுடியாகவும், சுவதை வலப்புயமாகவும், திருதி இடப்புயமாகவுமிருக்கும்.

இங்ஙனம் முப்பத்தெட்டுக் கலாசத்திரூபமாகிய உறுப்புக்களையுடைய பராசத்தி நிட்களசிவத்திற்குச் சுதந்திரமாகையால் இவ்வுறுப்புக்களுடன் கூடிய கருமசாதாக்கியருடைய திருநாமஞ்சகளநிட்களமாம்.

சதாசிவரூபம்.

"இருமூர் முப்பத் தெண்கலை மயமா
முருவடி வறுசிவ னுக்குண் டாகையிற்
சிறக்கு மைம்முகத் தவன்திரு நாம
நிறக்குஞ் சகள நிட்கள மெனவே."

---

# அத்துவாமூர்த்தி.

சாந்தியதீதை திருமுடியாகவும், சாந்தி திருமுகமாகவும், வித்தை மார்பாகவும், பிரதிட்டை குய்யமாகவும், நிவிர்த்தி திருவடியாகவும்; வர்ணாத்துவா தோலாகவும், புவனாத்துவா மயிராகவும், மந்திராத்துவா உதிரமாகவும், பதாத்துவா தசையாகவும், தத்துவாத்துவா சுக்கிலம் அத்தி நிணம் மூளை முதலியதாதுக்களாகவும், சிவபெருமானுக்கு ஆறத்துவாக்களும் திருவுருவமாக அமைந்துள்ளன. பதினொருமந்திரங்கள் எண்பத்தொரு பதங்களினால் வியாபித்திருக்கும். எண்பத்தொருபதங்க

ள். ஐம்பத்தொரு வர்ணங்களினல் வியாபித்திருக்கும். ஐம்பத்தொருவர்ணங்கள் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களினல்வியாபித்திருக்கும். இருநூற்றிருபத்துநான்கு புவனங்கள் முப்பத்தாறுதத்துவங்களினல் வியாபித்திருக்கும். தத்துவங்கள் ஐந்துகலைகளினல் வியாபித்திருக்கும். ஐந்துகலைகள் ஆனைக்காரணமாகிய சிவசத்தியினல் வியாபித்திருக்கும். சிவசத்தி சிவத்திலடங்கும்.

இங்ஙனம், ஒன்றிலொன்று வியாபித்திருத்தலால் மந்திரங்கள்வியாப்பியம் பதங்கள்வியாபகம்; பதங்கள்வியாப்பியம் வர்ணங்கள்வியாபகம்; வர்ணங்கள் வியாப்பியம் புவனங்கள் வியாபகம்; புவனங்கள் வியாப்பியம் தத்துவங்கள்வியாபகம்; தத்துவங்கள்வியாப்பியம் கலைகள் வியாபகம்; கலைகள்வியாப்பியம் சத்திவியாபகம்; சத்திவியாப்பியம் சிவன் சர்வவியாபகர் ஆதலால், ஆறத்துவாக்களாலு மேற்பட்டகன்மங்களைப் புசிப்பித்துத்தொலைப்பவரும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரென்னும் மூவகையான்மாக்களுக்குமுள்ளபாசத்தை ஞானசாரியராகவந்து, அத்துவசுத்திசகிதமாக ஞானசத்தியாலறுத்துச் சிவஞானத்தையுண்டாக்கிச் சர்வஞ்ஞத்துவமுதலிய சுத்தகுணங்களாறையும் பிரகாசிப்பித்துப் பிறவியாகிய சமுத்திரத்தினின்றுங் கரையேறச்செய்து முத்தியிற்கூட்டுபவரும் தாமென்பதை விளக்குதல்காரணமாக அத்துவாமூர்த்தியாயினர்.

சிவஞானசித்தியார்.

"அத்துவாமூர்த்தியாகவுரைகுவதென்னையென்னில்
நித்தனுய்நிறைந்தவற்றினீங்கிடாநிலைமையானுஞ்
சித்துடனசித்திற்கெல்லாஞ்சேட்டிதந்தலானும்
வைத்ததாமத்துவாவும்வடிவெனமறைகளெல்லாம்."

---

## மாத்ருகாமூர்த்தி.

ஞானசத்தியானது சுத்தமாயையையதிட்டிக்கநாதமும், நாதத்தில் அட்சரவிந்துவும், விந்துவில் சிவபெருமானது இச்சாசத்தியினல் அம்பிகையென்னும் விந்துகலாசத்தியும், அதினின்றும் குண்டலினிவடிவாகிய வாமை, தண்டாகாரமாயிருக்கும் சியே

ட்டை, கலைக்கொம்பர் வடிவாகிய இரௌத்திரி என்னும் முச்சத்திகளும், அவற்றிலிருந்து சயை, விசயை, அசிதை, பராசிதை, நிவிர்த்தி, பிரதிட்டை வித்தை, சாந்தி, இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதையென்னுஞ்சத்திகளும் இவற்றில் ஐம்பத்தொரு அட்சரங்களும் தோற்றின. இவ்வட்சரங்களுக்குப் பரமசிவன் நிமித்தகாரணர். பிந்துதுணைக்காரணம், சிவசத்திமுதற்காரணமாகும். காரியரூபமாகிய அட்சரங்கள் காரணத்தோடுகூடியிருக்கும். இவை உலகத்திற்கு மாதாவாயிருப்பதால் மாத்ருகையெனப்படும் ஞானசத்தி என்பர்.

அ, சிரசும், ஆ, முகமும், இ, வலக்கண்ணும், ஈ, இடக்கண்ணும், உ, வலக்காதும், ஊ, இடக்காதும், ஐ, வலக்கபோலமும், ஐ, இடக்கபோலமும், ரு, வலநாசாபுடமும், ரூ, இடநாசாபுடமும், லு, மேலுதடும், லூ, கீழுதடும், ஒ, மேல்வாய்ப்பல்லும், ஔ, கீழ்வாய்ப்பல்லும், அம், தாலுமூலமும், அ:, தாலுஅக்கிரமும், க, வலப்புயமும், வ, வலமுழங்கையும், ங, வலமணிபந்தமும், வ, வலஉள்ளங்கைத்தலமும், ஊ, வலவிரல்நுதியும், வ, இடப்புயமும், ஊ, இடமுழங்கையும், ஜ, வாமமணிபந்தமும், ஜ, வாமஉள்ளங்கையும், ஞ, வாமாங்குல்யக்கிரமும், ட, வலப்பாதமும், ௦, வலத்தொடைமூலமும், ஊ, வலமுழந்தாளும், ஊ, வலக்கணைக்காலும், ண, வலக்கால்விரல்நுதியும், த, இடப்பாதமும், ய, இடத்தொடைமூலமும், ஊ, இடமுழந்தாளும், ய, இடக்கணைக்காலும், ந, இடக்கால்விரல்நுதியும், வ, வலப்பக்கமும், ஹ, இடப்பக்கமும், வ, முதுகும், ஊ, நாபியும், உ, வயிறும், ய, இருதயமும், ர, வலஅம்ஸமும், ல, இடவம்ஸமும், வ, கழுத்தும், ஶ, வலக்கக்கமும், ஷ, இடக்கக்கமும், ஸ, வலக்காலின்மேற்பக்கமும், ஹ, இடக்காலின்மேற்பக்கமும், ள, இருதயமுதற் சிரசந்தமும், க்ஷ, இருதயமுதற் பாதாந்தமுமாகிய இடங்களாக மாதிருகையாகிய ஞானசத்தியைத் திருமேனியாகக்கொண்டு, சொற்பிரபஞ்சங்களை நடைபெறச்செய்வர்.

திருமந்திரம்.

"ஐம்பதெழுத்தே அனைத்துவேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்தாகமங்களும்

ஐம்பதெழுத்தினடைவையறிந்தபின்
ஐம்பதெழுத்தேயஞ்செழுத்தாமே."

*ஊகாரம் ஒகாரத்துளடங்குமென்பதுபற்றிச்சிலஆகமங்களில் வன்னங்கள் ஐம்பது என்றுகூறப்படும்.

---

# மனோன்மணி.

விந்துசத்தியின் அம்சமாக உமாசத்தியும், அவரின் அம்சமாக அம்பிகையும், அவரினம்சமாகக் கணாம்பிகையும், அவரினம்சமாய் ஈசுவரியும், அவரினம்சமாய் மனோன்மனியுந் தோன்றினர்.

மனோன்மனி சிவமூர்த்தியும், பக்குவான்மாக்களுடைய மலத்தைநீக்கி நால்வகையாகிய சத்திநிபாதத்தைச்செய்து, ஆன்மாக்களைச் சிவத்தோடுசேர்க்கின்றவரும், சதாசிவமூர்த்திக்குச் சத்தியுமாயுள்ளவர்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருக்குறுந்தொகை.

"எயிலானையெனிச்சையகம்படிக்
கோயிலானைக்குணப்பெருங்குன்றினை
வாயிலானைமனோன்மனியைப்பெற்ற
தாயிலானைத்தழுவுமென்னாவியே."

மாணிக்கவாசகசுவாமிகள்.

"உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே."

மனோன்மனியானவர் சரசுவதியையும் இலக்குமியையும் இருகண்களாகவுடையவராயும், நான்குதிருக்கரங்களிலும் தாமரைப்பூ, நீலோற்பலம் அபயவரதங்களையுடையவராயும், பானாம், அபானானமாகிய இருதனங்களையுடையவராயுமிருப்பர்.

---

## மகேசுவரமூர்த்தி.

சதாசிவமூர்த்தியினுடைய அம்சமாயுள்ளவரும், உருவத்திருமேனியையுடையவரும், பஞ்சகிருத்திய அதிகாரியும், இருபத்தைந்து வடிவங்களாயுள்ளவரும், பசுக்களாகிய விட்டுணுமுதலியோரை அனுக்கிரகிப்பவரும், மெய்யன்போடுதுதிக்கும் ஆன்மாக்களுடையமலத்தைநீக்கிமோட்சத்தைக்கொடுப்பவரும், சகளநிஷ்களம், சகளம் என்னுந்திருமேனிகளைப்பொருந்திப் பேதமற்று ஒருபொருளாயுள்ளவரும், மூன்று திருக்கண்களையும், நான்கு திருக்கரங்களிலும் மான், மழு, வரதம், அபயமாகிய இவைகளையுடையவரும், மகேசுவரியென்னுஞ்சத்தியையுடையவருமாகிய மகேசுவரமூர்த்தி ஈசுவரதத்துவத்திலிருப்பர்.

## இருபத்தைந்து மூர்த்தங்கள்.

சதாசிவமூர்த்தியினுடைய ஈசானமுகத்தில் சோமாஸ்கந்தர், சபாபதி, இடபாரூடர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரரென்னும் மூர்த்திகள்தோன்றினர்.

தற்புருஷமுகத்தில் பிக்ஷாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராரி என்னும் மூர்த்திகள்தோன்றினர்.

அகோரமுகத்தில் கசாரி, வீரபத்திரர், தக்ஷிணாமூர்த்தி, கிராதர், நீலகண்டர் என்னும்மூர்த்திகள் தோன்றினர்.

வாமதேவமுகத்தில் கங்காளர், சக்கரதானர், கெசமுகானுக்கிரகர், சண்டேசானுக்கிரகர், ஏகபாதர் என்னுமூர்த்திகள் தோன்றினர்.

சத்தியோசாதமுகத்தில் இலிங்கோற்பவர், சுகாசீனர், உமாமகேசுவரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுவரர் என்னும் மூர்த்திகள் தோன்றினர்.

சிவபெருமான் இம்மூர்த்தங்களைக் கொண்டதற்குக்காரணம் துட்டர்களை* நிக்கிரகித்தற்கும், சிட்டர்களையனுக்கிரகித்தற்குமேயாம்.

---

*நிக்கிரகம், அனுக்கிரகம், ஊனநடனம், ஞானநடனம் என்னலுமாம்.

சிவஞானசித்தியார்.

"போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிதலோரார்
யோகியாயோகமுத்தியுதவுதலதுவுமோரார்
வேகியானாற்போற்செய்தவினையினைவீட்டலோரார்
ஊகியாமூடரெல்லாமும்பரினொருவனென்பர்."

திருநாவுக்கரசுசுவாமிகள்
தனித்திருக்குறுந்தொகை.

"இரண்டுமாமவர்க்குள்ளனசெய்தொழில்
இரண்டுமாமவர்க்குள்ளனகோலங்கள்
இரண்டுமில்லிளமானெமையாளுகந்
திரண்டுபோதுமென்சிந்தையுள்வைகுமே."

## க. சந்திரசேகரர்.

தக்கனதுசாபத்தாலிடர்ப்பட்டுவந்தசந்திரன் தனதுதுன்பத்தைச்சொல்லியாசிக்கச் சிவபெருமான் தேயாமலிருந்தவொரு கலையைச்சூடி அவனைப்பாதுகாத்தனராகையால் சந்திரசேகரமூர்த்தியாயினர்.

சுந்தரமூர்த்திநாயனார்.
பண்—காந்தாரம்.

"யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணில்
தாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே"

சந்திரனையணிந்தது எல்லாமறிபவர் (சர்வஞ்ஞத்துவர்) தாமென்பதையும், ஆன்மாக்களதுபிறப்பிறப்புக்களைநீக்கி மேலானமுத்தியைக்கொடுப்பவர்தாமென்பதையும் அறிவித்தஉண்மையாகும்.

பட்டணத்தடிகள்.

"தூமதிசடைமிசைச்சூடுதறுநெறி
யாமதியானெனவமைத்தவாறே."

திருஞானசம்பந்தசுவாமிகள்.
பண்-செவ்வழி.

"கூறைவுதூர்யகுளிர்திங்கள்சூடிக்குனித்தான்வினை
பறைவதாக்கும்பரமன்பகவன்பார்ந்தசடை

இறைவனெங்கள்பெருமானிடம்போலிரும்பைதனுள்
மறைகள்வல்லார்வணங்கித்தொழுகின்றமாகாளமே."

## ௨. உமாமகேசுவரர்.

சிவபெருமான் தேவர்களுடைய வேண்டுதலுக்கிரங்கிச் சிருட்டித்தொழில்நிறைவேறுவதற்காகவும், உயிர்களுக்குப்போகத்தையூட்டுவதற்காகவும் தமது திருவருள்ச்சத்தியாக்கி இடப்பாகத்திலிருத்தினமையால் உமாமகேசுவரமூர்த்தியாயினர்.

திருவாசகம்.

"தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ."

## ௩. இடபாரூடர்.

தருமதேவதையும், ஞானமும், விட்டுணுவும் ஒவ்வோர் காலத்தில் இடபரூபங்கொண்டு சுமந்தனரெனக் கூறப்படலால் தருமரூபரும், தருமபரிபாலகரும், ஞானமயமானவரும் விட்டுணுவுக்கு மேலானவருந் தாமென்பதையறிவித்தல்காரணமாக இடபாரூடமூர்த்தியாயினர்.

சிவபெருமான் தருமரூபரானமையால் ஆன்மாக்களடைதற்கரிய தருமமே முத்தியைப்பயப்பதெனக் கருதிச்செய்கின்றனர்.

தருமதேவதை இடபமானது.

கந்தபுராணம்.

"ஆறுலாஞ்சடையண்ணலைச்சேர்வனே
வீறிலாதென்றுமுய்ந்திடுவேனெனாத்
தேறியேயறத்தெய்வதஞ்செங்கணே
றேறதாயொரெழிலுருக்கொண்டதே."

பட்டணத்தடிகள்.

"அறனுருவாகியவானேறூர்தல்
இறையவனியானென்னவியற்றுமாறே."

ஞானமும் விட்டுணுவும் இடபமானது.

கந்தபுராணம்.

"சின்மயத்தனிமால்விடையேறினன்சிவனே"

வாகீசப்பெருந்தகையார்.

"உணர்வென்னுமூர்வதுடையாய்போற்றி"

திருவாசகம்.

"கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேறுதே
யிடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடி
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருந்தாண்டகம்.

"உயிராவணமிருந்துற்றுநோக்கி
யுள்ளக்கிழியினுருவெழுதி
உயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தா
லுணரப்படுவாரோடொட்டிவாழ்தி
அயிராவணமேறாதானேறேறி
யமரர்நாடாளாதேயாரூராண்ட
அயிராவணமேயென்னம்மானேநின்
னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே."

௬. நடேசர்.

விட்டுணுமுதலியோராலறிதற்கரியசபாநாயகர், வியாக்கிரபாதர் பதஞ்சலிமுதலியோர் முப்போதுங்கண்டு, அன்புடன்மகிழும்படி, வேதங்களுமறிதற்கரிய சோதிவடிவாகிய கனகசபையில் ஆன்மாக்களுடைய மும்மலங்களையுநீக்கி அத்துவிதமுத்தியைக்கொடுக்குங்காரணமாகப் பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகக்கொண்டு, சிவகாமியம்மையார் இடப்பாகத்திற்பொருந்தப் பஞ்சகிருத்தியநிருத்தத்தை அநவரதமுஞ்செய்தருளுவர்.

பஞ்சாக்கரத்தைத் திருமேனியாகக்கொண்டதை.

"ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே
நாடுந்திருவடியிலேநகரம்—கூடு
மகாரமுதாம்வளர்தோள்சிகாரம்
பகருமுகம்வாமுடியப்பார்."

எனவும்,

"சேர்க்குந்துடிசிகரஞ்சிக்கனவாவீசுகர
மார்க்கும்யகரமபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கிநகாமடிக்கீழ்முயலகனார்
தங்குமகரமதுதான்."

எனவும் வரும் உண்மைவிளக்கச்செய்யுளாலறிக.

அவரது திருக்கரத்திலிருக்கும் உடுக்கை சிருட்டியையும், அபயம் காத்தலையும், அக்கினி சங்காரத்தையும், முயலகன் மீது மிதித்ததிருவடி மூலமலசத்திகளை அமிழ்த்துதலாகிய திரோபவகிருத்தியத்தையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கும். இவைகள் சிற்றறிவினராகிய ஆன்மாக்களுக்குண்மைப்பொருளை உணர்த்திஉய்விக்கும்படிகொண்ட திருவருட்குறிகளாகும்.

உண்மைவிளக்கம்.

"தோற்றந்துடியதனிற்றோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலேசங்காரம்—ஊற்றமா
யூன்றுமலர்ப்பதத்திலுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தேநாடு."

"மாயைதனையுதறிவல்வினையைச்சுட்டுமலஞ்
சாயவமுக்கியருடானெடுத்து—நேயத்தா
லானந்தவாரிதியிலான்மாவைத்தானழுத்தல்
தானெந்தையார்பரதந்தான்".

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருவிருத்தம்.

"போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
ஆற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
ஏற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே."

"குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போன்மேனியிற்பால்வெண்ணீறும்
இனித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே".

இது எழுவகைநடனங்கட்கும் முதலாவதாகிய ஆநந்த தாண்டவமாம்.

கோபமாகிய அஞ்ஞானத்திலே தமதுசிவந்ததிருவடியை யூன்றி ஆனந்தம்பெருகுகின்ற மேலானநடனத்தைப் புரிதலால் நீங்கற்கரியசந்தோஷத்தோடு உலககிருத்தியங்கள்நிகழுகின்றன.

இங்ஙனமன்றி எல்லாவுலகங்களையுந் திருமேனியாகக் கொண்டுநின்றும் பஞ்சகிருத்தியநிருத்தத்தைச்செய்தருளுவர்.

பட்டணத்துப்பிள்ளையார்.

"அடியொன்றுபாதலமேழிற்குமப்புறப்பட்டதிப்பான்
முடியொன்றிவ்வண்டங்களெல்லாங்கடந்ததுமுற்றும்வெள்ளைப்
பொடியொன்றுதோளெட்டுத்திக்கின்புறத்தனபூங்கரும்பின்
செடியொன்றுதில்லைச்சிற்றம்பலத்தான்றன்றிருநடமே."

௫. கல்யாணசுந்தரர்.

எல்லையற்றபுத்திரர்களாகிய ஆன்மாக்கள்மோட்சத்தையடையவும், இமயமலையரசனது தவத்தை நிறைவேற்றவும், சிவபெருமானதுகிருபையினால் உமாதேவியார்திருவுள்ளங்கொண்டு, அவரதுகட்டளைப்படி சிறுபிள்ளையுருவத்துடன்சென்று, இமயமலையிற்பொருந்திய பத்மையென்னுந்தடாகத்திற்புட்பித்திருந்த பதுமாசனத்தின்மீதாகவீற்றிருந்தனர். உமாதேவியார்தமக்குப் புத்திரியாகவேண்டுமென்றுநினைத்துத் தவஞ்செய்த அரசன் அவரைக்கண்டுமகிழ்ந்து ஆனந்தபாஷ்பஞ்சொரியச்சென்றுவணங்கிக் கைகளாலெடுத்துச் சிரசாற்சுமந்துசென்று, மேனையுடையகையிற்கொடுத்து நிகழ்ந்தவைகளைக்கூறினன். மேனை உலகமாதாவாகியஉமாதேவியாரை வணங்கிப்போற்றினள்.

உமாதேவியார் சிவபெருமானைக்குறித்துத்தவஞ்செய்யச் சிவபெருமான் அம்மையார்தம்மிடத்துக்கொண்ட அன்பை உலகினர்களுக்குக்காண்பித்து உலகத்திலே இல்வாழ்க்கைநிகழ்தற்பொருட்டுத் திருமணஞ்செய்தருளினர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—தக்கராகம்.

"குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுசென்றவடன்குணத்தினைநன்கறிந்து
விரும்புவரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில்
அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிமயில்கணடமாடமெணிபொழில்சூழயலின்
கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்
கமலங்கண்முகமலருங்கலையநல்லூர்காணே."

திருவாசகம்.

"மலையரையன்பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டானென்னுமதுவென்னேடீ

யுலகறியத்தீவேளாதொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண்சாழலோ."

சிவஞானசித்தியார்.

"கண்ணுதல்யோகிருப்பக்காமனின்றிடவேட்கைக்கு
விண்ணுறுதேவராதிமெலிந்தமையோராமாறு
னெண்ணிவேண்மதனையேவவெரிவிழித்திமவான்பெற்ற
பெண்ணினைப்புணர்ந்துயிர்க்குப்பேரின்பமளித்ததோரார்."

திருவாதவூரடிகள் புராணம்.

"பாகமதிலுத்தமியைவைத்தல்பழுதென்றாய்
போகமுலகுக்கருள்புரிந்தருளவென்றே
மாகமுகிலொத்தகுழன்மங்கையொடிருந்தான்"

இது எழுவகைத் தாண்டவங்களுள் மூன்றாவதாயுள்ளதும், எல்லா மங்கலகாங்களையுங்கொடுப்பதுமாகிய உமாதாண்டவமெனப்படும்.

## ௬. பிக்ஷாடனர்.

இரணியாக்கனுடைய புத்திரனாகிய அந்தகாசுரன் கொடுங்கோல்செலுத்தி அரசாளுங்காலத்தில், பன்னிருவருடம் மழைவளங்குறைய வேதபண்டிதர்களாகிய தாருகவனத்து முனிவர் பசிநோயால்வருந்திக் கௌதமமுனிவருடைய ஆச்சிரமத்தையடைந்தார்கள். முனிவரவர்களைப் பூசித்தகமகிழ்ந்து, நாடோறும் அன்புடனமுதருத்திவந்தனர். அவர்கள் அடிசிலையருந்தி ஆச்சிரமத்தில் வசிக்குநாட்களில், முகில்வளநிறைந்துமழைபெய்தது. பன்னிருவருடமும்வருத்திய பசிநோய் அச்சமுற்றோட மிகுந்த செல்வம்பெருகுதலும், அவர்கள் தங்களாச்சிரமங்களையடைய நினைந்தார்கள். விருந்தினராகவந்த தங்களைவிடக் கௌதமருக்கு விருப்பமின்மையாயிருப்பதையறிந்து, அவர்கள் ஒரு மாயப்பசுவையுண்டாக்கி முனிவர்முன்னிலையிலனுப்பினர். நரம்புகள்மிதந்து, தசைப்பற்றற்றுவந்த பசுவைமுனிவர்கண்டு 'பசுவுக்குவந்த துன்பங்களை நீக்கிக்காத்தல் மேலான சிவதருமமாய் முத்தியிற்கூட்டும்; காவாதுவிடுத்தல் கொடியநரகத்துக்கு இரையாக்கும்' எனச்சிவாகமங்கூறியதைநினைத்து 'யானும் இப்பசுவுக்குத் தீங்குவாராமற் காப்பேன்' என்றுகூறிப் பசுவைக்கரத்தினுற்றீண்ட அது பூமியில் விழுந்து இறந்தது. அதனைக்கண்ட

கௌதமமுனிவர் துன்பக்கடலுளமிழ்ந்தத் தாருகவனத்துமுனிவர்கள், பசுக்கொலைபுரிந்த பாவியினுடைய கிருத்தில் விரும்பியுண்டால் அப்பாவம் எமக்குஞ்சேருமென்றிரங்கிச் சொல்லிக்கொண்டு, தம்முடைய இடங்களையடைந்தார்கள். கௌதமமுனிவர் ஞானக்கண்ணுலுற்றுணர்ந்து அவர்கள்செய்தவஞ்சனையென்றறிந்து, "வேதவொழுக்கத்தினின்றுநீங்கிச், சிவபெருமானிடத்தன்பின்றிக் கொடியதுன்பக்கடலில்விழுந்தமிழ்ந்துவார்களாக" என்று கோபத்தோடுசபித்தனர். அவ்விதமே அவர்கள் அஞ்ஞானிகளாய், வேதமோதல்முதலிய நற்கிரியைகளை விடுத்துத் தவவொழுக்கத்தினின்றும்நீங்கிக் கன்மமலத்திறுற் கட்டப்பட்டுத் துன்பமாகிய சமுத்திரத்திலமிழ்ந்தி, மீமாஞ்சமதப்பிரவேசஞ்செய்து அசுத்தரானார்கள். சிவபெருமானுனவர், பரதந்திரர்களான மற்றைய ஆன்மாக்கள் இவர்களைப்பின்பற்றிக் கெட்டுப்போவார்களென்பதையும், கடவுளின்கிருபையாலன்றிப் புண்ணியஞ்செய்தல்முடியாதென்பதையும், "பானடிக்கன்பிலாதார்புண்ணியம்பாவமாகும்" என்பதையும் எல்லாஆன்மாக்களுக்குமுணர்த்தல் காரணமாகவும், முன்னர்க் காமமுங்கோபமும் அவர்களுக்குண்டாக்குவதாகியதிருவுருவத்தைப் பொருந்திச்சென்று, கர்மிகளுங்கோபிகளுமாகச்செய்து, அவர்களது ஆணவமலசத்தியையுங்கருமத்தையுமழித்து, ஞானத்தைப்பயப்பதாகிய திருமேனியைக்காட்டி, மெய்ஞ்ஞானத்தைக்கொடுத்துச் சுத்த வைதிகசைவர்களாக்கும்படி திருவுள்ளங்கொண்டனர்.

பின்பு சிவபெருமான், அதிபாதகர்களாகிய முனிவர்களுக்குத் தம்முருவங்காட்டவொண்ணுமையின், விட்டுணுவையழைத்து மோகினிவடிவங்கொள்ளும்படி செய்து, முனிவரை மயக்கவிடுத்து, அற்பபாதகிகளாகிய முனிபத்தினிமாரை மயக்கியருளும்பொருட்டு, வேதரூபமாகிய கௌபீனத்தையும், சிவஞானமாகிய பூணூலையும், முச்சத்திவடிவானதும் மும்மலங்களைநீக்குவதுமாகிய சூலத்தையும், பராசத்திவடிவானதும் அன்பானபிச்சையேற்பதுமாகிய பிக்ஷாபாத்திரத்தையும், நாதரூபமானதும் ஞானத்தைக்கொடுப்பதும் கெடுதலில்லாத லயத்துடன்கூட்டுவதுமாகியஉடுக்கையையும், மலபரிபாகஞ்செய்வதும் திரோதானசத்திரூபமானதுமாகிய பாதுகையையும், சிவஞானரூபமாகிய விபூதிப்பையையுந் தரித்துக்கொண்டு மோகினியுடன்சென்றார்.

மோகினி தபோவனத்தையடைய முனிவர்கள்கண்டு மீ க்காமிகளாகிப் பின்சென்றார்கள். பிக்ஷாடனமூர்த்தியானவர் முனிபத்தினிமார்களுடையவீதிகளிற்போய், அவர்களைச் சுத்தர் களாக்கும்பொருட்டுத் தமது திருவுருவத்தைக்காட்ட, அவர்கள் பிட்சையிடும்படிவந்து திருவுருவைக்கண்டு காமித்துப் பேரா சைவைத்துப்பார்வைமாத்திரத்தாலே கருப்பவதிகளாயினர்.

புருடர்களது சேர்க்கையின்றிச் சிவதரிசனத்தாலாகிய கருப்பத்திலேபிறக்கவேண்டுமென்று நினைத்துத் தவஞ்செய்த நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் அக்கருப்பத்தினின்றும் பிறந்துவணங்கிக் கடவுளுடைய அனுமதிப்படி தவஞ்செய்யப் போயினர்.

முனிபத்தினிமார்களாற் சூழப்பட்டுச் சிவபெருமான்செ ல்ல, முனிவர்களாற்சூழப்பட்டு மோகினி சிவசன்னிதானத்தைய டைந்தார்.

முனிவர்கள் தமது மனைவிமாருடைய கற்பழிந்தமையைக் கண்டு காமமொடுங்கக்கோபமதிகரித்தனர். இதனைச்செய்தவர் சிவனும் விட்டுணுவுமே யென்பதையறிந்து பெருங்கோபங்கொ ண்டு சிவனைக்கொல்லவேண்டுமென நினைந்து ஒரு அபிசாரவேள் விசெய்தார்கள். அவ்வோமகுண்டத்தினின்றுமெழுந்த புலிமுத லியவற்றை முனிவர்கள் அனுப்பச் சிவபெருமான் புலியையுரித் துத்தோலையுடுத்தும், மழுவையும் மானையும் காத்திற்றாங்கியும், பாம்புகளையாபரணமாக வணிந்தும், பூதங்களைச்சேனைகளாக்கி யும், முனிவர்களது ஆணவமலமாகவந்த முயலகனைக் காலால்மிதி த்தும் நின்றனர். பின்பு ஓமகுண்டத்திற்பொருந்திய அக்கினி யையனுப்ப அதனையேந்தினர். பின்பு அனுப்பிய மந்திரங்களை உடுக்கையாக்கித் தரித்தனர். முனிவர்கள் தாம் அனுசரித்துவந்த மீமாஞ்சமதம் பொய்பட்டமையிற் சோர்வடைந்தனர்.

''காமம்வெகுளிமயக்கமிவைமூன்ற
னாமங்கெடக்கெடுநோய்''.

எனத்திருவள்ளுவர் கூறியபடி, மலநோயினின்றும் நீங் கிப் புக்குவர்களாயினர். அவர்களது பக்குவமுதிர்ச்சியைக்கண் ட சிவபெருமான் ஆணவரூபமாகியமுயலகன்மீது மிதித்துநின்று

பஞ்சகிருத்திய நிருத்தத்தைச் செய்தனர். அந்நடனத்தைக்கண்டமுனிவர் பயந்து பூமியில் விழுந்து சிவனருளாலெழுந்து, சிவஞானத்தைப்பெற்று வணங்கினர். சிவபெருமான் முனிவர்களைப் பார்த்து "நீங்கள் இந்நாள்வரையுந் துன்மார்க்கவழியில் நின்று மோகர்களாயினீர்கள். இப்பொழுது உங்களுடைய மோகத்தை நீக்கினோம். இனி நீங்கள் சைவமார்க்கத்தையனுசரித்து, விபூதி உருத்திராக்கந்தரித்துச் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து, இடையில் விடாதபடிபூசித்துப் போகமோட்சங்களை யடையுங்கள்" என்று கூறியருளித் திருக்கைலாசமலையிற் சென்று வீற்றிருந்தருளினர்.

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—நட்டராகம்.

"சூடல்வெண்பிறையினர்சுடர்முடியர்
　　சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவாள்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்
　　பாம்பொடுநூலவையசைந்திலங்கக்
கோடனன்முகிழ்விரல்கூப்பிநல்லார்
　　குறையுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவாணீர்
　　வர்ம்மூரடிகள்வருவாரே."

### திருவாசகம்.

"அம்பலத்தேகூத்தாடி அமுதுசெயப்பலிதிரியும்
நம்பனையுந்தேவனென்றுநண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாகேளுன்மறைகடாமறியா
வெம்பெருமானீசவென்றேத்தினர்காண்சாழலோ."

### திருமூலநாயனார்.

"பரந்துலகேழும்படைத்தபிரானை
யிரந்துணியென்பர்களெற்றுக்கிரக்கு
நிரந்தரமாகியினையுமடியா
ரிரந்துண்டுதன்கழலெட்டச்செய்தானே."

சிவபெருமான் மோகினியைப்பார்த்து, "உனக்கு யாது வரம் வேண்டும்" எனவினவியருள, "அடியேன், தேவரீருக்குச்சத்தியாகும் வரத்தைத்தந்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, அவ்வரத்தைக்கொடுத்தனர்.

பிக்ஷாடனமூர்த்தியாயினமையால் நிலவுலகத்தாரும், விண்ணுலகத்தாருஞ் சிவபெருமானே ஞானநாயகரென்று நினைந்து வழிபட்டுய்கின்றனர்.

## எ. காமாரி.

விட்டுணு புத்திரப்பேறின்மையாற் சிவபெருமானது திருவடிகளைத் தியானித்துச் சிவார்ச்சனைசெய்தனர். சிவபெருமான் உமாதேவியாரோடு பிரசன்னமாக, விட்டுணு எழுந்து முன்செய்தவினையினால் உமாதேவியாரைச் சிறிதும் அன்புசெய்து வணங்காது நீக்கிச் சிவபெருமானைமாத்திரம் வணங்கினர். "விஷ்ணுவே! உனக்கு யாதுவரம்வேண்டும்" என்று சிவபெருமான் வினவியருள, "ஒருபுத்திரப்பேற்றைத்தந்தருள்க" என்று பிரார்த்திக்க., "அவ்விதமே தந்தருளினோம்" என்று கூறினர். [சிவசத்தியினதருள்பெறாமையால் அக்குழந்தை அற்ப ஆயுளுடையதாயிற்று.] விஷ்ணுவினுடைய மனத்தினின்றும் தேவர்களாலும் வணங்கப்படுபவனும, கீர்த்தியையும், அழகையுமுடையவனுமாகி மன்மதன் தோற்றினான்.

அவன் விஷ்ணுவினுடைய அநுமதிப்படி காசியையடைந்து, சிவலிங்கப்பிரதிட்டைசெய்து அவ்விலிங்கத்துக்குச் சித்தசன் என்னும் நாமத்தைவைத்துக் காலங்கள் தவறாதபடி பூசிப்பானாயினான். சிவபெருமான் மன்மதனுடைய பூசைக்கிரங்கி, உமாதேவியாருடன் பிரசன்னராகிக் கருப்பம்வில்லு, பஞ்சபாணம் முதலியவற்றைக்கொடுக்க, அவன் அவைகளைப்பெற்றுக்கொண்டு ஆன்மாக்களுக்காசையையுண்டாக்கி வெற்றிகொண்டிருந்தான். சிவபெருமான் சனகாதிமுனிவருக்கு யோகாப்பியாசத்தைக் காண்பித்துக்கொண்டிருக்கும்பொழுது, பிரமாவின் ஏவலால் மன்மதன் புட்பபாணங்களைச் செலுத்தினான். சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றும் அக்கினி எழுந்து அவனதுடலைச்சாம்பராக்கியது. இக்காரணத்தினால் சிவபெருமான் காமாரியாயினார்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

பண்—பழம்பஞ்சுரம்.

"கழைபடுகாடுதென்றல்குயில்கூவவஞ்சுகணையோனணைந்துபுகலும்
மழைவடிவண்ணனெண்ணிமகவோனைவிட்டமலரானதொட்டமதனன்

எழில்பொடிவெந்துவீழவிமையோர்கணங்களெரியென்றிறைஞ்சியகலத்
தழல்படுநெற்றியொற்றைநயனஞ்சிவந்ததழல்வண்ணனெந்தைசரணே."

### சேரமான்பெருமாணுயனுர்.

"பூதப்படையுடைப்புண்ணியரேபுறஞ்சொற்கணும்மே
லேதப்படவெழுகின்றனவாவிளையாளொடும்மைக்
காதற்படுப்பான்கணைதொட்டகாமனைக்கண்மலராற்
சேதப்படுத்திட்டகாரணநீரிறைசெப்புமினே."

சிவபெருமானைத் தேவர்களிலொருவரென்று மன்மதன் நினைத்துப் புட்பபாணங்களைச்செலுத்திப் போர்செய்து சாம்பரானான். ஆகையால், எவர்களாயினுமிங்ஙனம் நினைப்பார்களேயானால் அக்கினிநரகத்தில்வீழ்ந்து வருந்துவார்கள்.

பகைத்துவந்த மன்மதனை எரிக்கும்படி சிவபெருமான் காமசங்காரமூர்த்தியானமையால் அறிஞர்கள் அதிகரித்தெழுகின்ற காமாக்கினியையடக்கப்பெற்றார்கள். நாம் இம்மூர்த்தியை அதிகரித்தெழுகின்ற காமாக்கினியையடக்கி அருளவேண்டுமென்று வேண்டுகின்றோம்.

சிவபெருமான் இரதியினுடைய வேண்டுதலுக்கிரங்கி மன்மதனையெழுப்பி, "ஏனையோருக்கருவமுள்ளவனாயும் இவளுக்குருவமுள்ளவனாயும்இருந்து, உன்னுடைய அரசியன்முறையைச்செய்" என்று கட்டளையிட்டருளினார்.

### திருஞானசம்பந்தநாயனார்.

பண்—குறிஞ்சி.

"கண்ணிற்கனலாலேகாமன்பொடியாகப்
பெண்‡ணுக்கருள்செய்தபெருமானுறைகோயில்
மண்ணிற்பெருவேள்விவளர்தீப்புகைநாளும்
விண்ணிற்புயல்காட்டும்வீழிமிழலையே."

## அ. காலாரி.

மெய்யன்போடு சிவார்ச்சனைசெய்த மிருகண்டுமுனிவர்புத்திரராகிய மார்க்கண்டேயர் காரணமாகவும், தம்மைத்தியானஞ்செய்த சிலாதமுனிவருடைய புத்திரராகிய திருநந்திதேவர்

‡பெண்-இரதி.

பொருட்டாகவும் திருவெண்காட்டில் சுவேதகேதுவென்னும் பிராமணர்பொருட்டாகவும், சுவேதராசன்பொருட்டாகவும், ஒவ்வோர்காலத்தில் இயமனையுதைத்தடக்கியருளினமையால் நமது ஆன்மநாயகர் காலாரியெனப்படுவர்.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

#### திருநேரிசை.

"தோடுலாமலர்கடூவித்தொழுதெழுமார்க்கண்டேயன்
வீடுநாளணுகிற்றென்றுமெய்கொள்வான்வந்தகாலன்
பாடுதான்செலலுமஞ்சிப்பாதமேசரணமென்னச்
சாடினார்காலன்மாளச்சாய்க்காடுமேவினாரே."

### சுந்தரமூர்த்திநாயனார்.

#### பண்—தக்கேசி.

"அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
அவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே."

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

#### பண்—சீகாமரம்.

"வேலைமலிதண்கானல்வெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தால்வழிபடுநன்மறையவன்றன்
மேலடர்வெங்காலனுயிர்விண்டவினைநமன்றூதர்
ஆலமிடற்றானடியாரென்றடரவஞ்சுவரே."

### புருடோத்தமநம்பி திருவிசைப்பா.

#### பண்—பஞ்சமம்.

"ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன்
மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கணர்
தேவர்மறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கோவாவினவளைகள்சொல்வாரோர்வென்னையே."

சிவபெருமான் உதைக்கவிறந்த இயமனை எழுப்பியருளி "நீ இனி எமதடியார்களைக்காணுந்தோறும் அவர்களை நாமென்றுநினைத்து வழிபடுதி" என்று கட்டளையிட்டருளினர்.

**திருநாவுக்கரசுசுவாமிகள்.**

காலபாசத்திருக்குறுந்தொகை.

"வாமதேவன்வளநகர்வைகலும்
காமமொன்றிலராய்க்கைவிளக்கொடு
தாமந்தூபமுந்தண்ணறுஞ்சாந்தமும்
ஏமமும்புனைவாரெதிர்செல்லவே.

சிவபெருமான் இயமனை உதைத்துக்கொல்லும்படி காலாரிமூர்த்தத்தைக்கொண்டமையால், உலகத்திலேபரிபக்குவமுள்ள மேலவர்கள் அவ்வுடைய பயத்தினின்றும் ஒருசிறிதுநீங்கப்பெறுவர்.

## க. திரிபுராரி.

முப்புரத்தசுரர்கள் தேவர்களுக்குத் துன்பத்தைச்செய்துவந்தனர். தேவர்கள் தாமனுபவிக்குந்துன்பத்தைச் சிவபெருமானுக்குமுறையிட்டனர். அதைக்கேட்டருளியபெருமான் அவர்கள் சிவார்ச்சனையிற் சிறிதுந்தவறுதவராய், நன்னெறியில் நிற்கின்றனர். பாசவலையிற்பட்டு இவ்வுத்தமச்செயலை விலக்கிவிடுவார்களாயின் அவர்களையழிப்பது குற்றமாகமாட்டாதெனக் கூறினர். விட்டுணு புத்தவடிவங்கொண்டு அவர்களுக்குப் பலவித துர்ப்போதனைகளைச்சொல்லிமயக்க, அவர்கள் சிவபூசையைவிடுத்துப்புத்தமதப்பிரவேசஞ்செய்து பாவிகளானார்கள்.

**திருநாவுக்கரசுசுவாமிகள்.**

ஆதிபுராணத்திருக்குறுந்தொகை.

"தாயினுநல்ல சங்கரனுக்கன்பர்
ஆயவுள்ளத்தமுதருந்தப்பெறார்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துப்பட்டமனத்தரே."

பின்பு விட்டுணுமுதலியோர் தங்கள்கருமம் நிறைவேறும்படி சிவபூசைசெய்தனர். சிவபெருமான் தேவர்கள்மீது திருவுள்ளமிரங்கிப் பூமியாகியதேரிலிவர்ந்துசென்று, விட்டுணுவினு

டைய தூர்ப்போதனையிலகப்படாத மூவரைநீக்கி, மற்றையோர்க ளைச் சிரித்தெரித்தருளினர்.

இது எழுவகை நடனங்களுள் நான்காவதாகிய திரிபுர தாண்டவமெனப்படும்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண்—நட்டபாஷை.

"கல்லானிழற்கீழாயிடர்காவாயென்வானோர்
எல்லாமொருதேராயயன்மறைபூட்டிநின்றுய்ப்ப
வல்லாயெரிகாற்றீர்க்கரிகோல்வாசுகிநாண்கல்
வில்லாயெயிலெய்தானிடம்வீழிம்மிழலையே."

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—தக்கேசி.

"மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி
லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே."

திருவாசகம்.

"எண்ணுடைமூவரிராக்கதர்களெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தைகடைத்தலைமுனின்றதற்பி
னெண்ணிலியிந்திரரெத்தனையோபிரமர்களு
மண்மிசைமால்பலர்மாண்டனர்காண்டோணோக்கம்."

திரிபுரங்கள் இன்னவென்பதும், அவற்றையெரித்தவு ண்மையிதுவென்பதும், தெய்வப்புலமைத் திருமூலநாயனார் தி ருவாய்மலர்ந்தருளிய,

"அப்பணிசெஞ்சடையாதிபுராதனன்
முப்புரமெய்தனனென்பர்கள்மூடர்கள்
முப்புரமாவதுமும்மலகாரிய
மப்புரமெய்தமையாரறிவாரே."

என்னும் செய்யுளானும்,

திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய
[பண்—சாதாரி.]

"வஞ்சகமனத்தவுணர்வல்லரணமன்றவியவார்சிலைவளைத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரானுதிபெருமானதிடமாம்
கிஞ்சுகவிதழ்க்கனிகளூறியசெவ்வாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவக்கணநிறைந்துமிடைவேதவனமே."

என்னுஞ்செய்யுளானுமறிக.

சிவபெருமான் வலிமைபொருந்திய முப்புரங்களையெரிக்கத் திரிபுரசங்காரமூர்த்தங்கொண்டமையால், புண்ணியான்மாக்கள் மலத்தினின்றுநீங்கினவர்களாய், முக்குணங்களுநீங்கப்பெற்றார்கள்.

## கo. சலந்தராரி.

சலந்தராசுரனென்பவன் காஞ்சீபுரத்தையடைந்து, சிவலிங்கமொன்றமைத்து நாடோறும் பூசையையுந்தவத்தையுஞ் செய்தான். ஏகாம்பரநாதசுவாமி காட்சிகொடுக்க வணங்கி, "ஆண்மைத்தன்மையையும், வெற்றியையும், பெருமைதங்கிய அரசுரிமையையும், பகைவரைவெல்லும்வலியையும், தேவரீராலன்றிமற்றையோராலிறவாமையையும், இறப்பினும் இக்காஞ்சீபுரத்திற்பெருமைபொருந்திய முத்தியையடைதலாகிய வரத்தையுந் தந்தருளுக". என்றுபிரார்த்திக்க "அவ்விதமேயாகுக" என்று கிருபைசெய்து மறைந்தருளினார்.

சலந்தரன் தேவத்தச்சனைக்கொண்டு சாலாந்தரம் என்னும் நகரையுண்டாக்கி, அதிலிருந்து அரசுசெய்யுங்காலத்தில் இந்திரன்முதலிய எண்டிசைக்கிறைவரையும், பிரமனையும் வென்று பின் விட்டுணுவினுடன் எதிர்த்துப் பலகாலம் யுத்தஞ்செய்தான். அவரும் ஆற்றாதுபுகழ்ந்துபோயினர். அச்சமயத்தில் இந்திரன் முதலியதேவர்கள் சலந்தரனுக்குப்பயந்து, மறைந்து திருக்கைலாசமலையையடைந்தார்கள். அவனுங்கைலாசமலையையடைய இந்திரன்சிவசன்னிதானத்தையடைந்து, நமஸ்கரித்துத்தோத்திரஞ்செய்தான். புராந்தகர் ஒருதிருவிளையாடலைத் திருவுள்ளத்துக்கருதி விருத்தப்பிராமணவேடங்கொண்டு சலந்தரனுக்கு எதிரேபோய் "நீயார்?" என்றுவினவினார். அவன் "என்பெயர் சலந்தரன். தேவர்களைவென்று, சிவபெருமானையும் வெல்லும்படி ஈ

ண்டுவந்தேன்." என்றுகூறினன். அதைக்கேட்ட பிராமணர் "அரசனே, யான் கைலாசபதிக்குச் சமீபத்திலிருப்பவன், அவரோடுபோர்செய்தால் நீ இறப்பாய். ஆகையால் மீண்டுசெல்லுதி" என்றுகூறினர். அதைக்கேட்ட சலந்தரன் கோபமுற்று "அந்தணரே!, நீர் ஓர்கணப்பொழுது நின்று என்வலியைப்பாரும்" என்று கூறினன். அந்தணவடிவங்கொண்ட சிவபெருமான் "யாமும் அதைக்காணும்படி வந்தோம்." என்று கூறித் தமது திருவடியினாலே பூமியில் ஒருசக்கரத்தைக் கீறினர். அதுசக்கராயுதமாதலும் சலந்தரனைப்பார்த்து, "இதனை நீ உன்வலியாற்றூக்கிச் சிரசில் வைப்பாயா?" என்றனர். "இதனைத்தாங்குவது எனக்கு ஒரு அரிய செயலா" என்று சலந்தரன் கூறிச் சக்கரப்படையைக் கையில் எடுத்தான். அது பெரும்பாரமாயிருந்தபடியாற் பெருமூச்சுவிட்டு மார்பிலும் புயத்திலும் வைத்து ஒருவாறுசிரத்தில் வைத்தான். சக்கரப்படை அப்பாதகனுடைய உடம்பை இரண்டுபிளவாக்கிச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் வந்திருந்தது. பின்பு சலசந்தரனுடைய சேனைகளைத் தமது நெற்றிக்கண்ணினாற் பார்த்து எரித்து, இந்திரன் முதலியோருக்குத்தமது திருவுருவத்தைக்காண்பித்தனர். அவர்கள்வணங்கி அநுமதியைப்பெற்றுக்கொண்டு தத்தமிடங்களையடைந்தனர்.

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—சாதாரி.

"ஆருமெதிராதவலியாகியசலந்தரனையாழியதனால்
ஈருமவகைசெய்தருள்புரிந்தவனிருந்தமலைதன்னைவினவில்
ஊருமரவம்மொளிகொண்மாமணியுமிழ்ந்தவையுலாவிவரலாற்
காரிருள்கடிந்து கனகம்மெனவிளங்குகாளத்திமலையே."

### திருமந்திரம்.

"எங்குங்கலந்துமென்னுள்ளத்தெழுகின்ற
வங்கமுதல்வனருமறையோகிபாற்
பொங்குஞ்சலந்தரன்போர்செல்லநீர்மையி
னங்குவிரற்குறித்தாழிசெய்தானே."

சலந்தரன் சக்கரப்படையாலிறந்தபின் காஞ்சியில் ஒளிப்பிழம்பமாகத் தோன்றி, தான்முன்னரே வளிபட்ட இலிங்கமூர்த்தத்தில் இரண்டறக்கலந்தான்.

## கக. மாதங்காரி.

யானைவடிவுடைய கயாசுரனென்பவன் மேருமலையிற்சென்று பிரமாவைக்குறித்துத் தவஞ்செய்ய, அவர்தோன்றிவிரும்பியவரங்களைக்கொடுத்து, "அன்பனே, சிவபெருமானோடு எதிர்ப்பாயாகில் இவை அழிவடையும்." என்றுகூறிச்சென்றனர். கயாசுரன் சிவபெருமானையெதிர்க்காது மற்றையோருடன் யுத்தஞ்செய்து, அவர்களைவெற்றிகொள்வேனென்றுநினைத்துப் புறப்பட்டுத் தேவபதவிகடோறுஞ்சென்று அவர்களைவெற்றிகொண்டு, சுவர்க்கத்துக்குப்போய் இந்திரனுடன் யுத்தஞ்செய்துவென்று, ஐராவதத்தின் நான்குகொம்புகளையும்முரித்து, பொன்னுலகையும் அக்கினிக்கிரையாக்கித்திரும்பி, திக்குப்பாலகர், அரக்கர், அவுணர், மானுடர்முதலாயினோரையும்வென்று, முனிவரைஎதிர்க்க, அவர்கள் காசியையடைந்தனர். அவனவ்விடத்திலுந்தொடர்ந்துசெல்ல, முனிவரஞ்சித் தமக்குஒப்பாருமிக்காருமின்றி எழுந்தருளியிராநின்ற விசுவநாதரையடைக்கலம்புகுந்தனர். அதுகண்ட அசுரன் கோபித்து, மணிகன்றிகை வாயிலையடைந்தான். பெருமான் முனிவரின்பேரொலிக்கிரங்கியருள்செய்து, உக்கிரவடிவுகொண்டு, உடுக்கையையுஞ் சூலத்தையுந் திருக்கரங்களிற்றாங்கியவராயெழுந்து திருவடியினாலுதைக்கக் கயாசுரன் பூமியில்விழுந்தான். பின்பு அவர் தமது திருக்கரத்திற்பொருந்திய நகத்தினால் முதுகைப்பிளந்து தோலையுரித்துப்போர்த்தனர்.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

#### திருநேரிசை.

"விரித்தபல்கதிர்கொள்சூலம்வெடிபடுதமருகங்கை
தரித்ததோர்கோலகாலபயிரவனாகிவேழம்
உரித்துமையஞ்சக்கண்டுவொண்டிருமணிவாய்விள்ளச்
சிரித்தருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே."

### நக்கீரதேவநாயனார்.

"மும்மதத்துவெண்கோட்டுக்கார்நிறத்துப்பைந்தறுகண்
வெம்மதத்தவேசத்தான்மிக்கோடி—விம்மி
யடர்த்திரைத்துப்பாயுமடகளிற்றைப்போக
வெடுத்துரித்துப்போர்த்தவிறைபோற்றி."

திருவாசகம்.

"அத்தியுரித்ததுபோர்த்தருளும்பெருந்துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகிற்பிள்ளையுமாம்
முத்திமுழுமுதலுத்தரகோசமங்கைவள்ளல்
புத்திபுகுந்தவாபூவல்லிகொய்யாமோ."

## கஉ. வீரபத்திரர்.

பிரமதேவனுடையபுத்திரனாகியதக்கன் சிவபெருமானைக் குறித்து அருந்தவஞ்செய்ய, அவர்தோன்றியருளி அவன்விரும் பியவரங்களைக்கொடுத்தார். சிலகாலஞ்செல்ல அவன்செல்வச்செ ருக்கினால் அவரதுமகிமைகளை மறந்து இகழ்ந்து. விட்டுணுவையா காதிபதியாகவைத்து ஒருயாகத்தைச்செய்யத் ததீசிமுதலியமுனி வர்கள்வந்து நற்புத்திகளைப்போதிக்கவும் அவைகளையங்கீகரியாத வனாய் இகழ்ந்தான். சிவபெருமான் அவன்மீதிரங்கி அவனதுகரு மத்தைச்சிதைத்து, மலத்தைநீக்கி அடிமைக்கொள்ளுமாறுதிரு வுள்ளங்கொண்டு வீரபத்திரமூர்த்தியாயினர். சத்தியும் பத்திர காளியென்னும்நாமத்தைப்பொருந்தி இடப்பாலில்வர வீரபத்தி ரக்கடவுள் பூதர்களுடனும் காளியுடனுஞ்சென்று, யாகசாலையை யடைந்து அவிப்பாகத்தைக்கேட்க அவன்கொடாதிகழ்ந்தமைக ண்டு சிவதூஷணஞ்செய்தவருக்கேற்ற தண்டனையிதுவென்று த மதுதிருக்கரதிற்றாங்கிய ஞானவாட்படையினால் அவனதுசிரசை வெட்டி, அஞ்ஞானிகளறிந்துய்யும்படி ஒருஆட்டுத்தலையை அவ னது குறையுடம்பில்வைத்துப்பொருத்தி, "தக்கனே எழும்பு தி" என்று எழுப்பி, அஞ்ஞானவிருளைநீக்கி நல்லுணர்வுண்டா கும்படி செய்தனர்; தக்கனெழுந்து நமஸ்காரஞ்செய்து, காசி யையடைந்து சிவபூசைசெய்தான். சிவபெருமான் அவன்செய்த பூசைக்கிரங்கி, சுத்தனாக்கிக்கணத்தலைவனாக்கினர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

"எச்சனிணைத்தலைகொண்டார்பகன்கண்கொண்டா
ரிரவிகளிலொருவன்பல்லிறுத்துக்கொண்டார்
மெச்சன்வியாத்திரன்றலையும்வேறாக்கொண்டார்
விறலங்கிகரங்கொண்டார்வேள்விகாத்து
உச்சநமன்றாளறுத்தார்சந்திரனையுதைத்தா
ருணர்விலாத்தக்கன்றன்வேள்வியெல்லாம்

அச்சமெழவழித்துக்கொண்டருளுஞ்செய்தா
ரடியேனையாட்கொண்டவமலர்தாமே.''

''உதைத்தவன் காணுணாததக்கன்வேள்வி
யுருண்டோடத்தொடர்ந்தருக்கன்பல்லையெல்லாம்
தகர்த்தவன்காண்டக்கன்றன்றலையைச்செற்ற
தலையவன்காண்மலைமகளாமுமையைச்சால
மதிப்பொழிந்தவல்லமரர்மாண்டார்வேள்வி
வந்தவியுண்டவரோமெதனையெல்லாம்
சிதைத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே.''

மாணிக்கவாசகசுவாமிகள்.

''பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ''

## கரு. அரியர்த்தர்.

விட்டுணுமூர்த்தியானவர் சிவபெருமானுடைய பாதித்திருமேனியைப் பெறவிரும்பிச் சிவபூசைசெய்ய, இறைவர் பிரசன்னராகி, ''நீ எம்முடைய இடப்பாகத்தைப்பொருந்துதி, இனிஉன்பெயர் மாயனாகுக'' என்றுதிருவாய்மலர்ந்து வலப்பாலிற் கொன்றைப்பூவும், இடப்பாலிற் றுளசியும், வலப்பாலிற் புலித்தோலுடையும், இடப்பாலிற் பீதாம்பரமும், வலத்திருக்காதில் மானும் இடக்காத்திற் சக்கரமும், வலப்பாலிற் செந்நிறம்பொருந்திய தமது திருவுருவமும், இடப்பாலிற் பச்சைநிறம்பொருந்திய விஷ்ணுவினுடைய திருவுருவமும் ஒருங்குபொருந்த அரியர்த்தரென்னுந் திருக்கோலத்தைக்கொண்டருளினர்.

இத்திருரூபம் அரியர்த்தமென்னுந் தலத்தில் விசேஷமாயிருக்கிறது.

காசிகாண்டம்.

''ஆற்றல்வடிவாட்டடங்கையவுணராலு
மகல்விசும்புதனிபுரக்குமமராலு
மாற்றரிதாயெவ்வுயிர்க்குமயக்கஞ்செய்யு
மாலையநினக்களித்தனமெம்மிடப்பானீயே

பூற்றிருந்துநறவொழுகுந்துளவத்தாரோ
யுனையிகழ்ந்தோரெமையிகழ்ந்தோரென்னவோதி
யேற்றையிருங்கொடியுயர்த்தசெக்கர்வேணி
யிறைவனுயர்தடங்கயிலையெய்தினனே."

சேரமான்பெருமாணுயனார்.

"இடமால்வலந்தான்இடப்பாறுழாய்வலப்பாலொண்கொன்றை
வடமாலிடந்துகிரேல்வலமாழியிடம்வலமா
னிடமால்கரிதால்வலஞ்சேதிவனுக்கெழினலஞ்சேர்
குடமாலிடம்வலங்கொக்கரையாமெங்கள்கூத்தனுக்கே."

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருநேரிசை.

"எரியலாலுருவமில்லையேறலாலேறலில்லை
கரியலாற்போர்வையில்லைகாண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே."

இத்தேவாரத்தில் "அரியலாற்றேவியில்லை" எனக்கூறியி ருத்தலால் எஞ்ஞான்றும் நீங்காதிருக்கின்றஉமாதேவியார் சத்தி யல்லரோ என்று ஆசங்கிப்பார். உமாதேவியாரும் விட்டுணுவா கிய சத்தியும் ஒன்றென்பதை,

பழனித்தலபுராணம்.

"அந்தமாலெந்தஞான்றும்
பாங்கரில்வைகுந்தேவிநீயதுபகரினுண்மை
யீங்கிதற்கையமில்லையிறைவிநின்கலைபேதத்தொன்
றோங்குமாலெனவேதாவைத்தந்துபாரொருங்குதாங்கும்"

எனவும்,

"நம்பராபரையுமாதிநாரணன்றானுநீயென்
றும்பருமுணரவேநாமுணர்த்துமாமறையின்சென்னிச்
செம்பொருட்சிவம்யாம்நீயேசிவசத்தியுயிர்கட்கெல்லாந்
தம்பமாயிருப்போமன்றிமற்றொருசார்புமுண்டோ."

எனவும் கூறுமாற்றானறிக.

கஎ. அர்த்தநாரீசுவரர்.

உமாதேவியார் சிவபெருமானுடைய பாதித்திருமேனி யைப்பொருந்தவிரும்பித் தவஞ்செய்ய, இறைவர் பிரசன்னராகி

வலப்பால் புலித்தோலுடையும், இடப்பால் துகிலும், வலத்திருச்செவியிற் குண்டலமும், இடத்திருச்செவியிற்றோடும், வலத்திருமேனியிற் பால்போன்றவிபூதியும், இடத்திருமேனியிற் பசியசாந்தும்; வலந்திருக்கரத்திற் சூலமும், இடத்திருக்கரத்திற் பச்சைநிறம்பொருந்திய கிளிப்பிள்ளையும், வலப்பால் தமது திருரூபமும், இடப்பால் உமாதேவியாருடைய திருரூபமும்பொருந்த அர்த்தநாரீஸ்வரமூர்த்தத்தைக் கொண்டருளினர்.

### திருநாவுக்கரசுநாயனர்.

பண் — பியந்தைக்காந்தாரம்.

"புதுவிரிபொன்செயோலையொருகாதொர்காது
சுரிசங்கநின்றுபுரள
விதிவிதிவேதகீதமொருபாடுமோதவொருபாடு
மெல்லநகுமால்
மதுவிரிகொன்றைதுன்றுசடைபாகமாதர்
குழல்பாகமாகவருவர்
இதுவிவர்வண்ணவண்ணமிவள்வண்ணவண்ண
மெழில்வண்ணவண்ணமியல்பே."

### மாணிக்கவாசகசுவாமிகள்.

"தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும்
பால்வெள்ளைநீறும்பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ்
சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக்
கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ."

### நம்பியாண்டார்நம்பி.

"கங்கைவலமிடம்பூவலங்குண்டலந்தோடிடப்பாற்
றங்குங்கரம்வலம்வெம்மழுவீயிடம்பாந்தள்வலஞ்
சங்கமிடம்வலந்தோலிடமாடைவலமக்கிட
மங்கஞ்சரியம்பலவன்வலங்காணிடமணங்கே."

## கரு. கிராதர்.

சிவபெருமான் அருச்சுனன் தவஞ்செய்யும்பொழுது அவனைக்கொல்லும்படி துரியோதனனனுப்பிய மூகாசுரனென்னும் பன்றியைக்கொல்லும்பொருட்டும், அவன்செய்த தவத்திற்கிரங்கிப் பாசுபதங்கொடுத்தற்பொருட்டும், உமாதேவியார் வேடுவிச்சியுருக்கொண்டு சுப்பிரமணியராகியகுழந்தையைத்தாங்கிப் பின்

செல்லச் சிவகணங்கள் வேட்டுவரூபத்தைப்பொருந்திச்செல்ல, வேதங்களாகிய நாய்கள் வளைந்துசெல்லத் தாம்வேட்டுவத்தலைவராய்த் திருக்கரங்களில் அம்பும் வில்லும் பரித்துச்சென்று, பலவாறுகிய திருவிளையாடல்களையவனுடன்செய்ய, உமாதேவியார் "இவ்விதமாகிய விளையாடல்களைக்காட்டுதலைவிடுத்து, அருள்செய்க"வென்று பிரார்த்திக்கக் கிராதவடிவைக்கரந்து, இடபவாகனத்தின்மீது சத்திசமேதராய்க் காட்சிகொடுத்தருளினர். அருச்சுனனெழுந்துவணங்கி, "சுவாமீ! தேவரீருடைய அடியார்களுக்கு அடியவனுயிருத்தல்வேண்டும்; தியானிக்குங்காலங்களில் காட்சிதருதல்வேண்டும்; யுத்தத்தில் கன்னன்முதலியோரைச் சங்காரஞ்செய்தல்வேண்டும்; அதற்குப் பாசுபதம்வேண்டும்; யுத்தந்தொடங்கும்வரையுமிருப்பதற்கு ஒருஇடமும்வேண்டும்: பிறவிகடோறும் அடிமைக்கொள்ளவேண்டும்" என்றிவ்விதமாகியவரங்களைக்கேட்க "அவ்விதமேயாகுக" என்று திருவாய்மலர்ந்தருளிப் பாசுபதத்தைக்கொடுத்து மறைந்தனர்.

### திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

"அரும்பெருஞ்சிலைக்கைவேடனுயவ்விற்பார்த்தற்கன்று
உரம்பெரிதுடைமைகாட்டியொள்ளமர்செய்துமீண்டே
வரம்பெரிதுடையனுக்கிவாளமர்முகத்தின்மன்னுஞ்
சரம்பொலிதூணியீந்தார்சாய்க்காடுமேவினுரே"

"வெங்கடுங்கானத்தேழைதன்னெடும்வேடனுய்ச்சென்
றங்கமர்மலைந்துபார்த்தற்கடுசரமருளினுனை
மங்கைமாராடலோவாமன்னுகரரோணத்தானைக்
கங்குலும்பகலுங்காணப்பெற்றுநான்களித்தவாறே."

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—பழந்தக்கராகம்.

"வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளும்நம்பியெனவேநினையும்
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே.

## கசு. கங்காளர்.

முன்னொருகாலத்திலே, வேதாரணியத்திலுள்ள சிவாலயத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்குகளுளொன்று ஒளிமழுங்

க, அதனுள்ளாகப்பொருந்தியநெய்யை ஒருஎலிவந்துகுடிக்கும்பொழுது திரிதூண்டப்பட்டுத் தீபம்பிரகாசித்து எரிந்தது. சிவபெருமான் அதனைக்கண்டு அபுத்திபூர்வமாகச்செய்த சிவநல்வினைகாரணமாக மூவுலகங்களையும் அரசாட்சிசெய்யும் உரிமையைக்கொடுத்தார், அது அவுணனாகிய விரோசனனுக்குப் புத்திரனாய்ப்பிறந்து மாவலியென்னும் பெயரைப்பொருந்தியது. இதனை,

சிவஞானசித்தியார்.

"சகமதிலெலிதானன்றேமாவலியாய்த்துத்தானே"

எனவும்,

திருநாவுக்கரசுசுவாமிகள்
திருநேரிசை.

"நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடன்மண்ணும்விண்ணுநீண்டவானுலகுமெல்லாம்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே."

எனவும்;

பட்டணத்தடிகள்.

"வெண்ணெயுண்ணவெண்ணுபுவந்து
நந்தாவிளக்கைநுந்துபபெயர்த்த
தாவுபுல்லெலிக்குமூவுலகாள
நொய்தினிலளித்தவீரம்போற்றி."

எனவும், கூறுமாற்றுனறிக.

இம்மாவலி தேவர்களைவருத்தினன். தேவர்கள் விட்டுணுவுக்கு முறையிட அவர் காசிபமுனிவருக்கு மகனாய்ப்பிறந்து வாமனரென்னும் நாமத்தைப்பொருந்தி, மாவலியிடஞ்சென்று மூவடிமண்யாசித்தனர். அவன் தத்தஞ்செய்துகொடுக்கத் திரிவிக்கிரமரூபங்கொண்டு பூமியையோரடியாலும், ஆகாயத்தை மற்றோரடியாலும் அளந்து, மூன்றுமடிவைக்க இடம் போதாமையின் அவனதுசிரசில்வைத்தூன்றிப் பாதாளத்திலமிழ்த்தினர். அமிழ்த்தியதனாற் கர்வங்கொண்டு ஆன்மாக்களைவருத்தினர். தேவர்கள் அதனைச் சிவபெருமானுக்கு முறையிட, அவர் வைரவமூர்த்தங்கொண்டு அவ்வாமனருக்கு நற்புத்திபுகட்ட அதனையங்கீகரியாமையால் திருக்கரத்தேற்பொருந்திய தண்டினால் மார்பிலடித்தனர். உடனே அவர்விழுந்தார். வைரவமூர்த்தியானவர் அவரு

டைய் தோலேயுரித்துச்சட்டையாகப்போர்த்து,முதுகெலும்பைத் தண்டாயுதமாகத் திருக்கரத்திலே தாங்கினர்.

வாமனர்கொண்ட ஆணவமலசத்தியைக் கெடுத்து, அவ ரைநல்வழியடையச்செய்தலால் கங்காளமூர்த்தியாயினர்.

திருநாவுக்கரசுசுவாமிகள்
தனித்திருவிருத்தம்.

"பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போய்
இருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமும்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே."

சுந்தரமூர்த்திசுவாமிகள்
பண்—தக்கேசி.

"ஏன்றவந்தணன்றலையினையறுத்து
நிறைக்கமாலுதிரத்தினையேற்றுத்
தோன்றுதோண்மிசைக்களேபரந்தன்னைச்
சுமந்தமாவிரதத்தகங்காளன்
சான்றுகாட்டுதற்கரியவனெளியவன்
றன்னைத்தன்னிலாமனத்தார்க்கு
மான்றுசென்றணையாதவன்றன்னை
வலிவலந்தனில்வந்துகண்டேனே."

## கஎ. சண்டேசுவரானுக்கிரகர்.

திருச்சேய்ஞலூரிலே எச்சதத்தனென்னும் அந்தணனு க்கு விசாரசருமர் என்னுமோர் சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினர். அவர் வேதாகமங்களையொருவரிடத்தும் ஓதா துணர்ந்து சிவபெருமானே நம்மையடிமையாகவுடையவரென்று அறிந்தனர். ஒருநாள் அவர் பிராமணச்சிறுவர்களோடு விளையா ட்டுநிமித்தம் பசுநிரைகளுடன் கூடிச்சென்றபோது, அவ்வூர்ப் பசுமேய்ப்பானாகிய இடையனொருநாற்றுப்பசுவையடித்தான். அ தைக்கண்ட விசாரசர்மர் மனம்பொறாராகிப், பசுக்களின் பெரு மைகளைச்சிந்தித்து, அவ்விடையனை நீக்கியன்றுதொடக்கந்தாமே மேய்த்துவந்தார். பசுப்பால் சிவபெருமானுடைய அபிஷேகத்து க்குத் தகுதியுடையதெனநினைத்து அவர் சிவபூசைசெய்வதற்கு ஆவலுடையவராய், மண்ணியாற்றங்கரையில், ஓராத்திமரத்தி

ன்கீழ் மண்ணினாற் சிவலிங்கமமைத்து, பசுக்களின்பாலைப்புதுக் குடங்களிற்கறந்துவந்து, அபிஷேகஞ்செய்து பலநாட்பூசிப்பாரா யினர்.

ஒருநாள் ஒருவனதைக்கண்டு, வீண்செயலெனநினைத்து, அவ்வூரவர்களுக்குச்சொன்னான். அவர்கள் எச்சதத்தனுக்குச் சொல்ல, அவன் மறுநாளுதயத்திற் சோதிக்கநினைத்து மகன்பி ன்சென்று ஓர் குராமரத்திலேறிமறைந்திருந்தான்.

விசாரசர்மர் ஸ்நானஞ்செய்து வழக்கப்படி சிவலிங்கம மைத்துப் பாலைக் குடங்களிற் கறந்துகொண்டுவந்து அபிஷேக ஞ்செய்தார். எச்சதத்தன் அதைக்கண்டு விரைந்துவந்து விசா ரசர்மருடைய முதுகிலடித்தான். அவருடையமனம் சிவபெரு மானுடைய பூசையிலமிழ்ந்திக்கிடந்தமையால், அவ்வடிகள் உ றைக்கவில்லை, அவரது உண்மைநிலையை உணராதவனாய்க் கோ பங்கொண்டு பாற்குடங்களைக் காலாற்சிதறினான். விசாரசர்மர் அச்சிவாபராதத்தைக்கண்டு, அதனைச்செய்தவர் பிதாவும் குரு வும் அந்தணனும் என்பதையறிந்தும் அவர்செய்தது தீவினையா தலால், அவர்காலைவெட்டநினைத்துப் பக்கத்திலிருந்த கோலையெ டுக்க, அது சிவாஞ்ஞையினாலே மழுவாதலும், அதனாற் கால்க ளைவெட்டிச் சிவபூசையின்குறையைமுடித்தனர். சிவபெருமா ன் இடபவாகனத்தின்மீது உமாதேவியாருடன்தோன்றியருள, விசாரசர்மர் விழுந்துநமஸ்கரித்தனர். எம்பெருமானவரைத்திரு க்கரத்தினாலெடுத்தணைத்து, "நமக்காக உனதுதந்தையின் கால் களைவெட்டினை, ஆகையால் இனிமேல் யாமே உனக்குத்தந்தை யாயினேம். நம்முடைய வஸ்திரம்முதலிய நிருமாலியப்பொருள் களெல்லாம் உனக்கேயுரித்து" எனக்கூறியருளி, அடியார்களுக் கெல்லாந்தலைவராக்கித், திருச்சடையிலணிந்திருந்த கொன்றை மாலையை அவருக்குச் சூட்டிச் சண்டேசுரபதவியைக் கொடுத்த ருளினார்.

இக்காரணத்தாலே சிவபெருமான் சண்டேசானுக்கிரக மூர்த்தியாயினர்.

[அவரது தந்தையாருஞ் சிவபதவியையடைந்தார்.]

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருநேரிசை.

"தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே."

திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—கௌசிகம்.

"கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி
அடிசேர்ந்தவண்ணமறிவார்சொலக்கேட்டுமன்றே."

மாணிக்கவாசகசுவாமிகள்.

"தீதில்லைமாணிசிவகருமஞ்சிதைத்தானைச்
சாதியும்வேதியன்றாதைதனைத்தாளிரண்டுஞ்
சேதிப்பவீசன்றிருவருளாற்றேவர்தொழப்
பாதகமேசோறுபற்றினவாதோணோக்கம்."

சேக்கிழார்.

திருப்பல்லாண்டு. பண்—பஞ்சமம்.

"தாதையைத்தாளறவீசியசண்டிக்கிவ்வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே."

## கஅ. நீலகண்டர்.

துருவாசமுனிவர் சிவபூசைசெய்த ஒருபுட்பத்தை இந்திரன்பவனிவரும்போதுகொடுக்க, அவன் அங்குசத்தாலேற்று யானையின்மத்தகத்தில்வைத்தான். யானை புட்பத்தைக்கீழேவிழுத்திக்காலால்மிதித்தது. முனிவர்கோபங்கொண்டு சுவர்க்கலோகத்திலேயுள்ள பஞ்சதருக்கள், நிதிகள், தேனுமுதலிய செல்வங்களெல்லாம்நீங்குக எனச்சபித்தனர். அவைபாற்கடலிற்சென்றொளித்தன. ஒளிக்கவே நீறில்லாநெற்றிபோலவும், சிவாலயங்களில்லாததிருவிலூர்போலவும், உயிரில்லாதஉடம்புபோலவும் வறிதாக இந்திரன்முதலியதேவர்கள் துன்புற்றுவாடினார்கள். அதனைக்

கண்ட அவுணர்கள் எதிர்த்து யுத்தஞ்செய்ப, தேவர்களும் இந்திரனும் புறங்கொடுத்துப் பிரமாவுடன் சென்று திருமாலுக்குக்கூறினார்கள்.

அவர் பாற்கடலிலுள்ள அமிர்தத்தைக் கடைந்தெடுத்துண்டாற்சாகமாட்டீர்களென்றுசொல்லி, அவுணர்களையும் உபாயமாகிய இன்சொல்லினால் அழைப்பித்துச்சென்று சிவபெருமானுடைய ஆஞ்ஞையின்றித் திருப்பாற்கடலைக்கடைந்தனர். அங்ஙனங்கடையுஞ்சமயத்தில் இவர்களிடத்துப்பொருந்திய அஞ்ஞானவிருளானது திரண்டுஒருருவெடுத்து நஞ்சென்றுசொல்லும்படிதோன்றி அவர்களைவருத்தியது. விஷ்ணு அந்நஞ்சுடன் எதிர்த்து ஒருகணப்பொழுதுநிற்க, அவரதுபவளநிறச்சரீரத்தை நீலநிறமெய்யாக்க அவரும் ஆற்றுமற்புறங்கொடுத்தனர்.

பின்பு திருக்கைலாசமலையையடைந்து திருநந்திதேவரை நமஸ்கரித்துமுறையிட, அவர் சிவாஞ்ஞைப்படி அவுணர்களையுந் தேவர்களையும் வெவ்வேறாக்கிச் சிவசந்நிதானத்தில்விட்டனர். விஷ்ணுமுதலோர் தங்களிடையூற்றை நீக்கியருளவேண்டுமென்றுபிரார்த்திக்கச் சிவபெருமான் "அஞ்சாதீர்கள்" என்றுகூறியருளிச் சுந்தரரைப்பார்த்துத்திருவருள்செய்ய, அவரவ்விடத்தை அகங்கையிலடக்கிக்கொண்டுவந்து, அமலருடைய அத்தத்திற்கொடுத்தனர். அவர் தேவர்களைப்பார்த்து, "இதையாதுசெய்வோம்" என்றுவினவியருள, "முதலிலுள்ள பாகமெல்லாந் தேவரீருக்கே உரித்து, ஆகையால் விஷமெனினுமாகுக. தேவரீர் திருவமுதுசெய்தருளவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். பரமபதியானவர், ஆன்மாக்களுடைய இடரைநீக்கியருளுபவரென்பதை நாமனைவருமறிந்துய்தல்காரணமாக, நஞ்சைத்திருவமுதுசெய்து, திருக்கண்டத்திலடக்கியருளினார்.

அங்ஙனம் அடக்கியருளியகாரணத்தினால், மணிகண்டர், நீலகண்டர், ஸ்ரீகண்டர் என்னும் திருநாமங்களைப் பொருந்தினர்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—பியந்தைக்காந்தாரம்.

"நாகந்தான்கயிறாகநளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரொடசுரர்படுகடலளறெழக்கடைய

வேகநஞ்செழவாங்கேவெருவொடயிரிந்தெங்குமோட
ஆகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே."

### திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

"வடங்கெழுமலைமத்தாகவானவரசுரரோடு
கடைந்திடவெழுந்தநஞ்சங்கண்டுபஃறேவரஞ்சி
அடைந்துநுஞ்சரணமெனவருள்பெரிதுடையயாகித்
தடங்கடனஞ்சமுண்டார்சாய்க்காடுமேவினரே."

### சுந்தரமூர்த்திநாயனர்.

பண்— தக்கேசி.

"கோலமால்வரைமத்தெனநாட்டிக்
கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
ஆலநஞ்சுகண்டவர்மிகவிரிய
வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
கண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின்திருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே."

### மாணிக்கவாசகசுவாமிகள்.

"கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ."

## கக. சக்கரதானர்.

விஷ்ணுவானவர் குபன் என்னும் அரசன்காரணமாகத் ததீசிமுனிவரை எதிர்த்து யுத்தஞ்செய்து, சக்கராயுதத்தை முனிவர்மீது செலுத்தினர். அது முனிவருடைய வச்சிரதேகத்திற்ருக்கியதனல் நுதிமடிந்து அழிந்தது. பின்பு, சலந்தரனைச் சங்காரஞ்செய்த சுதரிசனமென்னுஞ் சக்கராயுதத்தைச் சிவபெருமானிடத்திற்பெறவிரும்பிக் காஞ்சீபுரத்தையடைந்து, சிவலிங்கப்பிரதிட்டைசெய்து, நாளொன்றுக்கு ஆயிரம் தாமரைமலர்களாற் சிவார்ச்சனைசெய்திருந்தனர். சிவபெருமான் விஷ்ணுவினுடைய பத்திமுதிர்ச்சியைப் ஆன்மாக்களுக்கு அறிவிக்குங்காரணமாக ஒருநாள் ஒருபூவைமறைத்தருளினர். ஒருமலர்குறைந்த

ணமயால் விஷ்ணு தமது ஒருகண்ணைப் பிடந்து, தாமரைமலராகப் பாவித்து அருச்சித்துச் சிவபூசையின்குறையைமுடித்தனர் சிவபெருமான் இடபவாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றியருளித் தமது திருக்கரத்திலிருந்த சக்கரத்தையும் கண்ணையும்கொடுத்துமறைந்தருளினார். விஷ்ணுநமஸ்கரித்துச் சக்கராயுதத்தை ஏற்றுக்கொண்டு, வைகுண்டத்தையடைந்து நீங்காத பக்தியுடனிருந்தார். விஷ்ணுவுக்குச் சக்கராயுதத்தைக் கொடுத்தருளினமையால் சிவபெருமான் சக்கரதானமூர்த்தியாயினர்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

பண்—பழம்பஞ்சுரம்.

"தடமலராயிரங்கள்குறைவொன்றதாகநிறைவென்றுதன்கணதனால்
உடன்வழிபாடுசெய்ததிருமாலையெந்தைபெருமானுகந்துமிகவும்
சுடராடியான்முயன்றுசுழல்வித்தரக்கனிதயம்பிளந்தகொடுமை
யடல்வலியாழியாழியவனுக்களித்தவவனமக்கொர்சரணே."

திருவாசகம்.

"சலமுடையசலந்தரன்றனுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தானடிக்கீழ்
அலராகவிடவாழியருளினன்காண்சாழலோ."

"பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பாவிநாந்தோணேக்கமாடாமோ."

## உ0. விக்கினேசுவரானுக்கிரகர்.

ஆன்மாக்களுடைய அஞ்ஞானத்தையும், இடையூறுகளையும் நீக்குவதற்காகப் பரப்பிரணவமாகிய சிவத்தினின்றும், அபரப்பிரணவமாகிய உமையினின்றுந்தோற்றிப் பிரணவத்தையே திருமுகமாகக்கொண்டருளிய விநாயகக்கடவுள், சிவபெருமானையும் உமாதேவியாரையும் நமஸ்கரித்தனர். அவர்கள் அவரைத் திருக்கரங்களாலெடுத்து, மார்போடணைத்துக் கிருபைசெய்து தொடையில் இருத்தியருளினர். சிவபெருமான் விநாயகக்கடவுளைப்பார்த்து "எவர்களாயினும் ஒருகருமத்தைத்தொடங்குமுன் இனிதுமுடியும்பொருட்டு முதலில் உன்னை வழிபடுவார்களேயானால் அவ்வடியார்களது கருத்தின்படி தொடங்கியகருமத்தை

இனிது முடியும்பொருட்டு அருள்செய்குதி; பிரம விஷ்ணுமுத லியதேவர்களுக்கும் மனிதர்களுக்கும், பூதகணங்களுக்கும் ஏனை யோருக்குந் தலைவனாக இருக்குதி என்று அனுக்கிரகஞ்செய்த னர்.

இக்காரணத்தினாற் சிவபெருமான் விக்கினேசுரானுக்கிர கமூர்த்தியாயினர்

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருத்தாண்டகம்.

"பொருந்தாதசெய்கைபொலியக்கண்டேன்
போற்றிசைத்துவிண்ணோர்புகழக்கண்டேன்
பரிந்தார்க்கருளும்பரிசுங்கண்டேன்
பாராகிப்புனலாகிநிற்கைகண்டேன்
விருந்தாய்ப்பரந்ததொகுதிகண்டேன்
மெல்லியலும்விநாயகனுந்தோன்றக்கண்டேன்
மருந்தாய்ப்பிணிதீர்க்குமாறுகண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே.

## *உக. சோமாஸ்கந்தர்.

விஷ்ணுமூர்த்தி புத்திரப்பேறுகாரணமாகத் தவஞ்செய் தபொழுது, சிவசத்தியின் அருள்பெறாத தவறினின்று நீங்கி னைத்து உமாதேவியார், கந்தர், சிவபெருமான் என்னும் மூவ ருஞ் சேர்ந்த சோமாஸ்கந்தமூர்த்தியை யமைத்துப்பூசித்துச் சத் தியின் அருளைப்பெற்றனர். அவர் தியாகேசரை மார்பில் வைத் துக்கொண்டு பாற்கடலின்மீதாகவுள்ள சர்ப்பசயனத்தில் யோக நித்திரைசெய்தார், விஷ்ணுவின் நெட்டுயிர்ப்பின் அசைவாலும், சர்ப்பசயனத்தின் அசைவாலும், பாற்கடலின் திரையசைவாலும் மார்பென்னுமூசலில் அசைந்துகொண்டிருந்தனர்.

இந்திரன் வாற்கலியென்னுமவுணனால் வருந்தி விஷ்ணு வுக்குமுறையிட, அவர் தமதுமார்பிலிருந்த சோமாஸ்கந்தமூர்த் தியையெடுத்து, இவரைப்பூசித்து உனதுதீவினையைநீங்குதியெ ன்றுசொல்லி, இந்திரன்கைக்கொடுத்து, வாற்கலியுடன் யுத்தஞ் செய்யப்போயினர்.

---

*ஸஉமா, ஸ்கந்தர்-உமையோடும் ஸ்கந்தரோடும் பொருந்திவீற்றிருப்பவர்.

இந்திரன் விஷ்ணுவினிடம்பெற்றுக்கொண்ட தியாகேசரைச் சிரசில்வைத்துச்சுமந்து, சுவர்க்கலோகத்திற் கொண்டுபோய்ப் பூசித்தான். பின்பு வலாசுரனுலிடர்ப்பட்ட இந்திரன்முசுகுந்தனைவருவித்து அவனுடைய உதவியைக்கொண்டு வலனைக்கொன்று சோமாஸ்கந்தமூர்த்திக்கு வேதாகமவிதிப்படி பூசைசெய்தான். முசுகுந்தன் முற்பிறவியில் திருக்கைலாச மலையில் நெடுநாட்பயினற அன்பானதுவந்துதொடர, மனமுருகித்தோத்திரஞ்செய்தான்.

"மகாராசரே, உமக்குயாதுவேண்டு"மென்று இந்திரன்வினவ; முசுகுந்தன் சிவபெருமான் தனக்குஅருள்செய்ததைநினைத்து, "இவரை யான்பூதலத்திற்கொண்டுபோய்ப் பூசிப்பதற்குத் தரல்வேண்டும்" என்றான். இந்திரன் விஷ்ணுவினுடைய சம்மதமுண்டேற் றருவேனென்றுசொல்ல, முசுகுந்தன் விஷ்ணுவினுடைய அனுமதியைப்பெற்றவனாய்வந்து இந்திரனுக்குச்சொன்னான். இந்திரன் தியாகேசரைக்கொடுப்பதற்குமனவிருப்பமில்லாதவனாய்த்தேவத்தச்சனைக்கொண்டுவிட்டுணுவாற்பூசிக்கப்பட்ட தியாகேசமூர்த்தியைப்போன்ற ஆறுமூர்த்தங்களையொவ்வொன்றாக உண்டுபண்ணுவித்து, ஒவ்வொருமுறையும் முசுகுந்தன்கையிற்கொடுத்தான். அரசன் அவைகளைஏற்று, தியாகேசர் தனக்குஅருள்செய்யாமைகண்டு இவரவரல்லவென்று கூறினன். விஷ்ணுவினுடைய பூசையையேற்றிருந்த தியாகேசுவரரைக்கொண்டுவந்து இவர்தாமா என்றான். அப்பொழுது தியாகேசுவரர், முசுகுந்தனைப்பார்த்து "நாம் உன்பால்வந்தன"மென்று கிருபைசெய்தார். விஷ்ணுவினுடைய பூசையையேற்றிருந்தவர் இவர்தாம் தருதியென்றுசொல்லிவாங்கினன். இந்திரன் முசுகுந்தனைப்பார்த்து, முன்னர்யான்தந்த அறுவரோடும் இவரைப்பூவுலகிற்கொண்டுபோய்த் திருவாரூர்முதலிய தலங்களிற் பிரதிட்டைசெய்து பூசிப்பாய்என்று அனுமதிகொடுத்தனுப்பினன்.

முசுகுந்தன் விஷ்ணுவாற்பூசிக்கப்பட்ட மூர்த்தியைத் திருவாரூரில் விதிப்படிபிரதிட்டைசெய்வித்து, மற்றைய ஆறுமூர்த்திகளையும் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறுயல், திருக்கோளரியூர், திருவான்மியூர், வேதாரண்ணியம், என்னுமாறுதலங்களிலும் ஒருமுகூர்த்தத்திற் பிரதிட்டைசெய்து பூசிப்பித்தான். இவை சத்தவிடங்கமென்று சொல்லப்படும்.

### காஞ்சிப்புராணம்.

"அடலிற்கொதிக்கும்படையாழியண்ணன்முதலோரேத்தெடுப்பத்
தடவுஞ்சீயப்பிடர்த்தலையிற்கவினுமணிப்பூந்தவிசும்பர்க்
கடவுட்பிராட்டியுடங்கிருப்பக்கதிர்வேற்காளைநள்ளிருப்ப
நடலைப்பிறவிமருந்தாகிவைகுநாதன்றிருவுருவம்"

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

#### திருநேரிசை.

செல்வியைப்பாகங்கொண்டார்சேந்தனைமகனுக்கொண்டார்
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எல்லியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே.

## உஉ. ஏகபாதர்.

உலகமானது தோற்றுதற்கும் ஒடுங்குதற்கும் இடமாயுள்ள சிவபெருமான் பசுக்கள் ஆணவமலத்திலழுந்தித் தம்மையறியாது கிடந்துவருநதுவதையறிந்து, சிவசத்தியைப்பதித்து, ஞானத்தையுதிப்பித்து, மலத்தைநீக்கித் திருவடியைக்கொடுத்தல்காரணமாகப் பஞ்சகிருத்தியத்தைச் செய்வர்.

சர்வசங்காரகாலத்தில் ஆன்மாக்கள் சத்தியிலொடுங்கச் சத்தி தமமிலொடுங்கத் தாம் ஒருவரேயாய் அழியாதிருந்தருளுவாதலால் ஏகபாதமூர்த்தியாயினர்.

### சிவஞானபோதம்.

"இலயித்ததன்னிலிலயித்ததாமலத்தா
லிலயித்தவாறுளதாவேண்டும் —இலயித்த
தத்திதியிலென்னினழியாதவையழிவ
தத்திதியுமாதியுமாமங்கு."

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

"ஒருவனுய்லகேத்தநின்றநாளோவோருருவேமூவுருவமானநாளோ"

#### பண்—பழம்பஞ்சுரம்.

"காலமுநாள்களுழிபடையாமுனேகவுருவாகிமூவருருவில்
சாலவுமாகிமிக்கசமயங்களாறினுருவாகிநின்றதழலோன்
ஞாலமுமேலைவிண்ணொடுலகேழுமுண்டுகுறளாயொராலிலைமேல்
பாலனுமாயவற்கொர்பரமாயமூர்த்தியவனுநமக்கொர்சரணே."

கந்தபுராணம்.

"அந்தநாளொருவனுகியாருயிர்த்தொகையைத்தோன்ருள்
வந்தவாறெடுக்கஞ்செய்துமன்னியேமீட்டுமன்னே
தந்தையாயுயிர்கட்கேற்றதனுமுதலளிக்குமுக்க
ணெந்தைதன்செய்கைமுற்றுமினையதென்றிசைக்கற்பாற்ரே."

## உரு. சுகாசனர்.

உமாதேவியார் எழுந்து சிவபெருமானைவணங்கித் "தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வேதசிவாகமங்களின் உண்மைப்பொருள்களை அடியேனறியும்படி உபதேசித்தருளுதல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தனர்.

சிவபெருமான் சுகாசனமாயிருந்து அம்மையாரை இடப்பாகத்திலிருத்தி, "சத்தியே, நீவினுவியது அளவற்றஉனதுபுத்திரர்களாகிய ஆன்மாக்கள் மோட்சமுறுங்காரணமாகவேயன்றி உன்காரணமாகவன்று" என்றுகிருபைசெய்து, ஆன்மாக்களைப்பந்திக்கும் ஆணவ கன்ம மாயைகளினிலட்சணங்களையும், அவைகள் அவர்களினின்றும நீங்குந்தன்மையையும், நீங்கினேரடையுந்தன்மையையும், வேதசிவாகமங்களின்தோற்றத்தையும், வைகரிமுதலிய வாக்குகளையதிட்டிக்கின்ற சுத்தமாயாலட்சணத்தையும், அம்மாயை சத்திகாரணமாகவுள்ளதென்பதையும், சத்தி வாமபாகத்திலமர்ந்தவரலாற்றையும் உபதேசித்தருளினர்.

வேதசிவாகமங்களினுட்பொருளை உமாதேவியாருக்குச் சுகாசனமாகவிருந்து உபதேசித்தருளியகாரணத்தால் சுகாசனமூர்த்தியாயினர்.

உபதேசகாண்டம்.

"சுந்தரவுருவமாய்ச்சுகாசனத்ததா
யெந்தைநாயகனெனும்பெயராதாயிக
லுந்தியமழுப்படையுழையுந்தாங்குமால்."

## உச. தக்ஷிணமூர்த்தி.

பிரமபுத்திரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் நான்குமுனிவர்களுந் திருக்கைலாசமலையையடைந்து, சிவபெருமானைவணங்கி, வேதங்களை ஆராய்ந்தும்

தவங்களைச்செய்தும் மனமடங்காமலிருக்கின்றது. யாங்கடைத்தேறும்படி கிருபைசெய்தருளுக" என்றுபிரார்த்தித்தனர்.

சிவபெருமான் பளிங்குநிறத்திருமேனியையும், முக்கண்களையும், சிவஞானபுத்தகத்தையும், அன்பர்களைமறைத்தமலவிருளைநீக்குபவர் தாமென்பதை அறிவிக்குங்குறிப்பாகத் தம்முடைய திருக்கண்களினின்றுந்தோற்றிய திருவருளாகிய ஒளிவீசுகின்ற உருத்திராக்கமாலையையும், ஞானசத்தியாகிய கமண்டலபாத்திரத்தையும், மெய்ஞ்ஞானமுத்திரையையுந் தரித்துக்கொண்டு, குருமூர்த்தியாயெழுந்தருளியிருந்து முனிவரையிருக்கும்படி செய்து, சரியை, கிரியை, யோகம், ஆகிய முப்பாதங்களையும் உபதேசித்தனர். அவர்கள் இனி "ஞானோபதேசஞ் செய்தருளுக" என்று பிரார்த்தித்தார்கள். அப்பொருள் இவ்வாறு இருக்குமென்பதை அவர்களுக்குணர்த்தும்பான்மையாகத் திருக்கரமொன்றைத் திருமார்புடன்சேர்த்தி, ஞானமுத்திரையைக்காட்டி, ஓர்கணப்பொழுது யோகாப்பியாசஞ் செய்பவர்களைப்போலிருந்தார். முனிவர்கள்மனமொடுங்கி ஞானநிலையையுணர்ந்து, பேரானந்தப்பெருவெள்ளத்திலமிழ்ந்தித் தங்கள்செயலொன்றுமின்றி இருந்தார்கள்.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண்—நட்டராகம்.

"பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழில்மஞ்ஞைநடமிடுமாதோட்டம்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே."

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருக்குறுந்தொகை.

"ஆலத்தார்நிழலில்லறநால்வர்க்குக்
கோலத்தாலுரைசெய்தவன்குற்றமில்
மாலுக்காருள்செய்தவன்மாற்பேறு
சலத்தான்றொழுவார்க்கிடரில்லையே."

திருவாசகம்.

"அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ

யருந்தவருக்கறமுதனுன்கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கைதெரியாகாண்சாழலோ."

சீவன்முத்தர்போலத் தக்ஷிணமூர்த்தியாய் உண்மைப் பொருளை உபதேசித்தபடியால் ஆன்மாக்கள் குருமுகத்திலே வணங்கி உபதேசங்கேட்கக்கடவனவாயின.

## உரு. இலிங்கோற்பவர்.

கிருதயுகம்முதலிய நான்குயுகங்களும் ஆயிரஞ்சென்றால் பிரமாவுக்குஒருபகற்காலமாகும். பகல்கழிந்து இரவுவரப் பிரமா நித்திரைசெய்தனர். ஆயிரஞ்சதுர்யுகமாகிய இராப்பொழுதுநீங்கி மற்றையபகல்வரப் பிரமாநித்திரைவிட்டெழுந்து விண்ணையும் மண்ணையும்சிருட்டித்து, அதனுல் அகந்தைகொண்டு, தாமேபரப்பிரமம்என்றுநினைத்து. விஷ்ணு அகந்தையோடு பாற்கடலில்நித்திரைசெய்வதைக்கண்டு, அவ்விடஞ்சென்று அவரதுமார்பிலடித்தெழுப்பி "நீயார்" என்றுவினவினர். "யான்உன்னுடையபிதா" என்றுவிண்டுகூறிப் பலவாறுகவாதித்துப்பொருது, ஈற்றில் சிவப்படைக்கலங்களைச்செலுத்தினர். ஆயிரம்வருடம்வரையில்யுத்தம்நிகழ்ந்தது.

இவர்களுடையசெயலை இன்னும்பார்த்திருப்போமாகில் உயிர்கள் அழியும் ஆகையால் நம்முடையஉண்மைத்தன்மைகளை உணர்த்திஇக் கொடியபோரையுந் தாமேபரம்பொருளென்று சொல்வதையுந் தாமாகவிடுத்து நல்லமனத்துடன்விளங்குவார்களெனச் சிவபெருமான் திருவுள்ளங்கொண்டு மாசிமாத அபரபக்கச்சதுர்த்தசியில் ஒருஅக்கினிமலையாகத்தோன்றினர். பிரமவிஷ்ணுக்கள் கோபத்தையும் போரையும்நீக்கி அந்தச்சோதியைத்தரிசித்துநின்றார்கள். உங்களுடையவலிமையைச்சிவபெருமான்காண்பார். நீங்கள் இச்சோதியினுடைய அடியையும் முடியையுங் காணுங்களென்று ஒருஅசரீரிகூறியது. அசரீரியின்வாக்கைக் கேட்டு அடிமுடியைக்காண்பதற்குக்கருதி மனமயங்கி விஷ்ணுகருமைநிறப்பன்றிரூபங்கொண்டு அடியையும்,பிரமா வெள்ளிய சிறகுகளையுடைய அன்னரூபங்கொண்டுமுடியையும் ஆயிரம்வருடகாலந்தேடியுங்காணுது இனி யாதுசெய்வதுஎன ஆலோசித்து, உயர்ந்துபிரகாசிக்கின்ற அக்கினிமலையைவலங்கொண்டுவணங்கி,

அறியவேண்டுமென்றுநின்றசமயத்திற் குடிலையொலித்தது. அவ்வொலியையறியாதவர்களாய் மயங்கியபோது, குடிலையானது அகாரம், உகாரம், மகாரம், நாதமாய்ப்பிரிந்தது. உயர்ச்சிபொருந்திய ஞானக்கினியில் வலப்புறத்து அகாரமும், இடப்புறத்துஉகாரமும், நடுவில்மகாரமும், அதன்மேல்நாதமுந்தோற்றுவதைக்கண்டும் அறியாதவர்களாய்நிற்க, அகாரத்தில் இருக்குவேதந்தோன்றி எமது சுவாமியாகியசிவபெருமான் சத்தியோசாதமுகத்தாற் பிரமனைப் பிரேரித்து ஞானசத்தியாலதிட்டித்து இலௌகிகஞானத்தையும் * இராசதகுணத்தையுங்கொடுத்து, நிவிர்த்திகலையிற்பொருந்திய ஆன்மதத்துவம் இருபத்துநாலுக்குந்தலைவராய்ப் பிரகிருதியிற்பொருந்தியிருந்து சிருட்டித்தொழிலைச்செய்யுமாறு அனுக்கிரகித்தமையையும் நிவிர்த்திபதத்தில் அயனன்பர்சேர்தலையும், புத்திதத்துவத்தின்காரியமாகிய பாவாட்டகங்களையும், அவைகளில் வசிக்குந்தேவவருக்கத்தார்களாகிய பிசாசர், இராக்கதர், இயக்கர், கின்னரர், சித்தர், வித்தியாதரர், கந்தருவர், ஐந்திரர் என்னும் எட்டுவகையினரையும் மனுஷர்களையும், பசுவருக்கங்கள்பதினன்கையும் சிருட்டிக்கின்றமையையும், சாக்கிராவத்தையையும் இராசதகுணத்தினுடையவிருத்திகளையும், சிவனுடையவலப்பாகத்திற் பிரமன்உதித்தமையையும், பிரமனதுவிசேடத்தையும், இலிங்கத்தடியையும் விசேடித்துக்கூறியது.

உகாரத்திற்றோன்றிய யசுர்வேதமானது, வாமதேவமுகத்தால் விஷ்ணுவைப்பிரேரித்து, கிரியாசத்தியால் அதிட்டித்து, வைதிகஞானத்தையும் ‡சாத்துவிககுணத்தையுங்கொடுத்து, முப்பத்தொருதத்துவங்களை அதோவியாப்தியாகவும், ஊர்த்துவவியாப்தியாகவும், குணதத்துவத்திற்பொருந்தியிருந்து காத்தற்றொழிலைச்செய்யுமாறு அனுக்கிரகித்தமையையும், பிரதிட்டாபதத்தில் விஷ்ணுபத்தர் சேர்தலையும் சொப்பனவத்தையையும், சிவனுடைய இடப்பாகத்தில் விஷ்ணுஉதித்தமையையும் விஷ்ணுவினுடைய விசேடத்தையும், பிரகிருதிதத்துவத்தின் ஐசுவரியத்தையும், இலிங்கத்தின்நடுவையும் விசேடித்துக்கூறியது.

---

* இலௌகிகஞானம்-பரம்பரையான அறிவு.

‡ வைதிகஞானமாவது- வேதத்திற்சொன்ன பசுபுண்ணியமான போகாதிகளைக்கொடுக்கும் சாதன அறிவு.

மகாரத்திற்றோன்றிய சாமவேதமானது அகோரமுகத்தால் உருத்திரனைப்பிரேரித்து, இச்சாசத்தியால் அதிட்டித்து அத்தியான்மிக†ஞானத்தையும், தாமதகுணத்தையும், சம்மாரத்தொழிலையுங்கொடுத்து, வித்தியாதத்துவத்தை நடத்துகையையும், உருத்திரபத்தர் வித்தியாபதத்தையடைவதையும், சுழுத்தியையும், உருத்திரன் சிவனுடைய உள்ளத்தினின்றும் தோற்றியமையையும், பிரமவிஷ்ணுக்களிலும் உருத்திரர்விசேஷமுள்ளவரென்பதையும், புருடைசுவரியத்தையும், இலிங்கத்தின்மேற்பாகத்தையும் விசேடித்துக்கூறியது.

விந்துவினின்றுந்தோற்றிய அதர்வணவேதமானது குணங்களுக்கப்பாற்பட்டவனென்பதையும், தற்புருடமுகத்தினால் மகேசுவரனைப்பிரேரித்துத் திரோபவகிருத்தியஞ்செய்தலையும், சதாசிவமூர்த்தி ஈசானத்திற்பொருந்திய குணத்தினால் அருளுதலையும், சுத்தவித்தியாதத்துவத்தையும், மகேசுவரபத்தர் சாந்திபதத்தையடையுந் தன்மையையும், சதாசிவமூர்த்தியை வழிபடுவோர் சாந்தியதீதபதத்தையடைதலையும், மகேசுவரன் அதிமார்க்கஞானத்தால் * நிறைந்திருத்தலையும், சதாசிவன் மந்திரஞானத்தால் நிறைந்திருத்தலையும், உருத்திரனுக்கு மேலாய்விளங்குஞ்சிவன் சர்வகாரணர் என்பதையும், துரியத்தையும், துரியாதீதத்தையும், அமிர்தபதத்தையும், துரியாதீதபதத்தையும், நாதத்தையும், நாதாந்தத்தையும், இலிங்கத்தின்முடியையும், மகேசுவரருக்கும், சதாசிவமூர்த்திக்கும், நிரோதீச்சுரருக்கும், சிவதத்துவத்திற்கும்மேலாய்ப் பரமாகாசத்தில்விளங்கும் பரமசிவச்சோதிரூபத்தையுஞ்சொல்லியது. சொன்னவைகளை இலகுவில் விளங்காதவர்களாய்நிற்க, பின்பும நான்காம்மறையானது, சிவனே இத்தினத்திற் சோதியாகத்தோற்றினார். ஆகையால் உங்களுடையமனத்தைத்தெருட்டுங்களென்றது. மற்றையவேதங்களுஞ்சொல்லுதலும், அற்பமுமறியாதவர்களாய்நின்றசமையத்தில் வேதங்கள்சொல்லியயாவையும்விளங்கும்படிசிவபெருமான்சோதியிற்றோன்றிப் பிரகாசித்தார். அவருடையவருளினால் பெரிய

† அத்தியான்மிகஞானமாவது- அகம்புறமென்னுமறிவு.

* பரசமயங்களுக்கு அப்பாற்பட்டு உட்சமயமாய்ச் சித்தாந்தமல்லாத அறிவு.

மாயையினின்றும்நீங்கி மெய்ஞ்ஞானம் விளங்கப்பெற்றுத் தரிசித்துநின்றார்கள். அவ்விலிங்கசோதியில் உலகமானதுதோற்றி ஒடுங்குந்தன்மையையும், தாம்தோற்றியதன்மையையும், சடத்துவாக்களையும், மேன்மைபொருந்திய பதவிகளையும், மேலோர் நுட்பமாக அறியுஞ்சிவனையும், உமாதேவியாரையுங்கண்டுவணங்கி மிகுந்தபோறிவில்லாதயாங்கள் மாயையால் மயக்குண்டு அநேகம் பிழைகளைச்செய்தேம். அவைகளைமறந்து அருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் முறுவல்செய்து, மாயையான்மிகமயங்கிச் செருச்செய்தீர்கள். அந்தமாயையைநீக்கி, உங்களைச்சுத்தர்களாக்கும்படி திருவுள்ளங்கொண்டு இவ்வுருவத்தைக்கொண்டெழுந்தருளினோம், முன்னாளையில் சிறீபஞ்சாட்சரத்தையும்,ஞானசங்கிதைகளையுந்தந்தோம். அவைகளை அஞ்ஞானவளர்ச்சியினால் மறந்தீர்கள். அவைகளைப்பெறாவிடின் உங்கள் அதிகாரகிருத்தியங்களைச் செய்தல் அரிதாகும். என்றுதிருவாய்மலர்ந்து,பழமைபோல அவர்களுடைய அதிகாரத்தொழில்களைக்கொடுக்க, பிரமவிஷ்ணுக்கள் வணங்கினார்கள். சிவபெருமான் ஞானவொளியினுள்ளாகமறைந்தனர். சோதிசுருங்கி ஆன்மாக்கள் துதிக்குங்காரணமாகச், சிவலிங்கவடிவான ஒருமலையானது.

பிரமவிஷ்ணுக்கள் அடிமுடிதேடியசோதிமலையானது அருணாசலம் என்னும்பெயரைப்பொருந்தியது. சோதிதோன்றிய இரவே சிவராத்திரியாகும். அவ்விரவில் ஆகமவிதிப்படி சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பூசித்து, வேண்டியவரங்களைப்பெற்றனர். அத்தினம்முதலாக அநேகஅடியவர்கள் சிவராத்திரிதினத்திற்சிவபூசைசெய்து, இகபர இன்பங்களை அடைகின்றனர்.

திருவாசகம்.

"பிரமனரியென்றிருவருந்தம்பேதைமையாற்
பரமமியாம்பரமமென்றவர்கள்பதைப்பொடுங்க
அரனாழலுருவாயங்கேயளவிறந்து
பரமாகிநின்றவாதோணோக்கமாடாமோ."

திருநாவுக்கரசுசுவாமிகள்
இலிங்கபுராணக்குறுந்தொகை.

"செங்கணானும்பிரமனுந்தம்முளே
எங்குந்தேடித்திரிந்தவர்காண்கிலார்

இங்குற்றேனென்றிலிங்கத்தேதோன்றினன்
பொங்குசெஞ்சடைப்புண்ணியமூர்த்தியே."

சுந்தரமூர்த்திநாயனர்.

பண்—பழம்பஞ்சுரம்.

"பேழ்வாயரவினணையானும்பெரியமலர்மேலுறைவானும்
தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே
பாழாம்வினைகள்வைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை
ஆள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனுவேனே."

---

# க ணே ச ர்.

தேவர்களைவருத்தியநஞ்சையடக்கி இடரைநீக்கிய மகேசுவரமூர்த்தியின்றிருவருளாகிய கண்டத்தினின்றும், அடியார்களுடைய இடரைநீக்குங்காரணமாக, விநாயகக்கடவுள் தோற்றினரென வாதுளாகமங்கூறுகின்றது. அவர் யானைமுகத்தையும், மூன்றுதிருக்கண்களையும், ஐந்துதிருக்கரங்களையும், அவைகளில் தந்தம், பாசம், அங்குசம், பண்ணியம் ஆகிய இவைகளைத்தரித்தவராயும், கிம்புரிப்பூணணிந்த ஒற்றைத்தந்தத்தையும், இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னும்மும்மதத்தையும், இரண்டுதிருவடிகளையும் உடையராயுமிருப்பர்.

கயமுகசம்மாரத்தின்பொருட்டு முரிக்கப்பட்டதாகிய ஒருகொம்பையேந்தியது, மும்மலங்களையும் நீக்குபவர் தாமென்பதை அறிவித்தற்காகும். ஆன்மாக்களை அநாதியேபந்தித்தஆணவமலமாகிய யானையைப் பாசத்தாற்கட்டி, அங்குசத்தாலடக்கி, மறைத்தலென்னும் கிருத்தியத்தைச்செய்பவர் தாமென்பதை உணர்த்துதற்காகப் பாசாங்குசங்களையேந்தினர். ஆணவத்தை நீக்கி ஆன்மாவை அடிமைக்கொள்ளுபவர் என்பது, ஆணவரூபமாகிய கயமுகனுடையசேனைகளைப் பாசத்தாற்கட்டி, அங்குசத்தாலடக்கி, அவன் மலவலிகெட்டுப் பெருச்சாளிரூபமாகவர, நீங்காதஞானத்தைக்கொடுத்துச் சுத்தனுக்கி, வாகனமாம்பேற்றை அளித்து, அடிமைக்கொண்ட சரித்திரத்தாலினிது விளங்கும்.

தணிகைப்புராணம்.

"கண்ணிலாணவவெங்கரிபிணித்தடக்கிக்
கரிசினேழ்கிருங்கையுமாக்கு

மன்னலைத்தணிகைவரைவளாயற்
சகாயனையகந்தழீக்களிப்பாம்."

பேரின்பத்தைக்கொடுப்பதாகிய அத்துவிதமுத்தியினிய ல்பை, விந்துநாததத்துவங்களின்வடிவமைந்த துதிக்கை இனிது விளக்குகின்றது.

அடியார்கள் பசுஞானத்தைக்கவளமாக்கிஒப்பிக்க, அதனையுண்டு, திருவயிற்றினுள்ளாகவடக்கிச், சிவஞானத்தைக்கொடுப்பவர் தாமென்பதைஉணர்த்துதல்காரணமாகக் கவளஉணவாகிய மோதகத்தைஏந்தினர்.

திருவிளையாடற்புராணம்.

"உள்ளமெனுங்கூடத்திலூக்கமெனுந்தறிநிறுவியுறுதியாகத்
தள்ளரியவன்பென்னுந்தொடர்பூட்டியிடைப்படுத்தித்தறுகட்பாசக்
கள்ளவினைப்பசுபோதக்கவளமிடக்களித்துண்டுகருணையென்னும்
வெள்ளமதம்பொழிசித்திவேழத்தைநினைந்துவருவினைகடீர்ப்பாம்.

இக்கடவுளே ஐயமற்றபொருளாயுள்ளவரும், அறுவகைச்சமயத்தாரானுந் துணியப்படும்பொருளாயுள்ளவரும், ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியமென்னும் ஆறுகுணங்களையுடையவரும், அநாதிபோதம், சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அலுப்தசத்தி, அநந்தசத்தி, சுவதந்திரம் என்னும் சுத்தகுணங்களாறுமுடையவரும், பஞ்சகிருத்திய பதியாயுள்ளவரும் என்று பெரியோர்கூறுவர்.

சிவபெருமான் பஞ்சகிருத்தியவதி தாமென்பதை ஈசானம் முதலிய ஐந்துதிருமுகங்களினாலும் உணர்த்துதல்போல, விநாயகரும் துதிக்கைமுதலிய ஐந்துதிருக்கரங்களினாலும் உணர்த்துகின்றனர்.

கந்தபுராணம்.

"காப்பவனருளுமேலோன்கண்ணகன்ஞாலம்யாவும்
தீப்பவனேனைச்செய்கைசெய்திடுமவனுநீயே
யேப்படுஞ்செய்கையென்னவெமதுளம்வெதும்புமின்ன
னீப்பதுகருதியன்றேநீயருள்வடிவங்கொண்டாய்."

அவன், அவள், அதுவாய் இருக்கும் உலகத்திலேயுள்ள உயர்திணைப்பொருளும், அஃறிணைப்பொருளும் தம்மிடத்திலே தோன்றி ஒடுங்குகின்றமையைச் சிவலிங்கத்தினுடைய நபுஞ்ச

கலிங்கமாகிய பிரமபாகத்தாலும், ஸ்திரீலிங்கமாகிய விஷ்ணுபாகத்தாலும், பும்லிங்கமாகிய உருத்திரபாகத்தாலும், சிவபெருமான் உணர்த்துவதுபோல, இவரும் கொம்புள்ளதனுல் ஆண்போலிருக்கும் ஒருபாகத்தாலும், கொம்பின்மையாற் பிடிபோலிருக்கும் ஒருபாகத்தாலும், இரண்டுங்கூடினமையால் அலிபோலிருக்கும் உருவத்தாலும் உணர்த்துதலானும், சிவன்கொண்ட உருவத்திருமேனி இருபத்தைந்தனுள் ஒன்ருகிய அர்த்தநாரீசுரவடிவம்போல இவருடைய திருருபமும்பொருந்துதலானும், பிரணவவடிவமாகச்சிவலிங்கம் அமைந்திருத்தல்போல இவருடைய திருமுகமும் பிரணவவடிவாய் அமைந்திருத்தலானும், நாததத்துவத்தைக்குறிக்கும் ஆவுடையாள்வட்டவடிவமாகவும், பிந்துதத்துவத்தைக்குறிக்கும் இலிங்கம் நீண்டவடிவாகவும் இருத்தல்போல, விந்துதத்துவத்தைக்குறிக்கும் துதிக்கையின்நுதி வட்டவடிவாகவும், நாததத்துவத்தைக்குறிக்கும் மேற்பாகம் நீண்டவடிவாகவும் இருத்தலாலும், சிவபெருமான் ஞானமே உருவமாகப் பொருந்தியிருத்தல்போல இவருஞ் சுத்தஞானமே உருவமாகப்பொருந்தியிருத்தலாலும், சிவபெருமான் ஞானசாரியராயிருந்து உண்மைப்பொருளை உபதேசித்ததுபோல இவரும் சந்தானசாரியருட் சிரேட்டராகிய மெய்கண்டதேவருக்கும், நம்பியாண்டார்நம்பிக்கும், பரமாசாரியராயிருந்து ஞானோபதேசஞ்செய்தமையானும், பிறவாற்ருனும், சிவபெருமானும் விநாயகரும் ஒருவரேயென்பது நன்குவிளங்குகின்றது.

கூர்மபுராணம்.

“வெண்ணிலாக்கற்றைகான்றுவிளங்குமோர்பிறைக்கோடின்றி
யெண்ணிலோர்பாகங்கூந்தற்பிடியெனவிருந்தவாற்ருற்
பெண்ணெருபாகம்வைத்தபிஞ்ஞகனுருவுகாட்டு
மண்ணலங்களிநல்யானையடிமலர்சென்னிவைப்பாம்.”

திருமுறைகண்டபுராணம்.

“எந்தையே...............................
சந்தமறைமுதற்கலைகணீயேயோதித்
தரல்வேண்டுமெனவேழமுகத்தோன்ருனு
மந்தமறவோதுவிக்கவோதிநம்பி
மகிழ்ந்தனன்”.....................

சூதசங்கிதை.

"உயர்திணையுமஃறிணையும்படைத்தளித்துத்
துடைக்குமுதலொருநானே யென்
றயர்வறவெத்தகையோருமறிந்துய்யத்
தெரிக்குமடையாளமேய்ப்பப்
பெயர்கொளுயர்திணையுமஃறிணையும்
விரவியவுருவிற்பிறங்குவானை
மயர்வடியவர்க்ககற்றுமொருமருப்பானை
விநாயகனைவணங்குவாமால்."

---

# வல்லபை.

பிரமபுத்திரராகிய மரீசிமுனிவர் விநாயகக்கடவுளை உபாசித்து, அவரிடத்தில் பலவரங்களையும், உமாதேவியார் தமக்குப் புத்திரியாகும்பேற்றையும் பெற்றனர். உமாதேவியார் முனிவருடைய தவத்தைநிறைவேற்றவிரும்பி யமுனையாற்றிலுள்ள தாமரைப்பூவின்மீது வலம்புரிவடிவமாகிச் சிவத்தியானத்துடனிருப்ப, ஸ்நாநஞ்செய்யச்சென்ற மரீசிமுனிவர் கண்டெடுக்க, ஒரு பெண்குழவியாதலும், சந்தோஷத்துடன் மனைவியாகிய தேவவல்லிகைக்கொடுத்து வல்லபைஎன்னுந் திருநாமத்தைச்சாற்றி வளர்த்தனர். தாய்தந்தையருடைய உத்தரவின்படி அம்மையார் பரமனைக்குறித்துத் தவஞ்செய்ய, அமலன் ஒரு அந்தணவடிவங்கொண்டு தவச்சாலையையடைந்து, தவத்தைச்சோதித்துக் கணேசமூர்த்தவடிவங்கொண்டு காட்சிகொடுத்தருளினார். இவைகளையறிந்தமுனிவர் பேரானந்தத்துடன் தவச்சாலையையடைந்து, கடவுளைவணங்கித் திருக்கல்யாணமகோத்ஸவத்தைநடத்தினர். விநாயகக்கடவுள் மணித்தீபமென்னும் சிவபுரத்திற்கெழுந்தருளி ஆன்மாக்களுய்யும்பொருட்டு இனிதுவீற்றிருந்தருளினர்.

---

# சுப்பிரமணியக்கடவுள்.

ஐந்துதிருமுகங்கள், பதினைந்துதிருக்கண்கள், பத்துத்திருக்கரங்கள், இரண்டுதிருவடிகள், என்னும்முப்பத்திரண்டிலக்க

ணங்களையுடையசிவபெருமானிலிருந்து, ஆறு திருமுகங்கள், பன்னிரண்டு திருக்கரங்கள், பன்னிருநேத்திரங்கள், இரண்டு திருவடிகளென்னும் முப்பத்திரண்டு இலக்கணங்களமைந்துள்ள சத்திமானாகிய சுப்பிரமணியக்கடவுள் தோற்றினர்.

சித்தாந்தபோதம்.

"முகம்விழிமலர்க்கைமூன்றுமுப்பதுமுன்புநாஞ்செய்
மகவினைக்கருளவந்தவள்ளலுக்கீண்டுச்சாடப்
புகுமிறைக்கவைகண்மூன்றுமுப்பதேபொலிவுமற்றே
திருவுருவானுஞ்சேயைச்சிவனெனத்தெளிதல்வேண்டும்."

"சத்தியுருவெனலானுமத்துணைவேறிருக்காத்திற்றுங்கலானும்[தம்
சித்துருவின்றெழிலானுஞ்செவ்வேடன்வனசமலர்க்கரஞ்செம்பா
வித்துருமமுசத்தாலுமன்னவனேசத்திமான்விளம்புமீது
சத்தியமுக்காலுமிதுசத்தியமேவேதமதுஞ்சாற்றுஞ்சாட்சி."

பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, பிரணவசத்திகளும், சர்வஞ்ஞத்துவம், நித்தியதிருப்தி, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, சுவதந்திரம் என்னும் இறைவருடைய சுத்தகுணங்களாறும், மகாசாதாக்கியம் பொருந்திய கீழ்நோக்கியபிரணவமுகமும், சிவசாதாக்கியஞ்செறிந்த மேனோக்கியஈசானமுகமும், அமூர்த்திசாதாக்கியஞ்செறிந்த மேற்குநோக்கிய சத்தியோசாதமுகமும், மூர்த்திசாதாக்கியஞ்செறிந்த வடக்குநோக்கிய வாமதேவமுகமும், கர்த்திருசாதாக்கியஞ்செறிந்த தெற்குநோக்கிய அகோரமுகமும், கர்மசாதாக்கியஞ்செறிந்த கிழக்குநோக்கிய தற்புருடமுகமும் ஆகிய இறைவன்முகமாறும் இவருக்கு ஆறுதிருமுகங்களாக அமைந்துள்ளன.

கந்தபுராணம்.

"ஓமெனப்படுங்குடிலையேயொப்பிலாமுருகன்மாமுகத்துளொன்றும்."

"ஏவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ள
மூவிரு·நணனுஞ்சேய்க்குமுகங்களாய்வந்ததென்னப்
பூவியல்சரவணத்தண்பொய்கையில்வைகுமைய
ஞவிகளருளுமாற்றலறுமுகங்கொண்டானன்றே."

"நன்முகமிருமூன்றுண்டானமக்கவைதாமேகந்தன்
றன்முகமாகியுற்றதாரகப்பிரமமாகி
முன்மொழிகின்றஎந்தமூவிரண்டெழுத்துமொன்று
யுன்மகனுமத்தோராறெழுத்தெனவுற்றவன்றே."

சிவபெருமான் மும்மூர்த்தியாய்நின்று முத்தொழிலையுஞ் செய்பவர்தாமென்பதைச் சூலப்படையால்உணர்த்துவதுபோல, இவரும் இச்சாசத்தியாகிய வள்ளியம்மையாலும், கிரியாசத்தியாகிய தெய்வதயானையம்மையாலும்; ஞானசத்தியாகிய வேலாயுதத்தாலும் உணர்த்துகின்றனர். இவைமுத்தொழிலுக்குங்காரணமாகிய ஆரணி, செனனி, ரௌத்திரியுமாம்.

வேற்படையானது, சிவசத்தியேயவ்வுருவமாக வந்திருத்தலாலும், சடத்தன்மையின்றிச் சித்துத்தன்மை அமைந்திருத்தலானும், சத்தியென்னும் சிறப்புப்பெயரைத் தமக்கேயுடைமையானும் பராசத்தியையபின்னமென்றது, சிவனெனக்கருதுவதுபோல வேற்படையையுங் குமாரக்கடவுளென்று தியானித்தல்வேண்டும்.

கந்தபுராணம்.

“அந்தமிலொளியின்சீராலறுமுகம்படைத்தபண்பா
லெந்தைகணின்றும்வந்தவியற்கையாற்சத்தியாம்பேர்
தந்திடும்பனுவல்பெற்றதன்மையாற்றனிவேற்பெம்மான்
கந்தனேயென்னநின்னைக்கண்டுளக்கவலைநீத்தோம்.

சிவபெருமான் ஞானசாரியராகவிருந்து பராசத்தியென்னும் ஞானசத்தியைக்கொண்டு ஆன்மாக்களுடையபாசத்தை அறுத்துத் திருவடிப்பேற்றைக்கொடுத்தல்போல இவரும் இச்சாசத்தி, ஞானசத்தி கிரியாசத்தி என்னும்முச்சத்திகளும் மூவிலைபோலக் கிளைத்தெழுந்து, பவக்கடலை வற்றச்செய்யும் ஞானசத்தியாகிய வேற்பெருமானைக்கொண்டு ஆன்மாக்களின் பாசத்தைநீக்கியருளுவர்.

தணிகைப்புராணம்.

“ இச்சாஞானக்கிரியையெனுமிவைமூன்றிலையாக்கிளைத்தெழுந்திட்
டச்சாஞழியமச்சுவற்றுமயில்வேலொருகைவலத்தமைத்து
நச்சாதவரைத்தெறுமொருகைநளினங்குறங்கினமைத்திமையோர்
விச்சாதார்சூழ்ஞானசத்திதானதுருவம்விதிப்போரும்”

ஞானசத்தியாகியவேற்படையைக்கொண்டு ஆன்மாக்களின்பாசத்தை நீக்கியருளும் ஞானசாரியரென்பது, பானுகோபன், சிங்கமுகன் என்பவர்செலுத்திய மாயாபாசங்களாற் கட்டப்பட்ட வீரவாகுமுதலியோர் மயங்கியபொழுது அவைகளை அறுத்தமை

யானும், சூரன், சிங்கன், தாரகன் என்னும் மூவரையும் கிரவுஞ்சமலையையும் அழித்தமையானும் வெள்ளிடைமலைபோலத்தெள்ளிதிற் புலப்படுகின்றது.

மற்றைய திருக்கரங்களிற்றாங்கிய தோமரம், துவசம், குலிசம், அங்குசம், அம்பு, தாமரைப்பூ, மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பதினொராயுதங்களும் பதினொரு உருத்திரர்களேயாம்.

சுப்பிரமணியக்கடவுள் ஆணவமாகியமயிலைவாகனமாகக்கொண்டது அடியார்களுடைய ஆணவத்தை அடக்கும் ஆற்றலுடையவர் தாமென்பதையும், சேவலைக்கொடியாக உயர்த்தியது திருவருளாகிய பரஞானத்தைக்கொடுப்பவர் தாமென்பதையும், அறிவித்தல்காரணமாகவென்க.

திருமால் சிவபெருமானை இடபமாகத்தாங்கியதன்றி அவுணர்களுக்குப் பயப்படாதும், அவர்களாலிடையூறடையாதபடியுமிருப்பேனென்றுநினைத்துத் தவஞ்செய்து, சுப்பிரமணியக்கடவுளுக்கும் யானைவாகனமாம்பேற்றையடைந்தனரெனவும், ஒவ்வோர்காலத்திற் பிரணவமும், பரஞானமும் யானைருபங்கொண்டு சுமந்தன எனவுங்கூறப்பட்டிருத்தலால், விஷ்ணுவுக்குமேலானவரும், பிரணவத்தை ஆசனமாகவுடையவரும், பிரணவப்பொருளாயுள்ளவரும், ஞானவடிவினரும், பரஞானத்தைக்கொடுப்பவரும் தாமென்பதை அறிவித்தல்காரணமாகக் கஜாரூடராயினர்.

### தணிகைப்புராணம்.

“ஒற்றைமுகமிணைவிழியுமும்மைப்பயனுமொருங்களிக்குங்
கொற்றவாதமூன்றலைக்குக்குடமோரிரண்டுமிடங்கதிர்ப்ப
மற்றைவலப்பான்மணிவேலும்வாளுங்கதிர்ப்பக்கரநான்கும்
பெற்றமதவெங்களிற்றூர்திப்பெருமானுருவஞ்சமைப்போரும்.”

### திருமுருகாற்றுப்படை.

“வைந்நுதிபொருதவடுவாழ்வரிநுதல்
வாடாமாலையோடையொடுதுயல்வரப்
படுமணியிரட்டமருங்கிற்கடுநடைக்
கூற்றத்தன்னமாற்றருமொய்ம்பிற்
கால்கிளர்ந்தன்னவேழமேல்கொண்டு”

பஞ்சவிருடிகளில் ஒருவராகிய கௌசிகர் தத்துவஞர்னங்கைகூடப்பெறாமையின் தவஞ்செய்யச்சுப்பிரமணியக்கடவுள்

ஞானாசாரியராகத்தோன்றிக் கடம்பமரநீழலிற் றென்றிசைநோக்கி வீற்றிருந்து, முனிவரைவடதிசைமுகமாகவிருத்தி, ஒருதிருக்கரத்தாற் சின்முத்திரைகாட்டி உபதேசித்தனரெனவும், ஆப்தகுருவாகிய அகத்தியமகாமுனிவருக்கும் ஞானோபதேசஞ்செய்தனரெனவும் கூறப்பட்டிருக்கிறது.

### திருக்கோளிலிப்புராணம்.

"பரம்பியதரங்கத்துங்கபத்திரைவடக்கதாக
நிரம்பியஞானப்பூக்கட்கவுசிகனென்னுநீர்மை
யருந்தவற்குண்மைஞானவளப்பரும்போதமீந்து
பொருந்துமாசாரியப்பேர்கொண்டனன்புகழ்வேலண்ணல்."

### சிவப்பிரகாசம்.

"அளவில்பலகலையங்கமாரணங்களுணர்ந்த
வகத்தியனுக்கோத்துரைக்குமண்ணல்."

கலைகளுக்கும், பூதங்களுக்கும், பிரமனுக்கும் தலைவராகிய தகுதிபொருந்திய பரப்பிரமம் 'சதாசிவோம்!' என வேதங்கள் கூவதேயன்றி, மூவகையக்கினியையுடைய யாககாலங்களில் 'சுப்பிரமணியோம்!' 'சுப்பிரமணியோம்!!' 'சுப்பிரமணியோம்!!!' என மூன்றுமுறைகூவியழையாநிற்கும்.

### காஞ்சிப்புராணம்.

"எக்கலைக்கும்பூதங்களெவற்றினுக்கும்
பிரமனுக்குமீசனென்னத்
தக்கமுதல்பரப்பிரமஞ்சதாசிவனே
மெனவேதஞ்சாற்றுமல்லான்
முக்கனல்சூழ்வேள்வியிற்சுப்பிரமணிய
னோமெனவுமுக்காற்கூறும்."

ஞானசத்திதரனும் நாமும் வேறல்லோம் நாமே குமரன் குமரனேநாம் என்று சிவபெருமான்கூறியிருக்கின்றனர்.

### கந்தபுராணம்.

"ஆதலினமதுசத்தியறுமுகனவனும்யாமும்
பேதகமன்றுநம்போற்பிரிவிலன்யாண்டுநின்று
னேதமில்குழவிபோல்வான்யாவையுமுணர்ந்தான்சீரும்
போதமுமழிவில்வீடும்போற்றினர்க்கருளவல்லான்."

## சிவபெருமான் பூசிக்கப்படும்போது
# இருக்கும்முறைமை.

நிற்பனவும், நடப்பனவும், சயனிப்பனவுமாகிய இலிங்கங்களும், மகேசுவரபேதமாகிய இருபத்தைந்து விக்கிரகங்களும் பூசைபண்ணும்போது சுகாசனமாகவிருந்தே அப்பூசையையேற்றுக்கொள்ளும்.

சைவசமயநெறி.

"இருக்குஞ்சயனமியக்கநிலையு
மருச்சனைசெய்யும்போதன்பால்"

"இருப்பர்மகேசரிருபத்தைவருள்ளு
மருச்சனைசெய்யும்போதன்பால்."

# சிவமூலம்.

பிருதிவிதத்துவமுதல் உன்மனையளவும் வியாபித்திருக்கும் சிவபெருமானுடைய பரிபூரணமே மூலமெனப்படும்.

சதாசிவரூபம்.

"தரைமுதலுன்மனையளவுநிலாவிய
பரைசிவன்பூரணமூலமெனப்படும்."

# பஞ்சோபசாரம்.

சந்தனம், பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலானவை பிருதிவிசம்பந்தமாகையால் பார்த்திவோபசாரமெனப்படும். திருமஞ்சனம், பால், தயிர் முதலானவை சலசம்பந்தமாகையால் சலோபசாரமெனப்படும். இரத்தினம், தீபம், கருப்பூரம் முதலானவை அக்கினிசம்பந்தமாகையால் தைஜஸோபசாரமெனப்படும். தூபம், சாமரை, விசிறி, முதலானவை வாயுசம்பந்தமாகையால் வாயவ்யோபசாரமெனப்படும். மணி, தோத்திரம், வாத்தியம்முதலானவை ஆகாசசம்பந்தமாகையால் ஆகாசோபசாரமெனப்படும்.

## சோடசோபசாரம்.

ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், செபசமர்ப்பணம், ஆராத்திரிகம் என்பன. சிலநூல்கள் வேறுவிதமாகவுங்கூறுகின்றன.

## ஆவாகனம்.

பரமசிவனை ஆவாகனஞ்செய்யுமிடத்து, மூலாதாரத்திலிருந்து பிரகாசிக்கின்ற *பிராசாதசத்திமயமாகத் தன்னைப்பாவித்து அப் பிராசாதமந்திரசெபாநுட்டானக்கிரமமாகவே ஆவாகனஞ்செய்யவேண்டும். அது பலபேதங்களாக இருக்கும். அவற்றுள் சோடசகலாப்பிராசாதம் மிகவிசேடித்ததாகும். அது கோஷகலையோடுகூடிய மேதாகலை, இரசகலை, விஷகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத்திகலை, வியாபினிகலை, வியோமரூபாகலை, அநந்தாகலை, அநாதாகலை, அனாச்சிருதாகலை, சமனாகலை, உன்மனாகலை எனப் பதினாறு பகுப்புக்களையுடையது.

## அங்குலவளவைப்பகுப்பு.

தொண்ணூற்றாறங்குலமுடையதாகியபுருடபரிமாணத்திலே பாதமுதல் மூலாதாரமுடிவாயுள்ள நாற்பத்தெட்டங்குலமுமொழியநின்ற, மூலாதாரமுதற்பிரமரந்திரமுடிவாகிய நாற்பத்தெட்டங்குலங்களுள் மூலாதாரமுதல் நாபிமுடிவாகிய ஏழங்குலம் கோஷகலையினிடம். நாபிமுதல் இருதயகமலமுடிவாகிய பதினாறங்குலம் கோஷகலையோடுகூடிய மேதாகலையினிடம். இருதயகமலமு

*பிரா-சிவஞானம்; சா-கதி, த-கொடுப்பது. சிவஞானகதியாகிய முத்தியைக்கொடுப்பதாற் பிராசாதமெனப்படும்.

தற் கண்டத்தினடி முடிவாகிய எட்டங்குலம். கோஷகலை மேதாக லைகளோடுகூடிய இரசகலையினிடம். கண்டவடி முதல் நாவடிமுடி வாகிய நாலங்குலம் கோஷ மேதாரசகலைகளோடுகூடிய விஷகலையி னிடம். நாவடிமுதற்புருவநடுமுடி வாகிய இரண்டங்குலம் விந்துக லையினிடம். இதன்மேற் பிரமரந்திரம்வரை பதினேராங்குல அள வு ஏனைக்கலைகளுக்கிடமாம். இவ்வாறே மூலாதாரம்முதற்பிமரந் திரம்வரையும் நாற்பத்தெட்டங்குலமாம். அடிமுதல் முடிவரையு ம் தொண்ணூற்ருறங்குலமென்றுணர்க.

## கலைகளின் சொரூபம்.

மனத்தின்வியாபாரமடங்கியவழி உன்மனுகலையினனுபவ முளதாம். அடங்கிய மனேவியாபாரத்தையுடைய ஆன்மாவிற்கு மீண்டும் மனேவியாபாரந்தோன்றுழிச் சமனுகலையினனுபவமா ம். மனம்பலவிதமாகவியாபிக்கும்போது வியாபினிகலையினனுப மாம். மந்திரமுச்சரிக்கமுயலுதற்குச்சாமர்த்தியமுளதாகும்போ து சத்திகலையினனுபவமாம். நிர்விகற்பவடிவமாக மந்திரமுடியு ங்காலக்கேட்கப்படுஞ் சத்தத்தையறியும்போது நாதகலையினனு பவமாம். விந்துச்சாரணத்தின் மூன்ருங்கூற்றையுச்சரிக்கும்போ து நிரோதிகலையினனுபவமாம். விந்துவின் பிற்பாதியையுச்சரிக் கும்போது அர்த்தசந்திரகலையினனுபவமாம். விடகலையின்மேலு ச்சரிக்கப்பட்ட விந்துவைக்குறித்தறியும்போது விந்துகலையின னுபவமாம். மகாரமுச்சரிக்கப்படும்போது விடகலையினனுபவ மாம் ஊகாரமுச்சரிக்கப்படும்போது இரசகலையினனுபவமாம். ஔகாரமுச்சரிக்கப்படும்போது மேதாகலையினனுபவமாம். இது வேசிருட்டிக்கிரமமாம்.

## கலைகளின்தோற்றம்.

மேதாகாரணராகியபிரமர் இரசகாரணராகிய விஷ்ணு விற்ரேேன்றுவர். இரசகாரணராகிய விஷ்ணு விடகாரணராகிய உருத்திரரிற்ரேேன்றுவர். விடகாரணராகிய உருத்திரர் விந்து

காரணராகிய மகேசுவரரிற்றோற்றுவர். விந்துகாரணராகிய மகேசுவரர் அர்த்தசந்திரநிரோதி நாத நாதாந்தகாரணராகிய சதாசிவரிற்றோற்றுவர். அர்த்தசந்திர நிரோதி நாதநாதாந்தகாரணராகிய சதாசிவர் சத்திவியாபினி வியோமரூபை அநந்தை அநாதை அநாசிருதை சமனை உன்மனைகாரணராகிய அநாகதசிவனிற்றோற்றுவர்.

# ஒடுக்கமுறை.

மூலாதாரத்திலிருக்கிற குண்டலினிசத்தியிற்பிறந்ததும் இச்சாசொரூபமுடையதுமாகிய பிராணரூபசிவபீசமாயுள்ள ஹ என்னும்மெய் ஹகாரவடிவமேயாகி நாபிக்கமலம்வரையும் வியாபித்துப்பின்பு மேதையோடுகூடி ஹளகாரவடிவமாகி இருதயகமலம் வரையும் வியாபித்து, ஹகார ஔகார ஊகார வடிவமாகிக்கண்டத்தினடிமட்டும் வியாபித்துப்பின்பு ஹளகார ஊகார மகாரவடிவமாகி நாவடிமட்டும்வியாபித்துப் பின்பு விந்துவோடுகூடிப் புருவமத்தியமட்டும்வியாபித்துப் பின்பு விந்துவினுச்சாரணத்தின் பிற்பாதிச்சமயத்திலே அர்த்தசந்திரவடிவமாய் அதன்மேல் வியாபித்துப் பின்பு விந்துவினுச்சாரணத்தின் பிற்பாதிமுடியுஞ்சமயத்திலே அதன்மேல் நிரோதிவடிவமாய் வியாபித்துநிற்கும்.

இவ்வாறே மூலாதாரத்துதித்த சூக்குமநாதமாகிய ஹகாரத்தினுடைய மந்திரசெபத்தானமைக்கப்பட்ட கலைகளே மேதை முதல் நிரோதிவரையாகக்கொள்ளப்படும்.

நிரோதிகலையின்மேலே அதிசூக்குமமாய்த் தன்னறிவானுணரப்படுவதாயுள்ள நாதமானது மேலுள்ளநாதாந்தத்தினிடமாகிய பிரமரந்திரத்திலொடுங்கும். நாதமொடுங்கியபின்னர் நாதாந்தகலை தன்காரணமாகிய சத்திகலையினுஞ் சத்திகலை வியாபினிகலையினும் வியாபினிகலை வியோமரூபிகலையினும், வியோமரூபி அநந்தைகலையினும் அநந்தை அநாதைகலையினும் அநாதை அநாசிருதைகலையினும் அநாசிருதை சமனைகலையினும் சமனைகலை உன்மனைகலையினுமொடுங்கும்.

## கோஷகலை.

மூலாதாரத்திலுள்ள நாலிதழுடைய தாமரையிலிருந்து எழுந்ததும், ஹம்சவென்னும் அன்னத்தினொலியுடையதும், மின்னல்போன்ற ஒளியுடையதும், மெய்யெழுத்துமாத்திரமேயானதுமாகிய ஹ் என்னும் கோஷகலையானது மூலாதாரந்தொடங்கி ஏழங்குலவளவினதாயுள்ள பத்திதழ்களையுடைய நாபிக்கமலம் வரையுமிருக்கின்றது.

மேதாகலையையொழித்துநின்ற ஹகாரமெய்மாத்திரத்திற்கே ஈண்டுநாபிவரையுமெனத் தானநியமங்கூறியது.

ஹகாரமானது சுழுமுனைவழியாற்சென்று மேதைமுதலியகலைகளோடுகூடி வேறுபாடுடையதாகி மீண்டுபிரமரந்திரசமீபத்திலே நாதமாய்க்கேட்கப்பட்டதாகி ஆண்டேநாதாந்தத்தன்மையையடைந்து பிரமாந்திரத்திலேயொடுங்கும்.

## மேதாகலை.

நாபிக்கமலத்திற்குமேற் பன்னிரண்டு அங்குலத்தின்மீது நாலங்குலத்தில் எட்டிதழுடைய இருதயகமலமானது இருக்கும். அதன்மேல் மூன்றுமாத்திரையுடையதும் அக்கினிச்சுவாலைபோன்றஒளியையுடையதுமாகிய மேதாகலையென்னும் ஔகாரகலையானது வியாபித்திருக்கின்றதாகப்பாவிக்க.

நிலமுதற் பிரகிருதிவரையுமுள்ள இருபத்துநான்குதத்துவங்களுக்கும் தாமரையாசனத்திலிருக்கிறபிரமாவைக் காரணேசுவரராகத்தியானிக்க.

## இரசகலை.

இருதயகமலந்தொடங்கி எட்டங்குலவளவுடையதாகிய கழுத்தெல்லையாயுள்ள இடத்திலே பதினாறிதழுடைய கண்டத்தானகமலத்தின்மேல் சந்திரசூரியர்களினொளியுடையதும், இரண்டுமாத்திரைக்கணக்குடையதுமாகிய இரசகலையென்னும் ஊகாரகலை இருக்கின்றது. இந்தஊகாரத்துக்கும் புருடன், இராகம், வித்தை, கலை, நியதி, காலம் என்னும்ஆறுதத்துவங்களோடுகூடியவரும் காத்தற்றொழிற்கேதுவாகிய இலக்குமியோடுகூடியவருமாகிய நாராயணனைக் காரணேசுவரராகத்தியானிக்க. இருதயகமலந்தொடங்கிக் கண்டத்தானம்வரையும் ஊகாரம்வியாபித்திருக்கின்றதாகப்பாவிக்க.

## விடகலை.

கண்டத்தினடியிற்றொடங்கி நாலங்குலவளவுடையதாகிய நாக்கெல்லையாயுள்ள இடத்திலே இருபத்துநான்கு இதழ்களையுடைய தானுத்தானகமலத்தின்மேல் ஒருமாத்திரையளவுடையதும் மின்னல்போன்றவொளியுடையதுமாகிய விடகலையென்னும் மகாரகலையானது இருக்கின்றது. சங்காரகிருத்தியத்தை இயற்றுகின்றவரும், விடகலைக்குரியதத்துவமாகிய மோகினியென்னும் மாயையோடுகூடியவருமாகிய உருத்திரரைக்காரணேசுவரராகத்தியானிக்க. கண்டவடிதொடங்கி நாவடிவரையும் மகாரகலைவியாபித்திருக்கின்றதாகப்பாவிக்க.

## விந்துகலை.

நாவடியின்மேல் இரண்டங்குலவளவுடையதாகிய புருவநடுவரையிலுள்ள தானத்திலே நான்கிதழுடையபுருமத்தியகமலத்தின்மேல் தீபச்சுவாலைபோன்றதும், அரைமாத்திரையோடுகூடியதும், சுத்தவித்தை, ஈசுவரம் என்னும்இரண்டுதத்துவங்களோடுகூடியதுமாகிய புள்ளியாகியவிந்துகலையை மகேசுவரராலாளப்படுகின்றதாகத்தியானிக்க. நாவடிதொடங்கிப்புருவநடுவரையும் விந்துகலைவியாபித்திருப்பதாகப்பாவிக்க.

## அர்த்தசந்திரகலை.

புருவநடுவாகிய விந்துத்தானத்திலிருந்து பதினொரங்குலவளவுடைய இடத்திலே பதினாறிதழ்களையுடைய பிரமரந்திரகமலமிருக்கும். விந்துப்பாதியாகிய அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை என்னும்நான்குகலைகளுக்கும் சாதாக்கியமும் சத்தியும் சிவமுமாகிய மூன்றுதத்துவங்களைத் தன்னுடையதாகப்பற்றிக்கொண்டிருக்கிறசதாசிவரைக்காரணேசுவரராகத்தியானிக்க.

புருவநடுவின்மேல் அர்த்தசந்திரகலைக்கு இரண்டேமுக்காலங்குலவளவிடமும், அதன்மேல் நிரோதிகலைக்கவ்வளவிடமும், அதன்மேல் நாதகலைக்கவ்வளவிடமும், அதன்மேல் நாதாந்தகலைக்கவ்வளவிடமும் உளதாதலால் பிரமரந்திரங்காறுமுள்ள பதினோரங்குலமும் நாற்கலையினிடமாம்.

## நிரோதிகலை.

நெற்றியினிடத்தில் பாதிச்சந்திரன்போன்ற ஒளியுடையதும், ஒருமாத்திரையிலெட்டிலொருகூறு காலமுடையதும், முக்கோணவடிவுடையதுமாகிய நிரோதிகலையைத்தியானிக்க.

## நாதகலை.

ஒருமாத்திரையின் பதினாறிலொருகூறாகிய மாத்திரையுடையதும், மாணிக்கரத்தினம்போன்ற ஒளியுடையதும், தண்டவடிவுடையதுமாகிய நாதகலைவியாபித்திருப்பதாகத் தியானிக்க.

## நாதாந்தகலை.

நாதகலையின்மேலே ஒருமாத்திரையின் முப்பத்திரண்டிலொருகூறாகிய மாத்திரையுடையதும், மின்னலின் முளைபோன்ற ஒளியுடையதுமாகிய நாதாந்தகலையைச்சிந்திக்க.

## சத்திகலை.

நாதாந்தத்திற்குமேற் பிரமரந்திரத்திலிருந்து மேலே ஒரங்குலவளவுடைய இடத்திலே ஒன்பது இதழ்களையுடைய கமலத்தின்மீது, ஒருமாத்திரையின் அறுபத்துநான்குகூறறிலொருகூறுடையதும், நூறுசூரியப்பிரகாசமுள்ளதும், இடப்பக்கத்தில் விந்துவோடடிய கலப்பைவடிவுடையதும் அனுகதசிவனைக் காரணேசுவரராகவுடையதும் ஆகிய சத்திகலையைததியானிக்க.

## வியாபினீகலை.

பிரமாந்திரத்தின்மேலுள்ள ஓரங்குலத்தின்மேல் மூன்றங்குலவளவினதாகிய இடத்தில் ஒருமாத்திரையின் நூற்றிருபத்தெட்டிலொருகூறாகிய மாத்திரையுள்ளதும், இருபக்கத்திலிரண்டுவிந்துக்களோடுகூடிய சூலவடிவமுடையதும், ஆயிரஞ்சூரியர்களுடைய ஒளியுடையதும், அநாகதசிவனைக்காரணேசுவரராகவுடையதும் ஆகிய வியாபினீகலையைச்சிந்திக்க.

## வியோமரூபாகலை.

வியோமரூபரைக் காரணேசுவரராகவுடையதும், நீலமேகம்போன்ற நிறமுடையதும், இச்சாசத்தியென்னும் நாமத்தையுடையதுமாக வியோமரூபாகலையைத்தியானிக்க.

## அநந்தாகலை.

அநந்தரைக் காரணேசுவரராகவுடையதும், கண்ணாடி

யொளிபோன்றதும், அறிவைத்தரும் ஞானசத்தியென்னும் நாமதேயத்தையுடையதுமாக அநந்தாகலையைத்தியானிக்க.

## அநாதாகலை.

அநாதரைக் காரணேசுவரராகவுடையதும், கடல்போன்ற நீலநிறமுடையதும், கிரியாசத்தியென்னும் நாமத்லைதயுடையதுமாக அநாதாகலையைத்தியானிக்க.

## அநாசிருதாகலை.

அநாசிருதரைக் காரணேசுவரராகவுடையதும், ஆயிரஞ்சந்திரர்களது ஒளியுடையதுமாக அநாசிருதாகலையைத்தியானிக்க. தாமொருவரை ஆசரியாதபடியால் அநாசிருதரென்னும்பெயரைப்பொருந்தியதமக்கு ஆதாரமானகலையும் அநாசிருதையென்னும் பெயரைப்பொருந்தியது. விளக்கிடமாகப்பொருளைக்கண்டசமயத்தில் அப்பொருளையறிவதற்குப் பின்பு விளக்குவேண்டாமைபோல, திருவருளாகிய ஞானக்கண்ணால் உண்மையைக்கண்டசமயத்தில் அருளுக்குமேற்படுத்திச் சிவானந்தப்பெருவாழ்வை அநாசிருதர்கொடுப்பதாகப்பாவிக்க.

## சமனாகலை.

பிரமரந்திரத்தின்மேலுள்ள நாலங்குலத்தின்மேலாகிய நாலங்குலஅளவுள்ள இடத்திலே ஒருமாத்திரையின் இருநூற்றைம்பத்தாறுகூறுகளில் ஒருகூறாகிய மாத்திரையுடையதும் நுண்ணியகாலத்தால் வரையறுக்கப்படும்உறுப்புக்களையுடையதும், பாசத்தொடர்பினெல்லையும் கோடிசூரியரின் ஒளியுடையதும், இருபக்கத்திலும் இரண்டுவிந்துக்களோடுகூடிய இரண்டுரேகையுடையதுமாகச் சமனாகலையைத்தியானிக்க

மனத்தோடுகூடியதாகலின் சமனையென்னும்பெயர்பெற்றது. மனத்தொளிநிகழ்ச்சியுளதாந்துணையும் பாசத்தொடர்புண்டாம். மனத்தொளிநிகழ்ச்சி அடங்கியவழிப் பாசம்நீங்கிப் பரப்பேறுளதாம்.

## உன்மனாகலை.

பிரமரந்திரத்தின்மேலாகிய எட்டங்குலத்தின்மேலுள்ள நாலங்குலவளவையிடத்தில் ஆயிரமிதழ்களையுடைய துவாதசாந்தகமலத்தின்மேல் பிரளயத்திலுதித்த கோடிசூரியர்களினொளியுடையதும், மனம்நீங்கப்பெற்றமையால் உன்மனையென்னும் பெய

ரையுடையதும், அநாகதசிவனைக் காரணேசுவரராகவுடையதும் ஆக முதல்வராகிய சிவபெருமானுடைய சிறப்புத்தன்மையையுடைய பிராசத்தியானது மேற்பட்டிருப்பதாகத்தியானிக்க.

உன்மனையந்தத்திற் பரமசிவன் தத்துவங்களைக்கடந்தவராய் இருப்பரெனப் பிராசாதசத்திமயனாகத்தன்னைத்தியானிக்க.

கலாசத்திகள்: சயை, விசயை, சௌமியை, அம்சு, திருதி, பந்தினி, மோசினி, மாயை, மோகினி, போதினி இவைஅகாரத்திலுண்டானசத்திகள்.

குகை, மனோரமை, தீப்தை, சுதீப்தை, பரமகாரிகை, சுதூம்ரை, பிங்கலை, பீதை, வாருணி, சிக்கிரை, அசலை, சசாங்கை, சுப்பிரபாங்கை, ஞானதை, மோட்சதை, பரை இவை உகாரத்திலுண்டானசத்திகள்.

சிரவணி, சிராவணி, கல்பகரி, கிராணவர்த்தினி, சுசப்தா, வாகினி, ஊர்த்துவகாமினி, பாவனி, ஆஹ்லாதினி, பிரவாகை, நியோத்திரி, ரேதோபவாகினி, பிதிர்மார்க்கானுகை, தேவமார்க்கானுகை, மார்க்கதரிசினி, ஆபூர்யாணி, பிராணபந்தனை, சித்தஸ்தை. சுவித்தை, தூமிரை, துருவை என்னுமிவை மகாரத்திலுண்டான சத்திகள்.

நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை இவை சத்திதத்துவத்தில் விந்துவிலுண்டானசத்திகள்.

இந்திகை, தீபிகை, மோசிகை, ரோசிகை, ஊர்த்துவகாமினி இவை அபரநாதசலாபுவனசத்திகள்.

வியாபினி, வியோமரூபிணி, அநந்தை, அநாதை, அநாசிருதை என்னுமிவை பரநாதபேதமாய் அபரநாதத்தைநடத்தும் சத்திகள்.

முதலிற் புஷ்பாஞ்சலியை மூலாதாரந்தொடங்கிக் கிரமமாக உயரக்கொணர்ந்து, இருதயத்தானத்தில் நிறுத்தி, மூலமந்திரத்தில் அகரத்தைவிட்டுப் பிரமத்தியாகஞ்செய்து, மேல் கண்டத்தானத்தில்நின்று, உகாரத்தைவிட்டு, விட்டுணுத்தியாகஞ்செய்து, அதன்மேல் தாலுத்தானத்தினின்று மகாரத்தைவிட்டு உருத்திரத்தியாகஞ்செய்து, புருவநடுவில்நின்றுவிந்துவைவிட்டு ஈசு

வாத்தியாகஞ்செய்து, பிரமரந்திரத்தில்நின்று நாதத்தைவிடுத்துச் சதாசிவத்தியாகஞ்செய்து, மேல் சத்தமத்தானமாகிய துவாதசாந்தத்தில்நின்று உன்மனியந்தத்திலிருக்கும் பரமசிவத்தில் பாவனையினாலே ஒருமையடைந்து, இரண்டற்றதாகத் தியானித்து, சிருட்டிக்கிரமமாகத் துவாதசாந்தத்தினின்றும், சூரியன் போன்ற ஒளியுள்ளதாய்த்தியானித்து, நெற்றிவரையுங்கொணர்ந்து, கோடிசந்திரர்களது ஒளியுள்ளதாகவும், குறுக்கே அமிர்தபிண்டம்போன்ற வெண்ணிறமாகவும் சந்திரமண்டலத்தைத்தியானித்து, இருதயம்வரையுங்கொணர்ந்து, பிங்கலையினாலே வெளியேவந்து, புட்பாஞ்சலியில் அடங்கினதாகப்பாவித்து, இலிங்கத்தில்வைத்து ஆவாகனஞ்செய்க.

அஃதாவது, பூசையின்பொருட்டுச் சிவபெருமானை இலிங்கமுதலியவற்றில் வரவழைத்து அபிமுகமாகச்செய்தலென்னும் பாவனையாம். எங்கும்வியாபித்திருக்கும் கடவுளை ஆவாகனஞ்செய்வது எங்ஙனமெனில், விறகுமுழுதும்நிறைந்திருக்கும் நெருப்பைக்கோலினாற்கடைய அதுஓரிடத்திலேபிரகாசித்தல்போல,எங்கும் நிறைந்திருக்கும் கடவுளைஓரிடத்திற் சிரத்தையுடன் அழைத்து அபிமுகமாகச்செய்தலென்க.

பிரதிட்டாகாலத்திலே சர்வசங்காரகாலமளவாகச் சிவலிங்கத்திற் சாந்நித்தியமாதற்காகச் செய்யப்படும் சீவந்நியாசம் சித்பிரகாசாவாகனமெனவும், தினந்தோறும் பூசாகாலத்திற் சிவலிங்கத்திலெழுந்தருளியிருக்குஞ் சதாசிவமூர்த்தியினுடைய நான்கு முகங்களினும்வியாபித்திருக்கும் ஈசானமுகம் தன்னைப்பார்க்கும்படி செய்வது அபிமுகீகரணமெனவும் * ஆவாகனம் இருவகைப்படும்.

மூலமந்திரத்தாற்றரிசிக்கப்பட்ட பரிபூரணத்தை ஆன்மாவானது சிவப்பிரசாதமாகிய அருளினால் அறிந்து அதிலழுந்துதலே இதனுண்மையாகும்.

சதாசிவரூபம்

"இப்படித்தரைமுதற்சமனையீறாய்ச்
செப்பவியாபிக்கும்பரமசிவனது

*அஞ்சலிதன்னுளணிவிரலிரண்டினும்
விஞ்சியவங்குட்டம்மேவிலாவாகனம்."

பொருவிலுயர்பரிபூரணந்தன்னை
யறிவிலழுந்துதலாவாகனமே."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருக்குறுந்தொகை.

"அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடர்ச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே."

"என்னிலாருமெனக்கினியாரில்லை
யென்னிலும்மினியானொருவனுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்து புக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே."

## தாபனம்.

தயாநிதியே, அடியேனுக்கு அனுக்கிரகஞ்செய்யுநிமித்தம் இவ்விலிங்கத்தில் எழுந்தருளியிருக்கவேண்டுமென்று அன்புடன் செய்யுமனோபாவனையே தாபனமாம்.†

ஆன்மா சிவபெருமானை அருளினலறிந்து அதிலழுந்தலை நிலைபெறச்செய்தலே இதனுண்மையாகும்.

சதாசிவரூபம்.

"அலையாதழுந்தநிலைபெறல்தாபனம்."

## சந்நிதானம்.

அஃதாவது பூசிக்கப்படுபவராகியகடவுள் அனுக்கிரகிக்குந்தன்மையும், பூசகனாகியதான் அனுக்கிரகிக்கப்படுந்தன்மையுமாகிய சம்பந்தபாவனையே *சந்நிதானமாம்.

சந்நிதானம்-சமீபித்தசம்பந்தம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

"நங்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்

---

† மேவுமஞ்சலிதனைவிரித்ததோமுகமுறத்
தாபனஞ்செய்வதுதாபனமுத்திரையே."

* பெருவிரலுயர்த்திடப்பிடித்தகைமுட்டிகள்
சரிவுறவிணைத்திடிற்சந்நிதானமதாம்.

தன்கடனடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே"

சதாசிவரூபம்.

"இவன்றனதறிவுசிவன்பூரணத்திலுஞ்
சிவன்பூரணத்துவமிவன்றனதறிவிலு
மொன்றையொன்றகலாதுறவுசெய்திருப்ப
தொன்றியசந்நிதானமென்றுரைப்பார்."

## சந்நிரோதனம்.

பகவானே, எப்பொழுதும் என்னிடத்தில் அனுக்கிரகம் வைத்திருக்கவேண்டுமென்னும் மஹாபாவனையே ‡சந்நிரோதனமாம்.

ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவானது எக்காலத்தும், நீங்காதபடி சிவத்திலேசமைதலென்னு முண்மையாகும்

சதாசிவரூபம்.

"இவனிடத்துறுமறிவென்றுமொழியாச்
சமையதுதானேசந்நிரோதனமே."

## ஆவாகனாதிகளுக்குமந்திரம்.

சைவசமயநெறி.

"ஆவாகனாதிகளைச்சத்தியோசாதாதி
நாவிற்சொலிச்செய்நயந்து."

"இருதயத்தினாலுமிவைபுரிதலாகும்
இருதயமெங்கும்பொதுவென்றெண்."

கிரியையின் தன்மையையுணர்த்துதற்காகவே மந்திரத்தையுச்சரித்து, †முத்திரையைக்காட்டி, அதற்குரிய அதிதேவதை மனதிற்கொண்ட பாவனையையனுகூலமாக்கும். விருத்தியடைவாய் என்று சுவாகதம்* சொன்னதாகப் பாவித்து, சுவாமீ, இந்த இலிங்கத்திற்சாந்நித்தியமாய் இருக்கவேண்டுமென்றுவிஞ்ஞாபித்துச் சுவாகதார்க்கியம் கொடுத்து, இருதயாதி மந்

‡ "அன்னசந்நிதானத் தகமுறப் பெருவிர றன்னை மறைப்பது சந்நிரோதனமே."

†. முத் – சந்தோஷம். திரா – வேகமாகச்செல்லல். எனவே தேவரைமகிழ்வித்து அசுரரைத்துரத்துதல் என்பதுகருத்து.

*சு-ஆகதம்–நல்வரவு.

திரங்களை இருதயமுதலிய அங்கங்களில் நியசித்து, மூலமந்திரத்தையுச்சரித்து வசீபாவஞ்செய்து, அஸ்திரமந்திரத்தினால் இரட்சை, கவசத்தால் அவகுண்டனம், வௌஷட் என்பதை இறுதியாகவுடைய மூலமந்திரத்தையுச்சரித்து, தேனுமுத்திரை, §மகாமுத்திரையினாற் பரமீகரணஞ்செய்து *பஞ்சமுகிமுத்திரைகாட்டுக.

இருதயபூர்வமும் நமோந்தமுமாக மூலமந்திரத்தையுச்சரித்து, மகேசுவரமாகிய திருவடிகளில் வலமிடமாக ஒவ்வொருதரம் ஞானசத்திகாரியமாகிய பாத்தியத்தையும், சுவதாந்தமாக மந்திரத்தையுச்சரித்துச் சதாசிவமாகிய ஈசானாதி ஐந்துமுகங்களிலும் மும்மூன்றுதரம் கிரியாசத்திகாரியமாகிய, ஆசமனீயத்தையும், சுவாகாந்தமாக மந்திரத்தையுச்சரித்து, நிஷ்களமாகிய ஈசானம்முதலிய ஐந்துசிரசுகளில் ஒவ்வொருதரம் இச்சாசத்திகாரியமாகிய அருக்கியத்தையும் தனுகரணபுவனபோகமாகிய குற்றத்தைக்கழன்றிருக்கைகாரணமாகக் கொடுத்தல் உரித்தாம்.

ஆன்மாவானது சிவபெருமானுடைய பிரகாசமாகிய இச்சாஞானக்கிரியைகள் பொருந்திய தானமாகிய திருவடியையடைந்து, சத்திகளுடைய விளக்கத்திலே, திருவருளென்னுந்தன்மையையுடைய திருமுகத்திற்பொருந்தி, அருள்விளக்கத்திலே நிஷ்களமாகிய திருமுடியையடைதலென்னும் பாவனைக்காகவே பாத்தியம் ஆசமனீயம் அருக்கியம் என்பவற்றைக்கொடுப்பதாகும்.

சதாசிவரூபம்.

"பாத்தியாசமனார்க்கியம்பழுதக
லான்மசுத்திநிமித்தமாகவும்."

---

§"நெடியகையிணைகளை நிமிர்த்தெதிர்முகமுற
வடிமுதன்முடியளவமைக்கின்மாமுத்திரையே."

*"தன்னினுட்கோத்தகைத்தர்ச்சனிபெருவிரல்
மன்னியநடுவிரன்மணிச்சிறுவிரல்களை
ஆங்குறப்பிடித்தபின்னணிவிரலிணைநடுப்
பாங்குறநிமிர்ப்பதுபஞ்சமுகமே."

*திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.*

பண்—பியந்தைக்காந்தாரம்.

"தோடொருகாதனுகியொருகாதிலங்கு
சுரிசங்குநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தை
யிடமாயகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்று
வெறிநீர்தெளிப்பவிரலா
ஞடுடனுடுசெம்மையொலிவெள்ளமாரு
நனிபள்ளிபோலுநமர்காள்."

மூலமந்திரத்தை வெளஷடந்தமாகவுச்சரித்து அறுகு புஷ்பம் அட்சதைகளைச்சாத்துக. வாமஅத்தத்தினுல் கண்டாநாதத்தைமுன்னிட்டு இருதயபூர்வமும் சுவாகாந்தமுமான மூலமந்திரத்தினுல்தூபதீபம் ஆசமனர்க்கியம்கொடுக்க. பாவனுபிஷேகம்செய்துவிசேஷார்க்கியம் புரோக்ஷிதது, பாத்தியாசமனர்க்கியங்கொடுத்துத் திருவொற்றுடைபாவிக்க.

வாசனைபொருந்திய சந்தனம் அக்ஷதை அறுகு புஷ்பம் பொற்கௌபீனம் மேகலாபரணம் உபவீதம் குண்டலம் ஆபரணம் வஸ்திரம் என்பவைகளைப் பத்தியுடன்நிவேதிக்க.

## சந்தனம்.

அகில் கருப்பூரம் குங்குமப்பூ முதலிய பொருள்களாற் கலந்த திருவருளாகிய சந்தனத்தைச் சாத்துகின்றவர்கள் பிரபஞ்சவைராக்கியமுடையவர்களாய்ச் சிவபுரத்தையடைவார்கள். இது திருவருட்சத்திபதிதலென்னும் பாவனையாம். மெய்யன்போடு சந்தனக்குழம்புசாத்தியவருடையபேற்றைமூர்த்திநாயனருடைய சரித்திரத்தாலும் நன்குஅறிக.

*திருநாவுக்கரசுநாயனர்.*

திருத்தாண்டகம்.

"ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடியைநானபயம்புக்க
தாளானைத்தன்னெப்பாரில்லாதானைச்
சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த

"தோளானைத்தோளாதமுத்தொப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த
கிளானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலரே."

## புஷ்பதானம்.

வௌஷட் என்பதை இறுதியாகவுடைய மூலமந்திரத்தினாற் புஷ்பம் அறுகு அட்சதை இவைகளைத் திருமுடியிற்சாத்துதல் சுத்தசைதன்னியமாகிய ஆனந்தம்பெருகுதற்காகும்.

சதாசிவரூபம்.

"நறுமலரதனைநல்வீட்டின்பங்
குறுகுதலேதுவாகவுங்கொடுத்து"

## புஷ்பவிசேஷம்.

*சத்துவகுணத்தையுடைய வெள்ளெருக்கு, வெள்ளையலரி, பிச்சி, சிறுசண்பகம், மந்தாரை, கொக்கிறகு, புன்னை, நந்தியாவர்த்தை, மல்லிகை, முல்லை, தும்பை என்னும்வெள்ளைப்பூக்களால், சாத்துவிககாலமாகியசாயரட்சை யாமம் உஷக்காலமென்னுங்காலங்களில் அருச்சித்தவர்கள் மோட்சத்தையடைவார்கள், செந்நிறத்தையுடையவைகளாகிய பாதிரி, செந்தாமரை, பட்டி, செவ்வலரி, செங்கடம்பு என்னும் இராசதபுஷ்பங்களால் இராசதகாலமாகிய மத்தியானகாலத்திலருசசித்தவர்கள் போகத்தையடைவார்கள். பொன்மைநிறம்பொருந்திய கொன்றை, செண்பகம், பொன்மத்தை முதலிய இராசத சாத்துவிகபுஷ்பங்களால், பிராதக்காலத்திலருச்சித்தவர்கள் போகமோக்ஷமென்னுமிரண்டையுமடைவார்கள். வில்வம், துளசி, இருவேலிவேர், மருக்கொழுந்து, அறுகு, பச்சை முதலிய தாமத இராசத பத்திரங்களாலருச்சித்தவர்கள் போக மோக்ஷங்களையடைவார்கள்.

நீலோற்பலம்நீங்கலான நீலநிறப்புஷ்பங்கள் தாமதகுணத்தையுடையன ஆகையால் அவை பூசைக்குத்தகுதியுற்றன.

## †அதிதேவர்கள்.

கோங்கம்பூவில் வாணியும், அலரிப்பூவிற்பிரமாவும், வன்னியில் அக்கினியும், நந்தியாவர்த்தப்பூவில் நந்திதேவரும், புன்னைப்பூவில் வாயுவும், எருக்கிற் சூரியனும், சண்பகத்திற் செ

* அசிதம். † காஞ்சிப்புராணம்.

வ்வேளும், வில்வத்திற்றிருமகளும், கொக்கிறகம்பூவில் மாயோனும், மாவிலிங்கையில் வருணனும, மகிழில்சுயசையும், வாகைப்பூவில் நிருதியும், சாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரிற் பரிதியும், குமுதப்பூவிற்றிங்களும், மந்தாரத்திலிந்திரனும், மதுமத்தையிற்குபேரனும், நாயுருவியில் இயமனும், தாமரைப்பூவிற் சிவனும், நீலோற்பலத்திலும் ஏனைய வாசனைப்புஷ்பங்களிலும் உமாதேவியாரும் உவகையுடன் இருப்பார்கள் ஆகையால், இப்புஷ்பங்களை அன்புடன் விதிப்படிஎடுத்துப்பூசிப்பின் சிவபெருமான்கிருபைசெய்தருளுவர்.

## * பலன்.

அக்ஷதை சத்துருக்ஷயத்தையும், அறுகு பிரா திருவததோஷத்தையும், எட்டிப்பிரமகத்திதோஷத்தையும், கொன்றைப்பூ மாதிருவததோஷத்தையும், வெள்ளெருக்கம்பூ அன்னியஸ்திரீகமனத்தையும், நீலோற்பலம் வாக்குத்தோஷத்தையும், குங்குமப்பூ நவக்கிரகபீடையையும், வில்வம் பொய்சொன்னபாவத்தையும், கோங்கம்பூ கள்ளுண்டபாவத்தையும், கத்தரிப்பத்திரம் குட்டரோகத்தையும், துளசி வறுமையையும்; தும்பைப்பூ கோகத்திதோஷத்தையும், பலாசம்பூபொன் திருடினதோஷத்தையும், நெய்தற்பூவும்நெல்லியும் ரோகத்தையும்நீக்கிவிடும்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருக்குறுந்தொகை.

"விண்டமாமலர்கொண்டுவிரைந்துநீர்
அண்டநாயகன் றன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர்செய்தபாவம்பறந்திடும்
வண்டுசேர்பொழில்வான்மியூரீசனே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—சிறீகாமரம்.

"வாசமலருஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான் புள்ளிருக்குவேளூரே.

---

*சைவபூஷணம்.

திருவாசகம்.

"ஆயமொழிக்கிள்ளாயவள்ளூறுமன்பர்பாலூ
மேயபெருந்துறையான்மெய்த்தாரென்—தீயவினை
நாளுமணுகாவண்ணநாயேனையாளுடையான்
தாளியறுகாமுவந்ததார்.

## கௌபீனம்.

நான்குவேதங்களையும் கலைகளையுங் கௌபீனமாயணிந்தனர்.

திருவாசகம்.

"என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
துன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருள்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ."

## உபவீதம்.

விதிப்படிசெய்யப்பட்ட பூணூலைச் சிவபெருமானுக்குத் தினந்தோறுஞ் சாத்துகின்றவர்கள் வேதபண்டிதராவார்கள். அவர்களை மயக்கம்பொருந்திய புலையர்கள்காணினும் மறுமையில் மறையோராவார்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—காந்தாரம்.

"முத்தேர்நகையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
வத்தேனளியுண்களியாலிசைமுரலவாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநணாவே."

## வஸ்திரம்.

மிருதுவாகிய இழைகளையுடையதும், வெள்ளியநுரைபோன்றதுமாகிய பட்டுவஸ்திரத்தை அன்புடன்சாத்தியவர்கள் சிவலோகத்தையடைந்து ஒவ்வோரிழைக்கு ஆயிரம்கற்பகாலம் வாழ்வார்கள். இது திரோதானசத்தி நீங்குதலென்னும் பாவனையாம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருநேரிசை.

"கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி

விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையாகிப்பருப்பதநோக்கினாரே."

## தத்துவத்திரயம்.

வலப்பாகத்தில் ஆன்மதத்துவத்தையும், இடப்பாகத்தில் வித்தியாதத்துவத்தையும், நடுவிற் சிவதத்துவத்தையும் புஷ்பாஞ்சலித்திரயத்தினாலருச்சிப்பது தத்துவத்திரயபூசையாம்.

ஆன்மபோதம்நீங்கிச் சிவபோதம் பதியுஞ்சமயத்தில் மனம் வாக்குக்காயத்தான்வந்த வினைகளையும், சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்தம் ஆகிய வினைகளையும் நீங்குதலென்னும் பாவனையாம்.

## சதாசிவரூபம்.

"நீங்கருங்கரும்சுத்திநிமித்தந்
தீங்கறுந்தத்துவத்திரயஞ்சாத்தி"

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

பண்—வியாழக்குறிஞ்சி.

"அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீர்
உய்வினைநாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோம்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம்."

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருநேரிசை.

"நாயினுங்கடைப்பட்டேனைநன்னெறிகாட்டியாண்டாய்
ஆயிரமரவமார்த்தவமுதனேயமுதமொத்து
நீயுமென்னெஞ்சினுள்ளேநிலாவினாய்நிலாவிநிற்க
நோயவைசாருமாகினோக்கிநீயருள்செய்வாயே."

## மாலை.

பின்பு சிவனைமூலத்தாலருச்சித்துப் பிரணவரூபமாகிய கொன்றைமுதலியமாலைசாத்துக.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

பண்—காந்தாரம்.

"அண்டமாயாதியாயருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கொர்மெய்ப்பொருளாம்பிஞ்ஞகனைத்

தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே."

சிவபோதத்தையடைந்தஆன்மா மீண்டும் பிரபஞ்சத்தை நோக்காவண்ணங் கண்டாநாதத்தை முன்னிட்டுத் தூபம் தீபம் ஆசமனம் அருக்கியங்களையும் *மனோதமுத்திரையையுஞ் சமர்ப்பிக்க.

## கண்டாநாதம்.

மணியில் தேவர்கள்வசித்தலால் அதை நாபிக்குக்கீழ்ப்படாமல் அஸ்திரமந்திரத்தை உச்சரித்து, அடித்தல்வேண்டுமென்று தந்திரசாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இயக்கர், இராக்கதர், பிசாசர், அசுரர் என்னுமிவர்கள் மணிச்சத்தத்தைக்கேட்டுப்பயங்கரத்துடன் அகலுவரெனவும், தேவர்கள்மகிழ்ச்சியுடன் சாந்நித்தியமாவார்களெனவும் சகலாகமசாரசங்கிரகத்திற் கூறப்பட்டிருக்கிறது.

## தூபபேதமும் பலனும்.

தூபபாத்திரத்தின்முகத்தில்அக்கினியும், தண்டத்திலீசுவரனும், பாதத்தில் பிரசாபதியும் அதிபர்களாக இருப்பார்கள். தூபமானது உத்தமதூபம், மத்திமதூபம், அதமதூபம் என மூவகைப்படும். அகிற்பொடியொருகூறும், குங்குலியம் இருகூறும், சந்தனப்பொடி மூன்றுகூறும், சிறிதுகருப்பூரப்பொடியும், தேனுங்கூட்டியிடுவது உத்தமதூபமாகும். இது சாத்துவிககுணசம்பந்தமானது.

இலாமிச்சம்வேர்ப்பொடி ஒருகூறும், குங்குலியம் இருகூறும், சந்தனப்பொடிமூன்றுகூறும், நெய்யும், தேனுங்கூட்டியிடுவது மத்திமதூபமாகும். இது இராசதகுணசம்பந்தமானது.

குங்குலியமும் நெய்யுங் கூட்டியிடுவது அதமதூபமாகும். இது தாமதகுணசம்பந்தமானது.

கிரியாசத்திரூபமாகியதூபத்தைச் சிவசந்நிதானத்திலிடுவதனால் உண்டாகும் உண்மையைக் கூறுமிடத்து, ஆன்மாவை

---

"*இருகையங்குலிகளையெதிர்முகத்துள்ளுறச்
செருகியபின்பிணைச்செங்கைகள்கூட்டி
நீடுதர்ச்சனிகணிமிர்ந்துறப்பெருவிரன்
மூடிடின்மனோதமுத்திரையாகும்."

மறைத்துக்கொண்டிருக்கும் ஆணவமலசைத்தியாகிய அறியாமையைக் கிரியாசத்தியைக்கொண்டு சிவபெருமான்நீக்கும்குறிப்பென்க.

திருஞானசம்பந்தநாயனார்.

பண்—பழந்தக்கராகம்.

"தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சுனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே."

பண்—கௌசிகம்.

"வெந்தகுங்குலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்களிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே."

## தீபபேதமும்பலனும்.

சிற்சத்தியின்வாசமாய், ஞானவிளக்கமாயிருப்பது தீபமாகும். சிவசந்நிதானத்திற் றீபமேற்றிவருபவர்களுக்குச் சிவபெருமான் அபமிருத்துநிவாரணத்தையும், பாபக்ஷயத்தையும், சகலசித்திகளையும், ஞானஅறிவையுங் கொடுத்தருளுவர். அது உத்தமதீபம், மத்திமதீபம், அதமதீபம் என மூவகைப்படும். கபிலைப்பசுவின் நெய்யால் நிறைக்கப்பட்டதும், தாமரைநூல், வெள்ளெருக்குநூல், பருத்திநூலென்பவற்றிலொன்றினால் இருபத்தோரிழையாக்கிக்கர்ப்பூரப்பொடிகூட்டித்திரிபண்ணப்பட்டதும், திரியிலெரியுஞ்சுடர் நான்கங்குலவளவுயரமாயிருப்பதும், சாத்துவிதகுணத்தைப் பொருந்தியுள்ளதுமானது உத்தமதீபமாகும். மற்றைய பசுக்களின்நெய்யால் நிறைக்கப்பட்டதும், பதினாறிழையாக்கிக் கருப்பூரப்பொடி கூட்டப்பட்ட திரியையுடையதும் திரியிலெரியுஞ்சுடர் மூன்றங்குலவுயரமாயிருப்பதும், இராசதகுணத்தைப்பொருந்தியுள்ளதுமானது மத்திமதீபமாகும். ஆட்டுநெய் அல்லது எண்ணெயால் நிறைக்கப்பட்டதும், பதினொன்கிழையாலேனும் ஏழிழையாலேனும்கருப்பூரப்பொடிகூட்டிப் பண்ணப்பட்ட திரியையுடையதும், திரியிலெரியுஞ்சுடர் இரண்டங்குலவுயரமாயிருப்பதும் தாமதகுணத்தைச்சார்ந்துள்ளதுமானது அதமதீபமாகும்.

மரக்கொட்டைகளிலிருந்து எடுக்கப்பட்டநெய்யும், எருமைநெய்யும், கந்தைத்துணியும் சிவதீபங்களுக்கு விலக்கப்பட்டன.

திருநாவுக்கரசுசுவாமிகள்
தனித்திருநேரிசை.

"விளக்கினார்பெற்றவின்பமெழுக்கினாற்பதிற்றியாகும்
துளக்கினன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ந்நெறிஞானமாகு
மளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே."

சதாசிவரூபம்.

"ஞானவிளக்கநண்ணுதற்பொருட்டுத்
தூபதீபந்துதைந்தினிதளித்து."

மெய்யன்போடு தூபமிட்டவரதுபேற்றைக் குங்குலியக்கலயநாயனார்சரித்திரத்தாலும், தீபமேற்றியவர்பெருமையை நமிநந்தியடிகள் சரித்திரத்தாலும் பெரியபுராணத்திலறிக.

## இலயாங்கம்.

பஞ்சப்பிரமமந்திரங்களையும் சடங்கமந்திரங்களையும் அவ்வவ்வவயவங்களிலே பூசிக்க.

## போகாங்கம்.

காமியத்தைவிரும்பி ஆவரணபூசையின்பொருட்டுப் பிரார்த்தித்து, அனுமதிபெற்று, மூலத்தாற்சிவனைப்பூசிக்க. சர்வஞ்ஞத்துவம், நித்தியபரிபூரணம், அநாதிபோதம், சுதந்திரம், அலுப்தசத்தி, அநந்தசக்தி என்னும் சிவபோகத்துக்கு அங்கமாகிய சுத்தகுணங்களாறையும் ஆன்மாப்பெறுதலே மேலாகியபோகாங்கபூசையென்று ஞானரத்தினாவளியிற்கூறப்பட்டது.

சதாசிவரூபம்.

"சட்குணந்தனக்குச்சார்தற்பொருட்டுப்
பொக்கமில்போகாங்கம்பூசித்து."

## பிரதமாவரணம். [போகாங்கபூசை.]

ஐந்து சிரசுகளிலிருந்து ஈசானத்தையெடுத்து, படிகநிறத்தையுடையவரும், உலகத்துக்குக்காரணரும், மூன்றுகண்க

ளையுடையவரும், ஞானசந்திரனைச்சடையிற்றரித்தவரும், அழகும் பிரசன்னமுமுள்ளவரும், சூலத்தையும், அபயத்தையும் தரித்த கைகளையுடையவருமாக, ஓம் ஹாம் ஈசாநமூர்த்தயே நம: எ ன்று ஈசானத்திற்பூசிக்க.

ஐந்துமுகங்களிலிருந்து தற்புருஷவத்திரத்தையெடுத்து, பொன்னிறத்தையும் பீதாம்பரத்தையும் உபவீதத்தையுமுடையவரும், மாதுளங்கனியும் உருத்திராக்ஷமாலிகையும் பொருந்திய கைகளையுடையவரும், இளம்பிறையைத்தரித்த சிரசையுடையவருமாகத் தற்புருடதேவரை ஓம் ஹேம் தத்புருஷவக்த்ராய நம: என்று கிழக்குத்தளத்திற்பூசிக்க.

இருதயத்திலிருந்து அகோரத்தையெடுத்து, மூன்றுகண்களையும், முடியிற்சந்திரனையும், சாந்தத்தையும், குண்டலாலங்காரத்தையும், கீரிநிறமானபுருவம் மீசை தாடி கேசம் பல் இவைகள்பொருந்திய உக்கிரமுகத்தையும், கபாலம், சர்ப்பம், விருச்சிகம் ஆகிய ஆபரணங்களையும், வலத்திருக்கரங்களிற் சூலம், பரசு, வாள், தண்டம் என்னுமிவைகளையும், இடத்திருக்கரங்களில் கட்டுவாங்கம், கபாலம், பரிசை, பாசம் என்னுமிவைகளையுந்தரித்தவரும், சத்துருக்களையழிப்பவரும், மேகம்போலும்நிறமுள்ளவரும், இட்டசித்திகளைக்கொடுப்பவருமாக ஓம் ஹும் அகோரஹ்ருதயாய நம: என்று தெற்குத்தளத்திற்பூசிக்க.

குய்யத்திலிருந்து வாமதேவத்தையெடுத்து, சிவப்புநிறத்தையும், நறுமணம்பொருந்திய மாலை வஸ்திரம் உபவீதம்என்பவற்றையும், உயர்ந்தமூக்கையும் சிவந்ததலைப்பாகையையும், வாள் பரிசை என்னுமிவறறையேந்திய கைகளையுமுடையவராக ஓம் ஹிம் வாமதேவகுஹ்யாய நம:என்று வடக்குத்தளத்திற்பூசிக்க.

பாதாதி அங்கங்களிலிருந்து சத்தியோசாதத்தையெடுத்து வெண்மைநிறமுள்ளவரும், வெண்மையானமாலை சந்தனம் ஆபரணம் தலைப்பாகை வஸ்திரம் இவற்றையும், மூன்றுகண்களையும் வரதாபயம்பொருந்திய கைகளையுமுடையவரும், சாந்தரும், சந்திரனையணிந்தவரும், பாலவடிவரும், வெண்மையான ஒருமுகமுடையவருமாக ஓம் ஹாம் ஸத்யோஜாதமூர்த்தயே நம:என்று மேற்குத்தளத்திற்பூசிக்க.

இவர்களுடைய திருவடிகளை மறவாது தியானித்தவர்கள் ஆன்மாவை இடர்ப்படுத்துகின்ற வினையினின்றும்நீங்குவர்.

நேத்திரங்களிலிருந்து நேத்திரத்தையெடுத்து, சிவப்புநிறமானதும், ஞானசத்தி கிரியாசத்தி இச்சாசத்திவடிவானதும், முத்தத்துவவடிவானதும், மூன்றுமண்டலங்களையடைந்ததுமாக ஈசானத்திற்குஉத்தரபாகத்தில் ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நமஃ என்றுபூசிக்க.

இருதயத்திலிருந்து இருதயத்தைக்கிரகித்து, வெண்மைநிறமுள்ளதாக ஓம் ஹாம் ஹ்ருதயாய நமஃஎன்று அக்கினிதளத்திலும், சிரசிலிருந்து சிரசைக்கிரகித்து, பொன்மைநிறமுள்ளதாக ஓம் ஹீம் ஶிரஸே நமஃஎன்று ஈசானதளத்தில் நேத்திரத்திற்குவடக்கிலும், சிகையிலிருந்து சிகையையெடுத்து, சிந்தூரவர்ணமுள்ளதாக ஓம்ஹூம் ஶிகாயை நமஃஎன்று நிருதிதளத்திலும் பிறரால்பேதிக்கப்படாத ஒளிரூபமான கவசத்தை எல்லா அங்கங்களிலிருந்தும் எடுத்து, ஓம்ஹைம் கவசாய நமஃஎன்று வாயுதளத்திலும, பராக்கிரமரூபமான அஸ்திரத்தை அத்தங்களிலிருந்து எடுத்து, ஓம்ஹஃ அஸ்த்ராய நமஃஎன்று கிழக்குமுதலியநான்குதளங்களிலிருக்கும் தற்புருடாதிகளுக்கு இடபாகத்திலும்பூசிக்க. ஈசானாதிஐந்துக்கும் முறையே தேனு, *பத்மம், †திரிசூலம், ‡மகரி, §சிருக்கு என்னும்முத்திரைகளையும், இருதயாதி அங்கங்களுக்கு ¶நமஸ்காரமுத்திரையையுங்காட்டுக.

---

* "பிணித்தகைவிரித்துப்பெருவிரலினைநடுப்
பணித்திடப்பிடிப்பதுபதுமமுத்திரையே."

† "பெறுகரங்கோத்தபின்பெருவிரனடுவிரல்
சிறுவிரனிமிர்ப்பதுதிரிசூலம்மே."

‡ "திரிசூலந்தனிற்செறித்ததற்சனியினை
மருவநாமிகையுறவளைத்திடின்மகரம்."

§ "காண்டகுமகரக்கனிட்டையுள்வைத்துத்
தூண்டிடிற்பெருவிரல்சுருக்குமுத்திரையே."

¶ "பெருவிரலிரண்டும்பிணைந்திடநிமிர்ந்தே
கரமிரண்டுறினமஸ்காரமுத்திரையே."

### சதாசிவரூபம்.

"மூன்றுமறைதெரிமுதலாவரண
மைந்துபிரமமோடாறங்கமுமே."

முச்சத்திகளாலும் எல்லாக்காரியங்களையுமறிந்து அதிட்டித்துச்செய்விக்கும் நேத்திரமாகையால் இது அலுப்தசத்தி என்னுங்குணத்தையும், திருவருட்சத்தியால் எல்லாவற்றையும்அறிதலே இருதயமாகையால் இது சர்வஞ்ஞத்துவம்என்னுங் குணத்தையும், இச்சாஞானக்கிரியைமூன்றும் பஞ்சகிருத்தியஞ்செய்யுங்குணமாகிய ஈசானாதிஐந்தும்ஆகிய எட்டுக்குணங்களும்பொருந்திய குறைவுபடாதஐசுவரியமே சிரசாதலால் இது அநாதிபோதம் என்னுங்குணத்தையும், இச்சாஞானக்கிரியைகள் மிகுந்தபிரகாசமே கவசம்ஆகையால் இது சுவதந்திரம் என்னுங்குணத்தையும், ஆன்மாவினது அநாதிமலத்தைச்சங்கரிக்கும்பெருமையே அஸ்திரமாகையால் இது அநந்தசத்தி என்னுங்குணத்தையும் பொருந்தியிருக்கும்.

## இரண்டாமாவரணம்.

கிழக்குமுதலிய தளாக்கிரங்களில் இரத்தநிறமுள்ளவரும் பூசத்தியையுடையவருமாகிய அநந்தரையும், வெண்மைநிறமுள்ளவரும், சுவாகாசத்தியையுடையவருமாகிய சூக்குமரையும், நீலநிறமுள்ளவரும் சாந்திசத்தியையுடையவருமாகிய சிவோத்தமரையும், பீதநிறமுள்ளவரும் பிரபாசத்தியையுடையவருமாகிய ஏகநேத்திரரையும், கறுப்புநிறமுள்ளவரும் புஷ்டிசத்தியையுடையவருமாகிய ஏகருத்திரரையும், சிவப்புநிறமுள்ளவரும் சுருதிசத்தியையுடையவருமாகிய திரிமூர்த்தியையும், சிவப்புநிறமுள்ளவரும் கிருதிசத்தியையுடையவருமான சிறீகண்டரையும், மஞ்சல்நிறமுள்ளவரும், மேதாசத்தியையுடையவருமாகிய சிகண்டியையும் பூசிக்க. இந்தவித்தியேசுவரர்கள் மூன்றுகண்களையும், நான்குபுயங்களையும், அபயம் வரதம் உடுக்கு மழு என்பவற்றையுமுடையவர்களாய்ச் சிவனுக்குஎதிர்முகமாக இருப்பார்கள்.

"வீசியவுபயாவரணமுமிச்சைக்
கீசானந்தாதிகளெண்மருமே."

## மூன்றமாவரணம்.

ஞானரூபமான பீடகண்டத்தில் நந்தி, மகாகாளர், பிருங்கி, விநாயகர், இடபர், கந்தர், தேவி, சண்டர் என்னும் எண்கணத்தலைவர்களைப்பூசிக்க.

"மூன்றாவதுகணமுதல்வர்களெண்மரும்"

## நான்காமாவரணம்.

கந்தபீசாங்குரமான பீடபாதத்தில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விஷ்ணு என்னும் லோகபாலகர்கள் பதின்மர்களைப்பூசிக்க.

"நான்காவதுமகவான்முதலெந்திரு
பாங்காருலகபாலகரும்"

## ஐந்தாமாவரணம்.

ஆதாரசிலையில் வச்சிரம், சத்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, சூலம், பதுமம், சக்கரம் என்னும் தசாயுதங்களைப்பூசிக்க.

"ஐந்தாவதுதசவாயுதமே"

"பஞ்சாவரணத்தலம்பகரும்பொழு
தம்புயகேசரமதனிதழந்தம்
பீடகண்டம்பிரகீடபீடம்
தேடரும்பிரமச்சிலையினவையந்தே."

பின் மூலத்தாற் புஷ்பாஞ்சலிசெய்து மகாமுத்திரைகாட்டி ஐக்கியம்பாவிக்க.

பின்பு தூபதீபம் ஆசமனம் அருக்கியம் கொடுத்து, நைவேத்தியம் பானீயம் என்பவைகளைச் சுவாகாந்தமூலத்தாற்கொடுத்து, பிரமாங்கங்களுக்கும் அந்த அந்த மந்திரங்களாற்கொடுக்க.

## நைவேத்தியம்.

சிவபெருமானுக்குத் தற்புருடமுகத்தில் *மிருகமுத்திரையினால் நிவேதித்தல் முறையாகும். ஈசானம்முதலிய பிரமாங்கங்களுக்கு அன்னம் முதலியவற்றைத் தனித்தனியே பாத்திர

* "கைவிரல்குவித்ததிற்கனிட்டைசார்ச்சனியெனு
மெய்விரனீட்டிடின்மிருகமுத்திரையே."

ங்களிற்படைத்துநிவேதிக்க. அல்லது ஒரேபாத்திரத்திற்படை த்துநிவேதிக்க. மன்வமைவுபிறத்தற்காகத் தற்போதத்தை நை வேத்தியமாக ஒப்பித்தலே இதன்பாவனையாகும்.

சதாசிவரூபம்.

"பின்மனவமைவுபிறத்தற்பொருட்டு
நைவேத்தியமுகவாசமுநல்கி."

திருவிளையாடற்புராணம்.

"பாட்டிற்கின்புறுகுருபரன்பாதமேற்கண்ணீ
ராட்டிச்சொன்மலரணிந்துதற்போதவின்னமுதை
யூட்டித்தற்பரஞானமாமோமவெங்கனலை
மூட்டிச்சம்புவின்பூசைமேன்முயற்சியானுர்."

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

பண்—தக்கேசி.

"ஆலத்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
யேலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே."

## பானீயம்.

ஏலம், சந்தனம், பச்சைக்கருப்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ, என்பவற்றால் நிறைக்கப்பட்டசலத்தைத் திருப்தியின் பொருட்டுக்கொடுத்தல் பானீயம் எனப்படும். ஆசமனீயமும் ஹஸ்தோத்வர்த்தனமும் சமர்ப்பிக்க.

## முகவாசம்.

ஏலம், இலவங்கம், பச்சைக்கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றின்பொடியைப் பனிநீரோடுகூட்டிச்சேர்த்துத் தாம்பூலத்தைச்சமர்ப்பிக்க பின்பு அருக்கியம் தூபம் தீபம் ஆசமனம் அருக்கியம் என்னுமிவைகளைச் சமர்ப்பிக்க.

## பவித்திரம்.

அறுகு அட்சதை புட்பம் இவைகளைஎடுத்து மூலமந்திர முச்சரித்துப் பவித்திரஞ்சாத்துக. இது தைவிகம், பௌதிகம், ஆன்மிகம் என்னும் மூவகைத்துக்கங்களைநீக்கும்பொருட்டாகும்.

மனோவாக்குக்காயமிறந்தவிடத்தில் முன் அழியாமல் அதிட்டித்துநின்ற இச்சாஞானக்கிரியையை ஆன்மாபொருந்துவதே இதன்பாவனையாகும்.

சதாசிவரூபம்.

"மூவகைத்துக்கமுடிகையின்பொருட்டுப்
பாவகமானபவித்திரஞ்சாத்தி."

## தீபாராதனை.

ஐந்து அடுக்குள்ள அலங்காரதீபம் பஞ்சகலைகளைக்குறிக்கின்றது. மூன்று அடுக்குள்ளதீபம் முத்தத்துவங்களைக்குறிக்கின்றது. இத்தீபத்தாலாராதிப்பின் ஆன்மாசுத்தியுறும். நாகதீபம் புத்திரவிருத்தியின்பொருட்டும், இடபதீபம் பசுவிருத்தியின்பொருட்டும், புருஷதீபம் சகலசித்தியின்பொருட்டும், நக்ஷத்திரதீபம் ரோகசாந்தியின்பொருட்டும், வித்தையின்பொருட்டும், கும்பதீபம் மலநிவாரணத்தின்பொருட்டும், ஐந்துதட்டைகள் ஈசானம்முதலிய ஐந்துகுணங்கள் பதிதற்பொருட்டும், தூபதீபம் சாரூபபதவியின்பொருட்டும், செம்பஞ்சும் நிப்பபத்திரமும் திருட்டிதோஷநீக்கத்தின்பொருட்டும், விபூதி மூவுலகரட்சையின்பொருட்டும் ஆராதிக்கப்படுகின்றன.

கண்ணாடியிற் சிவசத்தியும் அதனொளியில் சிவமுமிருப்பதால் அதனால் ஆராதித்தவர்கள் ஞானத்தையடைந்து சிவலோகத்திலிருப்பார்கள். குடையிற் சூரியமண்டலமும், காம்பிற் சூரியனும் இருப்பதால் அதனால் ஆராதனைசெய்தவர்கள் ஆஞ்ஞாசக்கரத்தையும் பலத்தையும் அடைவார்கள். சாமரையில் வாயுவும் காம்பிற் கார்க்கோடகனுமிருப்பதால் அதுகொண்டுபணியாற்றியவர்கள் மலத்தினின்றும்நீங்கித் திருவருட்செல்வத்தையடைவார்கள். விசிறியிற் சூரியனும், காம்பிற் பதுமனென்னுஞ்சர்ப்பமும், அதிலிருந்துண்டாகின்றகாற்றில் வாயுதேவனுமிருப்பதால் அதனாற்பணிசெய்தவர்களும், ஆலவட்டத்தினாற் பணிசெய்தவர்களும் சகலசுபசோபனத்தையும் தீர்க்காயுளையும் அடைவார்கள்.

## ஆராத்திரிகம்.

கர்ப்பூரம்வெண்மைநிறத்தைப்பொருந்தி அக்கினிபற்றியவிடத்தே அதன்வடிவமாக விளங்கி, ஓர்பற்றுமில்லாமல் முற்றுங்

கரையப்பெற்று ஆகாயத்துடன்கலந்து அத்துவிதமாய்விளங்கல் போல, ஆன்மா வெண்மைநிறமான சாத்துவிதகுணத்தைப்பொருந்தி, ஞானக்கினி பற்றியவிடத்தே பசுத்தன்மைநீங்கிச் சிவத்தன்மை விளங்கப்பெற்று, மூவகைச்சரீரங்கள் கரையப்பெற்று, எல்லாப்பற்றுங்கழன்று, சிதாகாசத்தோடு அத்துவிதமாய்ப் பேரானந்தப்பெருவாழ்வு அடைதல்வேண்டுமென்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கர்ப்பூராராதனை செய்யப்படுகின்றது.

### பட்டணத்துப்பிள்ளையார்.

"அக்கினிகர்ப்பூரத்தையறவிழுங்கிக்கொண்டாற்போன்
மக்கினம்பட்டுள்ளேமருவியிருந்தாண்டி."

### தாயுமானசுவாமிகள்.

"தீதணையாக்கர்ப்பூரதீபமெனநானகண்ட
சோதியுடனொன்றித்துரிசறுப்பதெந்நாளோ"

அநந்தாதிகளாற்றுதிக்கப்பட்டுச் சந்தோஷமடைகின்றவராகச் சிவனைத்தியானிக்க. பதினாறுகலையுடன்கூடிய பிராசாதத்தையுச்சரித்து, மூலத்தாற் புட்பாஞ்சலிசாத்தி, மகாமுத்திரையும், *பஞ்சமுகிமுத்திரையும் கொடுக்க.

## செபநிவேதனம்.

செபமாலையின் நாயகமணியில், சத்தியாதிசத்திபரியந்தமாகச் சிவனைப்பூசிப்பதுபோலப்பூசிக்க.

போககாமிகள் நூற்றெட்டு அல்லது ஐம்பத்துநான்கு அல்லது இருபத்தேழு மணிகளினாற் செய்த செபமாலையைக் கீழ்நோக்கித் தள்ளியும், முத்திகாமிகள் இருபத்தைந்துமணிகளாற் செய்த செபமாலையைமேனோக்கித் தள்ளியும்செபிக்க. செபிக்கு

---

*"தன்னினுட்கோத்தகைத்தர்ச்சனிபெருவிரன்
மன்னியநடுவிரன்மணிச்சிறுவிரல்களை
ஆங்குறப்பிடித்தபின்னணிவிரலிணைநடுப்
பாங்குறநிமிர்ப்பதுபஞ்சமுகமே."

ம்பொழுது நாயகமணியைக்கடவாமலும், செபமாலை பிறர்கண்ணுக்குப் புலப்படாமல் பரிவட்டத்தால் மூடிக்கொண்டும், ஒன்றோடொன்று ஓசைபடாமலும் சிவபெருமானுடைய திருவடிகளை மனதினால் தியானித்துக்கொண்டுசெபிக்க. மனதாற்செபித்தல் மானதம் எனவும், தன்காதுக்குமாத்திரம் கேட்கும்படிசெபித்தல் உபாஞ்சு எனவும், அருகிலிருப்பவர்களுக்குக் கேட்கும்படிசெபிப்பது வாசகம் எனவும் கூறப்படும். இவற்றுள் மானதசெபமே விசேடமுடையது. மானதம் சாத்துவிகத்தையும், உபாஞ்சு இராசதத்தையும், வாசகம் தாமதத்தையும் கொடுக்கும். மந்திரங்களுக்குமேலாய் அநாதியாய் உள்ளதாகையாலும், பஞ்சசத்திகளுக்கிடமாகையாலும், பஞ்சகிருத்தியத்திற் கிடமாகையாலும், சிவபெருமானுடைய திருமேனியாய் உள்ளதாகையாலும், சிவனையும், சத்தியையும், ஆன்மாவையும், திரோதானசத்தியையும், மலத்தையும் குறிப்பதாதலாலும், ஆணவத்தை நீக்கித்திரோதான சத்தியைக்கடந்து, தம்மையறிந்து ஞானத்தைத்தெரிசித்து, சிவத்திற்கலக்கச்செய்தலாலும், ஐந்தெழுத்தினதுண்மையறிந்து செபிப்பவர்கள் சிவஞானத்தையடைவார்கள். பதிஎழுத்து முதலும், சத்தி எழுத்து இரண்டாவதும், உயிரெழுத்துமூன்றாவதும், திரோதான எழுத்து நான்காவதும், மல எழுத்து ஐந்தாவதுமாகநிற்கும். இறுதியிலுள்ளதாகிய திரோதானமல எழுத்துக்களை முதலில் வைத்துச்செபிப்பவர்கள் போகத்தை அடைவார்கள். இவ்வெழுத்தை அறிவுவழியாகப்பார்த்து, சிவனாலே சத்தியும், சத்தியாலே ஆன்மாவும் ஆன்மாவைப்பற்றிப் போகத்தைக்காட்டும் திரோதானமும் அத்திரோதானத்தால் நடக்கும் மலமுமென்று அறிந்து செபிப்பவர்கள் மோட்சத்தையடைவர். ஆன்மாவோடு அநாதியேகூடியுள்ள மலத்தைப்பாகப்படுத்துவதற்காகத் திருவருட்சத்தியானது அதனோடுந் திரோதமாய் மறைந்துநின்ற திரோதானத்தினின்றும் "முற்சினமருவு திரோதாயிகருணையாகி" என்றபடி நீக்கியருளாய் நின்று பிரகாசித்து ஆன்மாவைச் சிவத்தோடு கூட்டும்.

திருவாசகம்.

"பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய்."

"நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
தேனையின்னமுதமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
தானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தான்
ஊனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே."

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்—புறநீர்மை.

"அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே."

மூலத்தை நூற்றெட்டுருச்செபித்து, இடக்கையில்வைத்து, அஸ்திர கவச இருதய மந்திரங்களாலும், இருதய கவச அஸ்திரமந்திரங்களாலும் மூடி, ரட்சை அவகுண்டனம் செய்து, வலக்கையிலெடுத்து அர்க்கியத்துடன் உற்பவமுத்திரையினாற் பூமியில் வலமுழந்தாளையூன்றிக்கொண்டு, "அதிக ரகஸ்யமாயுள்ளவரும், காக்கின்றவருமாகிய பகவானே, தேவரீருடைய அனுக்கிரகத்தினால் எனக்குச் சித்தியுண்டாதற்பொருட்டு என்னாற்செய்யப்பட்ட செபத்தை ஏற்றுக்கொள்ளுக" என்னுங் கருத்தமைந்த "குஹ்யாதி" என்னும் மந்திரத்தைச்சொல்லிச் செபத்தை வரத அத்தத்தில் சமர்ப்பிக்க.

ஜ-பிறவிநீக்கம், பம்-பாபநிவாரணம்.

சர்வகுணங்களுங்கழன்று மோக்ஷம்பெறுதற்காகச் செப நிவேதனஞ்செய்க.

சதாசிவரூபம்.

"எல்லாநன்மையுமெய்துதற்பொருட்டு
நல்லசெபத்தைநயந்துநிவேதித்து"

திருநாவுக்கரசுசுவாமிகள்.

பண்—காந்தாரபஞ்சமம்.

"முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
தன்னெறியேசரணாதறிண்ணமே
அந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவதுநமச்சிவாயவே."

திருவிருத்தம்.

"படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்செனாவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்பும்முனக்காட்செய்கின்றேன்
துடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே."

## கன்மசமர்ப்பணமும், ஆன்மநிவேதனமும்.

"சங்கரனே, புண்ணியபாபரூபமான அற்பகருமத்தை என்னாற்செய்யப்பட்டிருப்பினும் அவைகளை எப்பொழுதும் தேவரீருடைய பாதகமலத்தில் அன்புபொருந்திய என்பொருட்டுக் கிருபைகூர்ந்து புசித்து நீக்கியருளுக" என்னுங் கருத்தமைந்த "யத்கிஞ்சித்" என்னும் மந்திரத்தைச்சொல்லிக் கன்மத்தையும், கொடுப்பவரும், அனுபவிப்பவரும், உலகமயமாயுள்ளவரும் சிவமே, அவர் எல்லாப்பொருள்களிலும் வியாபித்துள்ளவர், ஆகையால் நானும் அவரது அடிமையாகிய சிவரூபம் என்னுங்கருத்தமைந்த "ஶிவொஹ-தா" என்னும் மந்திரத்தைச்சொல்லி, ஆன்மாவையும், சிவனுடைய வாதஹஸ்தத்தில் தத்தஞ்செய்க. தனியே இருதயமந்திரத்தை உச்சரித்தும் நிவேதிக்கலாம். ஆன்மா சிவோபாதியைப்பொருந்தாமல் அதற்குஅதீதமாய் அலைவற்று நின்மலமாயுள்ள பரமசிவத்திற் சலனமற்றிருப்பதே இதன்பாவனையாகும்.

திருவாசகம்.

"அன்றேயென் றனாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே."

"வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்திருவருளாலென்பிறவியைவேர்
அறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே."

திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருநேரிசை.

"மோத்தையைக்கண்டகாக்கைபோலவல்வினைகண்மொய்த்துன்
வார்த்தையைப்பேசவொட்டாமயக்கநான்மயங்குகின்றேன்
சீத்தையைச்சிதம்புதன்னைச்செடிகொணோய்வடிவொன்றில்லா
ஊத்தையைக்கழிக்கும்வண்ணமுணர்வுதாவுலகமூர்த்தீ."

சதாசிவரூபம்.

"அலைபெறவேதானமலனிடத்தி
னிலைபெறவேண்டித்தனைநிவேதித்து"

பிரமாங்கமந்திரங்களையும் தசாம்சமாகச் செபித்துநிவேதிக்க.

## காமியமந்திரபூசை.

சிவனது அனுமதிபெற்று ஆசனபத்மத்தின் தெற்குத்தளநுதியில் கிழக்குப்பாகத்தில் ஸ்திரீரூபமான கௌரீமுதலிய மந்திரங்களையும், மேற்குப்பாகத்தில் புருடரூபமான மிருத்தியுஞ்சயமுதலிய மந்திரங்களையும், முற்பாகத்தில் ஸ்திரீபுருஷரூபமானஉமாமகேசுவராதிமந்திரங்களையும் கிரமமாகப்பூசித்து, அவ்வம்மந்திரங்களை யதாசத்திசெபித்துச் சர்வதேவதா ஸ்வரூபியாகிய சிவனிடத்தில்நிவேதிக்க.

## குருவருச்சனை.

சுவாமிக்கு அக்கினிதிக்கில் ஆசனமிட்டு அதில் சடுத்தாசனமாகப்பூசித்து, அதிற்குருமூர்த்தியைப்பூசித்துச் சிவனையாவாகித்து, அருக்கியாதிகளைக்கொடுத்துச் சத்தியோடுகூடியவரும், அடியார்களின் ஆன்மப்பிரகாசத்திற்குக்காரணரும், அருட்செல்வமுடையவருமாகிய குருவினுடையபாதங்களுக்கு நமஸ்காரமென்று தோத்திரஞ்செய்க.

சுந்தரமூர்த்திநாயனார்:

பண்—நட்டராகம்.

"மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வேன்
நெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே."

## யோகபீடவித்தியாபீட வணக்கம்.

மேற்கே யோகபீடத்தையும், வித்தியாபீடத்தையும் அமைத்து, அஞ்ஞானங்களைப்போக்குபவரும், விசுவரூபரும், ஞானத்தைக்கொடுப்பவருமாகிய ஈசுவரனை மனம் வாக்குக்காயங்களினால் நமஸ்காரஞ்செய்க. பின்பு சுவாமிக்குப் புட்பாஞ்சலித்திரயஞ்சாத்தித் தோத்திரம்பண்ணுக. பின்பு மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்துச் சந்தோஷமாயெழுந்திருக்க.

## பிரதக்ஷிணம்.

அடியின்மேலடிவைத்துக்கொண்டும், கைகளைக் கூப்பிக்கொண்டும், வாயினாற் சிவநாமங்களையுச்சரித்துக்கொண்டும், மனதாற் சிவத்தியானஞ்செய்துகொண்டும், இவ்விதம் மனம் வாக்குக் காயங்களை ஒருவழிப்படுத்திக்கொண்டு மும்முறை பிரதக்ஷிணஞ்செய்க. முதற்காலப்பூசையிற் செய்யப்படும் பிரதக்ஷிணத்தால் ஆணவமலநீக்கத்தையும், இரண்டாங்காலப்பூசையிற்செய்யப்படும் பிரதக்ஷிணத்தால் திருவருட்செல்வத்தையும், மூன்றாங்காலப்பூசையிற் செய்யப்படும் பிரதக்ஷிணத்தால் சகலபாபநிவாரணத்தையும், நாலாங்காலப்பூசையிற் செய்யப்படும் பிரதக்ஷிணத்தால் முத்தியையும் அடைவார்கள்.

மன அன்போடு சிவபெருமானைப் பிரதக்ஷிணஞ்செய்யுமன்பர்கள் ஆணவமலத்தின்சேனைகளாகிய கோபம் முதலியவற்றினின்றும் நீங்கி, மலநிவாரணமாகி அருட்செல்வம் கைகூடப்பெற்று மோட்சத்தை அடைவார்கள்.

பிர்—கோபமுதலியநீக்கம், த—மோக்ஷசித்தி, க்ஷி—மல நிவாரணம், ணம்—திருவருட்செல்வப்பேறு.

பூசாந்தத்திற் பிரதக்ஷிணஞ்செய்யாதவன் சிவபூசையினு லெய்தும் பலத்தையடையான். அவன் விடம்பனெனப்படுவன். அருள்வாயிலாகச் சிவபெருமானோடு யாண்டும் வியாபித்தலே இதன்பாவனையாகும்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருத்தாண்டகம்.

"மதிதருவனெஞ்சமேயுஞ்சுபோக
வழியாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதீயென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றுந்
துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமேயென்றென்றேசுதறுநில்லே."

பண்—சாதாரி.

"ஆக்கையாற்பயனென்—அரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
வாக்கையாற்பயனென்.

கால்களாற்பயனென்—கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென்.

கைகாள்கூப்பித்தொழீர்—கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர்."

## நமஸ்காரம்.

நமஸ்காரமானது அஷ்டாங்கம், பஞ்சாங்கம், திரியங்கம், ஏகாங்கம் எனநான்குவகைப்படும். ஆண்களுக்கு அஷ்டாங்

நமஸ்காரமும், பெண்களுக்குப் பஞ்சாங்கநமஸ்காரமும் உரித்தாகும். திரியங்கமும் ஏகாங்கமும் இருபாலாருக்கும்பொதுவாகும். சிரசு, கைகள், காதுகள், மோவாய், புயங்கள் என்னும் எட்டவயவங்களும் நிலத்திலே படியும்படி வணங்குவது அஷ்டாங்கநமஸ்காரம். சிரசு கைகள் முழந்தாள்கள் என்னும் ஐந்துறுப்புக்களும் நிலத்திலே படியும்படி வணங்குவது பஞ்சாங்கநமஸ்காரமாம். சிரசிற்கைகளைக் கூப்பிவணங்குவது திரியங்க நமஸ்காரமாம். சிரசைத்தாழ்த்துநிற்றல் ஏகாங்கநமஸ்காரமாம்.

பிரமவிஷ்ணுக்களது தொழிலையும் அவர்களை அதிட்டிக்கும் ஞானக்கிரியைகளையும், தற்போதமென்னும் அதிகாரத்தையும் நீங்கி, நதியானது சமுத்திரத்தோடு சேர்ந்துசமரசமாயிருத்தல்போல, ஆன்மா சிவத்தோடுசேர்ந்து அத்துவிதமுற்றிருத்தலே இதன்பாவனையாகும்.

சதாசிவரூபம்.

"அயன்மாலிருவர்கீழாகையின்பொருட்டுச்
சயமாண்புறவெதிர் தண்டம்பண்ணி"

திருநாவுக்கரசுநாயனார்.

தனித்திருக்குறுந்தொகை.

"ஞானத்தாற்றொழுவார்சிவஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தானுனை நானுந்தொழுவனே.

"பெருகலாந்தவம்பேதைமைதீரலாந்
திருகலாகியசிந்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணங்கவே."

திருவாசகம்.

"சிந்தனைநின்றனக்காக்கிநாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப்போதுக்காக்கி
வந்தனையுமம்மலர்க்கேயாக்கிவாக்குன்
மணிவார்த்தைக்காக்கியைம்புலன்களார

வந்தனையாட்கொண்டுள்ளேபுகுந்தவிச்சை
மாலமுதப்பெருங்கடலேமலையேயுன்னைத்
தந்தனைசெந்தாமரைக்காடனையமேனித்
தனிச்சுடரேயிரண்டுமிலித்தமியனேற்கே."

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

"திருந்தாவமணர்தந்நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே."

## துவிகாலபூசை.

ஒருகாலத்திற்குமேற் சிவபூசைசெய்யச் சத்தியற்றவன் இரண்டாங்காலப்பூசைக்காக ஆசனமூர்த்தி மூலத்தையும், பிரமமந்திரங்களையும் அங்கமந்திரங்களையும், அவ்வத்தானங்களிற் பூசித்துச் சமர்ப்பிக்க. மற்றையகாலங்களுக்குமிதுவேமுறையாம்.

## அக்கினிகாரியம்.

அக்கினிகாரியஞ்செய்ய அதிகாரமில்லாதவன் சிவனை ஆசனமூர்த்திமூலத்தாலும், நேத்திரரஹிதமான அங்கமந்திரங்களாலும் அவ்வவ்விடங்களிற்பூசித்துச் சமர்ப்பிக்க. அக்கினிகாரியஞ்செய்ய அதிகாரமிருந்தும் திரவியங்களைச்சேகரிக்கச் சத்தியற்றவன் ஓமஞ்செய்யுங்கணக்கிலிருந்து பத்துமடங்குகூட்டிச்செபித்துநிவேதிக்க.

நித்தியாக்கினிகாரியஞ்செய்பவன் அக்கினியைப்பூசித்துப் பிரமாதிகளையும் பூசித்து, அக்கினியின் இருதயகமலத்திற் சிவனைச்சாங்கமாகப்பூசித்து, நைவேத்தியசமயத்தில் மூலமந்திரத்தாலும், அதில் தசாம்சம் பிரமாங்கமந்திரங்களாலும் ஓமஞ்செய்து பூரணாகுதிசெய்க. ஆசன சந்தன தாம்பூலாதிகள்சமர்ப்பித்து, பஸ்மவந்தனஞ்செய்து, அட்டபுட்பங்களாலருச்சித்துப் பரா.

ணாகார்க்கியம்கொடுத்துச் சிவமூர்த்தியில் சம்யோசிக்க. பின்பு பூ ராதிஹோமஞ்செய்து, பிரமாமுதலியோருக்குப்பலிகொடுத்து, அக்கினியை நமஸ்கரித்து, 'என்னாற்செய்யப்பட்ட ஓமத்தைவற்று ச் சந்தோஷமடைக' என்றுபிரார்த்தித்து அந்தர்ப்பலி பஹிர்ப்ப லியையுங்கொடுத்து, இவைகளைத்தன் இருதயத்தில் ஒடுக்கித் தோத்திரம்பண்ணி நமஸ்கரிக்க.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

"பூமென்கோதையுமையொருபாகனை
யோமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான்கடப்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே."

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—காந்தாரபஞ்சமம்.

"மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே."

## பூசாஹோமசமர்ப்பணம்.

சகளீகரணஞ்செய்து கையில் அருக்கியத்தைஎடுத்துச் சிவசந்நிதானத்தையடைந்து, சிவபெருமானே, யான்செய்யும் எல்லாக்கிருத்தியங்களும் தேவரீருடையனவே. உலகத்தை இரட்சிக்குந்தேவரீரே எனக்குத்தலைவர். தேவரீரன்றி வேறொருதலைவர் எனக்கில்லை என்று விஞ்ஞாபனஞ்செய்து, சுவாகாந்தமூலத்தால் அருக்கியசலத்துடன் பூமியிலூன்றிய முழந்தாளையுடையவனாய், உற்பவமுத்திரையால் பூசை ஓமம்முதலிய புண்ணியபலத்தைப் பரமசிவனுடைய வரதஅத்தத்தில் நிவேதனஞ்செய்து அட்டபுட்பஞ்சாத்துக.

திருநாவுக்கரசுசுவாமிகள்

திருக்குறுந்தொகை.

"யாதேசெய்துமியாமலோநீயென்னில்
ஆதேயேயுமளவில்பெருமையான்
மாதேவாகியவாய்மூர்மருவினார்
போதேயென்றும்புகுந்ததும்பொய்கொலோ."

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

திருவிராகம் பண்—கௌசிகம்.

"கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலும்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே."

### பட்டணத்துப்பிள்ளையார்.

பூதமுங்கரணமும்பொறிகளைம்புலனும்
பொருந்தியகுணங்களோர்மூன்றும்
நாதமுங்கடந்தவெளியிலேநீயு
நானுமாய்நிற்குநாளுளதோ
வாதமுஞ்சமயபேதமுங்கடந்த
மனோபவவின்பசாகரனே
ஏதுமொன்றறியேன்யாதுநின்செயலே
யிறைவனேயேகநாயகனே."

## அஷ்டபுஷ்பம்.

புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தை, நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை ஆகிய இவை எல்லாக் காலத்துக்கும் பொதுவாகிய அஷ்டபுஷ்பமாகும். அஷ்டபுஷ்பஞ் சாத்தும்போதில், இறைவனுக்கு ஒருபூவேனும் எண்ணிற்குறையவொண்ணாது. சொல்லியபுஷ்பங்கள் கிடையாவிடில் எண்ணினின்றுங்குறையாதபடி சொல்லப்பட்ட மற்றையபுட்பங்களாற்கூட்டி அருச்சிக்க.

### புஷ்பவிதி.

"இலகியபுன்னைவெள்ளெருக்குச்சண்பக
நிலவியவலம்புரிநீலம்பாதிரி
அலரிசெந்தாமரைஅட்டபுட்பமாம்
புலரியம்போதொடெப்பொழுதுஞ்சாத்தலாம்."

பஞ்சகிருத்தியகாரணராகிய பரமசிவனையடைந்தவன் மீட்டும் பஞ்சகிருத்தியத்தில் அகப்படாதிருத்தல் வேண்டுமென்னும் பாவனையாகும்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருக்குறுந்தொகை.

"எட்டுநாண்மலர்கொண்டவன்சேவடி
மட்டலரிடுவார்வினைமாயுமால்
கட்டித்தேன்கலந்தன்னகெடிலவீ
ரட்டனாடிசேருமவருக்கே."

சதாசிவரூபம்.

"தாணுவைவிட்டுத்தான்பிரியாமல்
வேணுமென்றுமீளவும்பூசித்து."

## பிரார்த்தனை.

"குறைவாகவேனும் அதிகமாகவேனும் எவை என்னுடைய அஞ்ஞானத்தினாற்செய்யப்பட்டனவோ அவைகள் தேவரீருடைய அனுக்கிரகத்தினால் பூரணமாகும்படி எனக்குக்கிருபை செய்தருளுக" என்றுவிஞ்ஞாபித்துப் பஞ்சமுகிமுத்திரைகொடுக்க. சத்தியோசாதாதிக்கிரமத்தாலும் மூலத்தாலும் சிவனைப்பூசித்து, அருக்கியங்கொடுத்து, அஸ்திரமுதல் ஈசானாந்தமான பிரதிலோமக்கிரமமாக அருச்சித்து, அருக்கியங்கொடுத்து, காமிய மந்திரங்களையும் அவ்வவ்வங்கங்களிற்சேர்த்து, அஸ்திரத்தையுச்சரித்து, நாராசமுத்திரையால் புஷ்பக்ஷேபத்தோடுமந்திரங்களை எழுப்பித் திவ்வியமுத்திரையினால் மூர்த்தியில்யோசித்து, மூலத்தாலருச்சித்து, அருக்கியங்கொடுத்துப் "பொறுத்தருளுக" என்று பிரார்த்திக்க.

சிவபெருமானதுபக்கலாகக் கிருபைபொருந்தியஞானநேத்திரத்தைச்செலுத்திச் சேருகின்ற இந்நிலைமையைச் சிவஞானத்தாலறிதலே இதன்பாவனையாகும்.

சதாசிவரூபம்.

"பரமசிவனதுபாங்கினிலாங்கே
திருமிகுஞானநேத்திரஞ்சேர்த்திச்

சேருமின்னிலைமையைத்திவ்வியஞானத்
தாலறிதல்பராமுகவருக்கியமே."

"சுவாமீ; அன்பற்ற அடியேனால் அற்பமாகப்பூசிக்கப்பட்டீர்; அப்பத்தியின்குறைவைப்பொறுத்து, அனுக்கிரகஞ்செய்தருளுக" என்றிவ்வாறுபிரார்த்திக்க.

பின்பு திக்குப்பந்தனம், அவகுண்டனம், அமிர்தீகரணம் பரமீகரணம் செய்துபூசிக்க. இரத்தினலோகசசைலசலிங்கமானால் பேடகக்கோயிலில் எழுந்தருளப்பண்ணுக. பேடகக்கோயிலாகிய கெற்பக்கிருகத்தைக் காவல்செய்யும்பொருட்டுப் பீமருத்திரரை அதன்மேற்பூசிக்க. க்ஷணிகலிங்கமானால் அம்மூர்த்தியை இருதயத்தில் யோசிக்க.

### சுந்தரமூர்த்திநாயனார்.

#### பண்—தக்கேசி.

"குறைவிலாநிறைவேகுணக்குன்றே
கூத்தனேகுழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றிமற்றடியே
னொருபிழைபொறுத்தாலிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்
செம்பொனேதிருவாவடுதுறையுள்
அறவனேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே."

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

#### பண்—காந்தாரம்.

"கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
அப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே."

தம்முடையகுரு, வித்தியாபீடம், சப்தகுரு, மகாலட்சுமி, கணபதி, துவாரபாலகர் ஆகிய இவர்களை அருக்கியங்கொடுத்து உத்துவாசனம் பண்ணுக.

## சண்டேசுரபூசை.

ஈசானதிக்கில் ஆசனமூர்த்திகளைப்பூசித்து; உருத்திராக்கினியினின்று தோற்றியவரும், கருநிறமுடையவரும், பயங்கரரும் சூலம், மழு என்னுமிவைகளைத்தரித்தவரும், உக்கிரரும், நான்குமுகங்களையும் நான்குபுயங்களையுமுடையவரும், முகத்திற்பரவுகின்ற பெரிய சோதியையுடையவரும், சிவந்த பன்னிரண்டு கண்களையுடையவரும், சடாமுடியிற் சந்திரனைத்தரித்தவரும், சர்ப்பகங்கணத்தையணிந்தவரும் சுர்ப்ப யஞ்ஞோபவீதத்தையுடையவரும், உருத்திராக்ஷமாலை கமண்டலத்தைத் தரித்தவரும், வெண்டாமரைப்பூவில் வீற்றிருப்பவரும் அடியாருடைய இடரைநீக்குபவரும் ஆகிய துவனிச்சண்டேசுவரரைத் தியானித்து ஆவாகித்து இருதயாதிநியாசங்களைச்செய்துபூசிக்க. அருக்கியங்கொடுத்துச் சிவநிர்மாலியஞ்சமர்ப்பித்து, அருக்கியங்கொடுத்துச் சிவாஞ்ஞையினாலே அவருடைய நிர்மாலியங்களைத் தேவரீருக்குச்சமர்ப்பித்தேனென்றுவிஞ்ஞாபனஞ்செய்து,செபசமர்ப்பணஞ்செய்து, "சண்டேசுவரரே,என்னால் மோகத்தாற்செய்யப்பட்ட இக்கிரியை நூனாதிகமாயிருப்பினும், பரிபூரணமாக ஏற்றருளுக" என்றுவிஞ்ஞாபனஞ்செய்து, உத்துவாசனஞ்செய்து, பூரகஞ்செய்து, மூலமந்திரத்தையுச்சரித்து, சம்ஹாரமுத்திரையினால் தம்முடைய இருதயத்தில் யோசிக்க. அருக்கிய பாத்திரத்திலுள்ள மந்திரங்களையும் தன் இருதயத்திலே யோசிக்க. சூரியபூசையினந்தத்திலே அச்சண்டேசுவரபூசைசெய்யாவிடில் அதனை இச்சண்டேசுவரபூசைக்குமுன்செய்க. சண்டேசுவரபூசைசெய்யாதவர்கள் சிவபூசையின்பலனையடையமாட்டார்கள். நிருமாலியங்களையகற்றி அத்தானத்தைச் சுத்திசெய்து, பஸ்மஸ்நானஞ்செய்து, சகளீகரணஞ்செய்து, பூசாபலப் பேற்றின்பொருட்டு அகோரமந்திரத்தை இருபத்தொருதரம்செபிக்க.

பின்னர்க் கபிலபூசைசெய்து போசனஞ்செய்க.

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

தனித்திருநேரிசை.

"கோவணமுடுத்தவாறுங்கோளரவசைத்தவாறுந்
தீவணச்சாம்பர்பூசித்திருவுருவிருந்தவாறும்
பூவணக்கிழவனாரைப்புலியுரியரையனாரை
ஏவணச்சிலையினாரையாரவரேயெழுதுவாரே."

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்—கௌசிகம்.

"ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்புங்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவொட்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார்."

# சிவபூசை விளக்கம்

## முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

---